வெளியீட்டுத்தொடர் எண்: 5

# அநுபோக வைத்திய நவநீதம்

ஐந்தாம் பாகம்

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

ஆசிரியர் :

ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1976

விலை ரூ:

முதற் பதிப்பு :—1905ஆம் ஆண்டு

இரண்டாம் பதிப்பு :—1975ஆம் ஆண்டு

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு.

இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,

சென்னை-600029.

அச்சிட்டோர் :

சிவார்ட்ஸ் பிரிண்டர்ஸ்.

119, ஸ்டாரன்ஸ் ரோடு,

சென்னை-600012.

# அருள்மிகு
# பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பி. எஸ்ஸி., அறங்காவலர்

திரு. எஸ். நாச்சிமுத்து, எம். எல். ஏ. ,,

திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம். எல். ஏ. ,,

திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் ,,

வி. எஸ். கோதண்டபாணி, பி. எஸ்ஸி., பி. எல்.,

துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி

# அருள்மிகு
# பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ
த்தியக் கழகம், சென்னை-600005. ... பொருளாளர்

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக்கழகம். ... உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி. பி. எல்.,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ.எம்.,
இயக்குநர். இந்திய மருத்துவத்துறை, ... சிறப்பு அழைப்பினர்
சென்னை-600029.

# சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

## உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
பொறுப்பலுவலர்.
சித்த மருத்துவ மைய ஆய்வு நிலையம்,
சென்னை-600029. தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால், எச்.பி.ஐ.எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை- 00010. —செயலர்

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன், எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை-60005. — உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம். ,,

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன், எல்.ஐ.எம்.,
மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றிய மருத்தகம்,
காவேரிப்பாக்கம், வட ஆற்காடு. ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி, எல்.ஐ.எம்.,
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி.சி.ஐ.எம்.,
தலைவர், தமிழக அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ,,



8. டாக்டர் ப. சிற்சபை, ஆர்.ஐ.எம்.பி.,
துணைத் தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம்,
சென்னை-600005. —உறுப்பினர்

9. பண்டிட் பெ. முத்துகருப்பப்பிள்ளை, ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர்,
சித்த மருத்துவ சங்கம், மதுரை. ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம், ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிகல் கவுன்சில்,
சென்னை-600012.

11. டாக்டர் என். சேதுரகுநாதன்,
தமிழ்ப்பேராசிரியர், விருதுநகர். ,,

12. திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை,
முன்னாள் செயலர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சை.

## சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி, பி. ஏ., ஜி.சி,ஐ.எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன் எல்.ஐ.எம்.,
பேராசிரியர், மேல் பட்டப் படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலுசுப்பிரமணியம் பி.எஸ்ஸி
எம். டி. எம். ஆர். சி. பி (லண்டன்),
சென்னை-600010.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு

பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ., அவர்கள்

அளித்த

# அணிந்துரை

மூன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால்—வழி வழியாகவும் கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலை பெறுதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்—இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும்—ஒருகாலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள்—உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளி வந்தால்தான், இன்று சித்த மருத்துவம் பயிலும் மாண

வரும், இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன் பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்பு நோக்கி உண்மை தெளியவும். மருந்துகளின் தரத்தை உறுதிப் படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப் பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாக கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங் காவல் குழுவினரும்—அதன் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும்— இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளி யிட்டுக்கென டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம். அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத்து டன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறு வகை யிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணி யும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும் அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந் தெடுக்கப்பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையே அநுபோக வைத்திய நவநீதம்—ஒன்று முதல் பத்துப் பாகங்களும் அவற்றின் திறவுகோலும்—ஆகும் இன்று கிடைக்காத பதிப்பாக உள்ள இந்த மருத்துவக் களஞ்சியம் வெளிவருவது மிகுந்த பயன் தர வல்லதாம்.

இந்நூல்களின் ஆசிரியர்—சித்த மருத்துவ வல்லு நர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்—



இளமை முதலே—தமது முன்னோர்தம் மருத்துவக் கலையைப் பொன்னே போல் போற்றிப் பயின்று தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டுப் பயன்படுத்தித் தேர்ந்து, தெளிந்து—உலகோர்க்குப் பயன்படவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச் செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள்—இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு—ஒளி காண்பதற்கு வழிகண்ட வல்லு நரில் அவர் தலைசிறந்தவர் என்பது மிகையாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்ற லுடனும், நெறியுடனும், பொறுப்புடனும் எளிய இனிய தமிழில்—இத்தனை நூல்களை இயற்றியமைக்கு, சித்த மருத்துவ உலகம்— ஹக்கீம் அப்துல்லா அவர்கட்கு எத் தாலும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

அவர் இயற்றிய அநுபோக வைத்திய நவநீதம் முதற்பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

“மிகக்கொடிய நோய்களையும், அறத்தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென” நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கின்றனர்கள். ஆங்கில மருத்துவம் நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப் புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது:

“அறுவை செய்தல் முதலிய இரண மருத்து வத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத் தியமே அதிகம் சிறந்தது; ஆனால், நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய்நோய், பாண்டு, மந்தாக் கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய் களையும் அறத்தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ

முறைகளே மிகமேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை.'' என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு—மருந்து செய்முறைகளை—அரிய நூல் வடிவத்தில் வழங்கிச் சென்ற—ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்களின் தொண்டு,

'' செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.''

என்னும், குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர்தம் முயற்சி வளர வாழ்த்துகின்றேன்.

சென்னை, 21-3-1975.

க. அன்பழகன்

# இரண்டாம்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி. அதுபோல் தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருத்துவத்திற்குச் சித்த மருத்துவம் என்று பெயர் அமையலாயிற்று. அச்சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம்முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும், உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின் நிலநடுக்கம் கடற்கோள் போன்ற சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும், எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம்மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டு கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின், ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுர்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களும் அவர்கள் அனுபவங்களும் ஏடுகளில் ஏறி ஏற்றமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித்தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவுகொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்துவரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சி சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து, பல கிராம மருத்துவமனைகளையும் அமைத்து இயங்கச் செய்து, சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப்படி கற்பிக்கப் போதிய பாட புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக்குறையை

ஓர்ந்து, பாட புத்தக ஆக்கக் குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறை தலைமை ஆசிரியாய் இருந்த பண்டிட், வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும், நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சு நூல், பாலவாகடம் என்ற, நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக்குழுவினர் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950இல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம், (மூலிகை வகுப்பு,) தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக்கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப்பெற்றன.

அக்கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங்கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாடநூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும் கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopoea Committee 1966 G. D. Ms. No 2163 Dt. 28-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாட நூற்குழு என்று (G. O. Ms. No. 1060, Health, Dt. 18-6-66) ஒரு குழுவும், திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் என தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும் விரைவில் பயன்காண வேண்டி 1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்துச் சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு என்னும் ஒரு குழுவை அரசு ஆணைப்படி (G. O. Ms. No



2571. of 23-10-73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒருமுறை அச்சில் வெளிவந்து விற்பனையில் கிடைக்கப்பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப்பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும், 100 கையெழுத்துப் படிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவருக்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்தும், அச்சியற்றத்தக்க வகையில் செப்பம் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக்கொண்டு மேற்படி நூல்களை நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள சில உறுப்பினர்களுடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமிதிருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் அனுபோக வைத்திய நவநீதம் பத்துப்பாகங்களும் திறவுகோலும் வெளியிடப்படுகின்றன. மேற்படி அனுபோக வைத்திய நவநீதம் என்னும் உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு ஆவார். இவர் சென்னை, ஜார்ஜ் டவுன், அப்பு மேஸ்திரி தெருவில் 12ஆம் எண்ணுள்ள வீட்டில் வாழ்ந்தார். இவர் தஞ்சை மன்னர் சரபோஜி தன்வந்திரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித்தோன்றல் ஆவார். இவர் பரம்பரை மருத்துவர். சித்த, யூனானி ஆகிய இருமுறைகளிலும் கைபாகம், செய்பாகம், நோய்த்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்கத் தேர்ச்சி பெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருத்துவமனையும், மருந்து செய்சாலையும், அச்சகமும் நடத்தி வந்தார்.

முன்னுரை

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர் நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். சர். உஸ்மான் சாயபு அவர்களின் நெருங்கிய உறவினராவர்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரை நடையில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரிசல், அகத்தியர் இலக்க சௌமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை பதுப்பித்து வெளியிடுவோர் இன்மையால் அவை கிட்டுவது அரிதாயிற்று.

ஆகவே, இவரது அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் அவைகளின் திறவுகோலுடன் முன் பதிப்பிலிருந்த தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி பழைய எடுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து வெளியிடப்படுகிறது இந்தப் பத்து நூல்களின் பெருமை அவைகளைக் கற்று மருந்துழைச் செல்வார்க்கு மிக நன்ருக விளங்கும். அந்தந்த நூல்களின் பழைய முகவுரைகளின் வாயிலாக அவற்றின் மேன்மை தெரியவரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந் தொகை தேவைப்படுவதால் இப்பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன், எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி, முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடி தந்தமையும், காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையையும், அமைச்சர் பெருமகனுர் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப்



முன்னுரை

பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகட்கிடையேயும் இக்குழுவின் கூட்டங்களில் பங்குகொண்டும், நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும், வழங்கி வெளியிட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி, நூல்கள் வெளிவர மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும், சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்துவரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியாகிய உயர்திரு வி. எஸ். கோதண்டபாணி, பி. எஸ்ஸி., அவர்களுக்கும் இப் பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்துசமய அறநிலையப் பாதுகாப்புத் தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கும் இக்குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்துப் பணி இடையூறின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடக்கவிலையில், அச்சடிக்கும் தாள்களை சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து மிக விரைவில் கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

## முன்னுரை

மற்றும், இந்நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக்குழுவுக்குத் துணை புரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன், எல். ஐ. எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் புலவர்கள் திரு. மு. சௌரிராசன், வி. செ விநாயகம், வை. முரு. முத்துக்குமாரசாம், ஆகியவர்களையும் குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்து உதவிய சித்தமருத்துவர்கள் திரு. ப. சிற்சபை, திரு. கே. சீனிவாசன், திரு. மு. சௌரிராசன் ஆகியோர்க்கும் அந்நூல்களைத் திரட்டித்தர துணைபுரிந்த சித்த மருத்துவர்கள் திரு. டி. வி. கலியாணசுந்தரம், திரு. மு. பூசலிங்கம் ஆகியோர்க்கும் இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக்கோப்புகளின் திருத்தங்களைச் செய்து உதவியமையை இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய அந்தந்தஅச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு, இந்நூல்களில், சாணும் குற்றங் கண்டு முனியாது, தனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ன துணிவுடன் இந்நூல்களை வெளியிடுகின்றனம்.

**டாக்டர் இரா. தியாகராசன்,** எல், ஐ, எம்.,
தலைவர்,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில் சித்த மருத்துவ நூல்
வெளியீட்டுக்குழு

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர்அலுவலகம்,
சென்னை-600020.

# முதற்பதிப்பின் முகவுரை

மருத்துவ ஆர்வமுள்ள நண்பர்களே !

இந்த அனுபோக வைத்திய நவநீத மென்னும் நூலினது அருமை பெருமை யாவும் இதற்கு முந்தின நான்கு பாகங்களால் நன்கு விளங்கும். அவற்றை இங்கு மீண்டும் எடுத்தெழுதல் கூறியது கூறலாம்.

இந்நூலானது சுமார் பத்துக்குக் குறையாத பாகங்களாக வெளிவரக் கூடியதாயிருப்பதால், ஒவ்வொரு பாகத்தையும் அடுத்தடுத்துச் சீக்கிரமாக வெளிப்படுத்தி முடித்து விடவேண்டுமென்னும் பூரண ஆவலைக் கொண்டிருந்தும் இடையில் நேர்ந்த உடல்நலக் குறைவால் நாலாம் பாகம் வெளியாகிப் பல மாதங்கள் கழிந்தும் இவ்வைந்தாம் பாகம் இதுகாறும் வெளிவரா திருந்தது. எனினும், முச்கட்படியே, நவநீதத்தில் அபிமானிகளுள் பலர், நேரிலும், கடித முகத்தாலும் வற்புறுத்திக் கேட்டு வந்ததற் கிணங்கி, சிரமத்தையும், அசௌகரியங்களையும் எதிர்பாராமல் மிகவும் ருசியுடன் இப்போது இதனை வெளியிட்டனம். வைத்தியம், இரசவாதம் என்ற இருவகைகளிலும் இரசமே சிறப்பானதும் முதன்மையானது மாகையால், அதைப்பற்றின எல்லா விவரங்களையும் வகை விவரமாகத்தெரிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். ஆகையால், இப்பாகத்தில் இரசத்தைப்பற்றிய கருத்துகளெல்லாம் முழுமையும் உதவிகரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே, இரசத்தில் இரகசியங்களைத் தெரிந்துகொள்ள இந்த நூலொன்றே போதும். வேறுநூல் அவசியமிராது. இரசசம்பந்தமான அனுபவமான பலமுறைகளை ஒழுங்குபடுத்தி எழுதுதற்காக நேர்ந்திருந்த தொல்லைகளுக்கு அளவேயில்லை. இரசத்தில் நுட்பங்களையும் அதுசம்பந்தமான அநேகம் பெருமை வாய்ந்த முறைகளையும் உடையது இந்நூல். இதன் அருமை பெருமைகளைப்பற்றி இங்கெழுதுவது இயலாதாயினும் அதிலடங்கிய கருத்துகளைக் குறிப்பாகவும் சுருக்கமாகவும் இங்கெழுதுவாம். அவைகளாவன :—

தமிழ், யூனானி இரசத்தின் பெயர்கள். இரசத்தின் இயல்பு சித்தா, யூனானி அலோபதி ஆகிய நூல்களில் சொல்லப்படும்.

அதன் குணங்கள், அதன் பிறப்பு, தங்கம், வெள்ளி, தாமிரம் வெள்வங்கம், கருவங்கம், நாகம், இரும்பு ஆகிய உலோகங்களோடு அது சம்பந்தப்பட்டிருக்கிற சிறப்பு, இரசத்தின் வகைகள், இரசத்தின் நிறங்கள், அதன் தோடங்கள், இரசத்தின் இறுகுகள் (சட்டைகள்), இரசத்தின்வேறுபாடுகள், இரசத்தின் சிறப்பு, இரசத் தூய்மைகள், பாலரசங்கள், இரசத்தைக்கட்டும் மூலிகைகள், இரசத்தைக் கட்டும் பொதுவிதி, இரசக்கட்டுகள், கட்டுவகைச் செயநீர் முதலியவைகளும்,

சுரஹரி இரசம், மஹா சுரஹரி இரசம், சதாசாகர இரசம், சன்னிபாத இரசம், அமுதம்ந்த இரசம், மகா நாகேசுர இரசம், கௌமிகாபரண இரசம், இலகு போகநாத இரசம் சர்வசுர வயிரவம், பாலரட்ச இரசம், ஜனிசார சுந்தர இரசம், மகா சுந்தரி இரசம், கந்த இரசம், சங்கிரஹணி இரசம், அக்கினி குமார இரசம், ஜுவாலானல இரசம், மகா நாராச இரசம், சிந்தாக்கினி குமார இரசம், இரச தோடகங்கள், மகா சுராங்குசம், இலகுவாக்கினி குமார இரசம், மகா சஸனி வைரவம், சுந்தர அக்கினி குமார இரசம், பாஸ்கர இரசம், மந்தாக்கினி குமார இரசம், சுராங்குசங்கள், அமுர்த இரசம், சந்திரபரத இரசம், சந்திராமிர்த இரசம், காச ஆக்கினி இரசம், சூரிய பரத இரசம், வாயு கஜாங்குச இரசம், காமகளா இரசம், பக்கசூலை இரசம், ஹேமகிருபா இரசம், மகா சுராங்குசம், சூலை கஜகேசரி இரசம் முதலிய மாத்திரை வகைகளும்,

உடும்பிரச பற்பம், இரசச் சுண்ணம், தாகரசச் சுண்ணம் இரசப் பதங்கங்கள், காச இரசப்பதங்கம், பட்டை இரசப்பதங்கம், காய் இரசப்பதங்கம், நீலகண்ட இரசப்பதங்கம், நீலகண்டபாலை, பிரசண்டபாலை, பூரணபாலை, சூதசிலைப் பதங்கம், சண்டரச சுண்ணம், குருபற்பம், மகத இரசபற்பம், முதலிய இரசச்சுண்ணம் இரச பற்பம், இரசப்பதங்கம் ஆகிய நானுவித முறைகளும்,

செந்தூரக் குப்பிக்குச் சீலைசெய்யும் விதம், செந்தூரக்குப்பி வாயடை மருந்து, செந்தூரக்குப்பி பொங்கினும் பக்குவம், செந்தூரக்குப்பி வெடித்தால் பக்குவம், வாலுகாயந்திரத்தின் விவரம், செந்தூரக்குப்பியில் மருந்திடும் அளவு முதலிய முக்கியமானதும் பொதுவானதுமான பலபாக வகைகளும்.

வாலைஇரச செந்தூரம், வீரஇரச செந்தூரம், சர்வநோய் அரிஇரச செந்தூரம், சர்வநோய் ஹரஇரச செந்தூரம், காளகண்ட



செந்தூரம், நவச்சார இரச செந்தூரம், இலகுரச செந்தூரங்கள் சுயஇரச செந்தூரம், இரசவீர செந்தூரம், குட்ட ஹரஇரச செந்தூரம், தாப இரச செந்தூரம், இலகுதாப இரச செந்தூரம், சுசுரசிந்தாமணி இரச செந்தூரம், உத்கர இரச செந்தூரம், மன்மத சிந்தாமணி இரச செந்தூரம், கௌரி சிந்தாமணி இரணமுக தீர இரச செந்தூரம், காளகண்ட மேகநாராயண செந்தூரம், சுபஞ்ச இரச செந்தூரம் சர்வநோய் ஹர சண்டமாருத செந்தூரம், இரசப் பிரளய செந்தூரம், (கரிசல்முறை) காளகண்ட மேக நாராயண செந்தூரம், மகா பூர்ண சந்திரோதயம், இலகுபூரண சந்திரோதயம், ஸ்ரீராமசெந்தூரம், சுவர்ண இரச செந்தூரம், தாரச செந்தூரம், திராவக இரச செந்தூரம், நீலகண்ட இரச செந்தூரம், ஏகி இரச செந்தூரம், சூட்சும பூர்ண சந்திரோதயம், கார இரச செந்தூரம், ஜீவநாராயண செந்தூரம், திரிமூர்த்தி செந்தூரம், சூதசண்ட மாருத செந்தூரம், சர்வநோய் ஹரதாள செந்தூரம், இரசப்பதங்க செந்தூரம், அருணோதய செந்தூரம், அருணோதய தீட்சை செந்தூரம், காச இரச செந்தூரம், உருக்கு இரச செந்தூரம், முதலிய உன்னதமானவைகளும் அற்புதமான கற்ப முறைகளுமான அநேகசெந்தூர வகைகளும்;

சத்திசிவபந்து, சொரசிந்தம், பால சொரசிந்தம், கண்டமாலை உசிதம், பக்கவாத மெழுகு, இரசபூரமெழுகு, விந்து இரச மெழுகு, கண்டஇரச மெழுகு, சித்த இரசமெழுகு, வேம்பிஇரச மெழுகு, இரத்திநாகர இரசமெழுகு, திரிநேத்திர மெழுகு முதலிய இரச சம்பந்த உசிதமுறைகள், பலவகை மெழுகு வகைகள் ஆகிய பற்பலவகைகளும்.

குளிகைக்காம் இரசசுத்தி, இரசமணி வகைகள், இரசத்தைக் கட்ட வெள்ளிபற்பம், இரசக்கிண்ணிகள், முதலிய மூலிகைசம்பந்த முறைகள், உயர்ந்த ஆசுசம்பந்த முறைகள் ஆகிய அபூர்வ முறைகளும் ;

இரச வீறு குறிகுணங்கள், இரச வீறு முறிவு மருந்துவம் ஆகிய அநேக முறைகளும், இன்னும் உட்பிரிவாய் வரும் பல முறைகளுமே யாம்.

இந்த ஐந்தாம்பாகத்திலுள்ள மேற்கண்ட நுட்பங்கள், முறைகள் முதலியவைகள் சிறந்த பல அரிய நூல்களிலிருந்தும், பல்லாயிர முறைகளிலிருந்தும், தேர்ந்தெடுக்கப்பட்டவைகளும், பலதடவைகள் அநுபவப்பட்டவைகளும், செய்து முடிப்பதற்குச்

சுலபமானவைகளும், சந்தேக மற்றவைகளும், குணஞ்செய்வதில் சிறப்புப் பொருந்தியவைகளும், பல தலைமுறைகளாக நமது பரம்பரையில் இரகசியமாக வைக்கப்பட்டு வந்தவைகளுமாம், இவைகள் இவ்வளவு அருமை வாய்ந்திருந்தும் நமது ஆதரவாளர்களை உத்தேசித்தும், உலகோர்க்கு உதவும் நோக்கில் இப்பொழுது வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. இரசசம்பந்தமான அரிய கருத்துகளையும், அபூர்வ முறைகளையும் தெரிந்து கொள்வதற்கு இப்புத்தகம் ஒன்றே போதுமானது. இதற்காக நாம் எடுத்துக்கொண்ட முயற்சி, பொருட்செலவு, உடலுழைப்பு, மூளையுழைப்பு, ஆகியவை அதிகமெனினும், இதற்கு ஏற்படுத்தி இருக்கும் விலமிகக்குறைவென்பது நண்பர்களுக்குச் சொல்லாமலே விளங்கும்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த இந்நூலானது வரையறையான தொகைப்பிரதிகளாக அச்சிடப்பட்டிருப்பதனால், நண்பர் ஒவ்வொருவரும் தாமதிக்காது இதனைவாங்கி, கண்ணுங்கருத்துமாக வாசித்து, அந்த சொல்லப்பட்டிருக்கும் பொதுவிதி, சிறப்புவிதி, கைபாகம், செய்பாகம் முதலியவைகளைக் கவனித்து, இதிலுள்ள முறைகளைச்செய்து அனுபவித்து, உடல்நலம், செல்வம், ஆயுள் விருத்தி ஆகியவற்றையடைந்து இதற்குமுன் நம்மால் வெளிப்படுத்தப்பட்ட பல புத்தகங்களையும் வாங்கி, மேலும்மேலும் நூல்களை வெளிப்படுத்துதற்கான ஊக்கத்தை எமக்குண்டாக்கி வருவது போலவே, இதினாலும் அதை விருத்திப்படுத்துமாறு விரும்புகிறோம். இதன் மற்றபாகங்களும் தாமதமின்றிக் கூடிய சீக்கிரம் வெளிப்படும்படிக்கும், நமது ஆதரவாளர்கள் பலர்க்கும் தீர்க்க ஆயுளும், வனப்பும், சிறப்பும் உண்டாகவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக. ஆமீன்.

இங்ஙனம்

அக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு,

12, அப்பு மேஸ்திரி தெரு,

ஜார்ஜ் டவுன், சென்னை.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அக்கினி குமார இரசம் | 48 |
| அண்ட இரசம் | 11 |
| அப்பிரேக இரசம் | 11 |
| அமிர்த இரசம் | 41, 59 |
| அரிதாரத் தூய்மை | 118 |
| அருணோதய செந்தூரம் | 145 |
| அருணோதய திட்சை செந்தூரம் | 145 |
| அனுமந்த இரசம் | 40 |
| ஆனந்த பைரவ இரசம் | 44 |
| இரசக்கட்டும், இரசத் தூய்மையும் | 31 |
| இரசக்கிண்ணி | 161 |
| இரசக் குளிகை | 157-159 |
| இரசக் குளிகைகள் | 156 |
| இரச சம்பந்தங்கள் | 9 |
| இரச சம்பந்த இரும்பு | 10 |
| ,, ,, (கருவங்கம்) | 10 |
| ,, ,, (தங்கம்) | 9 |
| ,, ,, (தாமிரம்) | 10 |
| ,, ,, (நாகம்) | 10 |
| ,, ,, (முறைகள்) | 34 |
| ,, ,, (வெள்வங்கம்) | 10 |
| ,, ,, (வெள்ளி) | 9 |
| இரசத் தூய்மை | 24-27, 117 |
| இரசத் தூய்மை அவசியமென்பது | 20-24 |
| இரச செந்தூரம் | 81 |
| இரசச் சுண்ணம் | 74 |
| இரச தோடகம் | 51, 52 |
| இரசத்தின் இறகுகள் (சட்டைகள்) ஏழு | 13 |
| இரசத்தின் குணம் (ஆயுள்வேதம்) | 4 |
| ,, (ஆங்கிலம்) | 5 |
| ,, (இரத்திநாகரம், அமிர்தசாகரம்) | 5 |

| | பக்கம் |
|---|---|
| ,, (தேரையர்) | 6 |
| ,, (போகர்) | 6 |
| ,, (யூகுனி) | 5 |
| இரசத்தின் சட்டைகளை முறைப்படி நீக்கும் விதம் | 14 |
| இரசத்தின் இயற்கைப் பண்பு | 4 |
| இரசத்தின் நச்சுத்தன்மைகள் ஏழு | 12 |
| ,, (தேரையர்) (எட்டு) | 12 |
| இரசத்தின் பெயர்கள் (தமிழ்) | 8 |
| ,, (யூகுனி) | 8 |
| இரசத்தின் பிறப்பும், அது உலோகங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிற சிறப்பும் | 6 |
| இரசத்தின் மகிமை | 18 |
| இரசத்தின் வகைகள் | 11 |
| இரசத்தின் வண்ணங்கள் | 11 |
| இரசத்தின் வேறுபாடுகள் (ஐந்து) | 15 |
| இரசத்தைக் கட்ட வெள்ளிபற்பம் | 160 |
| இரசத்தைக் கட்டும் பொதுவிதி | 28 |
| இரசத்தைக் கட்டும் மூலிகைகளுக்கு விசேஷ குறிப்பு | 28 |
| இரசத்தைக் கட்டும் மூலிகைகள் (ஏழு) | 29 |
| இரச பற்பமுறை பொதுவிதி | 67 |
| இரச பற்பம் | 68—73 |
| இரசபூர மெழுகு | 152 |
| இரசப்பதங்க செந்தூரம் | 144 |
| இரசப் பதங்கம் | 75 |
| இரசப்பிரளய செந்தூரம் | 127 |
| இரசமணி | 159 |
| இரசமாத்திரை | 150 |
| இரச மெழுகு | 151 |
| இரசம் | 2 |
| இரசவீறு நஞ்சு குற்குணங்கள் | 162 |
| இரசவீறு முறிவு மருத்துவம் | 163 |
| (அ) இரசவீரச் செந்தூரம் | 101 |
| இரத்கநாகர இரசமெழுகு | 155 |
| இலகு தாப ரசசெந்தூரம் | 108 |
| இலகு பூரண சந்திரோதயம் | 182 |
| இலகுரச செந்தூரம் | 00 |
| இலகுலோகநாத ரசம் | 42 |

| | பக்கம் |
|---|---|
| இலகுவசந்கினி குமார இரசம் | 53 |
| இலிங்கத் தூய்மை | 44, 118 |
| ஈசுர சிந்தாமணி இரச செந்தூரம் | 104 |
| உடும்பு ரச பற்பம் | 71 |
| உத்தர ரச செந்தூரம் | 107 |
| உருக்கு இரசசெந்தூரம் | 147 |
| ஐனிசர கந்தா இரசம் | 45 |
| கட்டுவகை செயநீர் | 32 |
| கண்டமாலை உசிதம் | 149 |
| கண்டரச மெழுகு | 153 |
| கந்த ரசம் | 46 |
| காச அக்கினிஇரசம் | 61 |
| காச இரசப் பதங்கம் | 77 |
| காமகளா ரசம் | 63 |
| காய் இரசப்பதங்கம் | 80 |
| சார இரசசெந்தூரம் | 140, 143 |
| காரிய பற்பம் | 97 |
| காளகண்ட செந்தூரம் | 97 |
| காளகண்ட மேகநாராயண செந்தூரத் துக்குத் திராவகம் | 130 |
| காளகண்ட மேகநாராயண செந்தூரம் | 114 |
| மேற்படிவேறு (கரிசல்முறை) | 129 |
| குட்ட ரசசெந்தூரம் | 101 |
| குருபற்பம் | 89 |
| குருஇரச செந்தூரம் | 135 |
| குளிகை இரசத் தூய்மை | 157 |
| கெந்தகத் தூய்மை | 117 |
| காடிவேலி வேர்ப்பட்டைக்குடிநீர் | 87 |
| கௌரிசிந்தாமணி இரணமுகதீரரச செந்தூரம் | 112 |
| சங்கிரஹணி இரசம் | 47 |
| சண்டரச சுண்ணம் | 83 |
| சதாசாகர இரசம் | 38 |

ii


| | பக்கம் |
|---|---|
| சத்தி சிவ பந்து | 149 |
| சந்திர பாத இரசம் | 59 |
| சந்திராமிர்த இரசம் | 60 |
| சரபஞ்ச ரசசெந்தூரம் | 118 |
| சர்வசுர வயிரவம் | 45 |
| சர்வநோய் ஹரசண்டமாருத செந்தூரம் | 121 |
| சர்வநோய் ஹரகன செந்தூரம் | 144 |
| சர்வநோய் ஹரரச செந்தூரம் | 86 |
| சர்வநோய் அரிரச செந்தூரம் | 85 |
| சன்னிபாத ரசம் | 39 |
| சாதிலிங்க தூய்மை | 44 |
| சித்தரச மெழுகு | 153 |
| சிந்தாக்கினி குமாரரசம் | 50 |
| சீவ நாராயண செந்தூரம் | 141 |
| சீனக்கார திராவகம் | 133 |
| சுந்தர அக்கினிகுமார ரசம் | 64 |
| சுயரச செந்தூரம் | 100,101 |
| சுரஹரிரசம் | 35 |
| சுராங்குசம் | 56—58 |
| சுவர்ணரச செந்தூரம் | 134 |
| ஜுவாலானல இரசம் | 48 |
| சூட்சும பூர்ணசந்திரோதயம் | 139 |
| சூதசண்டமாருத செந்தூரம் | 143 |
| சூதசிலைப் பதங்கம் | 87 |
| சூரியபரத ரசம் | 62 |
| சூலைகஜகேசரி இரசம் | 66 |
| செந்தூரக்குப்பிக்குச் சீலைசெய்யும் விதம் | 124 |
| செந்தூரக்குப்பி பொங்கினும் பக்குவம் | 126 |
| செந்தூரக்குப்பியில் மருந்திடும் அளவு | 126 |
| செந்தூரக்குப்பி வாயடை மருந்து | 125 |
| செந்தூரக்குப்பி வெடித்தால் பக்குவம் | 126 |
| செந்தூரதிராவகம் | 141 |
| சொரசிந்தம் | 148 |

| | பக்கம் |
|---|---|
| சௌமீகாபரண ரசம் | 41 |
| தாப இரசசெந்தூரம் | 102 |
| தாளகத் தூய்மை | 36 |
| திரவக இரசசெந்தூரம் | 135 |
| திரிநேத்திர மெழுகு | 156 |
| திரிபலைக் குடிநீர் | 24 |
| திரிமூர்த்தி செந்தூரம் (குப்பிமுறை) | 142 |
| துராலைக் குடிநீர் | 24 |
| துருசுத் தூய்மை | 37 |
| நவச்சார இரசசெந்தூரம் | 93 |
| நாக இரசச்சுண்ணம் | 74 |
| நாபித் தூய்மை | 38 |
| நீலகண்டபாலை | 84 |
| நீலகண்ட இரச செந்தூரம் | 139 |
| நீலகண்ட இரசபதங்கம் | 81 |
| நேர்வாளத் தூய்மை | 50 |
| பக்கசூலை இரசம் | 64 |
| பக்கவாத உசிதம் | 150 |
| பஞ்சமா பாதகங்களிலும் மாமஹாபாதகம் இன்னதென்பது (அதாவது இரசத்தை தூய்மை செய்யாமல் பயன்படுத்துவது) | 7 |
| பட்டைச் பதங்கம் | 78 |
| பறங்கிப்பட்டைச் சூரணம் | 83 |
| பாஸ்கர இரசம் | 55 |
| பால சொரசிந்தம் | 149 |
| பாலராட்சரசம் | 43 |
| பாலரச உருண்டை | 151 |
| பாலா செந்தூரம் | 92 |
| பால்துத்தத் தூய்மை | 37 |
| பிண்ட இரசம் | 11 |
| பிரசண்டபாலை | 85 |
| பூரணபாலை | 88 |
| மகத இரச பற்பம் | 80 |

| | பக்கம் |
|---|---|
| மகாசன்னிவைரவன் | 53 |
| மகத்சுந்தரிரசம் | 46 |
| மகா சுரஹரிரசம் | 37 |
| மகா சுராங்குசம் | 52,65 |
| மகரநாகேசுர ரசம் | 40 |
| மகாநாராச ரசம் | 49 |
| மகாபாலரச செந்தூரம் | 92 |
| மகா பூரண சந்திரோதயம் | 130 |
| மடலரிதாரத் தூய்மை | 37 |
| மந்தாக்கினி குமார இரசம் | 55 |
| மனேசிலைத் தூய்மை | 41, 118 |
| மன்மத சிந்தாமணி இரசசெந்தூரம் | 109 |
| மிளகு திப்பிலிக்குடிநீர் | 24 |
| யூகி இரசசெந்தூரம் | 137 |
| வாயு சுஜாங்குச இரசம் | 62 |
| வாலுகா யந்திரத்தின் விவரம் | 126 |
| வால இரசம் | 23,27 |
| வித்துரச மெழுகு | 152 |
| வீரரச செந்தூரம் | 93 |
| வேம்பிரச மெழுகு | 154 |
| ஹேமகிருபா இரசம் | 64 |
| ஸ்ரீராம செந்தூரம் | 132 |


அ. வை. ந. ஐந்தாம் பாகம்

பொருளடக்கம்

முற்றிற்று.

—:o:—

# அனுபோக வைத்திய நவநீதம்

## ஐந்தாம் பாகம்

### கடவுள் வணக்கம்

மாவா ரனுபோக வைத்ய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே—நாவாரும்
ஆதியே பலகோடி யண்டமனைத் துமபடைத்தாள்
சோதியே செய்வாய் துணை.

### குரு வணக்கம்

திருவும் புகழுந் திகழறிவுஞ் சேரெங்
குருவின் பதமபணிந்து கொண்டு—வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்றுநவ நீதமுயா
வாகவியற் றத்தொடங்கு வாம்.

திருவின் அருளினலும், பெரியோர்களினது வாழ்த்தினலும் பற்பல மருத்துவ வல்லுநர்களின் ஆதரவினலும் இதன்முன் நான்கு பாகங்களிலும் அநேக அபூர்வ முறைகள், குரு முறைகள், நுட்பமான முறைகள், மறைவான முறைகள் முதலிய பற்பல அற்புத முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றிலுள்ள முறைகளெல்லாம் பல தலைமுறைகளாகப் பல தடவைகளிலும் அனுபவசித்தி பெற்றவைகள். யாவரும் இலகுவாகத் தெரிந்து கொள்ளும் விதமாக வகைவிவரமாகவும் எழுதப்பட்டுள்ளன. அவற்றின் முறைகளைச் செய்து அனுபவித்த மருத்துவப் பயிற்சியாளர்கள் ஒவ்வொருவரும் அவற்றின் அருமைபெருமைகளை அடங்கா மகிழ்ச்சியோடு வெகுவாகப் புகழ்ந்து நன்கு மதித்து வருகின்றார்கள். ஆகையால், முன்னிலும் உற்சாகம் அதிகரித்து இவ்வைந்தாம் பாகத்தில் நமது முன்னோர்களும், நாமும் பல தடவைகளில் உபயோகித்து அனுபவசித்தி பெற்றவைகளும் பரம்பரையாக அனுபவித்து வரப்பட்டவைகளுமான அநேக சித்த புருஷர் வைத்திய முறைகள், உயிர்களின் மீதுள்ள அருட்தன்மையாலும், பிறர்க்குதவும் நோக்குடனும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதிலடங்கிய மருந்துகள், விவரங்கள், முறைகள் முதலியவைகளெல்லாம் இதுவரையில் அச்சில் வெளிப்படுத்தப்படாத

வைகள். நாட்பட்ட நோய், கடின நோய், மிகுமுயற்சியால் நலப்படும் நோய் முதலிய பெரும்பெரும் நோய்களை அறத் தீர்க்கும் பற்பல முறைகள் இவ்வைந்தாம் பாகத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன. இம் முறைகள், ஒவ்வொருவரும் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும்விதமாக மிகவும் தெளிவாகவும் வெளிப் படையாகவும் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் அருமைபெருமைகளெல்லாம் அங்குச் சொல்லியிருக்கிறபடி செய்து அனுபவிப்பவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்.

## இரசம்

திருவருளால் நான்காம் பாகத்தில் இலிங்கம், இரச கற்பூரம், வீரம் ஆகிய வைகளைப் பற்றியும், அவைகளின் யோக முறைகளைப் பற்றியும் சொன்னோம். இந்த ஐந்தாம் பாகத்தில் இரசத்தைப் பற்றியும், அதன் யோக முறைகளைப் பற்றியும், மருத் துவ சம்பந்தமாக ரசத்தை உபயோகப்படுத்தும் வேறு அனேக வகைகளையும், இரசமஞ்சரி, இரசசிந்தாமணி, இரச ரத்தினகரம் முதலியநூல்களிலிருந்து எடுத்து, நமது அனுபவப்படியும், பெரி யோர்களின் துணையினாலும், கொஞ்சம் சிறப்பாக எழுதுவாம். ஏனெனில், சித்த ஆயுள்வேத மருந்துவத்தில் இரசத்திற்கொப்பா னது ஒன்றுமே கிடையாது. ஆனால், பலர் அதனை உபயோகிக்கும் விதமாக உபயோகிக்காமல் மருந்தைக் கெடுத்து, உடலையும் கெடுத்து, மருந்தின் சீர்த்தியையும் நாசமாக்கி, மருத்துவர்களின் நற்கீர்த்தியையும் பாழாக்கி விடுகின்றார்கள் என்பதேயாம். மேற் கண்ட நூல்கள் மிக விரிவான வைகளாயினும் நமது நண்பர்களின் உபயோகத்திற்காகவும் உலகோர்க்கு உதவும் நோக்குடனும் கூடியவரையில் சுருக்கமாகவும் விரைவாகவும் இங்கெழுதுவாம்.

இதில் சொல்லப்படும் அநேக கருத்துகள் பரம ரகசியமாக வைக்கப்பெற்று வந்தவைகளாயினும், நமது நூல்களின் அபிமானி களின் பொருட்டாக உலகோர்க்கு எழுதுவாம். ரசமானது வைத் தியம், வாதம் என்னும் இருவகைக்கும் உயிரானதாகும். இதன் தூய்மை முறைகள் பலவகைபாம். மருந்துகளுக்காகும் தூய்மைகள் : அவற்றுள் செந்தூர ரசத்தூய்மை, மாத்திரை ரசத்தூய்மை முதலிய வைகள். வாதமுறைத் தூய்மைகள்: அவற்றுள் வெள்ளிக்காகும் ரசத் தூய்மை, பொன்னிற்காகும் ரசத்தூய்மை முறைகள் எனப் பலவகை களுண்டு. அவற்றுள், வாதமுறைகளுக்காகும் தூய்மை முறைகளை யும் வாதசம்பந்த யோகமுறைகளையும் நீக்கி மருந்துகளுக்காகும் தூய்மை முறைகளையும் அவ்வகை யோக முறைகளையும் இங்கு முன்னர் எழுதுவாம்.



இம் முறைகளெல்லாம் மேற்கண்ட இரச இரத்தினகரம், இரச மஞ்சரி, அமிர்தசாகரம், ஷறஹேகீமியா, குல்லியாதே பூ, அலிஸினு முதலிய சமஸ்கிருதம், அரபி, பார்சி முதலிய மொழி நூல்களி லுள்ளவைகளும், பலருக்குப் பல தடவைகளிலும் அநுபவசித்த மான குறிப்புப் புத்தகங்களில், அதாவது அட்டவணைகளிலுள்ள வைகளும், இன்னும் இவ்வடியேனுக்குச் சில மகான்களால் காட் டிக் கொடுக்கப்பட்டுச் செய்யப்பட்டவைகளுமேயாம். ஆகையால், மருத்துவத்தில் பிரியமுள்ள எல்லோரும் புகழ்பெற விரும்பும் வைத் தியர்கள் எல்லோரும் இதைப்பற்றிச் செவ்வையாகத் தெரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டியது. இதைப் பற்றிச் செவ்வை யாகத் தெரிந்துகொள்ளாவிட்டால், அத்தகையினர்கள் பூரண மருத்துவர்களாகார் எனப் பல மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இதன் தூய்மை முறைகள், இதன் யோக முறைகள் அநேகம். இவ்வளவுதான் என ஒரு வரையறுத்து ஒருவராலும் சொல்லமுடி யாது. "துறைகோடி தொந்தங்கோடி" என்பது பொது வாக்கிய மாயினும், இந்த இரசத்திற்கே சொந்தமெனப் பல மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

**இரசத்தின் பெயர்கள்:-** இதன் பெயர்கள் பல வைத்திய வழக்கி லும் வாத வழக்கிலும் அதன் இயற்கைப் பண்பினைக் குறிப்பாகச் சுட்டிச் சொல்லப்பட்டிருக்கின்றன.

**தமிழ்:-** ஜீவா, சிவம், நாதநாதன், சிவசித்தன், பராபரம், பரம சிவன், மதயானை, வையாளி, சிங்கன், வேந்தன் முதலிய இன்னும் அனேக பெயர்கள் தமிழில் வழங்குகின்றன.

**யூனுனி:-** உதாறத் (புதன்), அயான் (நேத்திரம்), தய்யார் (பறவை), பர்ருர் (ஒட்டம்), குர்ப் (அஸ்தமம்), றவிந்தா (ஒடுகிற வன்), ஜிஹிந்தா (குதிக்கிறவன்), துர்றயே அஸலீ (ஆதிகோளம்), அய்னுல் ஹய்வான் (பிராணி நேத்திரம்), ஜீபக்; கமலா (யாத்திரி), குமலா (முடிவு), பாரு; ஜம்ஜமா (பாடகன்), ஜன் (வேதாந்தி), ஏமோப் (வெள்ளிநீர்), நூர் (ஒளி), றூஹ் (ஆத்மா), துர்ர (முத்து), லபன் (பால்), முன்ஜமத் (கட்டி), அபக்; ரஜஉத்தய்யார்; றூஹானீ (ஆத்மா), றூஹுல்ம ஆவன் (உதவிகர்த்தா), றூஹுல் அஜ்ஸாத், (தேகங்களின் ஆத்மா), அபுல் அர்வாஹ (ஆத்மாக்களின் தந்தை), உம்முல் அஜ்ஸாத் (தேகங்களின் தாய்), ஹய்ய (ஜீவன்), ஈஸா, கில்ர்; இல்யாஸ்; அஸ்ருர் (இரகசியங்கள்), திலஸம் (ஜாலம்), அன்கா (அன்னப்பசி), றமஜ் (நொடி), ஷாஹித் (சாக்ஷி), தஹன் (ஜூகம்), ஹமல் (கருப்பம்), முதக்கர் (ஆண்), குலாம் (வேலையாள்),

ஸ்றுல் (தூதன்) முதலிய அனேக பெயர்கள் அரபி, பார்சி, ஆகிய மொழிகளில் வழங்கப்படுகின்றன.

இன்னும் இவை போன்ற பல காரணப் பெயர்கள் உண்டு; இரசத்தினலுண்டாகுற் சிறந்த குணங்களைப் பற்றியே இதற்கு இவ் விதப் பெயர்களிடப்பட்டிருக்கின்றன.

## இரசத்தின் இயற்கைப் பண்பு

இதில் சூடும் குளிர்ச்சியும் சமமாக இருக்கின்றது. சூடான பண்டங்களோடு சேர்த்தால் சூட்டின் குணத்தையும், குளிர்ச்சியாகிய சரக்கோடு சேர்த்தால் குளிர்ச்சியாகிய குணத்தையும் தரும். ஆகையால், இது எவ்வித உடலினர்க்கும் பொருந்தும். மற்றச் சரக்குகளுக்கு அவ்விதக் குணமில்லை.

இது பிறவிச் சரக்கு ஆகையால் உலோகங்களோடு அல்லது, வேறு சில சரக்குகளோடு கலந்து அசுத்தமாகவே இருக்கும். இது காந்தம், அயம், பிளாட்டினம் முதலிய உலோகங்களுடன் தனியாகக் கலக்காதெனினும் மற்றெல்லா உலோகங்களோடும் நொடியில் கலக்கும் குணமுள்ளது. உலோகங்களுக்குள் ரசந்தான் நீராயிருக்கிறசரக்கு. இதற்கு வாசனையும் சுவையும் கிடையாது. ரசமானது அநேகமாய் எந்த உலோகத்தோடேனும் கலந்து அசுத்தமாகவே இருக்கும்.

மேற்கண்ட காரணங்களால் இரசத்தை மருத்துவநூல் முறைப்படி தூய்மைசெய்து நூல்முறை யோக முறையாகச் செய்து உபயோகித்தால், எல்லாச் சரக்குகளைப் பார்க்கிலும் மேலான குணத்தைத் தருமென்பதும் விளங்கும். இதன் சிறந்த குணத்தைப் பற்றிச் சித்தா, ஆயுள் வேதம், யூனனி, ஆங்கிலம் முதலிய எல்லாவகை மருத்துவ அறிஞர்களும் நிச்சயித்துத் தீர்மானித்திருக்கின்றார்கள்.

## இரசத்தின் குணம்

**ஆயுள்வேதம்:-** இரசமானது பசித்தீபனத்தை உண்டாக்கும்; கிழத் தன்மையை நீக்கும்; கண் நோய்களை நீக்கும்; குட்டநோய், சூலைநோய், குறைநோய், புழு முதலியவைகளை நீக்கும். இது சொற்பத்தினலும் அசுத்தப்படும் ஆகையால், இதை முறைப்படி தூய்மை செய்தே உபயோகிக்க வேண்டும். இதைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லில், இதை உபயோகிக்கும் விதமாய் உபயோகிப்பதால் இதனல் உண்டாகும் நன்மைகள் அனந்தமேயாம்.



**ரத்தினகரம், அமிர்தசாகரம்:-** தூய்மைசெய்த இரசமானது, எல்லாவிதக் குட்டம், குறைநோய், நோவுகள், வயிற்றுளைவு, விந்து இழிவு, 80 வித வாதங்கள், வயிற்றுநோவு, வயிற்றுநோய், பாண்டு, பவுத்திரம் முதலியவைகளை நீக்கும் இரத்தசுத்தி, இரத்தவிருத்தி, உடல்வலிமை, உடல் பொலிவு, தாதுவிருத்தி முதலியவற்றை உண்டாக்கும்.

**போகர்:-** காயசித்தி, காயத்தூய்மை, கௌமாரம், பூரணம் போகம் முதலியன குணமாகும்.

**தேரையர்:-** நேத்திரநோய், அட்டகுன்மம், கிரந்திசூலை, பெருவிரணம், பெரும்நோய் முதலியன தீரும்; இரத்தத்தூய்மை, இரத்த விருத்தி முதலியன உண்டாகும்; தாதுக் குறைவு, உடல் வலுக் குறைவு முதலியன நீங்கும்.

**யூனனி:-** உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டும். தீபாக்கினியை எழுப்பும். இரைப்பை, ஈரல், மூளை, இருதயம் ஆகியவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும்; ஞாபகசக்தி, புத்தி முதலியவற்றை அதிகப்படுத்தும்; கபத்தினலுண்டாகிய இருமலை நீக்கும், நரம்புகளின் பலத்தை விருத்தி செய்து உடலிற்குப் பலத்தை உண்டாக்கும்.

**ஆங்கிலம்:-** சர்வாங்கத்தை அனுசரித்தாவது அல்லது, ஒரு உறுப்பைப் பற்றியாவது இருக்கிற நோய்களைப் படிப்படியாக நீக்கி, உடலை நல்னிலைக்குக் கொண்டு வரும்; இரசமானது குடலிலிருக்கிற நீரோடு சேர்ந்து வீரியத்தைக் காண்பிக்கும்; இன்னும் இதனல் அநேக நோய்கள் தீரும். ஆனல், இதை யோகமாகச் செய்து உபயோகிக்க வேண்டும்.

மேற்கண்ட குணங்களெல்லாம் இதற்குண்டென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், மருத்துவநூல் உத்திப்படியும் செய்தேர்ச்சிப்படியும் மேற்கண்ட உயர்வான குணங்களெல்லாம் காணப்பட்டிருக்கின்றன. ஆனல், இரசத்திலுள்ள மாசுகளையெல்லாம் நீக்கிச் செய்தால் மட்டுந்தான் இக் குணங்களெல்லாம் உண்டாகும். அதிலுள்ள மாசுகளை நீக்காவிட்டால் மேற்கண்ட நற்குணங்களுக்கு மாருக அநேக தீய குணங்கள் உண்டாகும். அவற்றுள், முக்கியமானவைகளாவன :- தாதுஇழப்பு, மயக்கம், வாய்நீரூறல், மறதி, சோபம், விகாரம், வாய்ரணம், பிதற்றுதல், பைத்தியம் முதலிய தீய குணங்களுண்டாகும். விந்து விருத்திக்கென முறை பிசகாயும் மாசுடைய இரசத்தை உபயோகித்தும் முழுவதும் புணர்ச்சி சக்தியை இழந்திருக்கும் அனேகரைக் காணலாம். முப்பத்திரண்டு

பற்களில் ஒன்றேனும் பாக்கியில்லாமல் முழுவதும் இழந்த பொக்கைவாயர்கள் அனேகரையும் காணலாம். அகாலமரணத்திற்காளான அனேகரையும் பார்க்கலாம். சுருக்கிச் சொல்லில் முறை பிசகாக உபயோகித்த இரசப் பிரயோகத்தால் துன்பத்தையும் இழப்பையும் அனுபவித்தவர்கள் அனேகரென அனுபவத்திலும் பார்த்திருக்கின்றோம். கேள்வியுற்றும் இருக்கிறோம்.

## இரசத்தின் பிறப்பும் அது உலோகங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிற சிறப்பும்

இப் பிரபஞ்சமானது பஞ்சபூதமயமென்பது எல்லா மருத்துவப் பயிற்சியாளர்களும் அறிந்த முடிவாகும்.

அவ்விதமே எல்லா உலோகங்களும் இரச சம்பந்தமானவென்பதும் பூர்வீக மருத்துவ அறிஞர்களின் முடிவாம். தற்கால மருத்துநவல்லுநர்கள் இக் கருத்தில் விகற்பப்படினும் சாராம்சத்தில் எல்லா அறிஞர்களின் அபிப்பிராயமும் ஒன்றேயாம். (இது நீண்டு விளக்க வேண்டியதாகையால் சித்தர் அருளால் இனி வெளிப்படுத்தப்படும் "**இரசவாத போதினி**" யில் விவரிப்பாம்.)

மலையிலிருந்து வழிகிற தண்ணீரானது கற்பிளப்புகளிலும் கற்பொருத்துகளிலும் சேகரமாகும். அந்தத் தண்ணீரானது சூரியனுடைய கடுமையான வெப்பத்தால் கொதிப்புண்டு, நீராவியாக மாறி மேலேற ஏதுவின்றி இருந்த இடத்திலேயே அடைந்து கிடக்கும். குளிர்ச்சியான இரவுகளில் சீதளமிகுதியால் பூமிக்கு வெளியிலும், வெம்மை மிகுந்த காலங்களில் சூரிய வெப்பத்தின் மிகுதியால் பூமிக்குள்ளும் ஆவிகள் அடங்கிக் கிடக்கும். இவ்விதம் பகலும் இரவும் மாறி மாறி உண்டாகும் சூரிய வெப்பத்தாலும் அதற்கு எதிரிடையான குளிர்ச்சியாலும் அது ஒரு வகையாகப் பக்குவப் படுத்தப்படும். மழைக் காலங்களில் காற்றிலுண்டாகும் குளிர்ச்சியானது பூமியிலும் உண்டாகும் ஆகையால், அது நிமித்தம் மேற்கண்ட ஆவியானது உறைந்து சிதறிக் கிடக்கும். பின்பு சூரிய வெப்பத்தால் அவை உருகி ஒன்றுகச் சேகரிக்கப்படும். மேற்பக்கத்திலுள்ள குளிர்ச்சியும் பூமிக்குள்ளிருக்கிற வெப்பமும் ஒன்றுகச் சேர்ந்து புரட்டிப் புரட்டிப் பக்குவப்படுத்துவதால் வெகுகாலம் வரையில் மாறிமாறிக் கீழுமேலுமாக இறுகிப் பூமிக்குள் சேர்ந்து கொண்டேயிருக்கும். முடிவில் சர்வ வல்லமையுள்ள பரம்பொருளின் படைப்பு நுட்ப விதிப்படி இப்போதுள்ள திரவ உருவமாக மாறி இரசமாகிவிடும். இதுவே இரசத்தின் அசல் பிறப்பாம். இது நிமித்தமே இதில் குளிர்ச்சி அதிகரித்திருக்கிறது.



சப்தரிசி இரசவாதம், கலூஜேஸம்அ, அல் கபீறுல் பாபிலி, நபாயிஸுல் புனூன் முதலிய நூல்களில் இவ்விதமே சொல்லப்பட்டிருக்கிறது.

**பஞ்சமாபாதகங்களிலும் மாமகாபாதகம் இன்னதென்பது:-** களவு, கள்ளுண், குருநிந்தை, கொலை, பொய் ஆகிய ஐந்துவகை வஞ்சகங்களும் பஞ்சமா பாதகமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இவ்வைந்தைப் பார்க்கிலும் மேலான பாதகத்திற்கு மாமகா பாதகமெனச் சொல்லப்படுகிறது.

வைத்தியத் தொழிலில் **மாமகாபாதகம் ஆனது இரசத்தைச் செய் முறைப்படி தூய்மை செய்யாமல் உபயோகிப்பதுதான் மாமகாபாதகம்.** அவ்விதம் உபயோகிப்பவர்களுக்கு **மாமகாபாதகர்கள்** எனப்பெயர். ஏனெனில், **நன்முறையான தூய்மையில்லாமல்** இரசத்தை உபயோகிப்பதால் மேற்கண்ட ஐவகைத் துரோகங்களும் ஏககாலத்தில் ஏற்படுவதே காரணமேயாம். அறிவாளிகள் இதன் கருத்தை ஊகித்துக் கொள்வார்கள்.

இரசமருந்து குணம் செய்யவில்லையெனச் சிலர் சொல்லிக் கொள்கின்றார்கள். அவை எப்படிக் குணம் செய்யும். அதைச் செய்கிற விதமாகப் பாகம் செய்தாலல்லவோ அது குணம் செய்யும். இரசத்தை செய்முறைப்படி செய்ய நல்ல ஆசானை அடுத்தல்லவோ தெரிந்து கொள்ளவேண்டும். அல்லது, முறைப்படியான மருத்துவ ஆய்வுப் பயிற்சி வேண்டும்.

இக் காலங்களில், இரசத்தைச் செய்முறைப்படி பூரண பாகம் செய்ய வல்லவர்கள் ஆயிரத்தில் ஒருவர் இருக்கலாம். அவர்களும் சற்று மறைவாகவே இருப்பார்கள். இக்காரணம் பற்றியே இரசத்தின் பெருமையும் அருமையும் குலைந்து, பொலிவு பொன்றி, சோபை குன்றிக் கிடக்கிறது. தூய்மை செய்யாத இரசத்தை, அல்லது, அது சம்பந்தமான மருந்துகளை முறைமாறுதலாய் உபயோகிப்பதால் அனேக கெடுதிகளுக்கு ஏதுவகையால், மாமகா பாதகமென ஒரு மருத்துவ மன்று பல மருத்துவ ஆய்வும் முறையிடுகின்றன.

ஆங்கிலேய வைத்தியர்களும் இரணமேகம் முதலிய நோய்களில் இதனைச் சம்பந்தப்படுத்தி உபயோகிக்கின்றார்கள். உண்மையை விளங்கப்புகின் அதுவும் பெரும்பாவச் செய்கையேயாம். எட்டுப்பங்கு ரசத்தைப் பாகப்படி செய்து ஒரு பங்காகக் குறைக்கிலல்லவோ அதிலுள்ள எழுவகை மாசுகளும் நீங்கித் தூய்மையாகும். ரசத்தின் உண்மையைப்பற்றிச் சித்த ஆயுள் வேத மருத்துவ

ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்து நிச்சயித்திருப்பது போல உலகத்தில் மற்றெந்த மருத்துவ நிபுணர்களும் அவ்வளவு ஆராய்ச்சி செய்யவில்லை என்பது நிச்சயம். உண்மையில், இரசமே இரசவாதத்திற்கு வித்து; அதுவே அனைத்து நோய் சஞ்சீவி; அதுவே கற்பம்; அதுவே கவுனம்; அதுவே சீவன். பொன் வெள்ளி செய்ய வேண்டு மென்னும் பேராசை கொண்டு பேயாய் அலைந்து, அருமையாகச் சம்பாதித்த கைப்பொருளையும், திரும்பி மறுபடியும் கிடைக்கப் பெருத தம் ஆயுளையும் அவமே போக்கும் வம்பர்கள் இந்த இரசத்தை ஒரு தடவை செய்முறைப்படி பாகம் செய்து விடுவார்களாயின் அவர்கள் கோரிக்கை பலமாகாது. இன்னும் முறைப்படி பாகம் செய்யப்பட்ட இரசக்குளிகை ஒன்றுண்டு. அதை முகர்வதாலேயே அநேக நோய்கள் தீர்ந்து போகும்.

இவ்வித அரிய முறைகளெல்லாந் தெரிந்தவர்கள் இக் காலத்திலும் இல்லாமல் போகவில்லை ஆனுல், அதன் அருமைக்குத் தகுந்தபடி பரிசளிக்கும் மன்னர்களுமில்லை. செல்வர்களும்; சான்றோர்களுமில்லை.

தாதுவிருத்திக்கு விந்தென்னும் இரசமே முதன்மையான தென்பதும், புணர்ச்சிக்கு அதுவே கம்பீரமுள்ள தென்பதும் எல்லா மருத்துவ நூல் முடிவுமாகும். இவ்வித இரசம் யாரிடத்திலிருக்கிறது? இது எங்குக் கிடைக்கும்? அது குதிரைக் கொம்பென்றே சொல்ல வேண்டும். இரசத்தில் புனிபங்கம் எனும் ஒரு வகைக் குற்றமுண்டு. அதை நீக்கினுல்தான் மேற்கண்ட குணங்களுண்டாம். அதை நீக்காவிட்டால், நபுஞ்சகத் தன்மையை உண்டாக்கி ஆயுள் முழுவதும் ஆண்மையை அறவே இல்லாமல் செய்து விடும். மேலும், தூய்மை இல்லாத இரசமானது கொடி நஞ்சிற்குச் சமானமெனவும் மாசுள்ள இரசத்தால் உண்டாகும் தீயகுணங்களின் சமம் எனவும் நாம் முன் சொல்லி இருக்கின்ருேம். ஆகையால், அருமையான இரசத்தைத் தூய்மை செய்யாமல் உபயோகித்து] இரகசியமார்க்கமாக உயிர் வதைக்கு ஏதுவாக்குவதே மாமகா பாதகமெனச் சொல்லப் படுகிறது இதனை எவர் அங்கீகரித்தாலும் சரியே, எவர் அங்கீகரிக்கா விட்டாலும் சரியே, பல மருத்துவ நூல்களின் கருத்தையும், பல மகான்களின் விருப்பத்தையும் இங்கு எழுதி இருக்கின்ருேம்.

ஆகையால், இந்த அருமையான இரசத்தைத் தூய்மை செய்ய வேண்டிய முறைப்படி இத் தொழிலிற் சம்பந்தப்படும் ஒவ்வொருவரும் தெரிந்து அதனதன் கிரமப்படி செய்ய வேண்டியது அவசியமென்பதும், அவ்விதம் தூய்மை செய்யாமல் உபயோகிக்கத் துணிவது மகா பாதகமென்பதும் நன்கு விளங்கும். இதன் தூய்மை



செய்முறைகளை எழுத ஆரம்பிக்கும் முன் இதன் சம்பந்தம் முதலியவைகளை ஒருவாறு சுருக்கமாகச் சொல்லி முடிப்போம்.

**இரச சம்பந்தங்கள் :—** நாம் இதற்கு முன் இரசத்தின் பிறப்பும் அது உலோகங்களோடு சம்பந்தப் பட்டிருக்கிற சிறப்பும் என்னும் தலைப்பில் இரசத்தின் பிறப்பைச் சொன்னேம், இப் பெருமை தங்கிய இரசமானது எல்லா உலோகங்களோடும் சம்பந்தப்பட்டு இருக்கும் விதத்தைத் தெரிந்து கொள்வது இரசவாதத் தொழிலுக்குப் பெருத்த உதவியாக இருக்கும்.

கந்தகமும் இரசத்தைப் போலவே ஏகபூதச் சரக்கு; இதன் பிறப்பும் இரசத்தைப் போவே யாகும். ஆனுல் வண்ண வேறுபாடு, உருவேறுபாடு முதலிய வேறுபாடுகளுள் இவ்வேறுபாடுகள் அது விளை நிலங்களின் குணத்தால் உண்டாவதேயாம். அதாவது :- கந்தகத்தில் தேயுவின் குணம் இயற்கையில் சேர்ந்திருக்கிறது. இக்காரணம் பற்றியே சொற்பச் சூட்டாலும் இது உருகி விடுகிறது. இது பூர்வீகமானது; இதற்குச் சத்தியென்னும் பெயருமுண்டு. தாளகமானது கந்தக சம்பந்தமாக உண்டானது.

நாம் முன் சொன்னபடி இரசமானது சூரிய சம்பந்தமானது. கெந்தகமானது சந்திர சம்பந்தமானது. இவ்விரண்டின் சம்பந்தங்களால் எல்லா உலோகங்களும உற்பத்தியாகின்றன. வைத்திய பரிபாஷையில் இவ்விரண்டிற்குச் சிவசத்தி யென்று சொல்லப்படுகிறது. தங்கம், வெள்ளி, தாம்பிரம், வெள்வங்கம், கருவங்கம், நாகம், இரும்பு என்னும் உலோகங்கள் மேற்கண்ட இரசம், கெந்தகம் ஆகிய இரண்டும் சம்பந்தப்பட்டு அதனதன் அளவு, அதனதன் பாகம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி விளைகின்றன. அவற்றின் விவரம் பின்வரும் விதமாம்.

**தங்கம் :—** எவ்வித மாசுள்ள இரசமும், இயல்பான வெப்பத்தால் சிவப்பாகப் பட்டதும் மாசற்றதுமான கெந்தகமும் சமபாகமாகச் சேர்ந்து உத்தமமாகப் பாகப் படுத்தப்பட்டு வெளியிலுள்ள குளிர்ச்சிப் பூமிக்குட் செல்ல ஏதுவில்லா திருந்தால், தங்கம் விளையும். பூமி சாரத்திற்குத் தகுந்தபடியும் இயல்பான பாகத்திற்குத் தகுந்தபடியும் மண்ணுருவாகவும் மணலுருவாகவும் சிறு கட்டிகள் உருவாகவும் பெருங்கட்டிகள் போன்றும் இருக்கும். இதனைக் கண்டெடுத்துப் பல விதமாகப் பக்குவப் படுத்தி முடிவிலுருக்கி ஒரே பாளமாக எடுத்துக் கொள்ளப்படும்.

**வெள்ளி :—** எவ்வித மாசுள்ள இரசமும் தாளகமும் சமபாகமாகச் சேர்ந்து உத்தமமாகப் பாகப் படுத்தப்பட்டு, வெளியிலுள்ள

இயல்பான குளிர்ச்சியுள்ளே பிரவேசிக்க ஏதுவாவதால், வெள்ளி விளைகிறது. பிறகு இதனையும் மேற்கண்டவாறே உருக்கி எடுக்கப் படுகிறது.

**தாம்பிரம் :—** குற்றமுள்ள இரசமும் குற்றமுள்ள கெந்தகமும் சமபாகமாகச் சேர்ந்து இயல்புச்சூடு கூடுதலடைந்து தங்கவண்ணம் எரிந்து போவதால் தாம்பிர முண்டாகிறது.

**வெள்வங்கம் :—** இரசம் கெந்தகம் ஆகிய இரண்டில் இரசபாகம் அதிகமாயும், கெந்தகத்தில் பிரிதிவின் குளிர்ச்சி சம்பந்தமாயும் இயற்கையில் புறக்குளிர்ச்சி அதிகமாகியும், வெள்வங்க விளைவு உண்டாகிறது.

**கருவங்கம் :—** இரசம் கெந்தகம் ஆகிய இரண்டில் இரசம் அதிகமாகவும் கெந்தகம் அதிக மாசுள்ளதாகவும், சுபாவப் புறக் குளிர்ச்சி அதிகமாகவும் இருக்க நேரிடுவதால், கருவங்கம் விளைகிறது.

**நாகம் :—** இரசம் கெந்தகம் என்னும் இரண்டில் கெந்தகம் மாசுள்ளதாக இருந்து இரசத்தில் இயல்பான புறச்சூடு அதிகரித்து இரண்டாந்தடவையும் பாகப்பட ஏதுவில்லாமல் போவதால் நாகம் விளைகிறது.

**இரும்பு :—** இரசம், கந்தகம் என்னும் இரண்டில் இரசம் மிகவும் குறைந்த அளவாகவும், கந்தகம் அதிக அளவாகவும் இருந்தும் இரண்டும் மாசுள்ளவைகளாகவும் இருக்கப் பெற்றும் உள்ளே குளிர்ச்சி அதிகரித்து வெளியில் வெப்பம் அதிகரித்தும் இருக்க நேர்ந்தால் இரும்பு விளைகிறது.

இவ்விதம் இரசமானது எல்லா உலோகங்களோடும் சம்பந்தப் பட்டிருக்கிறதெனச் சித்த ஆயுள்வேத மருத்துவ அறிஞர்கள், யூனனி மருத்துவ நூல் அறிஞர்கள் ஆகிய இருதரத்தாராலும் நிச்சயிக்கப் பட்டியிருக்கிறது.

**வெண்ணுகஞ் செங்நாகம் விளங்குங் கருநாகம்**
**பொன்னுகத் தோஞு பூட்டு மயனுக**
**மின்னுக மாகு மெடுத்ததுறைக் கெல்லாம்**
**பொன்னுக மென்று புகட்டினுர் கந்தியே.**

ஆனுல், இந்தக் கருத்துகளில் ஐரோப்பிய மருத்துவ ஆய்வினர் முன்னே விகற்பப்பட்டு வந்தாலும் சிலர் இப்போது ஏற்றுக்கொள்ள



வேண்டியதாக இருக்கிறது. இந்த விகற்பக் கட்சி மிக விரிவான தாகையால் இதனை இம்மட்டும் நிறுத்தி, இனி இரசத்தைப் பற்றி எழுதுவோம். ஆனுல், அந்த கருத்துகளானது இரசவாதிகளுக்கு மிகவும் அவசியமானதாகையால் சித்தரது அருளால் (இரசவாத போதினியில்) வகை விவரமாக எழுதுவோம்.

**இரசத்தின் வகைகள் :** இது பொதுவாக இரண்டு வகையாம். ஒன்று பிறவி; மற்ருென்று வைப்பு. ஆனுல் இரசவாதிகள் நான்கு வகையாகப் பிரித்திருக்கின்ருர்கள்.

(1)-வது பிண்ட இரசம் (2-ம் 3-ம்) அப்பிரேக இரசம், 4-வது அண்ட இரசமாம்.

1-வது பிண்ட இரசமென்பது முன்சொன்னபடி சுரங்களில் உற்பத்தியாகி எடுக்கப்படுகிறதாம்.

(2-வதும் 3-வதும்) அப்பிரேக இரசம். இது அப்பிரேகத்திலிருந்து எடுக்கப்படுகிற இரசமாம். வெள்ளை அப்பிரேகத்திலிருந்து எடுக்கப் படும் இரசத்திற்கு வெள்ளையப்பிரேக இரசம் அல்லது, பளிங்கு அப்பிரேக இரசமெனப் பெயர். கருப்பு அப்பிரேகத்திலிருந்து எடுக் கப்படும் இரசத்திற்குக் கிருட்டிண அப்பிரேக இரசமெனப்பெயர். கிருட்டிண அப்பிரேக இரசம் நெருப்பிற் கோடாது.

4-வது அண்ட இரசம். இது முட்டை ஓடுகளிலிருந்து எடுக் கப்படுகிற இரசம். இதுவும் நெருப்பிற் கோடாது. வங்கத்தில் இருந்தும் இரசம் எடுக்கப்படுகிறது. ஆனுல், இதுவும் மேற்கண்ட அப்பிரேக வகைகளிலொன்றென்பது சிலர் அபிப்பிராயம். அண்ட இரசவகையிற் சேர்ந்ததென்பது வேறு சிலர் அபிப்பிராயம். அது எந்த வகையைச் சேர்ந்ததாயினும் வைப்பு என்பதற்கு மறுப்பேது மில்லை. இது நெருப்பிற் கோடும் இயல்புடைய தாகையால் பிறகு இரசத்திற் சேர்ந்தது என்பது தான் பெரும்பாலோர் கருத்து.

வெள்ளை அப்பிரேகம், கிருட்டிண அப்பிரேகம், முட்டையோடு ஆகியவைகளில் இரசத்தை எடுக்கும் முறைகள் மிகவும் அருமை ஆனவைகள். இவ்வித முறைகளை இரசவாத போதினியென்னும் நூலில், அல்லது, இரசவாத சிந்தாமணியில் எழுதும்படி அருள் செய்ய வேண்டும்.

**இரசத்தின் வண்ணங்கள் :—** இரசத்திற்கு நான்கு வகை இயல்பு வண்ணங்களுண்டு. வெண்மை, கருமை ஆகிய இருவகையும்

வெளியானவை. சிவப்பு வண்ணமும் மஞ்சள் வண்ணமும் மறைவானவைகள்; இவ்விரண்டும் இரசத்தைப் பாகப் படுத்தினபின் வெளியாம்.

**இரசத்தின் நச்சுத்தன்மைகள் :—** இரசத்திற்கு ஏழுவகை நச்சுத்தன்மைகள், அல்லது விடக்குணங்கள் உண்டு.

1. நாக்=சர்ப்பம்; அதாவது, பாம்பைப்போல் நெளிதல்.

2. பங்க்=வங்கம். அதாவது, சரசரவென்னும் சப்தத்தையுடையதாக இருத்தல்.

3. அக்ன்=அக்கினி, அல்லது, வன்னி. அதாவது எரியும் குணத்தினை யுடையதாக இருத்தல்.

4. சஞ்சல்யா=சாஞ்சலம். அதாவது, சுறுசுறுப்போடு இயங்கும் குணமுடையதாக இருத்தல்.

5. ஸ்திகா=ஸ்திரம்; அதாவது, நிலையாயிருக்கும் குணத்தை உடையதாக இருத்தல்.

6. பி (b) க்ஹா=நஞ்சு அதாவது நச்சுத்தன்மையை உடையதாக இருத்தல்.

7. த்தல்=தலம். அதாவது அங்கத்தையுடையதாக இருத்தல்.

இவ்வேழு நச்சுத்தன்மைகள்தான், **இரசசிந்தாமணி, இரச இரத்திநாகரம், நவரச சிந்தாமணி** முதலிய நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், **இரச ஜீவரட்சாமிர்தம்** என்னும் நூலில் (க்ங்த்) என்னும் ஒரு குற்றமும் உண்டெனச் சொல்லப்படுகிறது இவ்விதமே தேரையர் நூலிலும் எட்டுவகைக்குற்றங்களைச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்குற்றங்களைத் தூய்மை செய்யாத இரச சம்பந்த மருந்துகளால் உண்டாகும் கெடுதிகளை நாம் முன்னம் ஒருதடவை சொல்லி இருக்கின்றோமாயினும் அதனை வற்புறுத்தும்படியாகத் தமிழிலுள்ள இரண்டு செய்யுட்களையும் இங்கு எழுதுகின்றோம். அவை பின்வருமாறும்.

## தேரையர் வெண்பா

**சர்ப்பவங்கங் கந்திவன்னி சாஞ்சலம லங்காள**
**மொப்புமந்த மெண்டோட மோட்டிாதத்—தைப்புசியார்**
**கொப்புளங்குட் டங்கியெரிக் கோதுவிந்தி னைப்பிறத்த**
**லப்புள மூர்ச் சைக்குமுரி யார்.**



## விருத்தம்.

**கலையைக் கிழிக்கு மவிழ்த் தெறியுங்**
**கல்லைத் தேடி யெடுத் தெறியு**
**மலையிற் குதிக்கும் புனன் மூழ்கி**
**மருள் சேர் பித்தந் தனைக் கொடுக்கு**
**முலையி னனல்போ லுடல் வெதுப்பு**
**மோயா வுழலை வியர் வாக்கும்**
**பலகா லமுமே வாய் பிதற்றும்**
**பாத ரசதோ டமு மி:.தே.**

இவைகளில் முதல் பாட்டில் இரசத்திற்குச் சர்ப்பம், வங்கம், கந்தி, வன்னி; சாஞ்சலம், மலம், காளம், மந்தம் என்பதான எண்வகைத் நச்சுக்குணங்களுண்டென்றும், அவைகளை நீக்காமல் மேற்படி இரச மருந்தை உண்பவர்கள் முறையே விரணம், பெருநோய், தீச்சுவாலை, தபித்தல்; உதிரப்பசையற்ற உடல்; விந்துநாசம், இறப்பு, சோபம் என்கிற எட்டுவகை நோய்களையும் அடைவார்களென்றும், இரண்டாம் பாட்டில் அந்த ரசத்தைத் தூய்மை செய்யாமல் உண்பவர்களுக்கு துணியைக் கிழித்தல், அதனை அவிழ்த்தெறிதல், கல்லாலடித்தல், மலையினின்றும் குதித்தல், தண்ணீரில் முழுகி முழுகிக் கிளம்பல், மயங்கிச் சபித்துக் கொள்ளல், உடலில் அழலை உண்டாக்குதல்' மாறுது வாயில் சலமூறல், மிகுவேர்வை பெருகல், எப்போதும் பிர லாபித்தல் முதலாகிய தீய குணங்கள் திண்ணமாயுண்டாம் என்றும சொல்லப்பட்டிருக்கிறது.

**இரசத்தின் இறகுகள் :—** இரசத்திற்கு ஏழு நச்சுப்பண்புகள் உண்டெனவும் அவற்றைத் தூய்மை செய்யாமல் உபயோகிப்பதால் உண்டாகும் கெடுதிகளையும் நாம் முன் சொல்லி இருக்கின்றோம். **இரசவாதச் சிந்தாமணியில்** சொல்லப்பட்டிருக்கிறதாவது: இரசத்திற்கு ஏழுவகைமாசுகளிருப்பதுமன்றி ஏழுவகைச் சட்டை, அல்லது, சிறகு இருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சிறகுஅல்லது சட்டை அதன் அவயவங்களாகக் கருதப்பட்டிருக்கிறது. அவற்றுள் சில முறைகளுக்காகச் சில அவயவங்களை நீக்கி மற்ற அவயவங்களை நீக்காமல் அப்படியே வைக்கவேண்டி இருக்கிறது. எந்த முறைக்காக எந்தச் சட்டை இருக்கவேண்டியதோ அது இல்லாவிடில் அந்த முறையானது பூரணமாகாது. அந்த முறையினுலுண்டாகும் பயன்களும் அதற்கு இயல்பாக உண்டாக வேண்டியதற்குக் குறைவாகவே இருக்கும். ஆகையால் மருத்துவர்கள், இரசவாதிகள் இந்தக் கருத்துகளைக் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமெனினும் பின்கண்டவர்கள் இக்கருத்துகளை ந் தெரிந்துகொள்ளாமல் இரசவாதத்

தொழிலில் இறங்குவது ஆழிய கடலைக் கைகொண்டு நீந்திக் கரையேற முயல்வது போலாம். அந்தக் கருத்துகளெல்லாம் மிகவும் விரிவான தாகையாலும் நாம் இங்கு எடுத்துக் கொண்ட விவகாரம் வேருகையாலும் சில கருத்துகளை மாத்திரம் சுருக்கமாகக் குறிப்பித்துக் காண்பித்து, இனிநாம் சித்தர் அருளால் வெளிப்படுத்த உத்தேசித்திருக்கும் **இரசவாத போதினியில்** அக்கருத்துகளை வகைவிவரமாக எழுதுவோம்.

மேற்கண்டபடி இரசத்திற்கு ஏழு சட்டை, அல்லது, சிறகு உண்டு. அவைகளாவன.

1. தூம்=தூமம். அதாவது புகை.

2. கன்ப்=கம்பம் அதாவது நடுக்கல்.

3. சர்=சரம். அதாவது உள்ளே இழுத்துக் கொள்ளுதல் அல்லது வாங்கிக்கொள்ளுதல்.

4. அசர்=அசரம். அதாவது உள்ளே இழுத்துக்கொள்ளாமை அல்லது, உள்ளே வாங்கிக்கொள்ளாமை.

5. உதப்=உதப்புதல். அதாவது வேகமாயிருத்தல்; சின்னபின்னமாக்குதல்.

6. கோப்=கோபம். அதாவது கோபித்துக் கொள்ளுதல், அல்லது, ஒன்றிேைடு இணைந்திருக்காமல் பிரிந்திருத்தல்.

7. சஞ்சார்=சஞ்சரித்தல், அதாவது ஆழ்தல் அல்லது ஒன்றிற் போய்ப்புகுந்து கொள்ளுதல்.

ஆகிய இவ்வேழும் இரசத்தின் சட்டை, அல்லது சிறகு, அல்லது சப்பட்டை யெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

இரசக்குளிகை செய்வதானுல் தூமம், கம்பம், சரம், சஞ்சார் ஆகிய நான்கையும் நீக்கி அசர், உதப், கோபம் ஆகிய மூன்றையும் நிறுத்திக்கொள்ள வேண்டியது.

பொன் செய்ய வேண்டிய முறைகளுக்கு இரசத்தைச் சேர்ப்பதானுல் தூமம், கம்கம், சரம், **கோபம் ஆகிய நான்கையும் நீக்கி அசரம், உதப்பு,** சஞ்சாரம் ஆகிய மூன்றையும் நிறுத்திக் கொள்ள **வேண்டும்.**



வெள்ளி செய்யும் முறைகளில் இரசத்தைச் சம்பந்தப் படுத்துவதானுல், தூமம், கம்பம், உதப்பு, சரம் ஆகிய நான்கையும் நீக்கிக் கோபம், அசரம், சஞ்சாரம் ஆகிய மூன்றையும் நிறுத்தி வைக்க வேண்டும்.

உள்ளே சாப்பிடும் மருந்துகளில் சேர்ப்பதற்காகவும் உடலில் பலம் உண்டாவதற்காகவும் இரசத்தைச் சம்பந்திக்க வேண்டியதிருந்தால் கம்பம், அசரம், கோபம் ஆகிய மூன்றையும் நீக்கித் தூமம், சரம், உதப், சஞ்சாரம் ஆகிய நான்கையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இந்தக் கருத்துகளின் மறைபொருள்களையும் அதன் முறைகளையும் தெரிந்து கொள்ளாமல் இரசவாத முறைகளைச் செய்வதெல்லாம் வீணேயாம். இவற்றில் அவசியமானவைகளை நிறுத்திக் கொள்ளும் முறையையும் அவசியமில்லாதவைகளை நீக்கி வெளிப்படுத்தும் முறைகளையும் அருளாளரின் அருளால் சமயம் வாய்க்கும்போது எழுதுவோம்.

**இரசத்தின் வேறுபாடுகள் :—** இரசமானது பிரதானமாக 5- வகைகளென வடமொழி நூல்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. அவையாவன:

**(1) இரசம் :—** இது இப்போது இங்குச் சாதாரணமாகவும் பொதுவாகவும் கடையில் விற்கிற இரசத்திற்குச் சொல்லப்படினும் அசல் ஆன இரசமென்பது செந்நிறமாக இருக்கும். இதில் எவ்வகை மாசுகளும் கிடையா. இது இயற்கையானதாய் அகப்படுவது மகா அரிது. ஆனல் செயற்கையாகச் செய்து கொள்ளலாம்.

**(2) இரசேந்திரன் :—** இது கரி நிறத்தையுடையது. இதிலும் எவ்வித மாசுகளும் இரா. இதுவும் இயற்கையாகக் கிடைப்பது அரிது. ஆனுல் செயற்கையாகச் செய்து கொள்ளலாம்.

**(3) சூதம் :—** இது மஞ்சள் வண்ணமானது. இதில் பதினெட்டு வகைக் குற்றமிருப்பதால் இதனைத் தூய்மை செய்து உபயோகிக்க வேண்டியது.

**(4) மிஷாம் :—** இது பலவகை வண்ணமுள்ளது. இதனையும் தூய்மை செய்து உபயோகிக்க வேண்டியது.

**(5) பாரிதம் :—** இது வெண்ணிறமானது. இதுதான் சாதாரணமாக இப்போது கிடைக்கக் கூடியது; இதில் மாசுகள் அநேக

மிருக்கின்றன. இவைகளைப்பற்றி நாம் முன் சொல்லி இருக்கிறோம்.

இரசத்தின் சாதாரணத் தூய்மைகள் பின் சொல்லப்படும். இரசத்தின் பாக முறைகள்-18- வகைகளாக வடசொல் கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்பாக முறைகளும் தூய்மை முறைகளைச் சேர்ந்தவைகளேயாம்.

இரசம், சூதம் ஆகியவைகள் பிரத்தியேகமான வகைகளாயினும் சாதாரணமாக நாம் இப்போது உபயோகித்து வருகிற இரசத்திற்குப் பெயராக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த இரசமானது சேருகிற மருந்துகளுக்கெல்லாம் கல்யாண ரசம், சுந்தர ரசமென அதனதன் சிறப்புடைய பண்பிற்குத் தகுந்த பெயரிடப் பட்டிருக்கின்றன.

**இரசத்தின் மகிமை :—** நாம் இது வரையில் இரச சம்பந்தமான பல அரிய பொருள்களைத் தெரிந்து கொண்டோம். அவைகள் பெரும்பான்மையும் இரசவாத சம்பந்தமானவைகள். சித்தரின் அருளால் இரசத்தின் மகிமை, மருத்துவ சம்பந்தமான தூய்மை முறை, யோகங்கள் ஆகிய முறைகளை முன்னர் எழுதுவோம்.

மேலும், இரசத்தில் ஒரு ஆச்சரியமான சக்தியை வைத்திருக்கின்றார். அந்தச் சக்தியானது வேறெந்தத் தனிச்சரக்கிலும் கிடையாது. ஒவ்வொரு சரக்கும் பல வியாதிகளுக்கு உபயோகமாகும். சில நோய்களில் அறவே உபயோகமாகாது. ஆனால் இரசத்திலோ அவ்வித ஏற்பாடில்லை. சில சரக்கு இரண சம்பந்தமான நோய்களுக்கு உபயோகமாகும். ஆனால், சில இரண சம்பந்த நோய்களுக்கு உபயோகமாகா. இதனால் சில சரக்குகள் சீதளசம்பந்த நோய்களுக்கு உபயோகமாவது சூடு சம்பந்த நோய்களுக்கு ஆகாது. சில சரக்குகள் தோல் நோய்கள் முதலிய புற நோய்களுக்கு உபயோகமாகும். அகநோய்களுக்கு அறவே உபயோகமாகாது. இரசமோ அகம்புறம் என்னும் இரண்டு வகை நோய்களிலும் உபயோகமாகிறது. ஒவ்வொரு சரக்கிற்கும் தனியே பிரத்தியேகக் குணமுண்டு. வேறொன்றில் சம்பந்தப் படுத்தினால் அப்போது வேறுவிதக் குணமாவதுமுண்டு. இரசத்திற்கோ அவ்விதக் குணமில்லை. அதாவது வெப்பமான சரக்குடன் சேர்த்தால் வெப்பத்தையே கொடுக்கும். சீதளச் சரக்குடன் சேர்த்தால் சீதள குணத்தையே கொடுக்கும். சுருக்கிச் சொல்லில் இரசமானது தட்பவெப்ப நோய்களிலும் அகம்புறம் என்னும் இருவகை நோய்களிலும் மற்றெல்லா நோய்களிலும் உபயோகமாகிறது. ஆகையால்தான், திறமையான மருத்துவர்கள் எந்தவகை நோய்களிலும் அதனதன் துணைமருந்துகளுடன் இரசத்தை உபயோகித்து வெற்றி பெற்று வருகின்றார்கள். இதனை உபயோகிக்கும் வகைகளையும் இதன் சம்பந்தமான பிரயோகங்களையும் முறைப் பிரகாரந்தெரிந்து கொள்ளாதவர்கள் ஒரு போதும் மருத்துவராகார் எனப்பல நூற்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.



நமது சகோதர மருத்துவர்களுள் பலர் இரசத்தை முறைப்படி தூய்மைசெய்யாமல் உபயோகிப்பதால் பற்பலவித கெட்ட பெயர்களுக்கும் பற்பல அபாயங்களுக்கும் உட்பட நேரிடுகிறது. இரசத்தை முறைப்படிதூய்மைசெய்து உபயோகிப்பாதாயின் எந்த வித நோயையும் தீர்த்து விடுமானால் தாபத்தை அடைத்து நற்பெயரையும் புகழையும் அடைவார்களென்பது நிச்சயம். நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் தூய்மை செய்யும் முறைகளைக் கைமுறையாகவும், செய்பாக முறைப்படியும் தெரிந்துகொள்ள முயற்சி செய்யாமல் மனம் போனபடி செய்வதை யோசிக்குங்கால் இவர்களிப்படிச் செய்வதற்கு முதன்மையான காரணம் நூல்களின்மீதுள்ள அவமதிப்போ? அல்லது அதனை அறியாமையோ? அல்லது, அதனைத் தெரிந்து கொள்ளச் சக்தியில்லாமையோ? என நமக்கு விளங்கவில்லை. இவர்கள் முறைப் பிசகாய் உபயோகித்துத் தாங்கள் துன்பமடைவதுடன் போகாது அதனை, உட்கொண்டவர்கள் பெருந் துன்பமடைந்து இரசமென்று பெயரைக் கேட்டவுடனே இரசத்தைப் போலப் பறந்தோடும்படியாக நேரிடுகிறது. இரசத்தின் பெருமையைப் பற்றி நமது முன்னோர்கள் எழுதியிருப்பதை இங்குத் தனியே எழுதுவதானால் அதுவே ஒரு பெரிய நூலாகி விடும். ஆயினும், நமது ஆதரவாளர்கள் தெரிந்து கொள்ளும்படியாக அக்கருத்துகளை மிகவும் சுருக்கமாக எழுதுகின்றோம். இக் கருத்துகளை எல்லாம் நாமே யெழுதாமல் **மகான்களாகிய சித்தர்கள், முனிவர்கள் ஆகிய நம் முன்னோர்கள செய்து வைத்திருக்கின்ற மகா பெருமை தங்கிய பல அரிய மருத்துவ நூல்களிலிருந்து சேகரித்து இங்கெழுதுகின்றோம.** அவை பின் வருகிறவிதமாம்.

இந்த இரசமென்னும் ஒரு பொருளானது முறைப்படி பாகப் படுத்தப்பட்டு யாரிடத்தில் இருக்கின்றதோ அவர்கள் எல்லா நோய்களையும் நிமிடக்கணக்கில் போக்கக் கூடுமென்பது நிச்சயம்.

முறைப்படி பாகப்படுத்தப்பட்ட இரசத்தை நோயுற்றவர்களுண்டு நோயற்றவர்களாக இருந்தார்கள்.

இவ்வித ரசத்தை, நோய்கள் கண்டவுடன் வணக்கம்செய்து அந்நாட்டை விட்டோடிப்போம்.

இரசமானது உணர்ச்சி அற்றவர்களுடையவும், மூர்ச்சை அடைத்தவர்களுடையவும் எல்லா நோய்களையும் நீக்கும். இந்த இரசமே ஆகாயத்தில் பறக்கும் சக்தியையும் உண்டாக்கும். ஆகையால், இதனை முறைப்படி தூய்மை செய்வதற்கு முயற்சி செய்து கொஞ்சம் சிரமப்படுங்கள்.

இரசத்தை முறைப்படி தூய்மை செய்ய அறியாத மருத்துவன் வீணே மருத்துவம் செய்கின்றான். மருத்துவத் தொழிலுக்கு ஒரு வழுவை உண்டாக்குகின்றான்; பழியை ஏற்றுக் கொள்கின்றான். இத்தகையினர்கள் அந்த மருத்துவத் தொழிலை விட்டுவிட்டு வேறெந்தத் தொழிலையும் செய்தால் பெரும்புண்ணியம் உண்டாகும்.

தீயானது (அக்கினி) தான் பிரவேசித்த எந்த பொருளையும் எரித்துத் தகித்து நிர்மூலமாக்கிவதுபோல, முறைப்படி தூய்மை செய்யப்பட்ட இரசமானது எல்லா நோய்களையும் நிர்மூலமாக்கி நீக்கி விடும்.

இரசத்தை முறைப்படி தூய்மைசெய்து அதனை முறைப்படி பற்பமாக்கி உபயோகித்தால் மரணபாயத்திற்குச் சமீபித்த நோய்களையும் போக்கி அவ்வாபத்தினின்று நீக்கிக் கொள்ள வழியாகும்.

முறைப்படி பாகப்படுத்தப்பட்ட இரசமானது, உடல் வலிமையையும் உடல்வளமையையும் உண்டாக்கி புத்தியை விருத்தி செய்யும்.

முறைப்படி செய்யப்பட்ட இரசமானது ஆயுள் விருத்தி, செல்வ விருத்தி, சுகவிருத்தி, தீபனவிருத்தி, மறதி மாறல், உடல் வலிவு விருத்தி, உடல் வனப்பு விருத்தி, பொருள் விருத்தி, முதலிய பல விருத்திகளைக் கொடுப்பதுபோல் வேறொன்றும் கொடுக்காது. ஆகையால், அதற்குச் சமானமான வேறொரு பொருள் உண்டென்றுச் சொல்வது வீண் கட்டேயாம். இதன் அருமை பெருமையை அறிந்தவர்கள் அரை நிமிடமும் அதன் மீதே நீங்காத ஆசையுள்ளவர்களாகயிருப்பார்கள். வேறொன்றையும் விரும்பார்கள். மற்றொன்றைப் பற்றியும் கவலை கொள்ளார்கள்.

இரச பற்பம் முதலியவைகள் மற்ற மருந்துகளைப் பார்க்கிலும் மிகவும் குறைந்த அளவாக உபயோகப்படுகிறபடியால் இதன் சுவையைப் பற்றி எவ்வித கடினமுமில்லை ஆகையால், இதை உட்கொள்பவர்களுக்கு எவ்வித கடினமும் அருவருப்பும் இராது.



உட்கொண்ட பிறகு குணந்தருவதில் எல்லா மருந்துகளைப் பார்க்கிலும் இதுவே முதன்மையானது. உட்கொண்ட உடன் இது குணத்தைத்தருவதுபோல் வேறெந்த மருந்தும் அவ்வளவு சீக்கிரமாகக் குணத்தைத் தராது.

இந்த இரசத்தை உண்பதனால் புத்திக்கூர்மை உண்டாகிறது. ஆண்மை உண்டாகி நிலைத்திருக்கிறது. ஒழுங்கு முறைப்படி செய்யப்பட்ட இரசத்தை அல்லது, அது சம்பந்தமான யோக முறையை உபயோகிக்காதவரையில் காயசுத்தி, காயசித்தி, ஆகியவைகள் உண்டாகா.

இரசமானது தூய்மைவிதி முறைப்படி பிரம்மத்தன்மை (படைத்தல்), திருமால் தன்மை (காத்தல்), சிவத்தன்மை (அழித்தல்), என்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

எல்லாவகை மருந்துகளுக்கும் வசப்படாமல் கைவிடப்பட்ட நோய்களிலும் இரசம் தனி வல்லமையைக் காண்பிக்கும். எல்லா வகை நோய்களையும், நரை, திரை, மூதுமை ஆகியவைகளையும் மாற்றக் கூடியது இந்த இரசமேயாம். உணர்ச்சி இல்லாமையை உண்டாக்கக் கூடிய நோய்களிலெல்லாம் உடனே உணர்ச்சியை உண்டாக்கி அந்த நோயைத் தீர்க்கக்கூடியது இரசமேயாம்.

குட்டம், குறைநோய், பவுத்திரம், கிரந்தி, விரண மேகம், முதலிய மிகக் கொடிய நோய்களையும் பறந்தோடும்படி செய்வது இந்த இரசமேயாம்.

உடலை இரும்பைப்போல் செய்யக்கூடியது இவ்வகை இரசமேயாம்.

முதுமை, இறுதிக்கால துன்பம் முதலியவைகளை நீக்கக்கூடிய சக்தி இதற்கிருப்பததனால் இதற்கு இரசமெனப் பெயரிடப் பட்டிருக்கிறது. எல்லாவகைத் தாதுக்களுக்கும், துணைத்தாதுக்களுக்கும் இது இராஜாவாயிருப்பதால் இராசேந்திரன் எனப் பெயரிடப்பட்டு இருக்கிறது. உடம்பை இரும்பைப்போல் வலுப்படுத்துவதால் இதற்குச் சூதம் எனப்பெயரிடப்பட்டிருக்கிறது. நோயாகிய ஆழ்ந்த கடலில் மூழ்கினவர்களையும் மேலே தூக்கிக் கரை சேர்ப்பதினால் இதற்குப் பாரிதமெனப் பெயரிடப்பட்டிருக்கிறது. எல்லாவகை உலோகங்களின் சக்தியும் இதற்கிருப்பதினால் இதற்கு மிஷா எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

இதனை பின் சொல்லியிருக்கிறபடி தூய்மைசெய்து கெந்தகத்துடன் சேர்த்தரைத்தால் இரசமானது மடிந்து போய் கருப்பு வண்ணமுள்ளதாகி விடும். இதனுல், இரசத்தின் தோடமற்று அதற்கு ஒரு விதமான சக்தி உண்டாகி விடுகிறது. இப்படிச் சிவமென்னும் இரசத்துடன் சக்தியென்னும் கெந்தகத்தையும் தொந்தித்து மற்ற மருந்துகளோடு சேர்ப்பதினுல் அந்த மருந்துகளுக்கும் இயல்பான சத்தைப்பார்க்கிலும் அதிக மேலான சத்தை உண்டாக்கி விடுகிறது.

இரசத்தின் பெருமையையும் அதன் வல்லமையையும் பற்றிப் பெரிய நூல்களில் எழுதி இருப்பதை நாம் கவனிக்குங்கால், அதிக வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. ஆனுல், இச் சிறப்பு மிகு குணங்களெல்லாம் ஒழுங்கு முறைப்படி தூய்மை செய்யப்பட்ட இரசத்திற்குண்டே யொழிய மற்றப்படி அசுத்தமான இரசத்திற்கிராது. நன்மைகளுக்கு மாருக சிறுமையும் தீமையு முண்டாகும். இதைப் பற்றி நாம் முன் விபரமாக எழுதி இருக்கின்ருேம். அவற்றையே இங்கெழுதுவது அவசியமன்று. நாமடிக்கடி வற்புறுத்திச் சொல்வதெல்லாம் இந்த அருமையான பாகங்களைத் தெரிந்து கைமுறைப்படி செய்து, கொடிய நோய்களால் துன்பப் படும் சகோதரர்களை அவ்வாபத்தினின்று நீக்கி, உயிர்களிடம் உள்ள அருட் தன்மையாலும், உலகோர்க்கு உதவும் நோக்கிலும், குணம் அடைய ஏதுவாக்க வேண்டியதே முதன்மையான விழைவாகும்.

**இரசத்தூய்மை அவசியமென்பது:**— இரசத்திற்கு ஒப்பற்ற அநேக சிறந்த குணங்கள் இருந்தபோதிலும் பூரணச் சந்திரனுக்கும் ஒரு கறை இருப்பதுபோல் இதற்கும் முன் கண்டபடி 15-வகை மாசுகளிருக்கின்றன. நாம் மேலே குறித்திருக்கிறபடி இந்த மாசுகளை நீக்காவிட்டால் மேற்கண்ட நற்குணங்களுக்குப் பதிலாகத் தீய குணமே உண்டாகும். அதனை முறைப்படி தூய்மை செய்யாமல் உபயோகிப்பதினுலேயே அதன் பெயரும் புகழும் குன்றி இரசமென்னும் பெயரைக் கேட்டவுனே மக்கள் திடுக்கிட்டுப் பயப்படும்படியாக இருக்கிறது. இது சத்திய விவகாரமே. இரசத்தில் உள்ள மாசுகளானது நீக்கப்படாத வரையில் அது நிச்சயமாகப் பற்பல வித அவலட்சணங்களை உண்டாக்குவது திண்ணம். கல் முதலிய எல்லாக் கடின பண்டங்களையும் நாமுட் கொண்டு செரிக்கச் செய்யலாம். இதனைக் கொஞ்சமாயேனும் அதிகமாயேனும் உட்கொண்டு ஒரு போதும் செரிக்கச் செய்ய முடியாது. நாம் எவ்விதம் சாப்பிட்டோமோ அவ்விதமே சற்று நேரத்திற்குள் வெளி



வந்து விடும். அந்த இரசமானது அசுத்தமானதாக இருந்தால், அவற்றும் பெரும்பான்மையான பாகங்கள் அங்கு தங்கி நின்று இரத்தத்துடன் சேர்ந்து உடல் முழுவதும் பரவி கைகால் பிடிப்பு, கீல் பிடிப்பு, ஆகிய பல நோய்களுக்கும் ஏதுவாக்கும். ஆகையால், இதனை முன்னர், தூய்மைசெய்து பிறகு மருந்துகளுடன் சேர்த்து அரைக்கப்படுகிறது. இதனைத் தூய்மைசெய்து மருந்துகளுக்கு, சேர்ப்பதால் அந்த மருந்துகளுக்கு இருபது அல்லது, முப்பது பங்கு வேகத்தை உண்டாக்கிவிடுகிறது. அப்போதும் இரசம் உடற்குள் இராமல் வெளியாகி விடும். ஆனுல், பூரணமான பற்பமாக அல்லது, செந்தூரமாகச் செய்துவிட்டால் உடம்புக்குள்ளே தங்கி பற்பல நற்குணத்தை கொடுக்க ஏதுவாகும். அப்படிப் பூரணமாகவும் ஒழுங்கி முறைப்படி செய்யப்படாத இரச பற்பத்தால் குட்டம் முதலிய மிகக் கொடிய நோய்கள் பிறக்கும்.

ஆகையால், இயன்ற வரையில் பின்காணும் முறைகளுள் ஒன்றின்படி தூய்மை செய்தே இரசத்தை மருந்துகளுடன் சேர்க்க வேண்டியது அவசியம்.

இனி நாம் வைத்திய முறைகளுக்காம் இரசத் தூய்மை இலகுவான இரண்டொரு முறைகளை எழுதுவோம். ஆனுல் இரச தூய்மை முறைகளோ அநேகம். அவை எல்லாவற்றையும் சித்தர் அருளால் இனி அச்சிடப்படும் அனுபோக வைத்திய ரத்திஞகரத்தில் வகை விவரமாக எழுதுவோம்.

## 1. இரசத் தூய்மை

இரசத்தை உரத்த் துணியில் வைத்துப் பிழிய வேண்டும். பிழிந்த இரசத்தை மறுபடியும் துணியில் வைத்துப் பிழிய வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஆயிரம் முறைகள் செய்வதால், அதிலுள்ள பலவகை மாசுகள் ஒருவாறு நீங்கும். பிறகு அந்த இரசத்தை ஓட்டிலிட்டு அது முழுகி நிற்கும்படியாக நீர் விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரிக்க வேண்டும். நீர் சுண்டச் சுண்ட அடுத்தடுத்து நீர் விட்டு வரவேண்டும். இரசமானது நீர்க்குள்ளேயே இருக்க வேண்டும். இரசத்தின் மீதுள்ள நீர் சுண்டி விட்டால் இரசம் பறந்து போக ஏதுவாகும். ஆகையால், இந்த செய்முறையில் அதிக விழிப்பாக இருக்க வேண்டும்; இப்படிச் செய்து வந்தால் நீரானது சிறுகருப்பு வண்ணமாகி விடும் அதுவே பதமெனக் கீழிறக்கிக் காடியை விட்டுக் கையினுல் பிசைந்து நாலைந்து தடவைகள் காடியை விட்டே கழுவி எடுத்துக் கொள்ளத் தூய்மையாம். பிறகு குப்பியில் எடுத்து வைத்துக்கொண்டு

வேண்டிய போது மருந்துகளுடன் சேர்த்து உபயோகிப்பதனுல் அதிகப் பயனும் உண்டாம்.

## 2: இரசத் தூய்மை

மேற்கண்டபடி இரசத்தை உரத்த துணியில் வைத்து மடக்கி மடக்கிச் சுமார் நூறு அல்லது, இருநூறு தடவைகள் பிழிந்து கல்வத்திலிட்டுச் சிற்ருமணக்கிலைச் சாற்றை அல்லது, பேராமணக்கிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் வைத்து உலர்த்தி நன்ருக உலர்ந்த பின் ஊதுகுழாய் முதலியவைகளால் ஊதி அதிலுள்ள அழுக்கைப் போக்கி இரசத்தை எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு மணித்தக்காளியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முன் போல் நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் முன் போல் வெய்யிலில் உலர்த்தி ஊதுகுழாயால் ஊதி அழுக்கைப் போக்கி இரசத்தை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதனுலும் இரசத்திலுள்ள மாசுகள் நீங்கித் தூய்மையாகிவிடும்.

## 3. இரசத் தூய்மை (வேறு)

இரசம் 5 பலம் (175 கிராம்), சித்திரமூல வேர்ப் பட்டைத்தூள், அரிசித்திப்பிலித்தூள், மேற்ருேல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள், பெருங்காயம், இந்துப்பு வகைக்கு 1 பலம் (35 கிராம்), இவ்வேழு சரக்குகளையும் ஒன்ருக இடித்துத் தூள்செய்து முன் இரசத்தைக் கல்வத்திலிட்டு இந்தத் தூளைப் சேர்த்து 12-சாமம் அரைக்க வேண்டும். இதைத் தொடர்ச்சியாக அரைக்க வேண்டும் என்னும் நிபந்தனையில்லை. ஓய்வான காலங்களில் எவ்விதமும் 12-மணி நேரம் அரைத்தாக வேண்டியது.

இவ்விதம் அரைத்தான பின் அதிலுள்ள மருந்துகளை ஊதுகுழாய் முதலியவைகளால் ஊதியாயினும், முறம் முதலியவைகளில் போட்டுக் கொழித்தாயினும் போக்கி இரசத்தை மாத்திரம் எடுத்து முன்போல் கல்வத்திலிட்டு முன் போல் முன் மருந்துகளை முன்னிடையே இடித்துத் தூள்செய்து முன்போல் இரசத்துடன் சம்பந்தப்படுத்தி 12-சாமம் அரைக்க வேண்டும். இவ்விதம் 12-சாமத்திற்கு ஒரு தடவை சரக்குகளைப் புதியதாகச் சேர்த்துச் சேர்த்து ஏழு பன்னிரெண்டு சாமங்கள் அரைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இரசத்திலுள்ள எல்லாக் குற்றங்களும் நீங்கிப் பரிசுத்தமாகி விடும். இவ்வித இரசத்தைச் சம்பந்தப்படுத்திச் செய்யும்



மருந்துகளினுல் வாய்பிடித்தால் முதலிய எவ்விதத் தீய குணங்களும் உண்டாகாது. இவ்வித இரச சம்பந்தமான மருந்துகளின் குணச் சிறப்பை அவரவர்களே தம் தம் அனுபவத்தில் தெரிந்து நிச்சயித்து ஆனந்திக்க ஏதுவாகும். ஆனுல், இது கடினமான வேலையென மலைப்பவர்களுக்கு எல்லாம் மலையைப்போலவே தோற்றும் அதற்காக நாம் என் செய்வோம்.

**குறிப்பு:—** முன் மூன்று முறைகளும் அனுபோக வைத்திய நவநீதம் 4-ஆம் பாகத்திலும் சொல்லப்பட்டியிருப்பினும், அஃது இல்லாமல் இதனை மாத்திரம் படிக்க நேரிடுபவர்களுக்கும் உபயோகமாகும்படி இங்கு எழுதப்பட்டன.

## 4. இரசத் தூய்மை (வேறு)

இரசம் 5 பலம் (175 கிராம்), இதனைக் கல்வத்திலிட்டுப் பின் சொல்லப்படும் திரிபலைக் குடிநீரை சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். இதனை வெய்யிலில் வைத்து ஈரம் உலர்ந்த பின் சொல்லப்படும். துராஇலைக் குடிநீரைச் சிறுகச் சிறுகவிட்டு நான்குசாமம் அரைக்க வேண்டும். அதனை, வெய்யிலில் வைத்து ஈரமுலரந்த பின் காடியைச் சிறுகச் சிறுக விட்டுநான்டு அரைக்க வேண்டும். அதனை வெய்யிலில் வைத்து ஈரம் உலர்ந்த பின் மிளகு, அரிசித்திப்பிலி ஆகிய இரண்டின் குடிநீரை சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு வெள்ளைப் பூண்டைத் தோலை நீக்கி இடித்துப் பிழிந்த சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ள வேண்டும். இதன் பிறகு எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் வைத்து உலர்த்திக்கொள்ள வேண்டும். முடிவாக மஞ்சட்தூள் 1 பலம் (35 கிராம்), பழைய செங்கல்பொடி 1 பலம் (35 கிராம்) ஒட்டரை 1 பலம் (35 கிராம்). இம் மூன்றையும் ஒன்ருக முன் இரசத்துடன் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்துக் காடியைவிட்டுக் கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லது, வெய்யிலில் உலர்த்தி ஊதுகுழாய் முதலியவைகளால் ஊதி இரசத்தை எடுத்துக் கொள்வதினுலும் பரிசுத்தமானதாகிவிடும். வெள்ளியைப்போல் பிரகாசம் உண்டாகும். இவ்விதம் தூய்மை செய்யப்பட்ட இரசத்தை மருந்துகளுடன் சேர்த்துச் செய்வதினுல் வாய் பிடித்தல், முதலிய தீய

குணங்கள் ஒன்றுமிராது. இன்னம் பலவிதச் சிறந்த செயற்கைகளையும், சொன்னது சொன்னதுபோல் செய்யும் குணத்தையும் அனுபோக சித்தமாய்க் காணலாம். இதனைத் தாதுவிருத்தி மருந்துகளோடு சம்பந்தப்படுத்தி உபயோகிப்பதனால் நரம்புகளுக்கு முறுக்கேறி உடல்வலிமை, உடல்வளமை முதலியவைகள் உண்டாகும்.

**திரிபலைக் குடிநீர் :—** மஞ்சட் கடுக்காய்த் தோல் 2 பலம் (70 கிராம்), தான்றிக்காய்த் தோல் 2 பலம் (70 கிராம்), நெல்லி முள்ளி 2 பலம் (70 கிராம்), இம் மூன்றையும் இரண்டு படி தண்ணீரில் ஊற வைத்துக் காய்ச்சிக் காற்படியாகச் சுண்டினபின் இறக்கி வடிகட்டித் திப்பிநீக்கி எடுத்து வைத்துக்கொண்டு முன் சொன்னபடி இரசத்தில் விட்டு அரைக்க வேண்டும்.

**துரா இலைக் குடிநீர் :—** தூரா இலை 6 பலம் (210 கிராம்), இதனை 2 படி தண்ணீரில் போட்டு ¼ படியாக சுண்டவைத்து வடிகட்டித் திப்பி நீக்கி வைத்துக் கொண்டு மேற் சொன்னது போல் இரசத்தில் விட்டரைக்க வேண்டியது.

**குறிப்பு :—** துரா இலை பச்சையாக அகப்படுவதாக இருந்தால் அதனை இடித்துச் சாறு பிழிந்து அந்தச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைப்பதால் சிறப்பான குணமுள்ளதாம். அகப்படக் கூடிய சமயங்களில் இவ்விதம் செய்து கொள்வது உத்தமமான விஷயம்.

**மிளகு திப்பிலிக் குடிநீர் :—** மிளகு 3 பலம் (105 கிராம்) அரிசித்திப்பிலி 3 பலம் (105 கிராம்), இவ்விரண்டையும் சிதைத்து இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் காற்படியாகச் சுண்ட வைத்து வடிகட்டித் திப்பி நீக்கி எடுத்துக் கொண்டு இரசத்தில் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டியது.

## 5. இரசத் தூய்மை

(அ) தேவையான அளவு இரசத்தைக் கல்வத்திலிட்டு விட்டு அதற்கிரண்டு பங்கு சோற்றுக்கற்றாழைச் சாற்றைவிட்டு வேறு அரைக்க வேண்டும். விட்டசாறு நன்றாய்க் கறுத்து விட்டால் அதை இறுத்து விட்டு வேறு புதிய சோற்றுக் கற்றாழைச்சாற்றை முன் போல் விட்டு அரைக்க வேண்டும். அதுவும் கருத்த உடனே அதை இறுத்த விட்டு முன் போல் சாற்றை விட்டு முன் போல் அரைகக்வும். இவ்விதம் மடக்கி மடக்கிச் சோற்றுக்கற்றாழைச் சாற்றைவிட்டு அரைத்து அது கறுக்கக் கறுக்க இறுத்து மாற்றி மாற்றிச் சாற்றைவிட்டு நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் வைத்து ஈரப்பசையில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும்.



(ஆ) மேற்கண்ட இரசத்திற்கு நான்கு பங்கெடை சரக்கொன்றைப் புளியை எட்டுப் பங்கு தண்ணீரில் கரைத்து வடிகட்டித் திப்பி நீக்கின மேற்படி சரக்கொன்றைப் புளி நீரைக் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவும்.

(இ) கொடிவேலி வேர்ப்பட்டை மேற்கண்ட இரசத்திற்கு மூன்று பங்கெடை. இதனைச் சிதைத்து எட்டுப் பங்கெடை தண்ணீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டுத் திப்பி நீக்கின குடிநீரை மேற்படி இரசத்தில் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். பிறகு வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

(ஈ) மேற்படி இரசத்தில் மணித்தக்காளிச் சாச்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் வைத்து ஈரம் உலர்ந்த பின் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்விதம் அரைத்தெடுத்தஇரசத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டுக் கொண்டு அதில் தண்ணீரை விட்டு கை விரல்களால் பிசைந்துக் கொண்டே அரைமணி, அல்லது, ஒருமணிக் கொருதடவை அந்தத் தண்ணீரை இறுத்து வேறு தண்ணீர் விட்டு பிசைந்து வரவேண்டும். இவ்விதம் தண்ணீரானது பரிசுத்தமாக வெளிப்படும் வரையில் பிசைந்து கழுவி வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது.

இவ்விதம் தூய்மை செய்யப்பட்ட இரசமானது அதிக மேலானதாக இருக்கும். இது சம்மந்தப்பட்ட மருந்தின் பெருமை முதலியவைகளை செய்தேர்ச்சியுடையோர் நன்கு விளங்கிக் கொள்வார்கள். உழைப்பிற்கும் அயரமாட்டார்கள். அனுபவம் இல்லாதவர்களுக்குச் தூய்மை செய்ததும் தூய்மை செய்யாததும் ஒன்றே, எழுதுவதும் எழுதாததும் ஒன்றே. எந்த செய்முறை ஆயினும், எந்த வகையாயினும் எல்லாம் கடினமாகவே இருக்கும். அத்தகையினர்களுக்காக நாம் இங்கு எழுதவரவில்லை. உலகோர்க்கு உதவும் நோக்குடனும், உயிர்களின் மீதுள்ள அருளி

னூலும் மருந்துவநூல், உத்தி, புத்தி செய்தோர்ச்சி முதலியவைக் கேற்ப நாமிங்கெழுதி இருக்கின்ருேம். இனி விருப்பமானவர்கள் செய்து சுகத்தை அடையலாம் இஷ்டமில்லாதவர்கள் விட்டு விடலாம். மருந்தின் மீது குறை சொல்ல வேண்டாம்.

**குறிப்பு:**— இரசத்தூய்மை முறைகள் இன்னும் அநேகமுள. அவை எல்லாம் இனியக் கிடைப்படும் அநுபோக வைத்திய இரத் நாகரத்தில் எழுதுவோம். இங்கு எழுதியிருக்கிற சில முறைகள் இங்கு போதுமானவை ஆகையால் இம்மட்டும் நிறுத்தினேம். இவ்விதம் தூய்மை செய்ய இயலாத காலங்களில் கீழ்க்கண்ட பாகப் படி இலிங்கத்திலிருந்து எடுத்த வாலேரசத்தையாயினும் உப யோகித்துக் கொள்ள வேண்டும். கடை இரசத்திலுள்ள மாசுகளைப் போல் மாசுகளுள்ளதாக இராமல் ஒருவாறு அது சுத்தமானதாய் இருக்கும்.

## 6. வாலேரசம்

நான்கு பலம் பம்பாய் லிங்கத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். பிறகு ஒரு வில்லையாகச் செய்துகொள்ள வேண்டும். இரண்டு பானைகளை வாயைத்தேய்த்து மட்டமாகச் செய்துகொண்டு மேற்பானைக்கு ஊமத்தையிலைச் சாற்றை அல்லது, முள்முருக்கையிலைச் சாற்றைச் சுவறப்பூசி ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு அடிப்பானையில் முன் சித்தப்படுத்தின வில்லையை வைத்து மேற்பானையையும் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி ஆரம்பத்தில் ஒரு சாமம் சிறுதீயாக எரித்துப் பிறகு காடாக்கினியாக மூன்று சாமம் எரிக்க வேண்டும். இவ்விதம் எரிக்கும் போது மேற்பானையின் மீது ஈரத்துணியைப் போட்டு வைத்து ஈரம் உலர உலர நனைத்துக் கொண்டே வரவேண்டும். அடுப்புடனே குளிரவிட்டு நன்ருயாறினபின் கவசத்தை விழிப்பு யுடன் பிரித்து மேற்பானை முதலிய இடங்களிலுள்ள பதங்கத்தைப் மயிர்க்கற்றையினுல் துடைத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டுக் கையினுல் பிசைந்திக்க எல்லாம் இரசமாகிவிடும். இதனை உரத்த துணியில் 21 தடவை அல்லது, 11 தடவை வைத்துப் பிழிந்து எடுத்துக் குப்பியில் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்யப்பட்ட இரசத்தையாகிலும் மருத் துவர்கள் மருந்தில் உபயோகித்தால்தான் தன்மைக்கு ஏதுவாகும். இவ்விதம் இரச சம்பந்தமான மருந்துகளின் குணமும் சிறப்பாகக் காணப்படும். இவ்விதமாயினும் செய்து உபயோகிக்கா விட்டால் இழப்பிற்கும் பேருழைப்பிற்கும் ஏதுவாகும். இதற்கும் சோம்பல் படுகிறவர்கள் வேறெந்த மருந்துதான் செய்வார்கள்.



## 7. வாலேரசம் (வேறு)

பம்பாய் லிங்கம் 2 பலம் (70 கிராம்), வீரம் 1 பலம் (35 கிராம்). இவ்விரண்டையும் சேர்த்தரைத்து அஞ்சனம் போலான பின்). பஞ்சைப் பித்து அடைபோல் செய்து அதன்மீது இதனைத் தெளித்து ஒரு சட்டியில் வைத்து கொளுத்திவிட்டு மேற் சட்டி மூடி விட வேண்டும். அதிக சந்து இல்லாமலும், அதிகம் புகை போகாமலும் விழிப்புடனும் செய்ய வேண்டியது. இதனைக் கைபாக மாகச் செய்தால் லிங்கத்திலுள்ள இரசம் வெளிப்பட்டுப்போம். இதனை உரத்த துணியில் வைத்து 12-தடவை அல்லது 11-தடவை பிழிந்தெடுத்து குப்பியிற்பத்திரப்படுத்த வேண்டும் பிறகு இரசசம்பந்தமான மருந்துகளில் இதனையாகிலும் உபயோ கித்து கொள்ள வேண்டும்.

**குறிப்பு:**— மேற்கண்ட பாகத்தைச் செய்து கொள்வதற்குக் கைபாகமும், சமயோசித தந்திரமும் தெரிந்திருக்க வேண்டும், அப்படி இல்லா விட்டால் இரசம் வெளிப்படாது. தப்பான முறை யென்று குறை கூற வேண்டாம். தீயின் பக்குவம் தெரியாதவர்கள் மேற்கண்ட இரண்டு சரக்குகளையும் முன்போல் அரைத்துக் கல்வத்தின் ஒரு பாகத்தில் வைத்துழத்திக் கீழ்ப் பாகத்தைக் கொஞ்சம் சாய்த்துக் கடும் வெய்யிலில் வைத்தாலும் இரசம் வெளிப்பட வெளிப்படச் சேகரித்து முன்போல் உரத்த துணியில் வைத்துப் பிழிந்து குப்பியில் பத்திரப்படுத்தவும்.

## 8. வாலேரசம் (வேறு)

பம்பாய் சாதிலிங்கம் 2 பலம் (70 கிராம்), இதனைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு அரைத்துக் கொடிவேலி வேர்ப்பட்டை, ஓமம் ஆகியவைகளை இடித்துச் சட்டி யில் போட்டு முன் லிங்கத்தைத்தூவி மேற்சட்டி சீலைவலுவாகச் செய்து முன் சொல்லி இருக்கிறபடி அடுப்பேற்றி எரித்து இரசத்தை எடுத்துக் கொள்ளவும். இந்தப் பாகம் **அநுபோக வைத்திய நவநீதம்** நான்காம் பாகத்தில் விபரமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அவசியமானவர்கள் தயவுடன் அங்குப் பார்த்துக் கொள்ளவும்

## இரசத்தைக் கட்டும் மூலிகைகள்

இரசத்தைக் கட்டும் மூலிகைகளும், இரசத்தைக் கட்டும் வகைகளும் அநேகமுண்டு. அவற்றுள் முக்கியமான சிலவற்றை மாத்திரம் இங்கெழுதுகின்றோம். அவையாவன :—

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| சேராங் கொட்டை | வெள்ளரலி வேர் | முள்முருங்கை விதை | அண்டத் திராவகம் | ஊமத்தை விதைத் தைலம் | குன்றிமணி விதை | ஓரிலைத் தாமரை |

மேற்கண்ட சரக்குகளினால் நெருப்பிற் கோடாமற் இரசத்தைக் கட்டி விடலாம். ஆனால், இதன் முறைகளும் பாகங்களும் அநேக வகையாம். ஆகையால், இதற்காம் பொதுவிதியை மாத்திரம் எழுதினால் புத்தியுள்ளோர் அதன்மூலமாகவே தெரிந்து கொள்வார்கள்.

## இரசத்தைக் கட்டும் பொதுவிதி

1 (அ) இரசத்தை ஒரு மூலிகையின் சாற்றால் அல்லது, (ஆ) எண்ணெயால் கட்ட வேண்டியதிருந்தால், (அ) இரசத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் வரையில் அரைத்து இரண்டு சாம நேரம் வெய்யிலில் வைத்து அதிலுள்ளதை ஊதிவிட்டு மேற்படி சாற்றாலேயே இரண்டு சாம நேரம் சுருக்கிட வேண்டும். பிறகு முன்போல் இரண்டு சாம நேரம் அரைத்து இரண்டு சாம நேரம் வெய்யிலில் உலர்த்தி ஊதி நீக்கி, முன்போல் இரண்டு சாமம் மேற்படி சாற்றால் சுருக்கிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பல தடவைகள் செய்து வந்தால், இரசமானது வெண்ணெயாகி நெருப்பில் கோடாமல் கட்டுப்பட்டுப்போம்.

(ஆ) தயிலமாக இருந்தால் முன் கண்டபடி இரண்டு சாம நேரம் அரைத்து இரண்டு சாம நேரம் வெய்யிலில் வைத்து மறு நாள் இரண்டு சாமநேரம் அரைத்து இரண்டு சாமநேரம் வெய்யிலில் வைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிச் செய்து வருவதால் இரசமானது வெண்ணெயாகி நெருப்பில் கோடாமல் கட்டுப் பட்டுப்போம்.



2. மேற்கண்டவைகளுள் ஒன்றினால் இரசத்தை இரண்டு சாம நேரமரைத்துச் செம்மையாகவும் உலர்த்திப் பதங்கித்துக் கொள்ள வேண்டும். பிறகு பதங்கித்த இரசத்தை எடுத்து முன் மாதிரியே அரைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து ஆறு தடவைகள் செய்தால், இரசமானது மேலேறிப் பதங்கிக்காமல் கீழேயே நின்றுவிடும். இதுவே பக்குவம் என்றறிந்து எடுத்துக் கொள்ளவும் இது எல்லா வகைகளைப் பார்க்கிலும் சுலபமானதும் நிச்சயமானதுமாம்.

3. இரசத்தை மேற்கண்ட பண்டங்களுள் ஒன்றினால் கை விடாமல் அரைத்துவந்தால் அது வெண்ணெயாகி பற்பம் போலாகி விடும். எத்தனை நாள் சென்ற போதிலும் பற்பமாகிற வரையில் அரைத்து மூசையில் அடைத்துச் சீலைமண் செய்து உலர்த்திக் படிப்படியாக தீயை அதிகப்படுத்திப் புடமிட வேண்டும். எப்படி யெனில், முதல் தடவை உமிக்காந்தற் கூட்டில் முன் குகையை வைத்துச் சூடு காட்ட வேண்டும். பிறகு மூன்று பலம் கொண்ட ஒரு வறட்டியைக் கொளுத்திப் புகையடங்கினபின் முன் குகையை அந்தச் கூட்டில் வைத்துப் புடமிட வேண்டும். பிறகு ஆறு பலம் வறட்டியிலும், பிறகு 9 பலம் வறட்டியிலும், பிறகு பன்னிரண்டு பலம் வறட்டியிலும் முறையே படிப்படியாக உயர்த்திப் புடமிட வேண்டும். இவ்விதமே தடவைக்குத் தடவை சிறுகச் சிறுக தீயை உயர்த்திப் புடமிட்டுக் கொண்டுவந்தால் இரசமானது நெருப்புக்கோடாமல் செயித்து நின்று பற்பமாகிவிடும். மேற்கண்டபடி புடமிட்டுக் கொண்டு வருகையில், இரண்டு மூன்று தடவைக்கு ஒரு முறை மூசையிலிருப்பதை எடுத்து நிறுத்து முதலில் வைத்த எடையில் குறைந்தால் குறைந்த எடை இரசத்தை அதனுடன் சேர்த்து முன் போல் முன் சாற்றால் அரைத்துப் புடமிட வேண்டும். இவ்விதம் கைபாகமாகச் செய்துவந்தால், அக்கினிக்குப்பின் வாங்காத இரச பற்பமாகிவிடும். இரசத்தைச் சேர்க்கவேண்டிய முறைகளில் இரசத்திற்குப் பதிலாக இந்த இரச பற்பத்தைச் சேர்த்துச் செய் வதால், முன்னிலும் ஆயிரம் பங்கதிகமான தன்மையைக் காணலாம். இரசத்தின் குணங்கள் ஒன்றுமே இரா.

4. மூன்றுவதிற் கண்டபடி இரசத்தை மேற்கண்ட சரக்குகளுள் ஒன்றினால் வெண்ணெயாகி மடிந்துபோகிற வரையில் அரைத்து. சீலைமண் செய்த அக்கினி குப்பியிலிட்டு வாய்க்குக் கற்காரக்கிட்டு ஒரு பானையில் நான்கு விரற்கிடை மணலிட்டு அதன் மேல் முன் சித்தப் படுத்தின குப்பியை வைத்து, குப்பி மறையும்படியாக மணலைக் கொட்டி அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினி கமலாக்கினி

காடாக்கினியாக முறையே எரித்துக் குளிர ஆறினபின்பு எடுத்து முன்போல் முன் மூலிகையினுல் அரைத்து முன்போல் செய்ய வேண்டும். இவ்விதம் சில தடவைகள் மடக்கி மடக்கி எரித்து எடுத்துக் கொண்டால், இரசமானது நெருப்பில் கோடாத பற்பமாகி இருக்கும். இதனை மேற்கண்டவாறே இரசத்திற்குப் பதிலாக உபயோகித்துக் கொள்வதினுல் அதிக சிறந்த குணமுண்டாகும்.

5. மேற்கண்ட பண்டங்களில் இரசத்தைக் கட்டவேண்டிய சரக்கு உலர்ந்தாய் இருந்தால் அதற்கு எட்டுப் பங்கு தண்ணீரைச் சேர்த்து ஒரு பங்காகச் சுண்டக் காய்ச்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஈரமான சரக்காய் இருந்தால் அதனை இடித்துப் பிழிந்து சாற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். மேற்கண்ட இரண்டு வகைகளுள் ஒன்றே ஒரு பாத்திரத்தில் விட்டு அதில் இரசத்தைக் கிழிக்கட்டித் தொங்க விட்டு அடுப்பேற்றி அந்தக் குடிநீர் அல்லது, அந்தச் சாறு சுண்டுகிற வரையில் எரிக்க வேண்டும். ஆறின பின்பு அந்த இரசத்தை எடுத்து முன் செய்தது போலவே கிழிக் கட்டித் தொங்க விட்டெரிக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பலதடவைகள் செய்துவந்தால் இரசமானது நெருப்பில் கட்டுப்பட்டுப்போம்; ஆனுல்,வெகுநாட் சொல்லும். ஆகையால், இம் முறை அதிக உழைப்பென்றே சொல்ல வேண்டும்.

**சிறப்புக் குறிப்பு** :— (1) இரசத்தைக் கட்டும் தனிச் சரக்குகளில் சேராங்கொட்டையெனப் பொதுவாகக் கண்டிருக்கிறது. இங்கு வேண்டியது சேராங்கொட்டைக் குழித்தைலமேயாம். இந்தத் தைலத்தினுல், இரசத்தை முன் சொல்லியிருக்கிறபடி அரைத்து அரைத்துச் சூரியபுடம் வைத்துவந்தால் வெண்ணெயாகி நெருப்பிற்கோடாமல் கட்டுப்பட்டுப் போகும். இவ்விதமே சாதிலிங்கத்தையும் கட்டிக்கொள்ளலாம்.

(2) **வெள்ளலரி** :— இது செவ்வலரி, வெள்ளலரியென இரு வகையுண்டு. இங்கு வேண்டியது வெள்ளலரி வேர்ப்பட்டை இதன் பூ வெள்ளையாக இருக்கும்; இதன் வேரும் வெள்ளை நிறமாக இருக்கும்; நீண்டு சன்னம்மானதாயிருக்கும்; கொஞ்சம் உவர்ப்புள்ளதாகவும் இருக்கும். இடித்துப் பிழிந்து சாறெடுத்து இரசத்தில் விட்டரைத்து உலர்த்திப் பதங்கித்துக் கொள்ள வேண்டியதே. இவ்விதம் மடக்கி மடக்கிச் செய்வதால் இரசமாகும். கட்டுப்பட்டு நருப்பிற் கோடாமல் செயித்து நிற்கும்.

(3) **முள்ளிலவம் விதை** :— இதனைக் குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டியது. இந்தத் தைலத்தை விட்டு இரசத்தை அரைத்தால் வெண்ணெயாகிவிடும். பிறகு படிப்படியாக நெருப்பில் வைத்து வருவதால் நெருப்பிற் கோடாமல் கட்டுப்பட்டுப்போம்



(4) **அண்ட திராவகம்** :— இதன் முறை பின்னுலெழுதப்படும்.

(5) **குன்றிமணி விதைத்தைலம்** :— குன்றிமணிகளைப் பருப்பாக உடைத்துக் குழித்தைலமாக இறக்கி இதனுல் இரசத்தை அரைத்து வந்தால் மெழுகாகி விடும். இதனையும் மேற்கண்டபடியே படிப்படியாக அக்கினியை அதிகப்படுத்திப் புடமிட்டுக் கட்டிக் கொள்ள வேண்டியது.

(6) **ஓரிலைத் தாமரை** :— இதனை இடித்துப் பிழிந்து சாறெடுத்து இதனுல் இரசத்தை அரைத்துச் சூரியபுடமிட்டு உலர்ந்த பின்பு பதங்கித்துக்கொள்ள வேண்டியது. மறுபடியும் முன்போலரைத்து முன்போல் பதங்கித்துக் கொள்ள வேண்டும். இப்படி மடக்கி மடக்கிச் செய்வதால் இரசம் கட்டுப்பட்டுப் போம். சில சமயம் வெள்ளியைப் போல் இறுகியும் இருக்கிறது. அந்தச் சமயங்களில் இதனை ராவிச் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

## 622 இரசக்கட்டும் இரசத்தூய்மையும்

இரசம் ஒரு பங்கு, கிருட்டிண அப்பிரக நவநீதம் ஒரு பங்கு இரண்டையும் சேர்த்துக் கல்வத்திலிட்டுக் காடித்திராவகத்தை, அல்லது, எலுமிச்சம்பழச் சாற்றை சிறுகச் சிறுக வார்த்துக் காலை இருந்து இரண்டு சாம நேரமரைத்துப் பிறகு மாலை வரையில் வெய்யிலில் எடுத்துலர்த்தி பதங்கப்பாத்திரத்தில் வைத்துச் சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றிப் பதங்கித்துக் கொள்ள வேண்டியது. மறுநாள் எடுத்தால் இரசத்தில் சிலபாகம் மேலேறிப் பதங்கித்தும், சிலபாகம் கீழே தங்கியுமிருக்கும். இரண்டு பாகத்தையும் எடுத்து முன்போல் கிருஷ்ண அப்பிரேக நவநீதத்தைச் சேர்த்து முன்போல் அரைத்து முன்போல் பதங்கித்துக்கொள்ள வேண்டியது. இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து அல்லது, ஏழு தடவைகள் செய்வதால் இரசமானது கொஞ்சமும் மேலேருமல் எல்லாம் கீழேயே தங்கிநிற்கும். இதுவே பதமென அறிந்து எடுத்துக் கொள்ள வேண்டியது. இந்த ரசம் தூய்மையானது; நெருப்பிற் கோடாத செயரசமுமாம். இது இரசவாதம், வைத்தியம் முதலிய எல்லாப் பாகங்களிலும் உபயோகப்படும். ஆனுல், இரசவாதத்தில் பொன் சம்பந்தமானதாய் இருந்தால் கிருஷ்ண அப்பிரேக நவநீதத்தையும், வெள்ளி சம்பந்தமானதாய் இருந்தால் பளிங்கு அப்பிரேக நவநீதத்தையும் சேர்த்துச் செயய வேண்டியது.

**குறிப்பு :—** இந்த அப்பிரேக நவநீதத்தை இரசத்துடன் சேர்த்து அரைத்து உலர்த்திப் பொடித்து ஊதுகுழாய் மூலம் ஊதி அப்பிரேகத்தை நீக்கி முன்போல் முன்னெடை அப்பிரக நவநீதத்தை புதிதாகச் சேர்த்தரைத்து ஊதிவிடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பல தடவைகள் செய்யின் இரசமானது நெருப்பில் கோடா மல் கட்டுப்பட்டுப் போமெனச் சில நூல்களில் சொல்லப்பட்டிருக் கிறது. ஆயினும், முன் சொல்லிருக்கிறபடி அரைத்தரைத்து நெருப் பின் மீது வைத்துப் பதங்கித்துக் கொள்வதுதான். அதிக சுலபமும், நிச்சயமுமான பாகம்.

## 623. கட்டுவகை செயநீர்

நாலாங்காய்ச்சல் வெடியுப்பு, சீமைக் கொடுக்காய்ப்புளி, படிக்காரம், நவச்சாரம், கற்பூரம், கருநாபி, துருசு, தூய்மைசெய்த பூநீறு, இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** (1) ஆரம்பத்தில் வெடியுப்பு 80 ரூபாயெடை (933 கிராம்), கொடுக்காய்ப்புளி 60 ரூபாயெடை (700 கிராம்), இவ் விரண்டையும் சேர்த்துக் கல்லுரலில் இரண்டு நாள்மை போலாகிற வரையிலிடித்துச் சிறு வில்லைகளாகச் செய்து இருப்புச்சட்டியை அடுப்பிலேற்றி அதில் மேற்படி வில்லைகளை ஒவ்வொன்ருகப் போட்டு வெண்ணிறமான சாம்பலாகிற வரையிலெரித்து எடுத்துக்கொள்க

(2) மேற்கண்டபடி முதல் தடவை சித்தப் படுத்தின சாம்பல் ஒரு பங்கு, வெடியுப்பு ஒரு பங்கு இவவிரண்டையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைக் சிறுகச் சிறுக வார்த்து மூன்று சாம நேரமரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து வெய்யிலில் காய வைத்துச் செம்மையாகக் காய்ந்த பின்பு இருப்புச்சட்டியை அடுப்பிலேற்றி நன்ருகச் சூடு கண்டபின்பு ஒவ்வொரு வில்லையாகப் போட்டு எரிக்கச் சாம்பலாகிவிடும் அதனை எடுத்துக்கொள்க.

(3) மேற்கண்டபடி இரண்டாந்தடவை சித்தப்படுத்தின சாம்பல் ஒரு பங்கு, வெடியுப்பு ஒரு பங்கு, இவ்விரண்டையும் சேர்த் துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று சாம நேரமரைத்து முன்போல் வில்லை தட்டி உலர்த்தி முன்போல் இருப்புச்சட்டியில் எரித்துச் சாம்பலாக்கிக் கொள்ளவும்.



(4) மேற்கண்டபடி மூன்றுந்தடவை சித்தப்படுத்தின சாம்பல் ஒரு பங்கு; வெடியுப்பு ஒரு பங்கு இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்ருல் முன்போல் அரைத்துமுன் போல் எரித்துச் சாம்பலாக்கிக் கொள்ளவும்.

(5) நான்காந்தடவை சித்தப்படுத்தின சாம்பல் ஒரு பங்கு, வெடியுப்பு ஒரு பங்கு; இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்தில் எலுமிச்சம்பழச் சாற்ருல் முன்போல் அரைத்து முன்போல் எரித் துச் சாம்பலாக்கிக் கொள்ளவும்.

இவ்விதம் ஐந்து தடவை மடக்கி மடக்கிச் செய்வதற்கு ஐந்து தீட்சையென்று பெயர்.

இவ்விதம் ஐந்து தீட்சை செய்தசாம்பல் ஒரு பங்கு, சீமைக் கொடுக்காய்ப்புளி ஒரு பங்கு, இவ்விரண்டையும் சேர்த்துக் கல்லுர லில் போட்டு மைபோலாகிற வரையில் இடித்துச் சிறு வில்லைகளாகச் செய்து இருப்புச் சட்டியில் சாம்பலாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு, அதற்குச் சமன் வெடியுப்பைச் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்ருல் மூன்று சாம நேரமரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்து உலர்த்தி இருப்புச்சட்டியில் எரித்துச் சாம்பலாக்கிக் கொள்ள வேண்டும். இவ்விதமே தடவைக்குத் தடவை வெடியுப்பைச் சேர்த்து அரைத்து அரைத்து எரித்தெரித்துச் சாம்பலாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆகபத்துத் தீட்சையும் தீர்ந்த பின்பு அதைநிறுத்துக் கண்ட எடையில் ஒரு பலத்திற்கு அரையே அரைக்கால் வராகன் எடை வீதம் படிக்காரம் முதலிய ஆறுசரக்குகளையும் முறையே நிறுத்துப் பொடித்து எல்லாவற்றையும் ஒன்ருக கலந்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்துலர்த்திச் செம்மையாகக் காய்ந்தபின்பு ஒரு மண்சட்டியிற் பரப்பி மேற்சட்டிமூடி ஏழு சீலை மண் செய்து உலர்த்திக் கெசப்புடமிடவும். புடமானது குளிர ஆறினபின்பு சட்டியிலுள்ளதை எடுத்துப் பாகப்படி பனியில் வைக்க செயநீரிறங்கும். அந்தச் செயநீரை இறுத்துக் கல்கார்க்குள்ள குப்பியில் பத்திரப்படுத்தவும். பிறகு குருவண்டு, உரம், புனுகு, வீரம் இவைவகைக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்). இவை எல்லா வற்றையும் பொடித்து அதில்போட்டுக் குலுக்கி வைக்கவும் இரண்டு அல்லது, மூன்றுவாரம் இவ்விதம் செய்தால் கட்டுவதை செயநீராகும்.

**தீரும்நோய்கள்:**—இந்தச் செயநீரால் எல்லா சரக்குகளையும்கட்டிக் கொள்ளலாம். அவை அனுபவசாலிகளுக்குத் தெரிந்தவைகளே. ஆயினும், இரசத்தைக்கட்டும் முறைகளில் இரண்டொன்றை இங்கு எழுதுவோம் அவை பின்வருகிற விதமாம்.

(அ) இரசத்தைக் கட்டும் பொதுவிதியென்னும் தலைப்பில் 1 (அ) வில் சொல்லியிருக்கிறபடி இந்த செயநீரால் மடக்கி மடக்கி அரைத்து மடக்கி மடக்கிப் பதங்கித்துக் கொள்வதினால் இரசம் கட்டுப்பட்டுப்போகும்.

(ஆ) இருபதுபலம் இரசத்தை ஒரு சிறுசட்டியில் விட்டு அதில் ஐந்துபலம் மேற்படி செயநீரைவிட்டு மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்து உலர்த்திச் செந்தூர அடுப்பில் வைத்துச் சட்டிக்கடியில் விளக்கேற்றி வைக்கவும். விளக்கானது இராப்பகல் சரியாக எரிந்து கொண்டிருக்க வேண்டும். நல்லெண்ணெய் அல்லது, ஆமணக்கெண்ணெய் விட்டு விளக்கேற்றலாம். இவ்விதம் ஏழு நாள் சென்றபின் ஆறவிட்டு எடுத்தால் இரசமானது நெருப்பிற் கோடாமல் கட்டுப்பட்டிருக்கும். ஆனால், சற்று இறுகி திரவரூபமாகவேயிருக்கும். மூசையில் வைத்தூதினால் எழும்பிக் குதித்து விழுமே தவிர நெருப்பிற்கோடாது, இவ்விதம் கட்டின ரசத்தை மற்ற மருந்துகளோடு, சம்பந்தப்படுத்தி யோகமுறையாகச் செய்வதால் எவ்வித சிறந்த குணங்களுண்டாகும் ன்பதை அனுபவசாலிகளான மருத்துவர்கள் தாமே நிதானித்தறிந்து கொள்வார்கள்.

**விண்ணப்பம் :**— இதுவரையில் நாம் இரசத்தின் பெயர்கள் அதன் இயல்பு, அதன் குணம், அதன் பிறப்பு, அதன் சம்பந்தம் அதன் வகை, அதன் வண்ணம், அதன் தோடம். அதன் வேறுபாடுகள், அதன் சிறப்பு, அதன் தூய்மை, அதன் கட்டு, அதனைக் கட்டும்பொதுவிதிகள், பாலரச முறைகள் முதலிய பலகருத்துகளைக் கூடியவரையில் விவரமாகவும், சுருக்கமாகவும் எழுதினோம். ஆனால், இன்னும் அநேக முறைகளிருக்கின்றன. அவையெல்லாவற்றையும் இங்கெழுதுவதானால் இச்சிறிய நூல் அதிக விரிவெய்துமெனப் பயந்து இம்மட்டோடு நிறுத்தினோம். இனி, இரச சம்பந்தமான யோக முறைகளில் பலதடவைகள் அனுபவசித்தமானவைகளும் குணத்தில் சிறந்தவைகளுமான சிலமுறைகளை எழுதுவோம்.

## இரச சம்பந்த முறைகள்

இரச சம்பந்தமான மருந்துகளுக்குச் சிரஹரிரசம்,சன்னிபாதரசம் முதலியவை போன்ற இரசமென்னும் பெயரைக் கூடச் சேர்க்கப்



பட்டிருக்கும் என நாம் முன்சொல்லியிருக்கின்றோம். இதன் யோக முறைகள் ஆச்சரியமான குணம் தரத்தக்கவைகள். இவை அதிக நாள் வரையில் உபயோகப்படுத்தக் கூடியவைகள். இவை எத்தனைக்கெத்தனை நாள் பழமையாகின்றனவோ அத்தனைக்கத்தனை சிறந்த குணத்தைத் தரத்தக்கவைகள். தூய்மை இரசமானது எந்த யோகத்தில் சம்பந்தப் பட்டிருக்கிறதோ அந்த யோகத்தில் உள்ள மருந்துகளின் குணத்தை விசேடப்படுத்துவதும். அவற்றின் குணத்தை நிலைநிறுத்துவதுமே அதன் தன்மை அதன் பெருமையை உண்மையாக அறியாமையினாலும் அதனை முறைப்படி தூய்மை செய்யாமையினாலும் பயத்திற்கும் சந்தேகத்திற்கும் ஏதுவாய் விடுகிறது. உண்மையில் தூய்மை செய்யாத இரசத்தினால் சந்தேகமின்றி உடலுக்கு பலவிதக் கெடுதியுண்டாகும். தூய்மை செய்யாத இரசத்தினால் உடல் உடைந்து சீர்குலைந்து போவது நிச்சயந்தான். ஆனால், இரசத்தை முறைப்படி செய்து விட்டாலோ அது சஞ்சீவி என்பதற்குச் சந்தேகமில்லை. இன்னும், அதனைக் கெந்தகத்தோடு சம்பந்தப் படுத்திவிட்டால் அதன் தீயகுணங்கள் நீங்கிப் போகின்றன. சித்தர் அருளால் காயசித்தி, காயத்தூய்மை முதலியவைகளுக்கும் உபயோகமாம். இரசத்தின் பாகமுறைகளை **அனுபோக வைத்திய இரத்தின கரம், இரசவாத போதினி** முதலிய நூல்களில் சமயம் வாய்க்கும் போதும் எழுதுவோம்.

## 624. சுரஹரி ரசம்

தூய்மைசெய்த * இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த தாளகம், (இதன் முறை பின்னெழுதப்படும்) இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), பாகல் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**— கெந்தகத்தையும், இரசத்தையும் கல்வத்திலிட்டு அதிகக் கறுப்பாகிற வரையில் அரைத்துத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு, தாளகத்தைக் கல்வத்திலிட்டு அஞ்சனம் போலாகிறவரையில் அரைத்து அதனுடன் முன் சித்தப படுத்தின இரசகெந்தி தொந்தத்தையும் சேர்த்துப் பாகற்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்து வெய்யிலில் உலர்த்திப் பொடித்துக் கீழ்மேல் மூடிகளுள்ள ஒரு சிறுதாம்பிரச் சிமிழில் நிறைத்து மூடி 5 சீலைமண் செய்துலர்த்தி, ஒருமண் பானையில் ஒருபடி மணலைக் கொட்டி, அதன்மீது முன்சிமிழை வைத்து

* இதன் தூய்மைகள் **அனுபோக வைத்திய நவநீதம்** நான்காம் பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

அப்பானை நிறைய மணலைக்கொட்டி வாய்க்குச் சில்லிட்டுச் சீலை மண் செய்து உலர்ந்த பின்பு அடுப்பின் மீதேற்றி எரிக்க வேண்டும். கவசத்தின் வாயின்மேல் இரண்டொரு நெற்களைப், போட்டு வைத்து அவை பொரிந்தால் பதமெனத் தீயை ஆற விட்டுக் குளிர ஆறின பின்பு அதிக விழிப்புடன் மணலை நீக்கிச் சிமிழிலுள்ள மருந்தை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பிறகு, இதனைப் பொடித்து இதற்குச்சமன் மிளகுச் சூரணத்தைச் சேர்த்துக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துக் குன்றிமணி எடை மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு:**— 1 முதல் 2 மாத்திரைகள்.

**துணைமருந்து :**— மிளகுக் குடிநீர், சுக்குக் குடிநீர், சீரகக் குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :**— நடுக்குச் சுரம், முறைசுரம், முதலிய பல வகை சுரங்கள் தீரும். மூன்றுநாள் ஆறுவேளை உபயோகித்தால் போதுமானது.

## எச்சரிக்கை

இந்த மருந்தை உபயோகிக்கு முன், இலகு பேதி முதலிய மருந்துகளை உபயோகித்து இரைப்பையிலுள்ள மலக்கட்டை நீக்கிப் பிறகு இதனை உபயோகிப்பதனால் அதிகம் சிறந்த குணமுண்டாகும்.

**தாளகத் தூய்மை:**— தேவையான தாளகக்கட்டிகளை அதற்குப் பத்துப் பங்கு எடை கற்சுண்ணும்புக்குள் வைத்துப் பலங்களை விட்டுத் தாளித்துச் சற்றுத் தாமதித்து அந்தப் பாத்திரம் நிறைய மேற்படி கள்ளைவிட்டு மூடி வைத்திருந்து இரவில் அடுப்பேற்றி ஒரு சாமநேரம் மெதுவாக எரித்து அடுப்புடன் விட்டு வைக்கவும். மறுநாள் காலையில் கட்டிகளை எடுத்து வெந்நீரை வார்த்துக் கழுவி மெல்லிய துணியினால் துடைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்தி முன்போல் சுண்ணும்பில் வைத்துக் கள்ளைவார்த்து முன்போல் எரித்துக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு அல்லது,பத்துத் தடவைகள் செய்துகொண்டால் மேலானதூய்மையாகும். இதனால், எவ்விதக்கெடுதியும் உண்டாகாது. இப்படித் தூய்மை செய்யக்கூடாத சமயங்களில் அவரவர்களுக்கு விருப்பமான வகைளாகவும் செய்து சேர்த்துக் கொள்ளலாம். பனங்கள்ளு அகப்படாத சமயங்களில் பூசணிக்காய்ச்சாறு, பனிக்கூலம் (Ice) தென்னங்கள்ளு, காடி, சுண்ணம்புநீர், வெந்நீர் முதலியவைகளாலும் மேற்படி தூய்மை செய்து கொள்ளலாம். அடுத்த பாகத்தில் சொல்லி இருக்கிறபடியும் தூய்மை செய்து கொள்ளலாம்.



## 625. மகா சுரஹரி ரசம்

தூய்மைசெய்த இரசம், * தூய்மைசெய்த பால் துத்தம் ‡ தூய்மைசெய்த மடலரிதாரம், ‡ தூய்மைசெய்த துருசு, பொரித்த வெண்காரம், தூய்மை செய்த கெந்தகம் இவை எல்லாம் வகைக்கு ½ வராகன்எடை (8¾ கிராம்) பாகல் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**— இரசத்தையும் கெந்தகத்தையும் ஒல்லுகக் கலந்து மெதுவாயரைத்து நன்றுகக் கருத்த பின்பு அதைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு, அரிதாரத்தைக் கல்வத்திலிட்டு மைப்போலப் பொடித்து மற்றவைகளையும் சேர்த்துப் பொடித்து முன் அரைத்து வைத்திருக்கிற இரசகெந்தகத் தூளையும் சேர்த்து அரைமணி நேரமரைத்துப் பிறகு பாகல் சமூலச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். இதனைக் கைவிடாமலரைக்க வேண்டுமென்னும் நிபந்தனையில்லை. சாவகாசமான காலங்களில் அரைத்துக் கொள்ளலாம். எவ்விதமும் முழுமையாக நான்கு சாமம் அரைப்பேற வேண்டும். பிறகு, எடுத்து துலர்த்திக் கீழ்மேல் மூடிகளுள்ள தாம்பிர குப்பியிலடைத்து அதன் மேல் மற்றொருபடி மணலைக் கொட்டி மணல்மீது நாலைந்து

* பால் துத்தத்தைக் கரிநெருப்பிற் காய்ச்சி முன்போல் தேய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி பத்துத் தடவைகள் செய்தால் பால் துத்தமானது தூய்மையாகிவிடும்.

‡ மடலரிதாரத்தைச் சிறுதுண்டுகளாகச் செய்து துணியில் முடிந்து ஒருதோண்டியில் காடியை விட்டு மேற்படி முடிப்பைக் கிழிக்கட்டி தொங்கவிட்டு இரண்டு சாமமெரித்தெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு சுண்ணும்பு நீரில் மேற்கண்டபடி தொங்க விட்டு ஒரு சாமமெரித்தெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு, திரிபலாதிக் குடிநீரில் மேற்கண்டபடி கிழிக்கட்டித் தொங்க விட்டு ஒரு சாமமெரித்தெடுத்து உலர்த்திக் கொள்ள மடலரிதாரம் தூய்மையாகிவிடும்.

‡ **துருசுத் தூய்மை:**— இதனை வெண்ணிறமாகிற வரையில் வறுத்தெடுத்துக் கொள்வதே இதன் தூய்மையாகும்.

நெற்களைப் போட்டு அடுப்பேற்றி எரிக்க வேண்டும். ஆரம்பத்தில் இரண்டொருமணிநேரம் மெதுவாயெரித்துப் பிறகு காடாக்கினியாக எரிக்கவேண்டும். மணல் மீதுள்ள நெல்லானது பொரிந்து விட்டால் பதம். அப்போது எரிப்பை நிறுத்திக் குளிர ஆறினபின் குப்பியிலுள்ள மருந்தை எடுத்துப் பொடித்துக்குப்பியில் பத்திரப் படுத்த வேண்டும். இதில்பாதி மருந்தையெடுத்து, அதற்குச் சமன் எடை மிளகுத்தூளைச் சேர்த்துக் கையாந்தரைச் சாற்றால் நான்கு சாமம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தவும்.

**அளவு :—** பொடியானால், 2 முதல் 3 அரிசி எடை, மாத்திரையானால் 1 முதல் 2 வரை

**துணைமருந்து :—** தேன். சர்க்கரை, இஞ்சுச்சுரசம், முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** எல்லா வகைச் சுரங்களும் தீரும். தினவு சுரம், முறைசுரம், மூன்றும் முறைச்சுரம், நான்காம் முறைசுரம், ஆகியவைகளும் தீரும்.

**மருத்துணவு :—** புளியை நீக்கிவைப்பது உத்தமம். எளிய உணவு நல்லது. பால்கஞ்சி மூதலியவைகளையும் உபயோகிகலாம். இன்னும், நோய் வலிமை, உடல் வலிமை, ஆகியவைகளுக்குத் தகுந்த விதமாகச் சமயோசிதம்போல் பத்தியம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது மருத்துவர்களின் கடமையாகும்.

## 626. சதாசாகர ரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், பொரித்த வெண்காரம், சத்திச்சாரம், தூய்மைசெய்த பூநீறு, கருப்புப்பு, கெந்தியுப்பு, மேற்றோல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித்தூள், மஞ்சள் கடுக்காய்த்தோல்தூள் தான்றிக்காய்த்தோல் தூள், நெல்லிவற்றல் தூள், * தூய்மைசெய்த நாபித்தூள் இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** உப்புகளைத் தனித்தனியே தூள்செய்து எடுத்துக் கொள்ள வேண்டும். இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்து மெதுவாயரைத்து நன்ருகக் கருத்த பின்பு முன் சித்தப்படுத்தின உப்புத்தூள் மற்ற சரக்குகளின் தூள்கள் ஆகியவைகளை எல்லாம் ஒன்ருகக் கலந்து அதில் சேர்த்து இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு 3 மணிநேரம் அரைக்க வேண்டும். பிறகு, சாற்றை விடாமல்அரைத்துக், காற்ருடவைத்து ஈரம் சுண்டினுல் ஒரு தீட்சையாம் பிறகு, முன்போல் இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 3 மணிநேரமரைத்து முன்போல் ஈரமுலர வைக்க வேண்டும். இவ்விதம் ஏழு தீட்சைகள் ஆனபின்பு பீங்கான் சிமிழில் எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றி எடை.

**தீரும்நோய்கள் :—** கழிச்சல் வகைகள், செரியாமை, எல்லா வகை வாயுநோய்கள், மந்தாக்கினிநோய் ஆகியவைகள் தீரும். தீபாக்கினியை முறைப்படுத்தி நல்லபசி தீபனத்தை உண்டாக்கும்.

* **நாபித்தூய்மை :—** நாபியை ஒருதுணியில் முடிந்து தண்ணீரில் கிழிக்கட்டித் தொங்க விட்டு ஒருசாம நேரம் வேகவைத்து எடுத்து உலர்த்திக் கொள்ளத் தூய்மையாம்.

**வேறு:—** இதனை நையச்சிதைத்துக் கோமூத்திரத்தில் 3 நாளூற வைத்து வெந்நீரை விட்டுக் கழுவியெடுத்து உலர்த்திக் கொள்ளத் தூய்மையாகும்.



## 627. சன்னிபாத ரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), மேற்றோல் சீவின சுக்கு. அரிசித்திப்பிலி, மிளகு, இவற்றைத் தனித்தனியே இளவறுப்பாக வறுத்துத் தனித்தனியே பொடித்த தூள்கள் வகைக்கு 4 வராகன் எடை (14 கிராம்),

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அதிகக் கறுப்பாகிற வரையிலரைத்து மற்ற தூள்களையும் சேர்த்து மேற்படி ஊமத்தை இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் அரைத்துச் சிறு வில்லையாகச் செய்து நிழலில் வைத்து உலர்த்தி கொள்ள வேண்டும். நன்ருயுலர்ந்த பின்பு மறுபடியும் கல்வத்தில் இட்டுப் பொடித்துக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 4 மாத்திரை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச் சாறு துருஞ்சி நாரத்தம்பழச் சாறு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** முறைசுரங்கள், சன்னிபாத சுரங்கள் ஆகியவைகள் தீரும்.

## 628. அனுமந்த இரசம்

தூய்மைசெய்த இரசம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), மேற்ரேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இவைகளின் தூள்கள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), ஊமத்தை இலேச்சாறு செல்லத் தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு மெதுவாயரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற தூள்களேயும் சேர்த்து மேற்படி ஊமத்தை இலேச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் அரைத்துச் சிறு வில்லேயாகச் செய்து நிழலில் வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். நன்ருயுலர்ந்த பின்பு மறுபடியும் கல்வத்திலிட்டுப் பொடித்துக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்

**அளவு :—** 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை. மூக்குறிஞ்சல் செய்கிறதாயிருந்தால் $\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ குன்றிமணி எடை.

**தீரும்நோய்கள் :—** இதனை மூக்குறிஞ்சச் (ஆக்கிராணம்) செய்வதால் எல்லாவகை சுரங்கள், சன்னிகள், தலேநோய்கள் முதலியவைகள் தீரும்.

இதனைத் தேன், இஞ்சிச்சாறு முதலியவைகளில் கலந்துண்டு உள்ளுக்கு உபயோகிப்பதினுல் மேற்கண்ட நோய்கள் தீரும்.

## 629. மகா நாகேசுர ரசம்

தூய்மைசெய்த இரசம் (வாலே இரசமாயிருந்தால் உத்தமம்) ஒருபங்கு தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் அரைப் பங்கு தூய்மைசெய்த மனேசிலே $\frac{1}{4}$ பங்கு தூய்மைசெய்த தாளகம் 2 பங்கு பாகற் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித்தரைத்துத் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். மற்ற சரக்குகளேயும் தனித்தனியே பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகச்சேர்த்து மேற்படி சாற்றை சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து 624-ல் சொல்லியிருக்கிறபடி எரித்தெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு, அதற்குச் சமனெடை மிளகுத்தூளேச் சேர்த்து வெற்றிலேச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்துக் குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும்.



**அளவு :—** 1 முதல் 4 மாத்திரை.

**துணைமருந்து :—** மிளகுக்குடிநீர், வெற்றிலேச்சாறு, இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** பலவகை சுரங்கள், சன்னிபாத சுரங்கள், நடுக்குச் சுரங்கள் முதலியவைகளும், திரிதோடங்களும் நீங்கும்

**மருத்துணவு :—** கிச்சடிச்சாதம், கஞ்சி ஆகியவைகளாகும்.

**மனேசிலேத் தூய்மை :—** தாளகத்தைப் போலவே இதனையும் தூய்மை செய்துக் கொள்ள வேண்டும். பசுவின் கோமயத்தில் கிழிக்கட்டித் தொங்கவிட்டுக் காய்ச்சியும் தூய்மை செய்துக் கொள்ளலாம். பூசணிக்காய்ச் சாற்றில் கிழிக்கட்டித் தொங்கவிட்டு எரித்தும் தூய்மை கொள்ளலாம்.

## 630. சௌமீகாபரண ரசம்

தூய்மைசெய்த கருநாபி $8\frac{3}{4}$ வராகன் எடை, தூய்மைசெய்த இரசம் 7/8 வராகன் எடை.

**செய்முறை :—** கருநாபியைத் தூள் செய்து அதனுடன் இரசத்தைச் சேர்த்து அரைத்து இரசம் மடிந்த பின்பு ஒரு சிறு அகலில் வைத்து மேலகல் மூடி ஏழு சீலேமண் செய்துலர்த்தி ஒரு பானேயில் ஒரு படி மணலேக் கொட்டி அதனடுவில் முன் கவசத்தை வைத்து மேலும், ஒரு படி மணலேக் கொட்டிப் பானேவாயை மூடிச் சீலேமண் செய்து இரண்டு சாமநேரம் எரித்துக் குளிர ஆறினபின்பு எடுத்து மருந்தைப் பத்திரப்படுத்வும்.

**தீரும்நோய்கள் :—** இந்த மருந்தில் ஒரு ஊசியாலெடுத்துத் தலேயில் ஊசியாற் கீறிவிட்டு அதில் வைக்க சன்னிபாத சுரத்தினுல் உண்டாயிருக்கிற மயக்கம், உணர்வில்லாமை ஆகியவை தீர்ந்து சன்னிகளும் தீரும்.

## 631. அமிர்த இசரம்

சாதிலிங்கம் 5 வராகன் எடை, (இது ஒரே கட்டியா இருக்க வேண்டும்) தூய்மை செய்த கருநாபித் தூள், பொரித்த வெண்காரம் மிளகுத்தூள், இவை வகைக்கு 5 வராகன் எடை, எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** ஒரு பெரிய ஊமத்தங்காயைக் கீறி அதற்குள் இலிங்கக்கட்டியைச் செலுத்தி அதிக சந்தில்லாமல் பக்குவமாக மூடி அவினுற் கட்டி கோதுமைமாவைக் குழைத்து அதன் மேல் ஒரு விரற்கனம் சமமாகக் கவசம் செய்து ஐந்து வறட்டியைக் கொளுத்திப் புகையடங்கின பின்பு அந்த நெருப்பிற்குள் வைத்துப் புரட்டிப் புரட்டிச் சுட்டுக் கோதுமைமாவு சிவந்த பதத்திலெடுத்து ஆறின பின்பு கவசத்தைப் பிரித்து இலிங்கத்தை எடுத்து முன்போல் கோதுமைமாவு கவசம்செய்து முன்போல் நெருப்பில் வாட்டிச்சிவந்த திலெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் பதினெரு தடவைகள் மடக்கி மடக்கிச் செய்யின் இலிங்கமானது கட்டுப்பட்டுப்போம். இலிங்கத்தை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மற்ற சரக்குகளையும் அதில் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** காடி, புளித்தமோர், தேன், புளிப்பு மாதளம் பழச்சாறு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** எல்லாவகை மலப்போக்கு, கழிச்சல் முதலியவைகள் தீரும்.

## 632. இலகு லோகநாத இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த நாபித்தூள், தூய்மைசெய்த அரப்பொடி தூய்மைசெய்த கிட்டம், இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), சிறு செருப்படைச்சாறு செல்லத்தக்க அளவு, இது அகப்படாவிட்டால் பெருஞ்செருப்படைச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்ருய்க் கருத்த பின்பு மற்ற மருந்துகளையும் சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 12 சாமம் அரைத்து தூதுவளங்காய் அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி ஏழு சீலைமண் செய்துலர்த்தி காசிக்குப்பியிற் போட்டு வாய்க்கு மாக்கல்லால் மூடியிட்டு அதன்மேலும் ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு, இந்தக் குப்பி கொள்ளும்படியான ஒரு பானையில் 4 அங்குல கனம் மணலைக் கொட்டிக் அதன் மேல் மூன் சித்தப்படுத்தின குப்பியை வைத்து மணலைக் கொட்டிக் குப்பி



மறைந்த பின்பு பானை வாயையும் மண் தாலத்தால் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி அடுப்போற்றிக் கமலாக்கினியாகப் பன்னிரண்டு சாமமெரித்து நன்ருகக் குளிர ஆறினபின்பு எடுத்துக் குப்பியிலுள்ள மருந்தைக் கல்வத்திற் பொடித்துக் குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, தேன், நெய், முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** சுரம், சுரதோடம், சன்னிபாத நோய் பாண்டு, சோபை முதலியவைகள் தீரும்.

## 633. சர்வசுர வயிரவம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த நாபித்தூள். தூய்மை செய்த ஊமத்தம் விதைத்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), மிளகுத்தூள் 5 பலம் (175 கிராம்), கையாந்த கரைச்சாறு, செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்து அரைத்துச் செம்மையாகக் கறுத்த பின்பு மற்ற தூள்களையும் சேர்த்துக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை உட்கொண்டு அதன்மேல் வெந்நீர்ப் பருகச் செய்ய வேண்டும்.

**தீரும்நோய்கள் :—** நாலு நாளைக்குள் எல்லாவகை சுரங்களும் தீரும். விடாச்சுரம், நாட்பட்ட சுரம், மாறல் சுரம் முதலிய எல்லா வகைகளும் தீரும் .

## 634. பாலரட்ச இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), வெள்ளி நிமிளை ½ வராகன் எடை (1¾ கிராம்), நொச்சியிலைச்சாறு 9 வராகன் எடை (31½ கிராம்).

**செய்முறை :—** முன் மூன்று சரக்குகளையும் இருப்புச் சட்டியிற் போட்டு இலகுவாயெரித்துக் கட்டப்பாரையால் கடைய

வேண்டும். எல்லாம் ஒன்ருக கலந்து கறுத்த வண்ணமாகி விடும். பின்பு அதனையெடுத்துக் கல்வத்திலிட்டு மேற்படி நொச்சியிலைச் சாற்றைச் சிறுகசிறுக விட்டு அரைத்துச் சாறெல்லாம் சென்ற பின்பு கம்பரிசியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** தாய்ப்பால், தேன், நுணா இலைச்சாறு, தூதுவளை இலைச்சாறு, கற்பூரவள்ளிச்சாறு, பொடுதலைக் குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** குழந்தைகளுக்குக்காணும் வாயிற்று நோய், இருமல், சுரம், சன்னி, மாந்தம், முதலிய குழந்தை நோய்களெல்லாம் தீரும்.

## 635. ஆனந்த பைரவ இரசம்

* தூய்மைசெய்த இலிங்கம், தூய்மைசெய்த நாபித்தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித்தூள், பொரித்த வெண்காரத்தூள், இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்).

**செய்முறை :—** எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு 2 சாமநேரம் அரைத்துச் சிமிழில் அல்லது, பீங்கான் குப்பியில் எடுத்து வைத்துக் கொள்ளலாம். விருப்பமானல் எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 2 சாமம் அரைத்து, மாத்திரையாகவேனும், அல்லது, மெழுகாகவேனும் வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றிமணி எடை. உடல் சக்திக்குத் தகுந்ததுபோல் மேற்கண்ட அளவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

**தீரும்நோய்கள் :—** பெருங்கழிச்சல், பக்கவாதம், நச்சுக்கழிச்சல் முதலிய பலவகை கழிச்சல், சுரநோய்கள் முதலிய பலநோய்கள் தீரும்.

---

* இலிங்கத்தைக் கல்வத்திற் பொடித்து அது முழுகும்படியான எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு அரைக்க வேண்டும். விட்ட சாருனது எல்லாம் சுவறி இறுகினபதமாகி விட்டால், அது ஒரு தீட்சையாம். பிறகு, முன்போல் அது முழுகும்படியாக எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு முன்போல் கெட்டிப் பதமாகிற வரையில் அரைத்தால் மற்றொரு தீட்சையாம். இவ்விதம் மடக்கி மடக்கி 8 தீட்சைகள் செய்து கொண்டால் இலிங்கம் தூய்மையாகி விடும்.



பக்கவாதம் உள்ளவர்களுக்கு உள்ளுக்கு உபயோகப் படுத்துவதுடன் இந்த மருந்தை நல்லெண்ணெயில் குழைத்து நோய்கண்ட இடங்களில் தேய்க்கக் குணமுண்டாகும்.

பலவகைக் கழிச்சல்கள், பீனிசநோய் ஆகியவைகளுக்கு ஒரு அரிசியெடை அபினையும் கூடச்சேர்த்து உபயோகிக்க வேண்டும்.

நச்சுக்கழிச்சலுக்கு வெற்றிலைச் சாற்றில் கலந்து கொடுக்க வேண்டும்.

இருமலுக்கு கசகசா மணப்பாகு, அல்லது, கசகசாக் குடிநீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

சுரநோய்களுக்குப் பருப்புக்கீரைவிதையை அரைத்துப் பிழிந்த இரசத்தில், அல்லது, சமயோசிதம்போலத் தகுந்த குடிநீரில் கலந்து உபயோகிக்க வேண்டும்.

இவ்விதம், அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளில் சமயோசிதம்போல கலந்துக் கொடுக்க அவை தீரும். இவையெல்லாம் மருத்துவர்களின் யுக்தி, புத்தி அனுபவம் முதலிய வைகளை அனுசரித்தாகும்.

## 636. ஜனிசர கந்தா இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், பொரித்த வெண்காரம், மிளகுத்தூள், ஊமத்தம் விதைத் தூள், இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), சிறுதேக்கு 2 பலம் (70 கிராம்).

**செய்முறை :—** சிறுதேக்கை நையச் சிதைத்து அரைப்படி நீரில் போட்டு, அரை ஆழாக்காகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிக் கொள்ளவும். முன்சரக்குகளில் இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்றத் தூள்களையும் சேர்த்து முன் சித்தப் படுத்தின குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து அரைக்க வேண்டும். குடிநீர் எல்லாம் சென்ற பின்பு குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** தேன், காடி, அதிவிடயக் குடிநீர், வாழைப்பூ, சாறு, தென்னம்பூச்சாறு, இலவங்கக் குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** பித்த சம்பந்தமான கழிச்சல்கள், சூடு சம்பந்தமான கழிச்சல்கள் ஆகிய பலவகைக் கழிச்சல்கள் தீரும்.

## 637. மகாசுந்தரி இரசம்

தூய்மைசெய்த இரசம், $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 3 வராகன் எடை, ($10\frac{1}{2}$ கிராம்) மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இவற்றின் தூள்கள் வகைக்கு 3 வராகன் எடை, கறுப்புப்பு, இந்துப்பு, கறியுப்பு, கல்லுப்பு வளையலுப்பு, இவற்றின் தூள் வகைக்கு 3 வராகன் எடை, வெட்பாலையரிசித்தூள் $25\frac{1}{2}$ வராகன் எடை ($89\frac{1}{4}$ கிராம்), புளித்த மோர் அல்லது, காடி செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** கெந்தகத்தையும் இரசத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்து புளித்த மோரை அல்லது, காடியைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து அரை வராகன் எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க,

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** காடிநீர், புளித்தமோர், சோம்புத் தீநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** எல்லாவகைக் கழிச்சல்கள், பெருங்கிரகணி வயிற்று நோய், இரைப்பை சம்பந்தமான பல நோய்கள், இருமல் ஈரல் நோய், மண்ணீரல் நோய், மூலநோய் ஆகியவைகள் தீரும். இன்னும், இரைப்பையைப் பலப்படுத்தும்; பசிதீபனத்தையும் உண்டாக்கும். வயிற்று நோய்கள், சூலை நோய்கள், சுரநோய்கள் தாகநோய் ஆகியவைகளும் தீரும்.

## 638. கந்த இரசம்

தூய்மைசெய்த இரசம், 3 வராகன் எடை தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 3 வராகன் எடை வெட்பாலையரிசித் தூள், 3 வராகன் எடை காய்ச்சுக்கட்டித் தூள், 2 வராகன் எடை (7 கிராம்), ஏலரிசித்தூள், 1 வராகன் எடை கோரைக் கிழங்குத் தூள் 3 வராகன் எடை செண்பகப்பூத் தூள், 3 வராகன் எடை காட்டுவாகைப் பட்டைத்தூள் 6 வராகன் எடை அபின் 3 வராகன் எடை



**செய்முறை :—** முன்னர் இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து மெதுவாயரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்றத் தூள்களையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்துக் கல்காரக்குள்ள குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 2 முதல் 3 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய், மாதுளம்பழ இரசம், இலவங்கக் குடிநீர், முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** பற்பலவகைக் கழிச்சல்கள், நச்சுக்கழிச்சல் நிணக்கழிச்சல், பெருங்கழிச்சல் முதலியவைகள் தீரும். இந்த நோய்க்கு இது கைகண்ட மருந்து.

## 639. சங்ககிரணி இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், அயச்செந்தூரம் அல்லது, அன்னபேதிச் செந்தூரம், இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கருத்த பின்பு முன் செந்தூரத்தையும் சேர்த்து முன்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

**அளவு :—** 1 மாத்திரையாஞல் முதல் நாள், ஒரு மாத்திரை ஆரம்பித்து இரண்டாம் நாள், இரண்டு மாத்திரையாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாத்திரை அதிகப்படுத்தி ஒருவாரம் வரையில் உபயோகிக்கலாம்.

**துணைமருந்து :—** கொத்தமல்லி விதை 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), நற்சீரகம் 3 வராகன் எடை இரண்டையும் சிதைத்து ஆழாக்குத் தண்ணீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டி அதில் ஒருபலம் பனைவெல்லத் தைக்கரைத்து மறுபடியும் வடிகட்டி அதில் மாத்திரையை இழைத்துப் பருகச் செய்ய வேண்டும். வேளைக்கு ஒவ்வொரு மாத்திரையாக காலை, மாலை இரண்டுவேளையும் உபயோகித்து வந்தால் போதுமானது. மேற்கண்டபடி நாளுக்கு ஒவ்வொன்ருக அதிகப் படுத்திக் கொடுக்க வேண்டியதில்லை.

**தீரும்நோய்கள் :—** கழிச்சல், தொடர்கழிச்சல் வயிற்றுநோய், மண்ணீரல் வீக்கம், குதிகர நோய், குட்டம் முதலியவைகள் தீரும்.

## 640. அக்கினிகுமார இரசம்

தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நாபி, இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), மிளகுத்தூள் 6 வராகன் எடை (21 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு அல்லது, புளிப்பு மாதுளம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசந்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருய் கருத்த பின்பு மற்ற தூள்களைச் சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டு சாம நேரமரைந்துக் குன்றி மணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டியது.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, சுக்குக்குடிநீர், முதலியவைகளாம்.

**தீரம்நோய்கள் :—** பலவகைக் கழிச்சல், செரியாமை ஆகியவைகளைக் கண்டிக்கும். பசி சக்தியை அதிகப்படுத்தும்.

## 641. ஜூவாலானல இரசம்

தூய்மைசெய்த இரசம், ★ தூய்மைசெய்த கெந்தகம் பொரித்த வெண்காரம், பூநீறு, அப்பளக்காரம், கண்டத்திப்பிலித் தூள், அரிசித்திப்பிலித் தூள், சித்திரமூல வேர்ப்பட்டைத்தூள், மேற்ரேல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள் இவை வகைக்கு 1½ வராகன் எடை (5¼ கிராம்), முருங்கை வேர்ப்பட்டைத் தூள், 7½ வராகன் எடை (26¼ கிராம்), தூய்மைசெய்த கஞ்சாத் தூள், 15 வராகன் எடை (52½ கிராம்), கஞ்சாஇலைக் குடிநீர், சித்திரமூல வேர்ப்பட்டைக் குடிநீர், முருங்கை வேர்ப்பட்டைக் குடிநீர் இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

★ கெந்தகத்தை இரும்புக் கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசுவின் நெய் சேர்த்து மெதுவான தீயில் உருகினபின் பசுவின் பாலில் சாய்க்க வேண்டும். இவ்விதம் ஏழு தடவைகள் மடக்கி மடக்கி உருக்கிச் சாய்க்கக் கெந்தகம் தூய்மையாம். இன்னும், சிறப்பு முறைகள் நமது **இரசவாத சிந்தாமணியில்** சொல்லப்பட்டிருக்கின்றன.



**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து மெதுவாய் அரைத்து இரசம் மடிந்து நன்ருய்க் கருத்த பிறகு, மற்ற சரக்குகளையும் சேர்த்துமுருங்கை வேர்ப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைக்க வேண்டும். பிறகு, கஞ்சாக் குடிநீரை விட்டு ஒரு சாமம் அரைக்க வேண்டும். அதன் பிறகு, சித்திரமூல வேர்ப்பட்டைக் குடிநீரை விட்டு ஒரு சாமம் அரைக்க வேண்டும். இதனை,ஒரே வில்லையாகத் தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் எடைக்கு நான்கு பங்கெடை வறட்டியில் காற்றில்லாத இடத்தில் புடமிட்டு ஆறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு நான்கு நாளரைத்து இரண்டு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

**துணைமருந்து :—** தேன், சுக்குக்குடிநீர், சோம்புக் குடிநீர் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** எல்லாவகை வயிற்று நோய், சூதக சன்னி. மண்ணீரல்வீக்கம், உப்புச நோய்கள் தொடர்கழிச்சல் நோய், எல்லாவகைப் கழிச்சல்கள் ஆகியவைகளுக்கு உபயோகமாகும்ம்,

**மருத்துணவு:—**நோயிற்குத் தகுந்தபடியும் உடல் நிலைமைக்குத் தகுந்த படியும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

## 642. மகா நாராச இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், மேற்ரேல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு 1 பலம்(35 கிராம்), தூய்மைசெய்த நேர்வாளம் பருப்பு 2½ வராகன் எடை (8¾கிராம்).

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு மெதுவாயரைத்து நன்ருய்க் கறுத்த பின்பு மற்ற மூன்று சரக்குகளையும் இடித்துத் துணியில் சலித்து அதில் சேர்த்து நேர்வாளப் பருப்பையும் சேர்த்து வெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து குன்றிமணி அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**அளவு :—** ஒரு மாத்திரை முதல் ஆறு மாத்திரை வரையில்.

**தீரும்நோய்கள் :—** செரியாமை நோய், குன்மக்கட்டி, வயிற்றுப் பிசம் முதலியவைகள் தீரும். வயிற்றிலுள்ள கபக்கட்டியை நன்ருய்

வெளிப்படுத்தும். இதனைப் பேதியாக உபயோகித்தால், நன்றாய்க் கழிச்சலான பின்பு தயிர்ச்சாதத்தில் சர்க்கரை போட்டுச் சாப்பிட வேண்டும்: அதிகக் காரமில்லாத ஆகாரமாகவும் உபயோகிக்கலாம்.

**குறிப்பு :—** இதில் நேர்வாளம் 2½ வராகன் எடையாக (8¾ கிராம்), எழுதி இருந்த போதிலும், சில நோய்களில் செம்மையாய்க் கழிச்சலாவதில்லை. ஆகையால், அவசியமானால் இன்னும், 2½ வராகன் எடை (8¾ கிராம்), வாளத்தை அல்லது, கொஞ்சம் குறைவாகச் சேர்த்துச் சித்தப்படுத்திக் கொள்ளலாம்.

**நேர்வாளத் தூய்மை:—**நேர்வாளக் கொட்டையை உடைத்துப் பருப்பெடுத்து ஒரு மெல்லிய துணியில் தளர்ச்சியாக முடிந்து எருமைச் சாணியைத் தண்ணீரில் குழம்பாகக் கரைத்து வடிகட்டி வடிகட்டி ஒருதோண்டியில் அரைவாசி இருக்கும்படியாக விட்டு அதற்குள் மேற்படி முடிப்பைக் கிழிக்கட்டித் தொங்கவிடவேண்டும். முடிப்பானது தோண்டியின் அடியில் படாமலும் சற்று மேலாகவும் இருக்க வேண்டும். தோண்டியை அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சாணிப்பால் சுண்டின பின் முடிப்பை எடுத்து தண்ணீரை விட்டு நன்றாய் அலசிப் பருப்புக்குள்ளிருக்கும் முளைகளைப் போக்கி மறுபடியும் நீரை விட்டு அலம்பி விட்டு வேறு மெல்லிய துணிகளில் முன் போல் தளர முடிந்து முன்காய்ச்சின பாத்திரத்தை நன்றாய் நீரை விட்டுக்கழுவித் தூய்மைசெய்து அந்தப் பாத்திரத்தில் அரைவாசி பசுவின் பாலை விட்டு முன் முடிப்பை அதற்கு கிழிக்கட்டி முன் போல் தொங்கவிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துப் பாலெல்லாஞ் சுண்டின பின் இறக்கி நீரை விட்டு நன்றாய் அலசி வெய்யிலிலுலர்த்தி ஒரு பாத்திரத்திற் கொஞ்சம் பசுவின் நெய்யை விட்டு மேற்படி பருப்பைப் போட்டுக் கொஞ்சம் மணம் வறும்படியாக வறுத்துக் கொள்ள வேண்டும். இதுவே நேர்வாள தூய்மையாகும்.

## 643. சிந்தாக்கினி குமார இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், தூய்மை செய்த நாபித்தூள், பொரித்த வெண்காரம், இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), எருக்கிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாகக் கருத்த பின்பு, மற்ற இரண்டு சரக்குகளையும் சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாறு



நேரமரைத்து ஒரே உருண்டையாக உருட்டி ஒரு மூசைக்குள் வைத்து வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்துலர்த்தி ஒரு பானையில் ஒருபடி மணலைக் கொட்டி அதன் மேல் முன் சித்தப் படுத்தின குகையை வைத்துப் பானைவாய் வரையில் மணலைக் கொட்டிப் பானைவாயை மண் தாலத்தால் மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கெசபுடம் போட வேண்டும். புடம் குளிர ஆறின பின்பு எடுத்து மருந்தை பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** இஞ்சிசுரசம், இஞ்சிக்குடிநீர், சுக்குக்குடிநீர், தேன், நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** எல்லா வகை சுரநோய்களும், எல்லா வகைச் சன்னி பாதங்களும் தீரும்.

## 644. இரச தோடகம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம் தூய்மை செய்த பால் துத்தம், தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு, இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்).

**செய்முறை :—** இவற்றுள் இரசத்தையும் கெந்தகத்தையும் அரைத்து நன்றாகக் கறுத்த பின்பு மற்றச் சரக்குகளையும் சேர்த்து இரண்டு மூன்று மணிநேரம் அரைத்து ஒருசிறு கலயத்திற் போட்டு அதன் உதடு வரையில் வரும்படியாக தண்ணீரை விட்டு நெருப்பின் மீதுவைத்து மெதுவாயெரித்து நீரெல்லாஞ் சுண்டிக் கொஞ்சம் நீர் பாக்கியாய் இருக்கும் போது இறக்கி நிழலில் வைத்து நன்றாய் உலர்ந்த பின்பு கல்வத்திலிட்டுப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 3 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** சர்க்கரை, வெல்லம், இளகம் முதலியவைகள் இதனை உட்கொண்டு அதன் மேல் பால் ஒருபங்கும் நீர் இரண்டு பங்கும சேர்த்த நீர்ப்பாலைப் பருகச் செய்ய வேண்டும். நீர்ப்பாலை எவ்வளவு அதிகமாய்க் குடிக்கின்றேமோ அவ்வளவுக்கவ்வளவு கழிச்சலும் அதிகமாகும்.

**தீரும்நோய்கள் :—** வயிற்றில் அழுகிப்போன தீயநீர்கள் ஆகிய வைகளைக் கழிச்சல் மூலமாக வெளிப்படுத்தி இரைப்பையைத் தூய்மை செய்யும்.

## 645. இரச தோடகம் (வேறு)

தூய்மைசெய்த இரசம் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), வெண்காரம் 2 வராகன் எடை (7 கிராம்), கொடிவேலி வேர்ப் பட்டை 2 வராகன் எடை (7 கிராம்), மேற்ருேல் சீவின சுக்கு 2 வராகன் எடை (7 கிராம்), மிளகு 2 வராகன் எடை (7 கிராம்), தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு 10 வராகன் எடை (35கிராம்).

**செய்முறை :—** கெந்தகத்தையும் இரசத்தையும் நன்ருய்க் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் இடித்துத் துணியில் சலித்தது ளை அதில் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து குன்றிமணி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு :—** 1 முதல் 4 மாத்திரை.

**துணைமருந்து :—** பன்னீர் சர்பத்து, கற்கண்டு சர்பத்து, எலுமிச் சம்பழ சர்பத்து (மணப்பாகு) முதலியவைகளாம்.

**தீருப்நோய்கள் :—** கபநீர், பித்தநீர், ஆகியவைகள் நன்ருய் வெளிப்படும். இந்த மாத்திரைகளை கழிச்சல் மாத்திரைகளாகவும் உபயோகிக்கலாம்.

## 646. மகா சுராங்குசம்

தூய்மைசெய்த வெள்ளைப்பாடாணம் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), கருஊமத்தை விதைத் தூள், $1\frac{1}{2}$ வராகன்எடை ($5\frac{1}{4}$ கிராம்), வெண்சந்தனத் தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), நவச்சாரம் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்).

**செய்முறை :—** இவை எல்லாவற்றையும் கல்வத்தில் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நாலு சாமம் அரைக்க வேண்டும். பிறகு, ஒரு அரிசி எடையுள்ள மாத்திரை களாகச் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** பால் பொங்கற்சாதம், பச்சைப்பயறு சேர்த்த பொங்கற்சாதம், நெய்சாதம் ஆகியவைகளில் ஒரு இனத்தில் ஒரு பிடிசாதம் எடுத்து அதற்குள் ஒரு மாத்திரையை வைத்து விழுங்கி விடவேண்டும்.



**தீரும்நோய்கள் :—** எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

## 647, இலகு வாக்கினி குமார இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த அரிதாரம், தூய்மைசெய்த மனேசிலை இவை வகைக்கு 5 வராகன் எடை ($17\frac{1}{2}$கிராம்), செருப்படிச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருய்க் கறுத்த பின்பு தனியேயெடுத்து வைத்துக் கொள்க. பிறகு அரிதாரத்தையும் மனேசிலையையும் தனித்தனி பொடித்துப் பின்பு எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டு சாம நேரமரைத்து உலர்த் திப் பொடித்து எடுத்துக் கொள்க. ஒருகாசிக் குப்பிக்கு ஏழு சீலை மண் செய்து உலர்த்தி முன் சித்தப்படுத்தின மருந்தை அதற்குள் போட்டு வாய்க்கு மாக்கல்லால் மூடியிட்டு, அதன் மேலும் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி வாலுகா யந்திரத்தில் வைத்து மந்தாக் கினியாக ஆறு சாமமெரித்துக் குளிர அறினபின்பு மருந்தை எடுத்து அதற்குச் சமனெடை மிளகுத்தூளைச் சேர்த்துச் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, சுக்குக்குடிநீர், வெல்லம், சர்க்கரை முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** நடுக்கு சுரம், மாறல் சுரம், குளிர் சுரம், விடாசுரம், முறைசுரம் முதலிய அனேக சுரங்கள், சன்னி வகைகள் இவைகளெல்லாம் தீரும்.

## 648. மகாசன்னி வைரவன்

தூய்மைசெய்த பாலரசம் 10 வராகன் எடை (35 கிராம்), தூய்மைசெய்த வீரம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$கிராம்), வெள்ளிக் காடிக்காரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$கிராம்), கெந்தகத் திராவகம் 8 வராகன் எடை (28 கிராம்).

**செய்முறை :—** இரசத்தை ஒரு சிறு பீங்கானில் விட்டு மற்ற இரண்டையும் பொடித்து அதில் போட்டு ஈங்கில் குச்சியினுல்,

அல்லது, தந்தக் குச்சியினால், நன்றாய்க் கலக்கும்படி செய்து மேற்படி கெந்தகத் திராவகத்தை விட்டுப் பீங்கான் வாய்க்குச் சரியான ஓடுமூடி ஏழு சீலைமண்செய்து வெய்யிலிலுலர்த்தி ஒரு குண்டு சட்டியில் ஒருபடி மெல்லிய மணலைப் போட்டு அதன் மத்தியில் முன் சித்தப்படுத்தின பீங்கானை வைத்து மேலும் ஒருபடி மெல்லிய மணலைப் போட்டு மூடி அடுப்பேற்றித் தீபாக்கினியாக இரண்டு சாமமும், கமலாக்கினியாக நான்கு சாமமும் எரித்துக் குளிர ஆற விட்டு எடுத்தால் எல்லாம் பற்பமாகியிருக்கும். கற்காரக்குள்ள குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** ஒரு அரிசியெடை தேனில் குழைத்துக் கொடுத்து ஐந்து நிமிடநேரம் சென்று இரண்டு வராகன் எடை (7 கிராம்) மிளகையும், இரண்டு வராகன் எடை (7 கிராம்), மஞ்சட்கடுக்காய்த் தோலையும் சிதைத்து ஒரு ஆழாக்குத் தண்ணீரில் போட்டுக் கால் ஆழாக்காகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டிப் பருகச் செய்விக்கவும். இரண்டு வேளை அல்லது, மூன்றுவேளை உபயோகித்தால் போதுமானது.

**தீரும்நோய்கள் :—** எல்லாவகை சன்னிகளும் தீரும். நாடிகள் விழுந்திருந்தாலும், உணர்விற்றிருந்தால் கபக்கட்டை அறுத்து வெளிப்படுத்திக் குணப்படுத்தும். இது சஞ்சீவிக் கொப்பானதாகையாலும் பிரபல மருத்துவர்கள் இதனைச் சர்வசித்தமாகச் செய்து வைத்திருப்பது உத்தமம்.

## 649. சுந்தர அக்கினிகுமார இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், பொரித்த வெண்காரம், இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), தூய்மைசெய்த நாபித்தூள் 9 வராகன் எடை (31½ கிராம்), கவடிபற்பம், சங்கு பற்பம், இவை வகைக்கு 9 வராகன் எடை (31½ கிராம்), மிளகுத்தூள் 24 வராகன் எடை (84 கிராம்), எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு,

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்துச் செம்மையாகக் கருத்த பின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்து மேற்படி எலுமிச்சம்பழச் சாற்றை சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.



**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, சுக்குக்குடிநீர், புளித்த மோர், குடிநீர், முதலியவைகளாம். சுக்குக் குடிநீரில் கொஞ்சம் பனை வெல்லத்தைச் சேர்த்து உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள் :—** செரியாமை நோய்கள், பலவகை கழிச்சல்கள், பலவகைப் பெருங்கழிச்சல், வயிற்றுப் பொருமல், வாதநோய்கள் ஆகியவைகள் தீரும்.

## 650. பாஸ்கர இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு இவை வகைக்கு 2½ வராகன் எடை (8¾ கிராம்), அரசம்பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாய்க் கறுத்த பின்பு நேர்வாளத்தையும் சேர்த்து முன் போல் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து இரண்டு சாமம் சென்ற பின்பு ஒரே உருண்டையாக உருட்டிக் கிழிக்கட்டி மேற்படி அரசம்பட்டை அரைப்படி சாற்றில் தொங்கவிட்டுச் சாறு சுண்ட எரித்து ஆறின பின்பு எடுத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, சுக்குக்குடிநீர், வெல்லம், சர்க்கரை, முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** மலக்கட்டு, ஆமக்கட்டு, முதலியவைகள் தீர்ந்து பலவகை சுரங்கள் தீரும். வயிற்றுள் பழைய மலம் சேர்ந்து அதனாலுண்டாகும், சுரம், வயிற்று நோய் முதலியவைகள் எல்லாம் தீரும்.

## 651. மந்தாக்கினி குமார இரசம்

தூய்மைசெய்த இரசம் தூய்மைசெய்த கெந்தகம், ஓமத்தூள் அப்பளக்காரம், மரவுப்பு, கொடிவேலிப்பட்டைத் தூள், மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, கருஞ்சீரகம், வாய்விளங்கம், மேற்ருேல் சீவினசுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, இவற்றைத் தனித்தனி இடித்த தூள், கல்லுப்புத்தூள் இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), தூய்மைசெய்த

நாபித்தூள் 51 வராகன் எடை (128½ கிராம்), எலுமிச்சம்பழச் சாறு அல்லது, துருஞ்சி நாரத்தம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மேற்செல்லியிருக்கும் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று நாளரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

**அளவு :—** ½ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** சுக்குக்குடிநீர், இஞ்சிச்சுரசம், பொதினா இலைக்குடிநீர், சீரகக்குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** மந்தாக்கினி நோயைக் கண்டிக்கும். ஆகாரங்களை செரிக்கச் செய்யும். இரைப்பையைப் பலப்படுத்தும்; இன்னும், வயிற்றிலுள்ள வாயு முதலியவைகளைக் கண்டிக்கும்.

## 652. சுராங்குசம் (வேறு)

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், தூய்மை செய்த நாபித்தூள், அரிசித்திப்பிலித்தூள், அதிமதுரத்தூள், தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு இவை வகைக்கு 3 வராகன் எடை வெற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்ருகக் கறுக்கிற வரையில் அரைத்து நேர்வாளத்தைத் தவிர மற்ற சரக்குகளையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு, வாளத்தைக் கல்வத்திலிட்டு நன்ருக மசியும்படி அரைத்துப் பிறகு முன் சித்தப் படுத்தி வைத்திருக்கிற தூள்களைச் சேர்த்து நான்கு சாமம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** பசுவின் பால், வாதுமைப் பருப்பை அரைத்துப் பிழிந்தபால், பருப்புக்கீரை விதையை அரைத்துப் பிழிந்தபால், சுரைவிதைப் பருப்பை அரைத்துப் பிழிந்தபால்.

**மருத்துணவு :—** புளியைத் தவிர்க்கவும்.

**தீரும்நோய்கள் :—** எல்லாவகைச் சுரங்களும் தீரும்.



## 653. சுராங்குசம் (வேறு)

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த லிங்கம், தூய்மைசெய்த நேர்வாளம், இவை வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), ஊமத்தனிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைத்து நன்ருகக் கறுத்த பின்பு, மற்றச் சரக்கையும் சேர்த்து அரைத்து எல்லாம் கலந்த பின்பு, ஊமத்தனிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 8 சாமம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** மேற்கண்டவைகளாம்.

**மருத்துணவு :—** புளியைத் தவிர்க்கவும்.

**தீரும்நோய் :—** பலவகைச் சுரங்கள் தீரும்.

## 654. சுராங்குசம் (வேறு)

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், தூய்மைசெய்த நாபி, பொரித்த வெண்காரம், மேற்ருேல் சீவினசுக்குத் தூள், திப்பிலித் தூள், நெல்லிமுள்ளித் தூள், மஞ்சட் கடுக்காய்த் தோல் தூள், தான்றிக்காய்த்தோல் தூள், தூய்மைசெய்த சீமைசிவதை வேர்த் தூள், தூய்மைசெய்த தாளகம், அக்கிராகாரத் தூள், சிற்றரத்தைத் தூள், தூய்மைசெய்த நேர்வாளம், இவை வகைக்கு 1½ வராகன் எடை (5¼ கிராம்), சோற்றுக்கற்ருழைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து நன்ருகக் கறுக்கிற வரையில் அரைத்துப் பிறகு, தாளகத்தைச் சேர்த்து அரைத்து நன்ருக மசிந்த பின்பு வாளத்தைச் சேர்த்து மசியும்படியாக அரைத்து மற்ற சரக்குகளையும் சேர்த்து மேற்படி கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து குன்றிமணி எடை அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 மாத்திரை.

**தீரும்நோய்கள் :—** முலைப்பால், தேன் ஆகிய துணைமருந்துகளை விட எல்லாவகைச் சுரநோய்களும் தீரும்.

**மருந்துணவு :—** சமையோசிதம் போல் வைத்துக் கொள்ள வேண்டும்.

## 655. சுராங்குசம் (வேறு)

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், தூய்மை செய்த நாபி, தூய்மைசெய்த கருஊமத்தை விதை, நற்சீரகம், அரிசித்திப்பிலி, நெல்லிவற்றல், மஞ்சட்கடுக்காய்த் தோல், மேற்ருேல் சீவினசுக்கு, கண்டத்திப்பிலி இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு 1½ வராகன் எடை (5¼ கிராம்), எலுமிச்சம்பழச் சாறு, சோற்றுக்கற்ருழைச் சாறு, இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து நன்ருகக் கறுக்கும்படியாக அரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு, மற்றத் தூள்களையும் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுகச் சேர்த்துப் பன்னிரெண்டு சாமம் அரைக்க வேண்டும். பிறகு, சோற்றுக்கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துப் பன்னிரண்டு சாமம் அரைக்க வேண்டும். பிறகு, குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 மாத்திரை.

**தீரும்நோயும், துணைமருந்தும் :—** உட்டிண சம்பந்தமான சுரங்களுக்கு ஏலரிசித்தூள், மூங்கிலுப்புத் தூள், ஆகியவைகளில் தனித் தனியாயேனும் கலந்தும் கொடுக்க மேற்கண்டவைகள் தீரும்.

இஞ்சிச்சாறு, தேன், ஆகியவைகளில் ஒன்றிலேனும், அல்லது, இரண்டையும் கலந்தேனும் மேற்படி மாத்திரையை அளவுப்படி கலந்து உட்கொள்ள வாதசம்பந்தமான சுரநோய்கள், வாயுசம்பந்த மான நோய்கள் ஆகியவைகள் தீரும்.

நற்சீரகத்தூள், ½ வராகன் எடை (1¾ கிராம்), தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட மாத்திரையை அளவுப்படி கலந்து கொடுக்க, நடுக்குசுரம், குளிர் சுரம் ஆகியவைகள் தீரும்.



இன்னும், தகுந்த துணைமருந்துகளில் இந்த மாத்திரையை உப யோகிக்க, சன்னிபாத நோய்கள் நச்சுச்சுரங்கள் முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு :—** பொதுவாகப் புளியை நீக்கவேண்டியது. இன்னும், நோய் கடினமாயிருந்தால் சமையோசிதம் போல இலகு வான ஆகாரங்களாகிய கஞ்சி இனங்கள் முதலியவைகளை உப யோகிக்க வேண்டும். நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவை களுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்துவது மருத்துவர்களின் கடமையாம்.

## 656. அமிர்த இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், அயச்செந் தூரம், சீந்திற்சர்க்கரை இவை வகைக்குச் சமனெடை.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கருத்த பின்பு மற்ற இரண்டு சரக்குகளையும் சேர்த்து நான்கு சாம நேரம் அரைத்துக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** நெய், தேன், வெண்ணெய் முதலியவை களாம்.

**தீரும்நோய் :—** இராசநோய், சயம், இருமல் முதலியவைகள் தீரும்.

## 657. சந்திரபாத இரசம்

(அ) தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், இவை வகைக்கு 3 வராகன் எடை (10½கிராம்), அயசெந்தூரம் 6 வராகன் எடை (21 கிராம்), (ஆ) மஞ்சட் கடுக் காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், கருஞ்சீரகம், செவ்வியம், கறுப்புப்பு இவற்றின் தனித்தனி தூள்கள் வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), வெள்ளாட்டுப்பால் செல்லத்தக்க அளவு (இதனைத் துணியில் ஏழுதடவை வடிகட்டிப் பிறகு உப யோகிக்க வேண்டும்.)

**செய்முறை :—** இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு அயச்செந்தூரத்தைச் சேர்த்து இரண்டு மணி நேரமரைத்து, தனியே எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். (ஆ) விலுள்ள சரக்குகளை எல்லாம் ஒன்ருகச் சேர்த்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்துப் பிறகு முன்னெடுத்து வைத்திருக்கிற தூளையும் சேர்த்து முன்போலவே பாலை வார்த்து இரண்டு சாம நேரமரைத்து இரண்டு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** தாமரைப்பூச்சாறு, தாமரைப்பூத் தீநீர் தாமரைப்பூ சர்பத்து (மணப்பாகு) கொள்ளுக் குடிநீர், இஞ்சிச்சுரசம் மிளகுக்குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** இருமல், சுவாசகாசம், இரத்தகாசம், சுரம் தாகநோய், பாண்டு நோய், செரியாமை சுரநோய் முதலியவைகள் தீரும். இன்னும், மேற்கண்ட நோய்களுள் தகுந்த துணைமருந் துடன் கொடுக்க அவை தீரும்.

## 658. சந்திராமிர்த இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம் இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), பொரித்த வெண்காரம் 12 வராகன் எடை (42 கிராம்), மிளகுத்தூள் 6 வராகன் எடை (21 கிராம்), அயச்செந்தூரம், மஞ்சட் கடுக்காய்த் தோல், நெல்லி வற்றல், மேற்ரேல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, செவியம், கொத்தமல்லி விதை, கருஞ்சீரகம், கல்லுப்பு, இவற்றின் தூள்கள் வகைக்கு 3 வராகன் எடை, வெள்ளாட்டுப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித் தரைத்துச் செம்மையாகக் கறுத்த பின்பு மற்றவைகளையும் ஒன்ருகக் கலந்து இரண்டு சாம நேரமரைத்துச் செம்மையாக மசிந்த பின்பு மேற்படி ஆட்டுப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்துக் குன்றிமணி எடை அளவு மாத்திரைகள் செய்து பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரைகள்.



**துணைமருந்து :** தாமரைப்பூ சர்பத்து, (மணப்பாகு) தாமரைப் பூச்சாறு, தாமரைப்பூக் குடிநீர், மோர், தயிர்த்தண்ணீர், ஆட்டுப் பால், கழுநீர், அல்லது, கஞ்சி முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** மூன்றுவகை இருமல் நோயும் தீரும் சுவாசகாசம், தாகநோய், நுண்புழுநோய் செரியாமை சுரம், பாண்டு நோய் முதலியவைகள் தீரும். ஈரல் வீக்கம், குன்மநோய் முதலிய் இரைப்பை சம்பந்த நோய்களுக்கும் உபயோகப்படும். இன்னும், உடல் வளமை உடல்வலிமை ஆகியவைகளையும் விருத்தி செய்யும்.

## 659. காச அக்கினி இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), பாகப்படுத்தின அயத்தூள் $7\frac{1}{2}$ வராகன் எடை ($26\frac{1}{4}$கிராம்), சோற்றுக்கற்ருழைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு அயத்தூள்களையும் சேர்த்து மேற் படி கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து ஒரே உருண்டையாகச் செய்துலர்த்தி ஒரு தாம்பிரக் குப்பியில் மேற்படி உருண்டையின் மீது ஆமணக்கிலையைக் கெட்டி யாகச் சுற்றி வைத்து மேல்மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி ஒரு பானையில் விரற்கடைம் மணலிட்டு அதன்மீது மேற்படி கவசத்தை வைத்துப் பானை நிறைய மணலைக் கொட்டி அடுப்பேற்றிக் காடாக் கினியாக 4 சாமம் எரிக்க வேண்டும். குளிர ஆறின பின்பு கவசத் தைப் பிரித்து மருந்தை எடுத்து ஒரு குப்பியில் போட்டு வாய் பந்தனஞ் செய்து தானியபுடம இரண்டு நாள் வைத்துப் பிறகு எடுத்துக் கல்வத்தில் பொடித்துத் துணியில் சலித்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு, இதற்குச் சமனெடையாக மேற்ரேல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக் காய்த்தோல், நெல்லிமுள்ளி, இலவங்கம், ஏலரிசி சாதிக்காய், இவற்றின் தனித்தனி தூள் (அதாவது மேற்கண்ட இரசகெந்தக அயத்தூள் வராகன் எடை எட்டானுல், இந்தச் சரக்குகளின் ஒவ்வொரு வகைத் தூள்களும் எவ்வெட்டு வராகன் எடையாக நிறுத்து எடுத்திக் கொள்ள வேண்டும். கூடிய தொகை சுமார் எண்பது வராகன் எடையாகும்) இதனைக் கல்வத்திலிட்டுச் சோற்றுக்கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து 4 சாம நேரம் அரைத்து வெய்யிலிலுலர்த்திப் பொடித்து வைத்துக் கொள்க.

**அளவு :—** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து :—** சமனெடை தேன்.

**தீரும்நோய்கள் :—** கக்கலோடு கூடிய இருமல், சாதாரண இருமல், பாண்டு நோய், செரியாமை நோய் ஆகியவைகள் தீரும். இரத்தவிருத்தி, உடல் வலிமை முதலியவைகளும் உண்டாகும்.

## 660. சூரிய பரத இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்).

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்துச் சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து, மேற்படி தாம்பிரத்தகட்டின் இருபுறமும் சமமாக உலரவுலரப்பூசிச் செம்மையாக உலர்ந்த பின்பு ஒருசிறுமண் கலயத்திற்குள் வைத்து வாய்மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பின் மீதேற்றி ஐந்து சாம நேரம் முத்தீயும் எரித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :** — $\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—**நெய், தேன், வெண்ணெய் அதிமதுரக் குடிநீர் சீரகக் குடிநீர் முதலியவைகள்.

**தீரும்நோய்கள் :—** சுவாசம், பெருமூச்சு, இரைப்பு, கோழைக் கட்டு, கபக்கட்டு ஆகியவைகள் தீரும்.

## 661. வாயு சுஜாங்குச இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், அயச்செந்தூரம், தூய்மைசெய்த தாளகம், வாய்விளங்கத் தூள், சுக்குத்தூள், அப்பளாக்காரத் தூள், கொத்துமல்லிவிதைத் தூள், மஞ்சட் கடுக்காய்த் தோல் தூள், தூய்மைசெய்த நாபிக்தூள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), அரிசித்திப்பிலிக் குடிநீர் செல்லதக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகக்தையும் தொந்தித் தரைத்துத் தனியே எடுத்துக் கொள்ளவும். தாளகத்தையும் தனியே பொடித்து அஞ்சனப் பொடி போலான பின்பு எடுத்துக் கொள்ளவும். பிறகு, எல்லாவற்றையும் ஒன்றுகக் கலந்து மேற்படி



குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து இரண்டு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** இஞ்சிச் சாறு, சுக்குக்குடிநீர், தேன், நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—**எல்லாவகை வாயு நோய்கள் தீரும்.

## 662. காமகளா ரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், தூய்மைசெய்த தாளகம் வாய்விளங்கத் தூள் கோரைக்கிழங்குத் தூள், இந்துப்பு, பொரித்த வெண்காரம் தூய்மைசெய்த சிவதை வேர்த் தூள், அயச்செந்தூரம் அல்லது, அன்னபேதிச்செந்தூரம், இவை வகைக்கு 8 வராகன் எடை (28 கிராம்), சாரப்பருப்பு, சீந்திற்சருக்கரை, மேற்ரேல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கோட்டம், இவற்றின் தூள்கள் வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தூய்மைசெய்த மைசாட்சி 33 வராகன் எடை, பசுவின்நெய், பசுவின்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற தூள்களைச் சேர்த்தரைத்து முடிவாக மைட்சியைச் சேர்த்து அரைக்க வேண்டும். எல்லாம் நன்ருக கலந்து பின்பு மேற்படி நெய்யைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்துப் பிறகு, பசுவின் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து நாலு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** பசுவின் வெண்ணெய், பசு நெய், பசுவின் பால், பசுவின் நீர், தேன் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** பலவகைக் கட்டிகள், பலவகைக் குழிப் புண்கள், பலவகைக் கொப்பளங்கள், பலவகைச் சிலந்திப் புண்கள், பலவகைத் சொறிகள், பலவகை விரணங்கள், குலநோப், இருமல், சுவாசகாசம், சுரக்கட்டி, குன்மநோய் முதலிய இரைப்பை சம்பந்த நோய்கள், தீரும். பிரமிய நோய்கள்,

செரியாமை நோய்: பாண்டு நோய் விடாகழிச்சல் ஆகியவை களுக்கும் உபயோகமாகும்.

## 663. பக்கசூலை இரசம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம். அயச் செந்தூரம், அல்லது அன்னபேதிச் செந்தூரம், இவை வகைக்கு 6 வராகன் எடை (21 கிராம்), பொரிந்த வெண்காரந்துாள், மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், கஸ்தூரி மஞ்சள், லவங்கப் பட்டை, ஏலரிசி, தாளிச்சப்பத்திரி, லவங்கப்பத்திரி, இலவங்கம், சாதிக்காய், நற்சீரகம், கொத்துமல்லிவிதை இவற்றின் தனித்தனி தூள் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), பெருங்காயம் 3 வராகன் எடை, (இதனைப் பொரித்துத் தூள் செய்து கொள்ள வேண்டும்.) வெள்ளாட்டுப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும், கெந்தகத்தையும், சேர்த்து அரைத்து மற்றவைகளையும் ஒன்றாகக் கலந்து மேற்படி ஆட்டுப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நாலு சாம நேரமரைத்து இரண்டு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** வெள்ளாட்டுப்பால், பாசுவின்பால், குளிர்ந்த நீர், வெந்நீர், ஓமத்தீநீர், சோம்புத்தீநீர், முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** எட்டுவகைக் குன்மநோய்களும் தீரும். சுரக்கட்டி, ஈரல்வீக்கம், பிரமியநோய், விக்கல், மஞ்சட் காமாலை, கருங்காமாலை, உடல்வீக்கம், குட்டநோய், கிருமிநோய், மூலநோய், தொடர்க்கழிச்சல், செரியமைநோய் ஆகியவைகளுக்கும் உபயோகமாம். இதனால், ஆயுள் விருத்தியும் உண்டாமெனச் சொல்லப் பட்டிருக்கிறது.

## 664. ஹேமகிருபா இரசம்

தூய்மைசெய்த இரசம் ஒருபங்கு, தங்கத்தை அராவின அரப்பொடி காற்பங்கு, தூய்மைசெய்த கெந்தகம் இரண்டரைப்பங்கு, முள்ளிலவமரப் பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு. இம்மூன்றையும் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து ஒரு உருண்டையாகச் செய்து மண் ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். ஒருமுழச் சதுரக் குழிதோண்டி அதன்



மத்தியில் அரைச்சாண் சதுரம் பள்ளந்தோண்டி அதில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கவசத்தை வைத்து அச்சிறு குழி நிறைய மணலைப் போட்டழுத்தி விடவேண்டும். பிறகு, அந்தக் குழி நிறைய வறட்டியை அடுக்கி நெருப்பிட்டுக் குளிர ஆறினபின் எடுத்து அதுகண்ட எடை கெந்தகம் சேர்த்து இஞ்சிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைக்க வேண்டும். பிறகு, கொடிவேலி வேர்க்குடிநீரை விட்டு இரண்டு சாமம் அரைக்க வேண்டும். பிறகு, பருமனுள பலகறைகளை எடுத்து அதற்குள் நிறைத்து விடவேண்டும். பிறகு, மருந்தின் எடையில் அரைக்காற் பங்கு வெண்காரம், வெண்காரத்தின் எடையில் பாதி நாபித்தூள், இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுக் கள்ளிப்பாலை விட்டு ஒருமணி நேரமரைத்துப் பலகறையின் வாயில் தடவி வாய்பந்தனம் செய்ய வேண்டியது, பிறகு, ஒரு பானைக்குள் சுண்ணும்பைத் தடவி அதற்குள் முன்சித்தப்படுத்தின பலகறைகளை வைத்து அந்தப் பானையின் வாய்க்குப் பொருந்தும்படி மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கெசபுடம் போட வேண்டும். நன்றாகக் குளிர ஆறின பின் எல்லாவற்றையும் எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ஒரு குன்றிமணி முதல் இரண்டு குன்றிமணி எடை வரையிலாம்.

**துணைமருந்தும் தீரும்நோய்களும் :—** இலந்தைக் கொட்டைத் தூள், அரிசித்திப்பிலித் தூள், மயிலிறகைச் சுட்ட சாம்பல் இவை வகைக்கு 4 வராகன் எடை (14 கிராம்), கற்கண்டுத்தூள் 8 வராகன் எடை (28 கிராம்) தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவை எல்லா வற்றையும் ஒன்றாகக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, எல்லாவகைக் கபநோய்களும், கபதொந்த நோய் களும் தீரும்.

இன்னும் விடாக்கழிச்சல், இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம், பசியின்மை, வலிவின்மை முதலிய நோய்களும் தீரும்.

**மருத்துணவு :—** இதற்கு உப்பை நீக்க வேண்டியது. கூடாத சமயத்தில் குறைந்தது மூன்று நாளாயினும் உப்பை நீக்க வேண்டியது.

## 665. மகா சுராங்குசம்

தூய்மைசெய்த இரசம் $\frac{3}{4}$ வராகன் எடை, நாபித்தூள் $\frac{3}{4}$ வராகன் எடை, தூய்மைசெய்த கெந்தகம் $\frac{3}{4}$ வராகன் எடை, ஊமத்தை

விதைத்தூள் 2¼ வராகன் எடை, மிளகுத்தூள் 4½ வராகன் எடை, (15¾ கிராம்) எலுமிச்சம்பழச்சாறு, அல்லது, இஞ்சிச்சாறு செல்லத் தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்தில் சேர்த்து அரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்றவைகளையும் சேர்த்து அரைத்து எலுமிச்சம்பழச் சாற்றை, அல்லது, இஞ்சிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து ஒரு குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்து கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, தேன், மிளகுக் குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** வாதம், பித்தம், கபம் ஆகிய மூவகைச் சுரங்களும் தீரும். பகல் சுரம், இராச் சுரம் ஒருநாள் முறைச்சுரம், இரண்டாம் முறைச்சுரம், மூன்ரும் முறைச்சுரம், நான்காம்முறைச் சுரம் முதலிய முறைசுரங்களெல்லாம் தீரும். கைகால் பிடிப்பு, கீல்வாதச் சுரம், முதலியவைகளும் தீரும்.

**மருத்துணவு :—** உடல்வலிவு, நோய்வலிவு ஆகியவைகளுக்குத் தகுந்தது போல் ஏற்படுத்திக் கொள்ளவும்.

## 666. சூலேகஜகேசரி இரசம்

தூய்மைசெய்த செம்பு 12 வராகன் எடை (42 கிராம்) (இதனுல் கீழ்மேல் மூடியுள்ள ஒருகுப்பி செய்து கொள்ள வேண்டும்.) தூய்மைசெய்த இரசம் 12 வராகன் எடை (42 கிராம் தூய்மை செய்த கெந்தகம் 24 வராகன் எடை (84 கிராம்).

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைத்துச் செம்மையாகக் கறுத்தபின்பு முன் சித்தப்படுத்தின குப்பியில் போட்டு நிறைத்து மேற்சிமிழ் மூடிச் சந்தில்லாமல் சித்தப்படுத்தி வைத்துக் கொள்க. இரண்டுபடி மணல் கொள்ளும்படியான ஒருமண் பானையில் ஒருபடி உப்பைக் கொட்டி அதன் மீது மூன் சித்தப்படுத்தின குப்பியை வைத்து அதன் மேலும் ஒருபடி உப்பைக் கொட்டிப் பானையில் வாயைமண் தாலத்தால் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி கெசப்புடமிட்டு ஆறினபின் எடுத்து குப்பியுடன் அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.



**அளவு :—** ½ முதல் 1 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய், வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** பலவகைக் குன்மநோய்கள், வயிற்றுவலி ஈரல்வீக்கம், மண்ணீரல்வீக்கம், தொடர்கழிச்சல், செரியாமை, பாண்டு, விக்கல் ம்முதலியவைகள் தீரும். கபவாத சுரத்திற்கும் ஆகும்.

**விண்ணப்பம் :—** இரச சம்பந்தமான யோகமுறைகள் இன்னும் அநேகமிருக்கின்றன; அவைகளையெல்லாம் இங்கு எழுவதானுல் இச்சிறிய நூல் அதிக விரிவெய்தி விடும். மற்ற பாகங்கள் எழுது வதற்கு இடமிராது. ஆகையால், இம்மட்டோடு நிறுத்தி இரச பற்ப முறைகளை எழுத ஆரம்பிப்போம்.

## இரச பற்பமுறை (பொதுவிதி)

இரசத்தைப் பற்பமாக்கும் முறைகளை அநுபவசாலிகளான ஆசானிடத்தில் கைமுறையாகக் கற்றுக் கொள்ள வேண்டும் அப்படிக் கற்றுக் கொள்ளாத அநேகர் இரசத்தைப் பற்பமாக்கத் தெரியாமல் இரச பற்பமுறைகள் பிசகென்று சொல்லித் திரிகின்ருர்கள்.

1. இரசத்தைப் பற்பமாக்க வேண்டுமானுல் இரசமானது நெருப்பிற் கோடாமல் அதனைக் கட்டிக் கொள்ள வேண்டும்.

2. அப்படிச் செய்யக் கூடாதவர்கள் இரசத்தைக் கட்டும் பொதுவிதி என்னும் தலைப்பில் மூன்ரும் பத்தியில் அல்லது நாலாம் பத்தியில் சொல்லியிருக்கிறபடி சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட இரண்டு வகைகளாகச் செய்யாத வரையில் இரசமானது கலப்பற்ற பற்பமாகாது. இந்த உண்மைகளெல்லாம் அனுபசாலிகளுக்கு அதிகம் தெரிந்திருக்கும்; ஆகையால், இங்கு சிறப்பாக எழுதுவது அனுவசியமென நிறுத்தப் பட்டது. ஆயினும், நமது அபிமானிகளின் பொருட்டுக் கைவல்யமான சில அனுபவ இரச பற்பமுறைகளை இங்கெழுதுகின்ருேம். புத்திமான்கள் இங்கு உள்ளபடி அதிக சாக்கிரதையுடன் செய்து முடித்துக் கொள்வார்கள்.

மற்றவர்கள் அப்படிச் செய்யக் கூடாமையாகிபாகமானது தப்பு என்று சொல்லித் திரிவார்கள்.

## 667. இரச பற்பம்

தூய்மைசெய்த இரசம் 8 வராகன் எடை (28 கிராம்), தூய்மை செய்த தாளகம் 2 வராகன் எடை (7 கிராம்), தூய்மைசெய்த கெந்தகம் 2 வராகன் எடை (7 கிராம்), உத்தாமணி இலையும் ஆதண்டையிலையும் சமனெடையாகச் சேர்த்து இடித்துப் பிழிந்த சாறு செல்லத்தக்க அளவு, புளியம்புறணிச் சாம்பல் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**—அரிதாரத்தையும் கெந்தகத்தையும் தனித்தனியே தூள் செய்து பிறகு, ஒன்ருகக் கலந்து ஒருபுது ஓட்டிலிட்டு அடுப் பேற்றிச் சிறுதீயாக எரித்து உருக்கு முகத்தில் முன் இரசத்தை விட்டு வறுக்க வேண்டும். இரச நிறை இருக்கும்படியாக வறுத்துக் கல்வத்திலிட்டு முன் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு ஒரு அகலில் இரண்டங்குலம் புளியம் புறணிச் சாம்பலைப் போட்டு அழுத்தி அதன் மேல் வில்லையை வைத்து அதன் மேலும் இரண்டு அங்குலம் புளியம் புறணிச் சாம்பலைப் போட்டழுத்தி மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி மணல் மறைவில் சாண் புடமிடவும். புடம் குளிர ஆறினபின்பு மருந்தை எடுத்து முன்போல் அரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி, அரைத்தரைத்து மூன்று புடமிட்டால் எடை குறையாமல் கறுப்பு நிறமான பற்பமாகி இருக்கும். புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— ½ முதல் 1 குன்றிமணி எடை.

**துணைமருந்து** :— தேன், நெய், வெண்ணெய் முதலியவை களாகும்.

**தீரும்நோய்கள்** :— மேகப்புண், மேகசூலை, சூலைப்பிடிப்பு, சுரம் சன்னி முதலிய அநேக நோய்கள் தீரும்.

**குறிப்பு** :— முன் கவசத்தைப் பற்பப் பொது விதியில் சொல்லி இருக்கிறபடி படிப்படியாகத் தீயை அதிகப்படுத்தி வெளிப்புடம் இட்டாலும் அல்லது, குப்பியில் வைத்துப் பதங்கித்துக் கொண் டாலும் அல்லது, கட்டின இரசத்தைச் சேர்த்துப் புடமிட்டாலும் உயர்ந்த பற்பமாகும். அதனுல், மிகச்சிறந்த குணத்தைக் காணலாம்.



## 668. இரச பற்பம் (வேறு)

தூய்மைசெய்த இரசம் தேவையான அளவு, முள்ளங்கிக் கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— இரசத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து மேற்படி முள்ளங் கிக்கிழங்கிற்குட் செலுத்தி மூன்று சீலைமண் செய்து ஈரத்தை உலர்த்தி இலகு புடமிட வேண்டும். பிறகு, எடுத்து முன் சாற்றை விட்டு முன்போல் புடமிடவேண்டும். ஆனுல், தீயை முன்னிலும் கொஞ்சம் அதிகப் படுத்த வேண்டும். இவ்விதம் முறைப்படி தீயை உயர்த்திப் பற்பமாகிற வரையில் புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்யச் சோம்பலுறுகிறவர்கள் இரசத்தைக் கட்டும் பொதுவிதி என்னும் தலைப்பில் மூன்றும் பத்தியின் படி செய்து கொள்வது உத்தமம்.

**அளவு**:— 1 முதல் 2 அரிசி எடை.

**துணைமருந்து** :— நெய், தேன் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— குன்மநோய்கள், வாயுநோய்கள், பறங்கிப் புண்கள், மேகநோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 669. இரச பற்பம் (வேறு)

தூய்மைசெய்த இரசம் 5 வராகன் எடை (17½ கிராம்), சிறு தேட்கொடுக்கியிலைச்சாறு, சத்திச்சாரணைக்கிழங்குச் சாறு, பறங்கிப் பழுப்பிலைச்சாறு, இவை நான்கையும் சமனெடையாகச் சேர்த்துச் செல்லத்தக்க அளவு. இவை நாலும் ஏககாலத்தில் அகப்படா விட்டால் அகப்பட்ட இனங்களைச் சேர்த்து உபயோகித்துக் கொள்ளலாம்.

**செய்முறை** :— இரசத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி கலவைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து மூசையில் அடைத்துச் சீலைமண் செய்து உலர்த்தி இரசத்தைக் கட்டும் பொதுவிதி என்னும், தலைப்பில் மூன்றும் பிரகரணத்திலுள்ள படி செய்து எடுக்கப் பற்பமாகிவிடும்.

**அளவு** :—1 முதல் 2 அரிசி எடை.

**துணைமருந்து** :— தேன், நெய், வெண்ணெய்ஆகியவைகளாம்

**தீரும்நோய்கள் :—** மேகநோய்கள், வாதநோய்கள், விரணங்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 670. இரச பற்பம் (வேறு)

தூய்மைசெய்த இரசம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த கெந்தகம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), வெங்காயச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** முன்னிரண்டையும் கல்வத்திலிட்டு நன்ருகக் கறுக்கிற வரையில் அரைத்து மேற்படி வெங்காயச் சாற்றை சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து ஒரு முட்டையைப் பொத்து வெள்ளைக்கருவை ஊற்றி விட்டு அதற்குள் மேற்படி உருண்டையைப் போட்டு அது நிறைய வெங்காயச் சாற்றை விட்டு வேறு அண்ட ஓட்டால் மூடிச் சீலைமண் செய்து ஒருபடி உமியில் புடமிடவேண்டும். ஆறினபின்பு கவசத்தை எடுத்து மருந்தைக் கல்வத்திலிட்டு வெங்காயச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி ஒரு அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இரண்டு பங்கெடை வறட்டியில் புடமிடவேண்டும். குளிர, ஆறினபின்பு எடுத்து முன்போல் அரைத்து முன்போல் புடமிட வேண்டும். ஆனல், ஒருபங்கு வறட்டியை அதிகமாக்கிப் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு புடமிட்டெடுத்தால் கருநிறமான பற்பமாயிருக்கும். பிறகு புட்டியில் பத்திரப்படுத்தவு

**அளவு :—** 2 முதல் 3 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** அந்தரவாயு, அண்டவாதம், விதைவாதம், அண்டவீக்கம், அண்ட சம்பந்தமாய் உண்டாகும் சுரம் முதலியவைகள் தீரும்.

## 671. இரச பற்பம் (வேறு)

தூய்மைசெய்த இரசம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), நவச்சாரம் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), பனைமட்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** முன்னிரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து



பனை இரட்டை ஓலைக்குள் நடுவே வைத்து மறு இரட்டை ஓலையால் மூடி மூன்று சீலைமண் செய்து மூன்று பலம் வறட்டியை நெருப்பாக்கிப் புகையடங்கினபின் அதில் வைக்க வேண்டும். குளிர ஆறினபின்பு முன் சாற்றை விட்டரைத்து முன்போல் புடமிட வேண்டும். ஆனல், அரைப்பங்கெடை வறட்டியை அதிகமாக்கிக் கொள்ள வேண்டும். பற்பம் சிலசமயம் வெண்ணிறமாய் இருக்கும் எந்த வண்ணமாயிருந்த போதிலும் பற்பம் குணம் செய்வதில் தடையில்லை.

**அளவு :—** 2 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** கிரந்திகள், சூலைகள், வாயு நோய்கள் முதலிய அநேக நோய்களுக்குக் கொடுக்கலாம்.

## 672. உடும்புரச பற்பம்

முற்றின 1 உடும்பு, இதனை அறுத்து மேற்றோலை உரிக்காமல் வயிற்றைக்கீறி அதிலுள்ள குடல் முதலியவைகளை நீக்கி விட வேண்டும். தூய்மைசெய்த இரசம் பலம் 3 (105 கிராம்), வெடியுப்பு, முந்திரியுப்பு, கெந்தகவுப்பு, கறியுப்பு, கெந்தகம் இவை வகைக்கு பலம் $\frac{1}{2}$ ($17\frac{1}{2}$ கிராம்), பொடுதலைச்சாறு செல்லதக்க அளவு.

**செய்முறை :—** இந்தச் சரக்குகளை எல்லாம் கல்வத்திலிட்டுச் சேர்த்தரைத்து இரசம் மடிந்த பின்பு பொடுதலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து உடும்பு வயிற்றிற்குள் செலுத்தி அதன் வயிறு, கழுத்து, எருவாய் முதலியவைகளில் சந்தில்லாமல் நூலால் தைத்து இரண்டுபடி கொள்ளும்படியான மண் பானையில் ஒருபடி வறுத்த உப்பைக் கொட்டி அதனடுவில் முன் சித்தப்படுத்தின உடும்பை வைத்து அதன் மேலும் உடும்பு மறையும்படியாக வறுத்த உப்பைக் கொட்டிப் பானை வாயை மண் தாலத்தால் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கெசபுடமிட வேண்டும் குளிர ஆறினபின்பு பானைவாயைப் பிரித்து உப்பின் மத்தியில் இருப்பதை எல்லாம் எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும் இது கறுப்பு வண்ணமாகத்தான் இருக்கும்.

**அளவு :—** 2 முதல் 5 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** நெய், தேன், வெண்ணெய், இளக வகைகள், இன்னும் சமயோசிதம்போல் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளுமாகும்.

**தீரும்நோய்கள் :—** பக்கவாதம், சூலைக்கட்டு, முகவாதம், தனுர்வாதம், புறவீச்சு, இசிவு, குமரகண்டன், காக்கைவலி, குதிரைவலி முதலிய வலிப்பு நோய்கள், நரம்புகளைப் பற்றின நோய்கள், நீர்க்கட்டு, உதிரச்சிக்கல், குன்மம் முதலிய அநேக நோய்கள் தீரும், தாதுவிருத்தி, உண்டாகி உடல் வலிமை, உடல் வளமை· ஆகியவைகளுண்டாகும்.

## 673. இரச பற்பம் (வேறு)

தூய்மையான இரசம் தேவையான அளவு, காட்டு முருங்கைப் பட்டைச்சாறு, அல்லது, இலைச்சாறு செல்லதக்க அளவு, காட்டு முருங்கைப்பட்டை தேவையான அளவு.

**செய்முறை :—** மேற்படி பட்டையை வெண்ணெய்போல் அரைத்துக் குகையும், அதன் வாய்க்குச் சரியான மூடியும் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு, இரசத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து முன் சித்தப்படுத்திய குகையில்வைத்து மேற்படி மூடியால் மூடி, 7 சீலைமண் செய்துலர்த்தி ஒருபடி உமியில் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவை அரைத்து மூன்று புடமிட்டால், உயர்ந்த பற்பமாகும். ஆனல், தடவைக்குத் தடவை காற்படி, அல்லது, அரைப்படி உமியை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**அளவு :—** 2 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து :—** நெய், தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** கிரந்திநோய்கள், மேகநோய்கள், புண் புரைகள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 674. இரச பற்பம் (வேறு)

தூய்மைசெய்த இரசம், 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), வெள்ளெருக்கம்பால், அல்லது, நாட்டெருக்கம்பால் 8 பலம் (280 கிராம்).

**செய்முறை :—** இரசத்தை ஒரு புது ஓட்டிலிட்டு மேற்படி பாலால் சுருக்கிட வேண்டும். தீயை அதிகமாய் எரிக்காமல் சிறு



தீயாக எரிக்க வேண்டும். பாலெல்லாம் சென்று விட்டால், இரசமானது பற்பமாகி விடும். ஓட்டிலுள்ளதை எல்லாம் எடுத்துப் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 4 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** நெய், வெண்ணெய், தேன் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** குன்மநோய்கள், வயிற்றுவலி, செரியாமை நோய்கள் முதலியவைகள் தீரும்.

## 675. இரச பற்பம் (வேறு)

கும்பிடு சிப்பியைப் பிளந்து வெண்காரப் பொரியை அதில் போட்டு வைத்தால், நீர்வடியும் அந்த நீரை எல்லாம் சேகரித்துப் புட்டியில் வைத்துக் கொள்ளவும். இதற்கு சிப்பிச் செயநீரென்று பெயர்.

தூய்மைசெய்த இரசம் தேவையான அளவு, இதனைக் கல்வத்திலிட்டு மேற்படி செயநீரைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். இரசம் சனிக்காமல் மடிகிற வரையில் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிப் பலமாக மூன்று சீலைமண் செய்துலர்த்தி முதலில் ஐந்து பலம் வறட்டியில் புடமிட வேண்டும். பிறகெடுத்து முன் செயநீரை விட்டு முன் போல் அரைத்து முன்போல் ஏழரைப் பலம் வறட்டியில் புடமிட வேண்டும். மூன்றுந் தடவையும் முன் போலவே செய்து பத்துப் பலம் வறட்டியில் புடமிட வேண்டும். மூன்று புடமிட்டுத் தீர்ந்தால் மேன்மயான பற்பமாகும்.

**அளவு :—** 2 முதல் 3 அரிசி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** கிரந்திநோய்கள், மேகநோய்கள், புண் புரைகள் முதலியவைகள் தீரும். இன்னும்,அநேக நோய்களுக்கும் உபயோகமாகும்.

**குறிப்பு :—** இந்த முறை செய்வதற்குக் கொஞ்சம் கடினமாய் இருக்கும். ஆனல் அதிகம் குணம் தரத்தக்கது.

## 676. இரசச் சுண்ணம்

தூய்மைசெய்த இரசம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கௌதும் பையிலைச்சாறு, குப்பைமேனி இலைச்சாறு வகைக்கு 1 பலம் (35 கிராம்). ஆறங்குலம் சுற்றளவுள்ளதும், மூன்றடி நீளமுள்ளது மான 1 வாழைக்கட்டை (35 கிராம்).

**செய்முறை :—** வாழைக்கட்டையின் இரு புறத்தையும் தரையில் படியும்படியாக அறுத்து விடவேண்டும். அடிபுறத்தை ஒரு ஓட்டின் மீது படிய வைத்து காற்றில்லாத இடத்தில் நிறுத்தி நுனியினடுவில் ஒன்றரை அங்குலம் பள்ளம் செய்து அதில் முன் இரண்டு சாறுகளையும் இரசத்தையும் விட்டு வறட்டியின் நடுவில் துளைத்து வாழைக் கட்டையின் வழியாகக் கீழிறக்கிப் படிய வைக்க வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு வறட்டியையும் துளைத்துத் துளைத்து வாழைக்கட்டையின் வழியாகப் படியவைக்க வேண்டும். இவ்விதம் நுனிவரையில் படிய வைத்து அதன் மேலும் இரண்டு வறட்டி வைத்து நெருப்பிட வேண்டும். குளிர ஆறினபின்பு விழிப்போடு எடுத்தால் ஒட்டில் கறுப்பாக ஒரு கட்டியிருக்கும் அதனை எடுத்து ஒரு கடுதாசியில் மடித்து ஒருஇரவு வைத்திருந்து மறுநாள் எடுத்தால் கடுதாசி நைப்பாகி மேற்படி கட்டி நைப்பில்லாமலிருக்கும். அதுவே, இரசச் சுண்ணமாம். இது மஞ்சளுக்குச் சிவக்கும். இதனைத் தனியாக, உள்ளுக்கு உபயோகிக்க முடியாது. ஆனால், ஐந்து பலம் பசுவினெய்யில் இரண்டு குன்றிமணி எடை சுண்ணத்தைச் சேர்த்து வேளைக்குக் கால்பலமாகச் சாப்பிட்டு வர வேண்டும்.

**தீரும்நோய்கள் :—** குட்டம் (பெருவியாதி), கீல்வாயு, பக்கவாதம் முதலிய பெரியநோய்கள் எல்லாம் தீரும்.

**குறிப்பு :—** இது ஒரு சித்தரால் அனுக்கிரகம் செய்யப்பட்டது. ஒரு வராகன் எடைக்கதிகம் இரசம் வைக்கலாகாது என்பது அவர் கருத்து இதனை இரசவாத சம்பந்தமாக உபயோகிக்க வேண்டுமானால்தெரிந்தவர்களை அணுகி அறிந்து கொள்க.

## 677. நாக இரசச் சுண்ணம்

தூய்மைசெய்த வெள்வங்கம், தூய்மைசெய்த சிறு கண்ணுகம் தூய்மைசெய்த இரசம், இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இஞ்சிச்சாறு, 8 பலம் (280 கிராம்).

**செய்முறை :—** முன் மூன்று சரக்குகளையும் தொந்தித்துக் கல்வத்திலிட்டு முன் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து அந்தச் சாறெல்லாம் சென்ற பின்பு வில்லை செய்து உலர்த்தி சிறு



அகலில் வைத்து மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்து கோழிப் புடமிட வேண்டும். குளிர ஆறினபின்பு எடுத்தால் பற்பமாகி இருக்கும்.

**அளவு :—** 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

**மருத்துணவு :—** தேன், நெய், இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** சயம், காசம், இருமல் முதலியவைகள் தீரும்

**குறிப்பு :—** இந்த பற்பத்தை மஞ்சளில் சேர்த்துப் பார்த்தால் அது சிவந்தால் பதம். அப்படிச் சிவக்காவிட்டால் முன் போல் அரைத்து முன் போல் புடமிட மஞ்சளுக்குச் சிவக்குங்குணம் உண்டாகிவிடும்.

## 678. இரசப் பதங்கம்

(அ) தூய்மைசெய்த இரசம் 1 பலம் (35 கிராம்).

(ஆ) கோதும்பை 1 பலம் (35 கிராம்), சிவப்புக் காவிக்கல் 1 பலம் (35 கிராம்), ஆலம்விழுது நுனி 1 பலம் (35 கிராம்) கறியுப்பு 3 படி.

**செய்முறை :—** (ஆ) விலுள்ள மூன்று சரக்குகளையும் தண்ணீர் விட்டு மைபோல் அரைத்துக் குகையும் சில்லும் செய்து அதில் (அ) விலுள்ள மேற்படி இரசத்தை விட்டு சில்லால் மூடி மூன்று சீலைமண் செய்து மேற்படி சில்லில் கோணி ஊசியால் ஐந்து துவாரம் செய்து மூன்றுபடி கொள்ளுகிற ஒருபானை வாங்கி அதில் அரைவாசி உப்பைக் கொட்டிப் பரப்பி, அதன் மேல் நடுவில் முன் சித்தப் படுத்தின குகையை வைத்து அதன் மீது மற்ற பாதி உப்பையும் கொட்டிப் பரப்பி மேல்சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்து மேல் சட்டிக்கு அனல் படாமல் வட்டடுப்பில் வைத்துக் கமலாக்கினியாக நான்கு சாமம் எரித்து ஆறவிட்டுக்குளிர ஆறினபின்பு பதங்கத்தைச் சுரண்டி எடுத்துக் கொள்ளவும் இதனைப் புட்டியில் அல்லது, தென்னங்குடுக்கையில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை. காலையில் ஒரு வேளை மாத்திரம் உபயோகிக்க வேண்டும். நோய்வலுவிற்குத், தகுந்தபடி மூன்றுநாள், ஐந்து நாள், ஏழுநாள் உபயோகிக்கவும்.

**துணைமருந்து :—** மிளகுத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), நெய் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து

மேற்படி பதங்கத்தை அளவுப்படி துணைமருந்துகளுடன் உட்கொள்ளவேண்டும். இன்னும் பெரியவர்களுக்கு நாட்பட்ட நோய்களுக்கு உபயோகப்படுத்த வேண்டியதாயிருந்தால் காந்தச் செந்தூரம் $\frac{1}{4}$ வராகன் எடை மேற்படி பதங்கம் 2 குன்றிமணி எடை, இவ்விரண்டையும் சேர்த்து இக்கலவையில் இரண்டு குன்றிமணி எடை மருந்தை ஒரு வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) பனைவெல்லத்தில் சேர்த்து உட்கொள்ள வேண்டும,

**தீரும்நோய்கள் :—** மேகவாயு, மேகசூலை, நெஞ்சுவலி, கைகால் வலி, முதலிய பெரிய நோய்களெல்லாம் தீரும்.

**மருந்துணவு :** நோய், இலகுவாயிருந்தால் வாயு பதார்த்தங்களைத் தள்ளி இச்சாபத்தியம் வைக்க வேண்டியது. நோய் வலுவாயிருந்தால் புளி, புகை, பெண், மீன் முதலியவைகளைத் தள்ள வேண்டியது. பதங்கமெரித்த உப்பைக் கறிபதார்த்தங்களில் சேர்த்துக் கொள்வது உத்தமம். அது இல்லாத போது உப்பைவறுத்துச் சேர்த்துக் கொள்ளவும். கத்தரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, துவரம்பருப்பு, பசுவின்மோர், தயிர் ஆகியவைகளாகும்.

**குறிப்பு :—** எந்தப் பதங்கத்தையும் ஏற்றும் போது மேற்சட்டியின் மேல் ஈரத்துணியைப் போட்டு வைத்து அதனையெப்போதும் ஈரமாகவே வைத்திருக்கவேண்டும்.

## 679. இரசப் பதங்கம் (வேறு)

(அ) தூய்மைசெய்த இரசம் 11 வராகன் எடை ($38\frac{1}{2}$ கிராம்) (ஆ) சீனக்காரம் 12 வராகன் எடை (42 கிராம்), கல்லுப்பு 13 வராகன் எடை ($45\frac{1}{2}$ கிராம்), கிட்டம் 15 வராகன் எடை ($52\frac{1}{2}$ கிராம்), இந்துப்பு 16 வராகன் எடை (56 கிராம்), கற்காவி 17 வராகன் எடை ($59\frac{1}{2}$ கிராம்), வெல்லம் 12 வராகன் எடை (42 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு (இ) பசரியிலை செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** (ஆ) விலுள்ள சரக்குகளைத் தனித்தனி பொடித்துத் தூள் செய்து பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்தரைத்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு. ஒரு-சாமம் அரைத்துப் பிறகு (அ) விலுள்ள இரசத்தையும் சேர்த்து, 2 சாம நேரம்அரைத்து ஒரு அகலவாயுள்ள சட்டியில் பசரித்



தழையை அரைத்து அரையங்குலக் கனம் சட்டி முழுவதும் பூசி நடுவில் முன் சித்தப் படுத்தின மருந்தை வைத்து வேறொரு சட்டியை மல்லாத்தி மூடிச் சந்தில்லாமல் மூன்று சீலைமண் செய்து அடுப்பேற்றி இரண்டு சாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு எடுக்க இரசகற்பூரம் போலே சட்டிப் பக்கத்தில் கட்டியிருக்கும். இதனை எடுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்

**அளவு :—** 1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து:—** மிளகுத்தூள், 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம் நெய் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உண்ணவேண்டும். காலையில் ஒரு வேளை மாத்திரம் உபயோகிக்க வேண்டும். மிளகுத் தூளுடன் பனைவெல்லம், நெய், தேன் முதலியவைகளையும் சேர்த்து அனுபானித்துட் கொள்ளவும்.

**தீரும்நோய்கள் :—** அட்டகுன்மம், பிலீகை, மகோதரம், காசம் சுவாசம், வயிற்றுவலி, உதிரவர்த்தனம், வாதம், ஆருதபுண் புரைகள், அண்டவாதம், துணிவயிறு, பொருமல், மலபந்தம் வயிற்றுப்புழு, அக்கினிமந்தம் முதலிய நோய்கள் தீரும்.

**மருந்துணவு :—** மேற்சொல்லியவைகளேயாம்.

**குறிப்பு :—** மேற்கண்ட பாகப்படி எரித்துக் கற்பூரம் போல் ஆகிவிட்டால் உத்தமம், அதுதான் பக்குவமென எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனல், சிற்சிலசமயங்களில் அப்படியாகாமல் மேற்சட்டியில் இரசமேறி இருக்கும் அப்படியானல், அந்த இரசத்தைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். ஒருசட்டியில் ஒன்றரைப்படி கறியுப்பை இடித்து பரப்பி முன்கீழ்ச் சட்டியில் வைத்து எரித்த மருந்தைத் தூள் செய்து மேற்படி உப்பின் மீது பரப்பி அதற்கு மேல் முன் எடுத்து வைத்திருக்கிற இரசத்தை வைத்து மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்து நாலு சாமம் எரித்து ஆறவிட்டு எடுக்கச் சுத்தமான பதங்கமாகி இருக்கும். இதில் மேற்கண்ட அளவே முன்கண்ட துணைமருந்தில் உபயோகிக்க, மேற்கண்ட நோய்கள் எல்லாம் தீரும்.

## 680. காச இரசப் பதங்கம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கௌரிப்பாடாணம் தூய்மைசெய்த வெள்ளைப் பாடாணம், தூய்மைசெய்த நாபி இவை

வகைக்குப் 1 பலம் (35 கிராம்), பசுவின் மூத்திரம் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** மேற்கண்ட சரக்குகளைச் சேர்த்தரைத்துப் பொடித்து மேற்படி பசுநீரில் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வில்லை தட்டிக் காய வைத்து வாயகன்ற ஒரு கலயத்தில் போட்டு அதன் வாயைச் சிறுசட்டியால் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றிச் சிறுதீயாக இரண்டு சாம நேரம் எரித்துக் குளிர ஆறினபின்பு பதங்கத்தைச் சுரண்டிக் கல்வத்திலிட்டு மேற்படி கோசலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து வில்லை செய்து உலர்த்தி முன் போல் கலயத்தில் போட்டு முன் போல் அதன் வாயைச் சட்டியால் மூடி முன் போல் எரித்து வாங்கி முன்போல் கோநீரை சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி முன்போல் கலயத்தில் வைத்து எரித்து பதங்கித்துக் கொள்ளவும். இவ்விதமே மடக்கி மடக்கி ஒவ்வொரு சாமம் அரைத்தும் ஒவ்வொரு சாமம் எரித்தும் ஏழு தடவை சித்தப்படுத்த வேண்டும். ஆகக்கூடிய ஒன்பது தடவையும் ஆனுல், உயர்ந்த பதங்கமாகி இருக்கும், இதனைப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 அரிசி எடை. இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

**துணைமருந்து :—** மிளகுப்பொடி. ½ வராகன் எடை (1¾ கிராம்) பசுவினெய் அல்லது, தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட மருந்தை மேற்கண்டபடி கலந்துண்ணவும். இன்னும் சம யோசிதம்போல் தகுந்த துணைமருந்துகளிலும் உபயோகிக்கலாம்.

**தீரும்நோய்கள் :—** சுவாசகாசம், மந்தாரகாசம், ஊதுகாசம் முதலிய எட்டுவகைக் காசநோய்களும் தீரும். சுரம், சன்னி, வாயு, சூலை ஆகிய நோய்களும் தீரும்.

**மருத்துணவு :—** புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்க வேண்டியது. இன்னும் சீதளமான பொருள்களையும், உடலுக்கு ஒவ்வாத பதார்த்தங்களையும் நீக்க வேண்டியது.

## 681. பட்டை ரசப் பதங்கம்

(அ) தூய்மைசெய்த இரசம் 1 பலம் (35 கிராம்), (ஆ) சிற்றுமணக்கு வேர்ப்பட்டை,கொடிவேலி வேர்ப்பட்டை,ஊமத்தம்வேர்ப்பட்டை, இவை வகைக்கு 2½ பலம் (87½ கிராம்), கறியுப்பு படி ஒன்றரை, செங்கற்பொடி படி ஒன்றரை.



**செய்முறை :—** (ஆ) விலுள்ள மூன்று பட்டைகளையும் அம்மியில் வைத்து மைபோல் அரைத்து எடுத்து இரண்டு பாகமாக்கி இரண்டு அடையாகத் தட்டிக் கொள்ள வேண்டும். நான்கு படி கொள்ளும்படியான ஒரு பானையும், அதன் வாய்க்குப் பொருந்தும் படியானதும் இரண்டு படி கொள்ளும்படியானதுமான வேறொரு பானையையும் வாங்கிக் கொள்ளவேண்டியது. முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற உப்பையும் செங்கற் பொடியையும் சேர்த்திடித்து நான்கு பாகமாக்கி மூன்று பாகத்தை பெரிய பானையில் போட்டழுத்தி அதன் மீது முன் சித்தப்படுத்தின ஒரு அடையை வைத்து அதில் சிறு குழிகளாகச் செய்து அவைகளில் (அ) விலுள்ள இரசத்தைச் சிறுகச் சிறுக விட்டு மறு அடையை அதன் மீது வைத்து முன்எடுத்து வைத்திருக்கிற உப்புச்செங்கல் தூளைத்தூவிச் மறு பானையால் மூடி ஏழு சீலைமண் செய்து வட்டடுப்பில் வைத்து இராப்பகல் அறுபது நாழிகையும் சிறு தீயாக எரிக்க வேண்டும். ஒரு நாள் ஆறின பின்பு பிரித்து மேற்சட்டியிலிருக்கிற பதங்கத்தைச் சுரண்டி புட்டியில் பத்திரப்படுத்த வேண்டும்.

**அளவு :—** 1 முதல் 2 அரிசி எடை.

**துணைமருந்து :—**மிளகுத்தூள் ½ வராகனெடை(1¾ கிராம்) நெய் 1 வராகனெடை (3½ கிராம்),இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள வேண்டும். இதனைச் சாப்பிட்டவுடன் காற்படி அல்லது, அரைப்படி பசுவின் பாலைப் பருகச் செய்ய வேண்டும். அப்படிப் பால் குடிக்கா விட்டால், சிலருக்கு இரத்தக் கழிச்சல் காணும். அப்படி அவ பத்தியத்தினுல் இரத்தக் கழிச்சல் கண்டால் நான்கு கொட்டைப் பாக்கைச் சீவி மெல்லிய துணியில் முடிந்து கஞ்சியுடன் சேர்த்துக் காய்ச்சிக் கொடுத்தால் இரத்தக் கழிச்சல் நிற்கும். நோய் வலிவிற்குத் தகுந்தபடி ஐந்து நாள், ஏழு நாள், ஒன்பதுநாள் உபயோகிக்கலாம். இன்னும் சீனிச் சர்க்கரை, தேன் முதலியவைகளையும் துணைமருந்தாக உபயோகிக்கலாம்.

**தீரும்நோய்கள் :—**சூலைக் கட்டுகள், வாதவகைகள், வீக்கம், பவுத்திரம், எட்டுவகைக் குன்மங்கள், நஞ்சுக்கடிகள், சில் விடங்கள், பதினெட்டுவகைக் குட்டங்கள் முதலிய நோய்களும் தீரும்.

**மருத்துணவு :—** கத்திரிக்காய், பாகற்காய் ஆகியவை ஆகாது பசுவின்நெய், பசுவின்பால், தயிர், முளைக்கீரை, முருங்கைப்பிஞ்சு, அவரைப் பிஞ்சு, ஆகியவைகளாகும்.

**குறிப்பு :—** இது வாய்கட்டும் இயல்பு உடையது. இதனுல் அப்படி வாய் கட்டினுல் இதனை எரித்த உப்பைக் கறியுடன் சேர்த்துச் சமைத்து உபயோகித்தால் மேற்கண்ட வாய் விரணம் டனே ஆறிப்போகும்.

## 682. காய் ரசப் பதங்கம்

முற்றினவைகளும் பருமனுனவைகளுமான ஊமத்தங்காய் 10 ஒவ்வொரு காய்க்கும் அது கொள்ளத்தக்க இந்துப்புத்தூள், ஒவ்வொரு காய்க்கும் தூய்மைசெய்த ரசம் ஐந்து வராகன் எடை (17½ கிராம்) கறியுப்பு 1 படி.

**செய்முறை :—** ஊமத்தங்காய்களின் காம்பைச் சக்கரமாக அறுத்து விதையை நீக்கி அதில் இந்துப்புத்தூளை அரைவாசி யிட்டழுத்தி அதில் ஐந்து வராகன் எடை இரசத்தைவிட்டு அதன் மேலும் இந்துப்புத் தூளை போட்டழுத்திச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதம், பத்துக் காய்களையும் சித்தப்படுத்தி வைத்துக் கொள்க. பிறகு, கறியுப்பைத் தூள் செய்து மூன்று பங்காக்கி ஒரு பங்கை அடி கனத்த சட்டியில் போட்டுப் பரப்பி முன் பக்குவப்படுத்தின ஊமத்தங்காய்களை மேற்படி உப்பில் குழித்து வைத்து ஒன்றேடொன்றுபடாமல் சக்கரமாக வைத்து இடுக்குகளில்லாமல் கறியுப்புப் பொடியை மேற்படி ஊமத்தங்காய் வாய்மட்டம் போட்டு மேற்சட்டி மூடிஐந்து சீலை மண் செய்து அடுப்பிலேற்றிக் காடாக்கினியாக நாலு சாமமெரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்னெடுக்க மேல்சட்டியில் பதங்க மேறி இருக்கும் அதைச் செம்மையாகச் சுறண்டி எடுத்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 2 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து :—** மிளகுத்தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்) பசுவின்நெய் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பதங்கத்தை அளவுப்படி சேர்த்து உட் கொள்ள வேண்டும். இன்னும் பனைவெல்லம், வெண்ணெய், நெய் முதலியவைகளிலும் சேர்த்து உட்கொள்ளலாம். நோயின் வலி விற்குத் தகுந்தபடி ஐந்து நாள், ஏழுநாள், ஒன்பது நாள் உப யோகிக்கலாம்.



**தீரும்நோய்கள் :—** கிரந்தி நோய்கள், பதினெட்டுவகை சூலை நோய்கள், எண்பதுவகை வாதநோய்கள், எல்லாவகை வாயு நோய்கள், பக்கவாதம், புண்கள், புரைகள், அரையாப்பு, மேக ஊரல்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம்.

**குறிப்பு :—** இதுவாய்பிடிக்கும் சுபாவமுடையதாகையால் வாய்ப் பிடித்தவுடன் மருந்தை நிறுத்திவிடவேண்டும். வாய் வேக்காடு அதிகமாயிருந்து தொந்தரவாயிருந்தால் கெந்தகப்புளிப்பை தண்ணீரில் போட்டு அந்த தண்ணீரால் வாய் கொப்பளித்து வர, மேற்படி வேகம் தணிந்துபோகும். இவ்வித முரட்டு மருந்துகளை உபயோகித்தல் கூடாதெனச் சிலர் மறுக்கலாம். ஆனுல், எந்தவகை மருந்திலும் தீராத அநேக முரட்டு நோய் களிருக்கின்றன. கடின நோய்களுக்குச் சாந்தமான மருந்துகளை உபயோகித்தால் வைத்தியர்களுக்கும், வைத்தியத்தொழிலுக்கும் ஒரு பழிப்புண்டாகிறது. இரண்டொருநாள் சிறிது சிரமப்படுவது பலநாள் கடினத்தைப் பார்க்கிலும் மிகச்சுலபமானதாகும்.

## 683. நீலகண்ட இரச பதங்கம்

* சாதிலிங்கம் 1, பலம் (35 கிராம்) இது ஒரேக்ட்டியாக இருக்க வேண்டும். இதனை, அப்பிரேகத்தகட்டின் மீது வைத்துக் காற்படி தாய்ப்பாலைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்குக் கொடுத்து எடுத்து வைத்துக் கொள்க.

நெல்லிக்காய்க்கெந்தகம், வெண்காரம், வீரம், மனேசிலை, இரசகற்பூரம், பச்சைக்கற்பூரம், தீபகற்பூரம், துருசு, வெள்ளைப் பாடாணம், கௌரிப்பாடாணம், சீனக்காரம், துத்தநாகம், கரு வங்கம், வெடியுப்பு, உவருப்பு இவை வகைக்குப் ¼ பலம் (8¾ கிராம்).

**செய்முறை:-** வங்கத்தையும் நாகத்தையும் தனித்தனியே உருக்கி மெல்லிய தகடாகச் செய்து சுண்ணத்தூளாகக் கத்தரித்துக் கொள்ள வேண்டும். மற்றசரக்குகளையும் தனித்தனியே பொடித்து ஒன்ருகச் சேர்த்துவைத்துக் கொள்ளவேண்டும். துத்தநாகம், வங்கம் இவ்

---

* இதற்கு பதிலாக தூய்மைசெய்த இரண்டு பலம் லிங்கத்தை உபயோகித்து கொள்ளலாம். ஆனுல் லிங்கத்தை உபயோகப்படுத்துவது அனுபவமுறை.

விரண்டுதூளேயும் கல்வத்திலிட்டுப் சித்திரமூலவேர்ப் பட்டைச் சாற்றை அல்லது, சித்திரமூல இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அவை நன்ருக மசியும்படியாக அரைத்து மற்ற சரக்குகளேயும் சேர்த்து முன் சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து ஈரமில்லாமல் உலர்த்திப் பொடித்து முன் சுருக்குக் கொடுத்த இலிங்கத்தையும் நொறுக்கி இவ்விரண்டையுங் கலந்து தைவேளைச் சாற்றைக் கொஞ்சம் விட்டுப் பிசறிவைத்துக் கொள்க.

அடிகனத்த இரண்டு சட்டிவாங்கி இரண்டும் வாய் பொருதும் படியாகத் தேய்த்து மேற்சட்டிக்குச் சித்திரமூலச்சாற்றைப் பூசிப் பூசி உலர உலர ஏழுதடவை உலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்க.

புத்தோடும் கறியுப்பும் சமனுகச் சேர்த்து மைபோலிடித்துக் கீழ்ச்சட்டியில் முக்கால்வாசி இட்டழுந்தி அதன்மேல் சித்திரமூல வேர்த்தூளே இரண்டங்குல கனம் பரப்பி அதற்குமேல் முன் சித்தப்படுத்தியிருக்கும் மருந்தை வைத்து மேற்சட்டி மூடி, உலர உலரஒன்பது சீலைமண்செய்து அடுப்பேற்றிக் காடாக்கினி இரண்டு சாமம், தீபாக்கினி இரண்டு சாமம், கமலாக்கினி இரண்டுசாமமாக முத்தீயும் ஆறு சாமமெரித்து ஆறவிட்டுக்குளிர ஆறின பின்பு கவசத்தைபிரித்தால் மேற்சட்டியில் பதங்கம் ஏறி நிற்க்கும். அதை சுரண்டி புட்டியில் பத்திரப்படுத்தவும். இப்பதங்கம் கருஞ்சிவப்பாயிருக்கும்,

**அளவு** :— 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து** :— தூய்மைசெய்த சேராங்கொட்டை, தூய்மை செய்த பறங்கிப் பட்டை, பிரப்பங் கிழங்கு இவை வகைக்கு 1 பலம் 35 கிராம்), இவற்றைக் கல்லுரலிலிடித்து மை போலான பின்பு எடுத்து இதற்குச் சமனெடை-பசுவின்னெய்யை விட்டுக் குழைத்துக் குழம்பாக வைத்துக் கொள்க. இக்கூட்டில் 1¼ வராகனெடை, பச்சரிசிமா 1¼ வராகனெடை. இவ்வரண்டையுங் கலந்து மேற்படி பதங்கத்தை அளவுப்படி கலந்துண்ண வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக ஏழு நாள், ஒன்பது நாள் நோயின் வலிவிற்குத் தகுந்தபடி உபயோகிக்க வேண்டும்.

**மருத்துணவு** :—புளி, உப்பு ஆகியவைகளை நீக்கவேண்டும். பதங்கமெரித்த உப்பைப், சேர்த்துக் கொள்ளலாம். வெந்நீரன்னம், பசுவினெய், பசுவின்மோர், பசுவின்பால், அன்னப்பால் ஆகியவைகளேச் சேர்த்துக் கொள்ளவும்.



**தீரும் நோய்கள்** :—மேகவாயுக்கள், பதினெட்டுவகை சூலைகள் கைகால்திமிர், உடல்திமிர், மேகசம்பந்தத்தினுல்காணும் புண்கள் மேகத்தடிப்பு, மேகச்சொறி மேகவிரணங்கள் பதினெட்டுவகை குட்டங்கள், கிரந்திகள், வெள்ளேப் படர்ந்த மேகங்கள், கருப்பு மேகங்கள் முதலிய அனேக நோய்கள் தீரும். இன்னும், பின் காணும் பரங்கிப்பட்டைத் தூளில் கலந்துண்ண முன்கண்ட நோய்களும், பின்காணும் நோய்களும் தீரும்.

**பறங்கிப்பட்டைச்சூரணம்** :—பறங்கிப்பட்டை 10 பலம் இது இலேசானதாயிருக்க வேண்டும். இதனைச்சீவி மேற்ருேலை நீக்கி வைத்துக் கொள்க. இஞ்சிச்சாறு, கற்பூரவள்ளிச்சாறு, கரந்தைச் சாறு, குப்பைமேனிச்சாறு, தைவேளைச்சாறு இவை வகைக்குச் சாறு ½ படி மேற்படி பட்டையை, சிறு துண்டுகளாகச் செய்து மேற்படி சாற்றில் தனித்தனியே போட்டு ஊறவைத்து உலர்த்தி எடுத்துப் பொடித்துக் கொள்க.

மிளகு 10 பலம் (350கிராம்) மூத்திரம், கோமூத்திரம், கையாந்தகரைசாறு, வெள்ளாட்டு நீர், இவை வகைக்கு ½ படி மேற்படி மிளகை ஒரு பாத்திரத்தில்போட்டு மேற்படி திரவகத்தைத் தனித் தனியே விட்டு உலர்த்திப் பொடித்துக் கொள்க.

சித்திரமூல வேர்பட்டைத்தூள், உலர்த்தின சங்கங்காய்த் தூள். உலர்த்தின சங்கம் பட்டைத்தூள், உலர்த்தின வீழிப் பட்டைத்தூள், இவை வகைக்கு 5 பலம் (175 கிராம்).

அதிமதுரம், திப்பிலிமூலம், அக்கிராகாரம், சடாமாஞ்சில், சிறறரத்தை, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், ஓமம், வால்மிளகு, செவ்வியம், சீரகம், கருஞ்சீரகம், மெற்ருேல் சீவின சுக்கு, இவை வகைககு ¼ பலம் (8¾ கிராம்) இவை எல்லாவற்றையும் சேர்த்திடித்துக் கொள்க,

முன்கண்ட மூவகைகளேயும் ஒன்ருகச் சேர்த்து இடித்துத் துணியில் வடிகட்டி புதுக் கலயத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சூரணம் 1½ வராகனெடை, பசுவின்நெய் 1 ½ வராகனெடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி பதங்கத்தைச் சேர்த்துட் கொள்ளவேண்டும். காலை, மாலை இரண்டுவேளையும் உபயோகிக் கலாம்.

**தீரும்நோய்கள்** :—முன் சொல்லிய நோய்கள் தீர்வதுந்தவிர, குன்மம், வாயுக்குத்து, கைகால் பிடிப்பு, முடக்கு. 80 வகை வாத

நோய்கள், கிரந்தி புண், கரப்பான் புண், வண்டுகடி, சில்விடம் நீராமை, லிங்கச்சூலை, அல்குல்புற்று, மகோதரம், ஏழுவகைப் பீனிச நோய்கள், எட்டுவகை காசங்கள், நச்சுநீர், ஆகிய அநேக நோய்கள் தீரும்.

## 684. நீலகண்ட பாலை

உலாந்தா இலிங்கம் 4 பலம் (140 கிராம் (இது ஒரே கட்டியா யிருக்க வேண்டும். இதனை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்து காற்படி தாய்ப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்துச் சுருக்கிட்டு வைத் துக் கொள்க.

துருசு, கௌரிப்பாடாணம், ரசகற்பூரம், ஆலாத்திக் கற்பூரம் பச்சைக்கற்பூரம், மயில் துத்தம், துத்தநாகம், இலவங்கம், வெடியுப்பு சீனக்காரம், வெள்ளைப் பாடாணம, மனோசிலை, பூநீறு, தாளகம் இரசம் இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை ($8\frac{3}{4}$ கிராம்).

நாகத்தையும் வங்கத்தையும் உருக்கி இரசத்தைத் தொந்தித்து மற்ற சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்துக் குகைசெய்து கொள்ளவும்.

அடிகனத்த இரண்டு சட்டி வாங்கித் தேய்த்துச் சந்தில்லாமல் பொருத்தமாகச் செய்து கொள்ளவும். மேற்சட்டிற்குச் சித்திர மூலச்சாற்றை உலர உலர ஏழுதரம் பூசி உலர்த்திக் கொள்ள வும். கீழ்ச்சட்டியில் கறியுப்பு $\frac{3}{4}$ படி, செங்கற்பொடி $\frac{3}{4}$படி, இவ் விரண்டையுங் கலந்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை மேற்படி சட்டியிலிட்டமுத்தி அதன் மேல் சித்திரமூல வேர்பட்டைப் பொடி 2 பலம் (70 கிராாம்), போட்டு அதன்மேல் மேற்படி குகையை வைத்துக் குகையில் முன் சுருக்குக் கொடுத்த இலிங்கத்தை வைத்து குகை நிறைய நல்லவேளைச்சாற்றை விட்டு மேலும் முன்போல் சித்திரமூல வேர்ப்பட்டைப் பொடியையும் உப்புச் செங்கற்பொடி யையும் போட்டு மேற்சட்டி மூடிச் சந்துவாய்க்குப் புற்றுமண்ணை றைத்து ஏழுசீலைமண் செய்துலர்த்தி வட்டடுப்பில் வைத்துக் காடாக்கினியாக நான்கு சாமமும் தீபாக்கினியாக இரண்டு சாமமும் கமலாக்கினியாக இரண்டு சாமமும் ஆக எட்டு சாமமெரித்து ஆற விட்டுக் கவசத்தைப் பிரித்து மேற்சட்டியிலிருக்கிற பதங்கத்தை எடுத்து வைத்துக் கொள்க.

**அளவு :**—1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை,



**துணைமருந்து :**— மேற்கண்டவைகளேயாம். நோயின் வலி விற்குத் தகுந்தபடி 5 வேளை, 7 வேளைக்கதிகம் கொடுக்க லாகாது.

**தீரும்நோய்கள் :**—எண்பத்து நான்குவகை வாத நோய்கள், வாயுக்கள், மேகவாயு, சூலைக்கட்டு, குன்மம், பக்கவாதம், பாரிச வாயு, உருத்திரவாயு, மூர்ச்சை சுவாசகாசம், ஊளைமாந்தை, பீனிச வகைகள், நெஞ்சுநோவு, வயிற்றுநோவு, உதர சம்மந்தநோய்கள் பீனிசவகைகள் ஆகியவை தீரும்.

**குறிப்பு :**— இந்த மருந்தினால் நோய்கள் சீக்கிரத்தில் குணமா கின்றன. இது மகா வேகமுடையதாகையால் அதிக சாக்கிரதை யுடனும், புத்திசாதுரியத்துடனும், உபயோகிக்க வேண்டும். இல்லாவிட்டால் வாய் வேக்காடு முதலிய தொந்தரவுகளுண் டாகும்,

## 685. பிரசண்டபாலை

தூய்மைசெய்த இரசம் வராகனெடை 30 (105 கிராம்) தூய்மை செய்த வெள்ளைப் பாடாணம் 30 வராகனெடை (105 கிராம்) இவ் விரண்டையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து வெய் யிலிலுலர்த்திப் பொடித்து வைத்துக் கொள்க.

கறியுப்பு 1 படி இதனைக் கல்வத்திலிட்டு நைவேளைச்சாற்றை சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வெய்யிலில் உலர்த்தி இரண்டு பாகமாகச் செய்து வைத்துக் கொள்க.

அடிகனத்த இரண்டு பானைகளை வாய் பொருந்தும்படியாகத் தேய்த்துக் கீழ்ப்பானையில் மேற்படி உப்பின் ஒரு பாகத்தைப் போட்டு அதன் மேல் முன்மருந்தைத் தூவி அதன் மேல் உப்பின் மறுபாகத்தைப் போட்டு மேற்பானை மூடி ஏழுசீலைமண் செய்து லர்த்தி வட்டடுப்பில் வைத்துப் பன்னிரண்டு சாமநேரம் காடாக் கினியாக எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்தெடுத்தால் மேற்பானையில் பதங்கம் ஏறிநிற்கும். சுரண்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :**—சுக்குத்தூள், சீனிச்சர்க்கரை, வெல்லம், நெய் தேன், இன்னும் சமயோசிதம் போல் தக்க துணைமருந்துகளில் உப யோகிக்கலாம்.

**குறிப்பு:**—மேற்கண்ட பதங்கங்களில் இது மிக உத்தமமானது இதனை நான்கு பத்து இருபது நாள் வரையில் உபயோகிக்கலாம். வாய்ப்பிடிக்காமலும், சாந்தமாகவும் நோய்களைக் கண்டிக்கும்.

**தீரும்நோய்கள் :**— பதினெட்டுவகை சூலைக்கட்டு, எண்பது வகை வாதம், வாயுகள், எட்டு வகைக் குன்மநோய்கள். கப நோய்கள், சுரநோய்கள் தீராத வெட்டை நோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு :**—உடல் நிலைமை, நோய் வலிவு, ஆகியவைகளுக்குத் தகுந்தது போல பத்தியம் ஏற்படுத்தவும்.

## 686. பூரணபாலை

தூய்மைசெய்த இரசம், நெல்லிக்காய் கெந்தகம், சாதிலிங்கம் இவை வகைக்கு 10 வராகனெடை (35 கிராம்) இவற்றைக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் தனியே வைத்துக் கொள்க,

மேற்ரேல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி வெந்தயம் வகைக்கு 5 விராகனெடை (17½ கிராம்). இந்த நான்கு சரக்குகளையும் அம்மியில் வைத்துப் பொடித்து ஊமத்தன் இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் பொரலதைத்துக் குகை செய்து வெய்யிலிற் காயவைத்துக் கொள்க.

அடிகனத்த இரண்டு பானைகளைச் சந்தில்லாமல் தேய்த்து உப்பை வறுத்துப் பொடித்தத்தூள் ¾ படி. இதனை இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை கீழ்ப்பானையிற் போட்டு அதனடுவில் முன் அரைத்தமருந்தை மேற்படி குகைக்குள் போட்டு வைத்து அதன் மேல் உப்பின் மறுபாகத்தைப் போட்டு மேற்பானை மூடி எழுசீலை மண் செய்துலர்த்தி வட்டடுப்பில் வைத்துக் காடாங்கினியாகப் பத்து சாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு எடுக்க மேற்சட்டியிற் பதங்கமிருக்கும். இதனைச்சுரண்டி புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :**—முன் முறையில் சொன்னவைகளேயாம்.

**தீரும்நோய்கள் :**—மேற்கண்ட நோய்களும் இன்னும் அநேக நோய்களும் தீரும். அனுபோகசாலிகள் சமயோசிதம் போல் உபயோகித்துக் கொள்வார்கள்.



## 687. சூதசிலைப் பதங்கம்

இரசம் 4 பலம் (140 கிராம், ஒட்டடைத்தூள் ¼ பலம் (8¾கிராம்) கல்லுப்பு ¼ பலம் (8¾ கிராம்) செங்கல் தூள் ¼ பலம் (8¾ கிராம்) இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு ஒரு சமாமரைத்து ஒரு தோண்டியிலிட்டு மேல் தோண்டி பொருத்தி ஏழுசீலை செய்து உலர்த்தி அடுப்பில் வைத்து நான்குசாமம் எரித்து ஆறவிட்டு மேல் தோண்டியிலிருக்கிற இரசத்தைக் சுறண்டி எடுத்துக் கொள்ளவும்.

பவளக்கால் மனோசிலை 4 பலம் (140 கிராம்) இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொள்க. ஒரு சட்டியில் 4 பலம் தூள் செய்த காரியத்தை போட்டு எரித்து உருக்குமுகத்தில் முன் மனோசிலைப் பொடியைப் போட்டு மேற்சட்டிமூடி உளுந்துமாவதால் ஏழுசிலை செய்து ஒரு சாம நேரம் எரிக்கவும். ஆறின பின்பு கவசத்தைப் பிரித்தெடுக்க மேற்சட்டியிற் பதங்கமேறியிருக்கும்.

இந்தப்பதங்கம் 1 பலம் (35 கிராம்) முன் எரித்தெடுத்த இரசம் 4 பலம் (140 கிராம்). இவ்விரண்டையும் சேர்த்துத் தனியே வைத்துக் கொள்க.

கல்லுப்பு 4 பலம் (140 கிராம்) செங்கல்மா 1 படி, இவ்விரண்டையும் சட்டியிலிட்டு வறுத்து எடுத்து அரைத்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை வேறொரு சட்டியிலிட்டழுத்தி நடுவில் குழித்து முன் இரசத்தையும் மனோசிலையையும் அதில்சேர்த்து அதன் மேலும் மறுபாகப் பொடியைப் போட்டு மேல்சட்டி மூடி உளுந்துச் சீலை செய்துலர்த்தி வட்டடுப்பில் வைத்துக் கமலாக்கினியாக நூறு நாழிகை எரித்து ஆறவிட்டுக் கவசத்தைம்பிரித்து மேற்சட்டியிலிருக்கிற பதங்கத்தைச் சுறண்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :**—தேன் முதலியவைகளாம், மூன்று நாள் ஆறு வேளை உபயோகித்தல் போதுமானது.

**தீரும்நோய்கள் :**—சயகாசம், பித்தகாசம், வாதகாசம், மந்த காசகாசம், பீனிசகாசம் முதலிய சிலேத்துமம் தொண்ணூற்றுறும் தீரும்.

**மருந்துணவு :**— புளி, உப்பு, எருமைமோர் இவை ஆகா. பசுவின்பாற் கஞ்சி இந்த மூன்று நாளும் குடிக்க வேண்டும், மற்ரெென்றுமாகாது.

## 688. சண்டரச சுண்ணம்

**இந்த முறைக்காக [வேண்டிய சங்கதிராவகம் :**—படிகாரம் பொரித்தது 8 பலம் (280 கிராம்) வெடியுப்பு 13பலம் (560கிராம்) இவ்விரண்டையுங் கலந்து புட்டியில் திராவகமிறக்கி கொள்ள வேண்டும். இவ்விதமே இன்னொரு முறை மடக்கி திராவகமிறக்கிக் கொண்டால் மிகவும் காரமாகவும் குணம் சீக்கிரம் செய்யத் தக்கதாகவுமிருக்கும். இதற்கும் சங்க திராவக மென்று பெயர்.

இந்த சங்கதிராவகம் 3 பலம் (105 கிராம்) இதனைக்கல்காரக்குள்ள ஒரு புட்டியில் விட்டு அதில் தூய்மைசெய்த ஒரு பலம் இரசத்தை விட்டுக் கற்காரக்கால்மூடி ஈரத்துணியைச் சுற்றிவைத்து வரவேண்டும. இரண்டு மூன்று நாளைக்குள் இரசமானது பொரிந்து வெண்ணிரமான சுண்ணமாகி யிருக்கும், அப்படியாகாமல் ஏதேனும் இரசமிகுந்து நின்ருல், சுண்ணமானதைத் தனியே எடுத்துக் கொண்டு அந்த இரசத்தில் இன்னும் கொஞ்சம் திராவகம் விட்டு முன்போல் வைத்தால் எல்லாம் சுண்ணமாகிவிடும். எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்திக்) கொள்ளவும்.

**அளவு :**— $\frac{1}{2}$ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து :**—மிளகுத்தூள், சுக்குத்தூள், பனை வெல்லம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:**—அண்டவாதம், விரைவாதம், அந்தரவாயு, குத்தல்,குடைச்சல், வீக்கம் இசிவு, சுரம் முதலிய நோய்கள் தீரும். இன்னும் பக்கசூலை, குன்மவாயு, சூலைக்கட்டு நோய்கள் முதலியவைகளும் தீர்ந்துள்ளன.

**மருந்துணவு :**—மேற்படி பதங்கங்களிற் சொல்லப் பட்டவைகளேயாம்.

மேற்கண்ட சங்கதிராவகம் சண்டரச பற்பத்திற்குமாகும். மேற்படி திராவகத்தை தகுந்த துணைமருந்துகளில் மூன்று ஐந்து துளிகள் கொடுத்துவர நீர்க்கட்டு மகோதரம், குன்மவலி, வயிற்றுவலி முதலிய நோய்கள் தீரும்.



இன்னும், மேற்படி திராவகத்திற்குப் பதிலாக பொரித்த படிக்காரம் 4 பலம் (140 கிராம்) வெடியுப்பு 8 பலம் (280 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து முன்பாகத்தைப் போல திராவகமிறக்கியும் உபயோகிக்கலாம்.

இன்னும், பச்சைப்படிக்காரம் 8 பலம் (280 கிராம்) வெடியுப்பு 12 பலம் (420 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து திராவகமிறக்கி முன்பாகத்திற்கு உபயோகிக்கலாம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல், அப்படி உபயோகப்படுத்துவதைப் பார்க்கிலும் மதுமேகம் மார்நோவு, நீர்க்கட்டு, மகோதரம், குன்மம் ஆகிய நோய்களுக்கு உபயோகித்து அதிக குணம் காணப்பட்டிருக்கின்றன. ஆகையால், முன்பாகத்தில் உபயோகப்படுத்துவதைக் காட்டிலும் தனியாக உபயோகப்படுத்துவது நலம்.

## 689. குரு பற்பம்

நெறிவிஷம், சாதிலிங்கம். நெல்லிக்காய்கெந்தகம், கருநாபி மேற்ரேல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, காந்தம், இவை எட்டும் வகைக்கு $3\frac{1}{2}$ வராகனெடை இவை எல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து ஊமத்தன் இலைச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்து குகைபண்ணி உலர்த்தி அந்தக் குகையில் தூய்மைசெய்த ஒரு பலம் இரசத்தை விட்டு வைத்துக் கொள்க.

அடிகனத்த இரண்டு சட்டி வாங்கி வாய் பொருந்தும்படியாக இரண்டையும் தேய்த்து அடிசட்டியில் நான்கு விராகனன் இடித்த, உப்பைப் போட்டுப் பரப்பி அதனடுவே மேற்படி குகையை வைத்து மேற்சட்டி மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி ஒரு சாதி விரகால் அறுபது நாழிகை கமலாக்கினி, காடாக்கினி ஆக முறையே எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு கவசத்தைப் பிரித்து ஏறி நிற்கிற பதங்கத்தைச் சுரண்டி எடுத்த புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :**— மிளகுத்தூள், சீனிசர்க்கரை, பனைவெல்லம் முதலியவைகளாம்.

இந்த மருந்தைக் காலை, மாலை இரண்டு வேளையுமாக ஆறு வேளையும் உபயோகிக்கலாம் அல்லது காலையில் மாத்திரம் ஒவ்

வொரு வேளையாக ஆறுநாள் உபயோகிக்கலாம். உடல் நிலைமை யையும், நோயின் வலிவையும் தெரிந்து சமயோகிதம் போல் உப யோகிக்க வேண்டும்.

**தீரும்நோய்கள் :—** குடல்வாதம், அண்டசூலை, மூலவாயு, கவுசை, பீலிகை, குட்டம், கிரந்தி, சூலை, கடிநஞ்சு, சன்னி, சயித்தியம், சுவாசகாசம், அரையாப்பு முதலிய பல நோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** உப்பு, புளி, புகை முதலியவைகளை நீக்கி பாலன்னம், பாற்கஞ்சி ஆகியவைகளை உபயோகிக்க வேண்டியது. எத்தனைநாள் மருந்து சாப்பிடுகிறார்களோ அத்தனை நாள் மறு பத்தியமுங்காத்து மறுநாள் விளக்கெண்ணெய் தேய்த்து தலைமுழு கச் செய்து பிறகு உப்பைச் சேர்க்கவேண்டியது.

## 690. மகத இரசபற்பம்

வாய்பொருந்தும் படியான அல்லது மரையுள்ள இரண்டு இரும்புக் கிண்ணங்களைச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும் எட்டுப் பலம் கொள்ளும்படியானதாய் யிருக்க வேண்டும் ஆட்டுத்தலை மூளை 8 பலம்(280 கிராம்) தூய்மைசெய்த இரசம் 2பலம் (70 கிராம்) மேற்படி மூளையை இரண்டு பாகமாகச் செய்து ஒரு கிண்ணத்தில் வைத்தழுத்தி அதனடுவில் பள்ளஞ் செய்து மேற்படி இரசத்தைவிட்டு மறு நாலு பலம் மூளையை வைத்தழுத்தி மறு கிண்ணத்தை மூடி வலுவாக ஏழு சீலை மண் செய்து உலர்த்திப் பத்து பலமுள்ள ஐம்பது வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின்பு எடுக்கவும். இரசமானது வைத்த எடை குறையாமல் வெண்ணிரமான பற்பமாயிருக்கும். இதனை வெள்ளைப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 அரிசி எடை,

**துணைமருந்து :—** மிளகுத்தூள், பனைவெல்லம், தேன், நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** மேகநோய்கள், கிரந்திநோய்கள், குன்ம நோய்கள், சூலைநோய்கள், புண்புரைகள், முதலிய அநேக நோய் கள் தீரும். தாதுவிருத்தி, உடல்வலிமைவிருத்தி, உற்சாகம் வீரியம் முதலியவைகளுண்டாகும்.

**மருத்துணவு :—** நோய் பலமாயிருந்தால் உப்பு, புளி முதலிய வைகளை நீக்க வேண்டும். நோய் இலகுவாயிருந்தால் இலகு பத்தியமாக உபயோகிக்கலாம்.



## 691. இரச செந்தூரம்

**தூய்மைசெய்த இரசம் 1 பலம் (35 கிராம்) தூய்மை செய்த நெல்லிக்காய்க்கெந்தகம் 1 பலம் (35 கிராம்) எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.**

**செய்முறை :—**மேற்படி இரண்டு சரக்கையும் கல்வத்திலிட் டரைத்து நன்ருகக் கருத்தப்பின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து உலர்த்திப் பொடித்து முட்டையோட்டிலிட்டு மேலும் முட்டையோட்டால் மூடி அதன் முழுவதும் பதினேரு சீலைமண் செய்து கொஞ்சமும் ஈரமில் லாமல் உலர்த்தி வைத்துக் கொள்க. ஒரு சட்டியில் நாலங்குலம் மணலைப் பரப்பி அதில் குழி செய்து புதுச் செங்கற் பொடியைப் போட்டு ஒரு முட்டையை வைக்க வேண்டும். இவ்விதமே முன் சித்தப்படுத்தின முட்டைகளை யெல்லாம் மணலுக்குள் குழிசெய்து செங்கற் பொடியை போட்டு அதனடுவில் வைக்க வேண்டும், கவசமானது ஒன்ருேடொன்று படாமல் விலகியிருக்க வேண்டும். இவ்விதம் எல்லா முட்டைகளையும் வைத்தபின்பு ஒவ்வொரு முட் டையும் செம்மையாக மறையும்படியாக செங்கற் பொடியை போட் டமுத்தி அதன் மீது மணலைக் கொட்டி மேற்சட்டி மூடி ஏழு சீலை மண் செய்துலர்த்தி அடுப்பேற்றிக் கமலாக்கினியாக நாற்பது நாழிகை எரிக்க வேண்டும். இந்த சமயத்தில் மேற்சட்டத்தின் மீது மூன்று நெற்களைப் போட்டால் அது உடனே பொரியும். அதுவே பத மெனத் தெரிந்து நிறுத்திவிட வேண்டும். குளிர ஆரின பின்பு கவசங்களை கவனமாக பிரித்துப் பார்த்தால் சிவந்து செந்தூரமாகி இருக்கும். பாகபேதத்தில் சில சமயங்களில் கறுப்பு வண்ணமாகி இருக்கும். எந்தவிதமிருந்தாலும் குணம் செய்வதில் தடையில்லை. ஆனால், சிவந்திருப்பதுதான் சிறப்புடையது, இது செய்பவர்களின் புத்தி கூர்மைக்குத் தகுந்தது போலிருக்கும்.

**அளவு :—**1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து :—**நெய், தேன், மிளகுத்தூள், சுக்குத் தூள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** வாதநோய்கள், வாயுநோய்கள், சுரங்கள் முதிலியவைகளாம்.

**மருத்துணவு :—**இச்சாபத்தியம்.

## 692. பாலரச செந்தூரம்

வாலை இரசம் 8 பலம் (280 கிராம்) தூய்மை செய்த நெல்லிக்காய் கெந்தகம் 2 பலம் (70 கிராம்) தூய்மை செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) கருத்துளசிச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—இரசத்தையும். கெந்தகத்தையும்,: சேர்த்தரைத்துச் செம்மையாக கறுத்த பின்பு தாளகத்தை தனியேப் பொடித்து அதிற்சேர்த்து ஒரு மணி நேரமரைத்து மூன்றும் செம்மையாக கலந்த பின்பு கருந்துளசிச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு எட்டுச் சாமமரைத்து உலர்த்திப் பொடித்து ஏழுசீலை மண் செய்துலர்த்தின காசிக்குப்பியில் அரைவாசி அடைத்து ஒரு பானையில் நாலங்குலம மணலைப் போட்டு அதன் மீது மேற்படி புட்டியை வைத்து, புட்டி வாய்மட்டம மணலைக் கொட்டி மேற்சட்டி மூடி சீலை மண் செய்து எரிந்து மஞ்சற் புகையுண்டாகி அது அடங்கின பின், கல்காரக் கிட்டு தீபாக்கினியாக ஒரு சாமமும் கமலாக்கினியாக இரண்டு சாமமும், காடாக்கினியாக நான்கு சாமமும் எரித்துச் சிலாகைப் பதங் கண்டு ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு குப்பியைத் தண்ணீரில் நனைத்து உடைத்தால் முருக்கம் பூப்போல செந்தூரமாகியிருக்கும். இதனைப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :**—தேன், நெய், மிளகுத்தூள், சுக்குத்தூள் இஞ்சிச்சுரசம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :** — வாத நோய்கள், வாயு நோய்கள், குன்ம நோய்கள், சயநோய்கள், இருமல், வாதம். பித்தம், கபம் ஆகிய முக்குற்றத்தால் வரப்பட்ட நோய்கள் எல்லாம் தீரும்.

**மருத்துணவு :**— சமயோசிதம் போல ஏற்படுத்தவும்.

## 693. மகா பாலரச செந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 8 பலம் (280 கிராம்) கெந்தகம் 4 பலம் (140 கிராம்) தூய்மைசெய்த தாளகம் 2 பலம் (70 கிராம்) சிவகரந்தைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—கெந்தகத்தைச் சட்டியிலிட்டு உருக்கி உருகினவுடன் அதில் இரசத்தை விட்டு இரண்டும் சேரும்படியாகக் கிளறிச் செம்மையாகச் சேர்த்த பின்பு கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சிவகரந்தைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்துக் கைவிடாமல் நான்கு சாமநேரமரைத்து வெயிற் காயவைத்துப் பொடித்து ஏழு சீலைமண் செய்துளர்த்தின கெசிக் குப்பியில் போட்டு வாய்க்கு மாக்கல் லடைத்து அதற்கும் சீலை செய் நுலர்த்தி அடிகனத்த ஒரு பானையில் மூன்று விரற்கனம் மணலைக் கொட்டி அதனடுவில் முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துச் குப்பி மறையும்படியாக மணலைக் கொட்டி மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்து லர்த்தி வட்டடுப்பிலேற்றி ஆரம்பத்தில் தீபாக்கினியாக இரண்டு சாமம், கமலாக்கினியாக இரண்டு சாமமும், ஆக எட்டு சாமமும் எரித்து ஆறவிட்டுக் குளிற ஆறினபின் எடுத்துப் புட்டியைத் தண்ணீரில் தோய்த்துப் பிறகு உடைத்துக் கவனத்துடன் எடுக்க முருக்கம் பூ போன்ற செந்தூரமாயிருக்கும். இதனைப் பொடித்துப் புட்டியிற் பத்திரப்படுத்தவும்.



**அளவு :**—1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :**—மிளகுத்தூள், தேன், நெய், வெண்ணெய், வில்வாதி இளகம் கூழ்பாண்ட இளகம் முதலிய அநேக நோய்களுக்கு துணைமருந்துகளாகும்.

**தீரும்நோய்கள் :**— மேகநோய்கள், சூலைகள், கிராணிகள் முதலிய அநேக நோய்கள் தீரும். இரத்தம் தூய்மையாகி உடல் வலிவு, மனவூக்கம், தைரியம் முதலியவைகளுண்டாகும்.

**மருத்துணவு :**— இச்சாபத்தியம், நோய் வலிவாகயிருந்தால் சமயோசிதம்போல் பத்தியமும் ஏற்படுத்தலாம். பத்தியம் ஏற்படுத்துவதும், ஏற்படுத்தாமலிருப்பதும் மருத்துவர்களின் புத்தி, யுத்தியைப் பொருத்ததாம்.

## 694. வீரரச செந்தூரம்

வீரம், தண்டவாள அரப்பொடி இவ்விரண்டும் சமனெடை இவற்றைக் கல்வத்திலரைக்க இரசம் வெளியாகிவிடும். இதுவே வீரரசமாம்.

வெடியுப்பு 7 பலம் (245 கிராம்) சீனக்காரம் 7 பலம் (245 கிராம்) கல்லுப்பு 2 பலம் (70 கிராம்) பொடித்துப் புட்டியில் பாகப்படி திராவகமிறக்கிக் கொள்ளவும். இது சுமார் மூன்று பலமிருக்கும்.

இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு மேற்படி ஒரு பலம் வீரரசத்தை அதில் விட்டு வெய்யிலில் வைக்க வெண்ணிரமாகப் பூத்துப்போம்.

அந்தப் பீங்கானுக்கு மேற்பீங்கான் மூடி ஏழு சீலைமண் செய்து லர்த்தி சட்டியில் நாலங்குலம் மணலைப் பரப்பி அதன் மேல் முன் சித்தப்படுத்தின பீங்கானை வைத்து பீங்கான் மறையும் படியாக மணலைக் கொட்டி மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றி மூன்று சாமம் காடாக்கினியாக எரித்து ஒரு நாள் ஆறவிட்டு மறு நாளெடுக்க முருக்கம் பூ போன்ற செந்தூரமாகி இருக்கும்.

இதனைச் செந்தூரமாக்க எரிக்கும்போது சீமை கரிசலாங் கண்ணிச் சாற்றை மேற்படி இரசபற்பம் மறையும்படி விட்டு மேற் பீங்கான் மூடி முன்போல் எரித்துச் செந்தூரமாகவும் செய்துக் கொள்ளலாம்.

**அளவு :—** 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :—** மிளகுத்தூள், பசுவின்நெய், தேன், வில்வாதி இளகம், பறங்கிப்பட்டை இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—**மேகரணங்கள், சூலைகள், மேகப்பிடிப்பு, கை கால் பிடிப்பு, சூலைநோய், குன்மநோய், கிரந்திநோய், அழிபுண் குழிப்புண் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** நோய்வலிவாயிருந்தால் உப்பு, புளியைத் தள்ளி வைக்கவும். பாற்கஞ்சி, பாற்பாயாசம் முதலியவைகள் ஆகும். நோய் இலகுவாயிருந்தால் இச்சாபத்தியத்துடன் உப யோகிக்கலாம். இன்னும் சமயோகிதம் போலவும் பத்தியமேற் படுத்தலாம்.

**குறிப்பு :-** இது வேகமான செந்தூரமாகையால் வாய்பிடிக்கும் குணமுடையது. இதனைக் கீழ்க்கண்டபடி பாகப்படுத்தி உபயோ கித்தால் வாய்பிடிக்காமல் சாந்தமாக நோய்களைத் தீர்க்கும் அவை பின்வருகிற விதமாம் :—

1. இந்தச் செந்தூரத்தைக் கல்வத்திற் போட்டு நீரை விட் டரைத்துக் கல்வம் நிறைய நீரை விட்டுக் கலக்கிப் பன்னிரண்டுமணி நேரம் வைத்திருந்து தெளிவை இறுத்துவிடவேண்டும். பிறகு, முன் போல நீரை விட்டரைத்து முன்போல நீரைவிட்டுக் கலக்கி முன் போல தெளிய வைத்து இறுத்துவிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுதடவைகள் செய்துலர்த்தி, மேற்கண்டபடி உபயோகித் தால் வாய் பிடிக்காது, இரச வேகமிராது.



2. விடத்தரை வேர்ப்பட்டை 10 பங்கு, மேற்படி இரசசெந் தூரம் 1 பங்கு, இவ்விரண்டையும் சேர்த்தரைத்து மைபோலான பின்பு தேனைவிட்டு மறுபடியுமரைத்து மிளகளவு மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்க. இதனைக் காலை, மாலை உபயோகித்து வருவதினால் மேற்கண்ட நோய்கள் தீரும் வாய்பிடிக்காது. இளமை உடலினர்கள் முதலான எல்லோருக்கும் உபயோகிக்க லாம்.

இவ்விதமே வாய்பிடிக்கும் எந்த செந்தூரத்தையும் பக்குவப் படுத்தி உபயோகிப்பதனால் வாய்பிடிக்காமல் சாந்தமாக நோய் களைத் தீர்க்கும்.

## 695. சர்வநோய் அரிரச செந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 6 பலம் (210 கிராம்) தூய்மைசெய்த கெந்தகம் 6 பலம் (210 கிராம்) தூய்மைசெய்த உலாந்தாலிங்கம் 1½ பலம் (52½ கிராம்) தூய்மை செய்த அரிதாரம் 8 வராகனெடை (280 கிராம்) தூய்மைசெய்த மனோசிலை 2½ வராகனெடை (8¾ கிராம் எருக்கம்பால், பூவரசம் பட்டைச்சாறு, தும்பை இலைச் சாறு, சிறு செருப்படிச் சாறு, செம்முள்ளி இலைச் சாறு, மாதளையிலைச் சாறு, மாதளம் பூச்சாறு, முருங்கைப் பூச்சாறு இவை வகைக்குச் செல்லத் தக்க அளவு.

**செய்முறை :—**இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்முகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித் துச் சேர்த்து மேற்கண்ட சாறுகளில் ஒவ்வொன்றினாலும் ஒவ்வொரு சாமமரைக்க வேண்டும். எப்படியெனில், ஒருவகைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து அந்த ஈரம் உலரும் படியாக வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்தபின்பு, வேறுவகைச் சாற்றை விட்டு அரைக்க வேண்டுமென்பதே. இவ்விதம், முறையே எட்டுவகைச் சாற்றினாலும் அரைத்து முடிவாக வெய்யிலிலுலர்த்திப் பொடித்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின குப்பியில் அரைவாசி இருக்கும்படியாகப் போட்டு அடிகனத்த சட்டியில் நான்கு விரற் கனம் மணலைக் கொட்டி முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் குப்பிக் கழுத்துவரையில் மணலைக் கொட்டி அடுப்பேற்றிக் கமலாக் கினியாக இருபத்து நான்கு சாமம் எரிக்க வேண்டும் எரிக்கும் போது மருந்துகள் மேலேறிக் குப்பி வாயை கட்டிக் கொள்ளுமாகை யால், சிலாகையை அடிக்கடிவிட்டு வாய்கட்டாமல் கிளறி கொடுத்து வரவும் வேண்டும். மேற்கண்ட விதமாக இருபத்து நான்கு சாமம் எரித்து ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் எடுக்க, முருக்கம்பூ போன்ற

செந்தூரமாகியிருக்கும். குப்பியை யெடுத்து தண்ணீரில் நனைத்து, உடைத்து விழிப்புடன் செந்தூரத்தை எடுத்துப் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :**— மிளகுத்தூள், பறங்கிப் பட்டைத்தூள், பசுவின்நெய். தேன், வில்வாதி இலேகியம் முதலிய நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளாம்.

**தீரும்நோய்கள் :**— எண்பது வகை வாத நோய்கள். நாற்பது வகைப் பித்த நோய்கள், தொண்ணூற்ருறு வகை சிலேத்தும நோய்கள், சன்னி, சுரம், சயித்தியம், மேக நோய்கள், சூலை நோய்கள், குன்ம நோய்கள் புண்புரைகள், முதலிய அநேக நோய்கள் தீரும். பிரபலமான மருத்துவர்களுக்கு இந்த ஒரு மருந்திருந்தால் போதுமானது.

**மருத்துணவு :**— நோயின் வலிவு, உடல் வலிவு முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்த வேண்டும்.

## 696. சர்வநோய்ஹர ரசசெந்தூரம்

தூய்மைசெய்த இரசம்; தூய்மைசெய்த மனோசிலை, தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், தூய்மைசெய்த தாளகம், தூய்மை செய்த நவாச்சாரம், கீழ்க்கண்ட பாகப்படி சித்தப்படுத்தின காரீய பற்பம், இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) எருக்கம் வேர்க் குடிநீர், கொடிவெலி வேர்பட்டைக் குடிநீர், வெள்ளட் குடிநீர், மஞ்சட்கடுக்காய்த் தோல் குடிநீர், தான்றிக்காய்த் தோல் குடிநீர், நெல்லிமுள்ளிக் குடிநீர், இஞ்சிச்சாறு, வெற்றிலைச் சாறு, இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து சேர்த்து மேற்கண்ட குடிநீர் வகைகளினுல் தனித் தனியே ஒவ்வொரு நாள் அரைக்க வேண்டும், ஒருவகை குடிநீர்ச் சிறுகச் சிறுக வார்த்து ஒருநாள் குழுவதும் அரைத்து மறுநாள் ஈரமில்லாமல் உலர்த்தி மறுநாள் வேறுவகைக் குடிநீரை விட்டரைக்க வேண்டும். இவ்விதமே ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு நாள்



அரைத்து ஒவ்வொருநாளும் உலர்த்தி முடிவாக நன்ருயுலர்த்தி பொடி செய்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின காசிக்குப்பியில் அரைவாசி போட்டு ஒரு அடிகனத்தசட்டியில் காலங்குலம் மணலைப் பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் குப்பியின் கழுத்துமட்டும் மணலைக்கொட்டி அடுப்பேற்றி பதினுறு சாமம் கமலாக்கினியாக எரிக்க வேண்டும். எரிக்கும்போது குப்பிவாயில் மருந்து வந்து கட்டிக்கொள்ளுமாகையால், அடிக்கடி சலாகையைப் போட்டுக் கிளறிக் கொடுத்துவரவும் வேண்டும். இவ்விதம், பதினுறு சாமம் எரித்து ஒரு நாள் ஆறவிட்டு மறுநாள் எடுத்துப் புட்டியைத் தண்ணீரில் நனைத்து உடைத்துக் கவனத்துடன் செந்தூரத்தை எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :**— ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து, தீரும்நோய்கள், மருத்துணவு:**— மேற்கண்டவைகளேயாம்.

**காரீய பற்பம் :**— தேவையான அளவு காரீயத்தை உருக்கி, உருக்குமுகத்தில் பசரையிலையைப் போட்டு வறுத்து வரவேண்டும்; செம்மையாகப் பற்பமாகிற வரையில் மேற்படி இலையைப் போட்டு வறுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பற்பத்தை மேற்படி பாகத்தில் சேர்த்துக் கொள்ளவும்.

**குடிநீர்:** மேற்படி பட்டை 5 பலம் (175 கிராம்), தண்ணீர் 1 படி, இந்தக்கணக்கின்படி விட்டுஎட்டிலொரு பாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டித் திப்பிநீக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதமே ஒவ்வொரு வகைகளையும் குடிநீராகச் செய்து முன்கண்டபடி அரைத்துக் கொள்ள வேண்டும்.

## 697. காளகண்ட செந்தூரம்

தூய்மைசெய்த இரசம், தூய்மைசெய்த கெந்தகம், தூய்மை செய்த அரிதாரம், தூய்மை செய்த இலிங்கம், தூய்மைசெய்த மனோசிலை, தூய்மைசெய்த சீனக்காரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்); எலுமிச்சம்பழச் சாறு, குப்பைமேனிச்சாறு, செம்பரத்தம் பூச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்துச் செம்மையாகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே

பொடித்துச் சேர்த்து அரைத்து முன்வகைச் சாறுகளில் தனித்தனி மும்மூன்று சாமம் அரைக்க வேண்டும். ஒருவகை சாற்றில் மூன்று சாமம் அரைத்து வெய்யிலில் உலரவைத்து மறுவகைச் சாற்றை விட்டு அரைக்க வேண்டும். இவ்விதம், மூன்றுவகைச் சாற்றையும் முறையே மும்மூன்று சாமம் விட்டு அரைத்துத் தம்பிடி அகலமுள்ள சிறு வில்லைகளாகச் செய்து வெய்யிலிலுலர்த்தி ஒரு சட்டிக்குள் வைத்து அதன்மேல் தாம்பிர கிண்ணத்தால் மூடிச் சந்தில்லாமல் சீலைசெய்துக் கிண்ணத்தின்மீது மணலைக் கொட்டி மூன்று சாமம் எரிக்க வேண்டும். மணலானது கிண்ணத்தின் மீது நாலங்குலத் திற்குக் குறையாமலிருக்க வேண்டும். இவ்விதம், மேற்கண்டபடி எரித்து ஒருநாள் ஆற்விட்டு எடுத்தால் எல்லா வில்லைகளும் சிவந்து செந்தூரமாகியிருக்கும். இதனைப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :**—மிளகுத்தூள், பறங்கிப்பட்டைத் தூள், நெய், தேன் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :**— சுரம், சயித்தியம், சன்னி, சூலைக்கட்டு, பக்க வாதம், கைகால் முடக்கு, சுவாசம், ஈளை முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு:**—சமயோசிதம் போலவும், உடல்வலிமை, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போலவும் பத்தியம் ஏற் படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாகும்.

## 698. நவச்சார இரசசெந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 1 பலம்(35 கிராம்), தூய்மைசெய்த நெல் லிக்காய் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), வெண்காரம் 1 வராகனெடை (3½ கிராம்), நவச்சாரம் 1 வராகனெடை (3½ கிராம்), துத்தம் 1 வராகனெடை (3½ கிராம்), சீனக்காரம் 1 வராகனெடை (3½ கிராம்), தூய்மைசெய்த அரிதாரம் ½ வராகனெடை (1¾ கிராம்), தூய்மை செய்த மனோசிலை ½ வராகனெடை( 1¾ கிராம்), அவுரியிலைச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, சோற்றுக்கற்றாழைச் சாறு, கையாந்தகரைச் சாறு, துளசிச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**— இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து, நன்ருகக்கருத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்து அரைத்து அவுரியிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து ஈரமில்லாமல் உலர்த்தி எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டு சாம நேரமரைத்து ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்விதமே மற்ற மூன்றுவகைச் சாறுகளினுலும் இரண்டிரண்டு சாமமரைத்து முறையே உலர்த்தி முடிவாகச் செம்மையாக உலர்த்தி பொடித்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின காசிக்குப்பியிலடைத்துக் கனத்த சட்டியில் நாலங்குலம் மணலைப் பரப்பிக் குப்பி வாய்வரையில் மணலைக் கொட்டிக் வாய்க்குக் காரக்கிடாமல் அடுப்பேற்றிக் காடாக்கினியாக ஒருசாமம் கமலாக்கினியாக ஒருசாமம் தீபாக் கினியாக ஒருசாமம் எரிக்க வேண்டும். எரிக்கும் போது மருந் தானது குப்பி வாயை அடைத்துக் கொள்ளுமாகையால் அடிக்கடி சலாகையை விட்டுக் கிளறிக்கொண்டும் வரவேண்டும். மேற்கண்ட படி எரித்து ஒருநாள் ஆறவிட்டு குப்பியையெடுத்துத் தண்ணீரில் நனைத்து உடைத்துக் கவனத்துடன் செந்தூரத்தை எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவேண்டும்.



**அளவு :**— 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :**—மிளகுத்தூள், *கொடிவேலி வேர்பட்டைத் தூள். பசிவின்னெய், தேன் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :**—வாயு நோய்கள், சுரநோய்கள், சன்னி முதலிய பல நோய்கள் தீரும். பசிதீபனம் அதிகமுண்டாகும்; தாதுவிருத்தியுமுண்டாகும்.

**மருத்துணவு :**— சமயம் போல் ஏற்படுத்தவும்.

## 699. இலகு இரசச்செந்தூரம்

தேவையான தூய்மைசெய்த இரசத்தைக் கல்வத்திலிட்டுத் தண்ணீரில் கிடக்கிற தொட்டாற் சுருங்கிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கவும். வில்லையானது கனமாயில்லாமல் இலேசாயிருக்கும். ரோஜாப்பூ வண்ணமாகவுமிருக்கும். எப்படியிருந்த போதிலும் குணமிருக்கிறது.

**அளவு :**— ½ முதல் 1 குன்றி எடை.

**தீரும்நோய்கள் :**— வாயு நோய்கள், புண், புரை, சுரம், சன்னி முதலியவைகள் தீரும்.

---

*கொடிவேலிவேர் = சித்திரமூலவேர்.

**மருத்துணவு** :— சமயோசிதம் போல் வைத்துக் கொள்க.

## 700. இலகு இரசச்செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த இரசம் 1 பலம் (35 கிராம்) இதனைக் கல்வத்திலிட்டு முற்றின காட்டாமணக்கு அடிமரத்துப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைக்க வேண்டும். இவ்விதம், ஏழு நாள் காலையில் ஒவ்வொரு சாமம் அரைத்து வந்தால் இரசமானது மடிந்து செந்தூரமாகிவிடும். ஆனால், நிறம் மங்கலாயிருக்கும். எடுத்துப் புட்டியில் வைத்துக் கொள்க.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து** :— மிளகுத்தூள், தேன், நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :—மேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு** :— சமயம் போல் ஏற்படுத்தவும்.

## 701. சுய இரசசெந்தூரம்

கடையில் விற்கிற இரசசெந்தூரம் 1 பலம் (35 கிராம்), கருந்துளசியை அரைத்த விழுது 5 பலம் (175 கிராம்.)

**செய்முறை** :—மேற்படி கருந்துளசியை மேற்படி செந்தூரத்திற்குக் கவசம் செய்து, ஒரு சீலைமண் செய்து 25 பலம் (875 கிராம்) வறட்டியை அடுக்கி நெருப்பிட்டுப் புகையடங்கின பின் மேற்படி கவசத்தை வைத்துப் புரட்டிக் கொடுத்துக் கவசங்கருகின பதத்தில் எடுத்து ஆறவைத்துக் கவசத்தைப் பிரித்துச் செந்தூரத்தைக் கல்வத்திற் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து** :— நெய், தேன், பனைவெல்லம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :—வாயு நோய்கள், சுரம், பிரசவித்தவர்களுக்குக் காணும் சுரம், சன்னி, மேகநோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு**:—சாதாரண நோய்களுக்கு இச்சாபத்தியம், நோய் கடினமாயிருந்தால் புளி, புகை ஆகியவைகளைத் தள்ளிக் கடும் பத்தியம் வைத்து உபயோகிக்கலாம்.



## 701. (அ) இரசவீரச் செந்தூரம்

மேற்படி இரசசெந்தூரம் 10 வராகன் எடை (35 கிராம்), தூய்மை செய்த வீரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்துப் பொடித்து ஒரு சாம நேரம் அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும். இதில், ஒரு குன்றிமணி எடை தேன் முதலிய துணைமருந்துகளைக் கொடுத்துவர நச்சுக்கழிச்சல், நச்சுக்கழிச்சலிற் காணும் சன்னி, சைத்தியம் முதலிய பல நோய்கள் தீரும்.

## 702. சுய இரசசெந்தூரம் (வேறு)

கடையில் விற்கிற இரசசெந்தூரம்1பலம் (35கிராம்) தாய்ப்பால் $\frac{1}{4}$ படி.

**செய்முறை** :—மேற்படி செந்தூரத்தை ஒரு ஓட்டில் வைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக சுருக்கிட்டுப் பாலெல்லாம் சென்ற பின்பு ஆற விட்டுக் குளிர ஆறின பின்பு கட்டியின் மீதுள்ளவைகளைத் துணியால் துடைத்துச் தூய்மைசெய்து கல்வத்திற் பொடித்துப் புட்டியிற் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

**துணைமருந்து** :—தேன், வெல்லம், பசுவின்னெய், வில்வாதி இளகம், பஞ்சதீபாக்கினி இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்**:—வாயு நோய்கள், மேக நோய்கள், சுரங்கள் சன்னிகள், கைகால் முடக்கு, சூலை முதலிய அநேக நோய்கள் தீரும்.

**குறிப்பு** :—முன் செந்தூரத்தைப் பார்க்கிலும் இது சாந்தமானது, சூட்டு உடலினர்களுக்கும்; சுகுமாரதேகிகளுக்கும் உபயோகிக்கலாம்.

**மருத்துணவு**:-இச்சாபத்தியம். நோய்பலமாயிருந்தால் அதற்குத் தகுந்தபடி புளி, உப்பு ஆகியவைகளைத்தள்ளி உபயோகிக்கலாம்.

## 703. குட்ட இரசசெந்தூரம்

கொட்டிக்கிழங்கின் மேல்தோலை நீக்கி நிழலிலுலர்த்திப் பொடி செய்து கள்ளிப்பால், எருக்கம்பால் ஆகிய இரண்டையும் சமனுகச்

சேர்த்து அதில் விட்டு இரண்டு சாம நேரமரைத்துக் குகையும் சில்லுமாகச் செய்து உலர்த்தி வைத்துக்கொள்க.

கருங்குறுவையரிசியை மாவாக்கி அதில் கள்ளிப்பாலை விட்டரைத்து மேற்படி குகையில் இரண்டு நூல்கனம் தடவி உலர்த்தி வைத்துக்கொள்க.

கொட்டிக்கிழங்குத் தூளை மேற்படி குகையில் மூன்றிலொரு பாகம் போட்டமுத்தி, மேற்படி தூளுக்கு நாலு பங்கெடை இரசத்தை விட்டு, மூசை நிறையக் கொட்டிக்கிழங்குத் தூளைப் போட்டு அழுத்தி, மேற்சில்லை மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி ஆவாரங் கரியில்வைத்தூதி உருக்கவும். குகை சிவந்த தருணத்தில் குகையைச் சற்றுத் திறந்து பார்க்க, இரசமானது உருகி மணியாகியிருக்கும். அப்படி மணியாகாதிருந்தால் உடனே மூடிச் சீலைமண் செய்து முன்போல் ஊதவேண்டும். பெரும்பான்மையும் மணியாகவே இருக்கும். அந்த மணியின் மீது சிறுகச் சிறுகத் தண்ணீரை விட்டு வந்தால் மணி சிவந்து போகும். அதனையெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :**— 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து :**— மணித்தக்காளிச்சாறு ¼ படி இந்தச் சாற்றில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலக்கிப் பருகச் செய்ய வேண்டும். காலையில் ஒரு வேளை மாத்திரம் உபயோகிக்க வேண்டும். இதனால், இரண்டு மூன்று தடவை கழிச்சலாகும். இவ்விதம் சில நாள் செய்துவர வேண்டும்.

**தீரும்நோய்கள் :** — பதினெட்டு வகைக் குட்டம், பதினெட்டு வகைக் கிரந்தி முதலிய நோய்கள் தீரும்.

**மருத்துணவு :**— நோயின் வலிவு, உடல் வலிவு முதலியவைகளுக்குத் தகுந்ததுபோல் பத்தியமேற்படுத்தவும்.

**குறிப்பு :**— இதனைக் கவனத்துடனும், கைபாகமாகவும் செய்ய வேண்டும். அநுபோகசாலிகள் முதல் தடவையிலேயே சித்தி பெறக்கூடும். அநுபோகமில்லாதவர்கள் அதைரியப்படாமல் ஊக்கத்துடன் அடுத்தடுத்துச் செய்வார்களாயின் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள்.

## 704. தாப இரசசெந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 3 பலம் (105 கிராம்), தூய்மைசெய்த கெந்தகம் 3 பலம் (105 கிராம்), அரிதாரம் 1 பலம் (35 கிராம்), துத்தம் ½ பலம் (17½ கிராம்), சீனக்காரம் ½ பலம் (17½ கிராம்), எலுமிச்சம் பழச்சாறு, கையாந்தகரைச்சாறு, துளசிச்சாறு, கற்றாழஞ்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.



**செய்முறை :**— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாய்க் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமமரைக்க வேண்டும். வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்த பின்பு கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாம நேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தையுலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதமே மற்ற இரண்டு வகைச் சாற்றினலும் இரண்டிரண்டு சாம மரைத்து முடிவாகச் செம்மையாக உலர்த்திப் பொடித்து ஏழுசீலை மண் செய்துலர்த்தின காசிக்குப்பியிலடைத்துச் குப்பிவாய்க்குப் பலப்பக்கல்லால் மூடி அடிகனத்த பானையில் நாலங்குலம் மணலிட்டு அதன் மீது முன் சித்தப்படுத்தின புட்டியை வைத்துக் குப்பி மறையும்படியாக மணலைக் கொட்டிப் பானைக்கு மேற்சட்டி மூடிச் சீலை செய்து வட்டடுப்பில் வைத்துப் பன்னிரண்டுசாமம் காடாக்கினியாக எரித்து ஒரு நாள் ஆறவிட்டெடுத்து உடைத்துப் பார்க்கக் குச்சுப்போன்ற வண்ணமுள்ள செந்தூரமாகியிருக்கும். இதைப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :**— தேன், நெய், இஞ்சிச்சுரசம், வில்வாதி இளகம், பறங்கிப்பட்டைத் தூள், மிளகுத்தூள் முதலியவைகளாம்

**தீரும்நோய்கள் :**— சுரம், சன்னி, சயித்தியம், மேகம், சூலை முதலிய எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கலாம்.

**மருத்துணவு :**— நோயின் வலிவு, உடல் வலிவு, ஆகிய வற்றிற்குத் தகுந்தது போல் ஏற்படுத்தலாம்.

## 705. இலகுதாப இரசசெந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 2 பலம் (70 கிராம்), தூய்மைசெய்த கெந்தகம் 2 பலம் (70 கிராம்), தூய்மைசெய்த அரிதாரம் ½ பலம் (17½ கிராம்).

**செய்முறை :**— இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்துச் செம்மையாகக் கறுத்த பின்பு தாளகத்தைத் தனியே

பொடித்துச் சேர்த்து இரண்டு சாமமரைத்து ஐந்து சீலைமண் செய்துலர்த்தின காசிக்குப்பியிலடைத்து வாய்க்கு ஆலம்விழுதா லடைத்து வாலுகாயந்திரத்தில் வைத்து மேற்சட்டி மூடிச்சீலை மண் செய்து வட்டடுப்பில் வைத்து இரண்டு சாமநேரம் காடாக் கினியாக எரித்து ஆற விட்டெடுக்கச் செந்தூரமாகியிருக்கும். இதனைப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்,

**அளவு :—** 1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், மிளகுத்தூள், சுக்குத்தூள், வில்வாதி இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** சுரம், சன்னி, சைத்தியம், மேகம், சூலை முதலிய அநேகநோய்கள் தீரும்.

**மருத்துணவு :—**சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

## 706. ஈசுர சிந்தாமணி இரசசெந்தூரம்

துய்மைசெய்த இரசம் 2 பலம்(70 கிராம்), தூய்மைசெய்த நெல் லிக்காய்க்கெந்தகம் 2 பலம் (70 கிராம்), தூய்மைசெய்த சாதிலிங்கம் 1 பலம் (35 கிராம்),தூய்மைசெய்த வெண்காரம் 1 பலம் (35 கிராம்), தூய்மைசெய்த மனோசிலை $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), மாதுளையிலைச் சாறு, மாதுளம்பூச் சாறு, மிளகுதக்காளிச் சாறு, செம்பரத்தம்பூச் சாறு, முருக்கம்பூச் சாறு, வெட்சிப்பூச் சாறு, இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து மற்றசரக்குகளையும் தனித்தனியேப் பொடித்துச் சேர்த்து அரைத்து மாதுளையிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈர முலர்ந்த பின்பு மாதுளம் பூச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதமே மற்ற நான்கு வகைகளிலும் நவ்வாலுசாமம் அரைத் தரைத்து உலர்த்தி உலர்த்தி முடிவாகச் செம்மையாக உலர்த்திப் பொடித்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின கெங்காசல குப்பியில் போட்டு வாய்க்குப் பலப்பக்கல் வைத்தடைத்து அடிகனத்த பானை யில் நான்கு விரற்கனம் மணலைக் கொட்டி அதன் மீது மேற்படி குப்பியை வைத்துக் குப்பி மறையும்படியாக மணலைக் கொட்டி மேற் சட்டி மூடிச் சீலை செய்து வட்டடுப்பில் வைத்து, தான் வழிபடும் கடவுளை துதித்து, தீபாக்கினியாக ஒரு சாமமும், கமலாக்கினியா க



இரண்டு சாமமும், காடாக்கினியாக இருபத்தொரு சாமமும், எரித்து நாலாம்நாள் குளிர ஆறின பின்பு, தான் வழிபடும் தெய்வத்துக்கு வணக்கம் முதலியன செய்து செந்தூரத்தை எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றிமணி எடை.

**துணைமருந்தும், தீரும்நோய்களும் :—** இந்த மருந்தை உண்ண ஆரம்பிக்கும்போது ஏழைகள், பரதேசிகள் முதலியவர்களுக்கு உணவு அளித்து மங்கிலிய பெண் கையில் மருந்தைக் கொடுத்து· வாங்கி ஆரம்பஞ் செய்ய வேண்டும்.

சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், குராசாணி ஓமம், அதிவிட யம், இவற்றை வெதுப்பித் தனித்தனியே இடித்த தூள்வகைக்கு 2 குன்றி மணி எடை, தேன் 1 வராகன் எடை இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துக் காலை மாலை இரண்டு வேளையுமாகப் பத்து நாள் உட்கொண்டு வந்தால், அறுவகைக் கழிச்சலும் தீரும்.

மருட்கிழங்கை உலர்த்தித் தூள் செய்து துணியில் வடிகட்டி காயம் பண்ணினதூள் 2 வராகன்எடை, பசுவினெய்1 வராகன்எடை ($3\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத் தை அளவுப்படி சேர்த்துக் காலை, மாலை இரண்டு வேளையும் இருபது நாட்கொள்ள, ஆறுவகை மூலநோய்களும் கூட்டோடு குலைந்து விழுந்து போகும். இங்கு இதற்கு பத்தியம்; கோழிக்கறியையும், கீரைத்தண்டையும் கூட்டவும்.

பறங்கிப்பட்டைத் தூள் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), தூய்மை செய்த இரசகற்பூரம் $\frac{1}{4}$ குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப் படி கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் இருபது நாள் உட் கொண்டுவர, எழுபதுவகைப் புண் நோய்களும், எண்பது வகை வாத நோய்களும், முப்பத்திரண்டுவகைக் கரப்பான் நோய்களும், இருபத்தொருவகைக் கிரந்தி நோய்களும், விப்புருதி நோய்களும் தீரும்.

வெருகங்கிழங்குத் தூள் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), விளாம் பொருக்குக் குழித்தைலம் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), தூய்மை செய்த இரசகற்பூரம் $\frac{1}{4}$ குன்றிமணி எடை. இவற்றைச் சேர்த்து மேற் கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து காலை மாலை இரண்டு

வேளையுமாக நாற்பது நாள் உட்கொண்டு வந்தால், பதினெட்டு வகைக் குட்டநோய்கள், குறைநோய்கள், வண்டுகடி, நச்சுக்கடி, கபாலகுட்டம், கால்கடிநஞ்சு, சொறிகள், சிரங்குகள், முதலியவை தீரும்.

காந்தச் செந்தூரம், அப்பிரகச் செந்தூரம் இவை வகைக்கு 2 குன்றிமணியெடை, வங்கபற்பம் 1 குன்றிமணி எடை, சீந்திற்சர்க்கரை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சீனிச்சர்க்கரை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), ஆவாரம் விதைத் தைலம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துக் காலை மாலை இரண்டு வேளையும் நாற்பது நாள் உபயோகித்துவர, நாற்பதுவகை நீர்க்கழிச்சல், பதினெட்டுவகைச் சுக்கிலப் பிரமியம், இருபது வகை மூத்திரக் கிரிச்சரம், பதினெட்டுவகை எலும்புருக்கி நோய், எல்லாவகை அனல் நோய் ஆகியவை தீரும்.

பிராயம்பட்டைத் தைலம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, எட்டுவகைக் குட்டநோய்களும் தீரும்,

அல்லிப்பூச்சாறு அல்லது தாமரைப்பூச்சாறு அல்லது செங்கழு நீர்ப்பூச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்). இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, எல்லாவகை அனல் நோய்கள், இருபத்தாறுவகைப் பித்த நோய்கள் ஆகியவைகள் தீரும்.

வெற்றிலைச் சாறு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, மூன்றும் மாறல், நாலாம் மாறல் முதலிய நாட்பட்ட சுரமெல்லாம் தீரும்.

வில்வாதி இளகம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துக் காலை மாலை இரண்டு வேளையுமாக இருபது நாள் உட்கொண்டுவர ஈளை, இருமல், எலிக்கடி, சுவாசகாசம், மந்தாரகாசம், ஊளைமாந்தை, சுரமாந்தை, காமாலை, அட்ட குன்மம் ஆகியவை தீரும்.

**மருத்துணவு :—** உடல்வலிவு, நோய்வலிவு முதலியவைகளுக்குத் தகுந்தவிதமாகவும் சமயோசிதம்போலவும் ஏற்படுத்தவும்.



## 707. உத்தர இரசசெந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 6 பலம் (210 கிராம்), தூய்மைசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் $4\frac{1}{2}$ பலம் ($157\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த நாபி 3 பலம் (105 கிராம்), தூய்மை செய்த சாதிலிங்கம் $1\frac{1}{2}$ பலம், தூய்மை செய்த மனோசிலை 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த வெண்காரம் 1 பலம் (35 கிராம்), செருப்படிச்சாறு, கற்றுழஞ்சாறு மாதளம்பூச் சாறு அல்லது இலைச்சாறு இவை வகைக்குச் செல்லத் தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும், கெந்தகத்தையும், சேர்த்தரைத்துச் செம்மையாகக் கறுத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து இதனுடன் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்துச் செருப்படிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவும். பிறகு, சோற்றுக்கற்றுழைச் சாற்றில் ஒரு சாமமரைத்து முன் போல் உலர்த்திக் கொள்ளவும். பிறகு, மாதளம்பூச் சாற்றில் பன்னிரண்டு சாமமரைத்து உலர்த்திப் பொடிபண்ணி ஏழு சீலைமண் செய்துலர்த்தின கைக்குப்பியில் அரைவாசியிட்டு வாய்க்குப் பலப்பக் கல்காரக்கிட்டுச் சீலைமண் செய்து அடிகனத்த பானையில் நான்கு விரற்கிடை மணலிட்டு அதன்மேல் குப்பியை வைத்துக் குப்பிக் கழுத்து வரை மணலிட்டுத் தான் வழிபடுங் கடவுளைப் பூசித்து தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி இரண்டு சாமம், காடாக்கினி இருபத்தோரு சாமமாக எரித்து ஆறவிட்டு அன்னதான முதலியவைகள் செய்து தான் வழிபடும் கடவுளை துதித்துக் குப்பியை உடைத்துக் பார்க்க கடவுள் அருளினால் செந்தூரமானது முருக்கம்பூப் போலே இருக்கும். இதனைப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**மருத்துணவும், தீரும்நோய்களும் :** — மேற்றோல் சீவின சுக்கு மிளகு, அரிசித்திப்பிலி இம்மூன்றையும் தனித்தனியே வெதுப்பித் தனித்தனியாக இடித்தத்தூள் வகைக்கு 4 குன்றிமணியெடை, தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி அனுபானித்து, காலை மாலை இரண்டு வேளையும் நாற்பது நாள் உட்கொள்ள, பதினெட்டுவகைக் குட்டங்கள், குறைநோய்கள், காணுக்கடி, நச்சுக்கடி, எலிக்கடி, வாதநோய், காலில் கடிநஞ்சு, செய்யான் கடி, அட்டைக்கடி, செவ்வட்டைக்கடி, புழுக்கடி, கீரைச்சேறு, புழுக்கடி, இவற்றின் நஞ்சுகளெல்லாந் தீரும்.

வெண்ணெச்சிச் சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு வேளையும் நாற்பதுநாள் உட்கொள்ள எண்பதுவகை வாத நோய்கள், பதின்மூன்று வகை சன்னி நோய்கள், ஏழுவகைத் தோடங்கள், வாயுகள், விகாரங்கள் ஆகியவை எல்லாம் தீரும்.

ஆவாரம் விதைத்தைலம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), வங்க பற்பம் 1 குன்றிமணியெடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி இரண்டு வேளையும் நாற்பது நாள் உட்கொள்ள, இருபதுவகை நீரிழிவுநோய், மூத்திரக்கிரிச்சரம், இந்திர கண்டி நோய், பன்னிரண்டுவகை சோமநோய்கள், ஆறுவகை நடுக்கு நோய். எட்டுவகை நாக்குளறல் நோய், நாவின் கழலை, நாவின் சிலந்தி, நாவின் பட்டி, உண்ணுக்குவீழ்தல், உண்ணுக்கு சிறுத்தல், தொண்டைக்கட்டு, தொண்டைப்புற்று, மண்டைச்சூலை, செவிக்காளான், செவிப்பொருமல், லிங்கப்புற்று, அல்குல்புற்று ஆகிய இந்த நோய்களெல்லாம் தீரும்.

ஆவாரம்பூச்சாறு அல்லது ஆவாரங்கொழுந்தின் சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் அல்லது நெய் 1 வராகன்எடை ($3\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு வேளையும் நாற்பதுநாள் உட்கொண்டுவர, உள்ளுருக்கி, எலும்புருக்கி, நாட்பட்டசுரம், நச்சு சுரம், உட்சுரம், மூன்றும் மாறல் சுரம், கைகால் எரிச்சல், உடம்பெரிச்சல், முகவெரிச்சல், கண்ணெரிச்சல் ஆகியவை எல்லாம் தீரும்.

தும்பையிலைச்சாறு அல்லது தும்பைப்பூச்சாறு $1\frac{1}{2}$வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்டுவர, அறுபத்து நான்கு வகை சுரங்களும் தீரும்.

நாட்டுக் கருணைக்கிழங்கை மோரில் வேகவைத்து உலர்த்தி இடித்தத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), நல்லெண்ணெய் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து இருவேளையும் நாற்பது நாள் உண்டுவர, அறுவகை மூல நோய்களும் தீரும்.

ஆற்றுத்தும்மட்டிக்காயை வைக்கோல் நெருப்பில் வெதுப்பிப் பிழிந்த சாறு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன்எடை



($3\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்டுவர,வயிற்றிலுள்ள நோய்களெல்லாம் தீரும்.

நெல்லிக்காய்ச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்) தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்டுவர, பித்த சம்பந்தமான நோய்களெல்லாம் தீரும்.

**மருத்துணவு :—** உடல் வலிவு, நோய்வலிவு, முதலியவைகளுக்குத் தகுந்த விதமாகவும், சமயோசிதம்போலவும் ஏற்படுத்தவும்.

## 708. மன்மதசிந்தாமணி இரசசெந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 6 பலம் (210 கிராம்), தூய்மைசெய்த கெந்தகம் 6 பலம் (210 கிராம்), சாதிலிங்கம் 6 பலம் * மாணிக்கப்பொடி 6 பலம்(210 கிராம்), தூய்மைசெய்தவெண்காரம் 1 பலம் (35 கிராம்), தூய்மைசெய்த மனோசிலை 1 பலம் (35 கிராம்), தூய்மைசெய்த அரிதாரம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), செம்முள்ளி இலைச்சாறு, மாதுளையிலைச்சாறு, கஞ்சா இலைச்சாறு, கூத்தன் குதம்பைச்சாறு இவைவகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :** —இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்துச் செம்மையாகக் கறுத்த பின்பு செம்முள்ளியிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாமமரைத்து வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு, மாதுளையிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வெய்யிலில் வைத்துலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு, கஞ்சா இலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து எட்டு சாம நேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவேண்டும். முடிவாக கூத்தன் குதம்பைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து வெய்யிலில் வைத்துலர்த்தி கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்றுயுலர்ந்த பின்பு வைத்துக் கொள்க.

ஏழு சீலைமண் செய்துலர்த்தின கெங்கைநீர்க்குப்பியில் அரை பாகம் மேற்படி பொடியைப் போட்டு வாய்க்குப் பலப்பக்கலால்

* இது அவரவர்கள் தரத்துக்குத் தக்கபடியும், சக்திக்குத் தக்கபடியும் உயர்ந்த இனமாக அல்லது தாழ்ந்த இனமாகச் சேர்த்துக் கொள்ளலாம். மாணிக்கப்பொடி மற்ற வேலைகளுக்கு உபயோகப்படாதாகையால் சகாயமான விலைக்கே கிடைக்கும். ஆகையால், இதைப்பற்றி மலைக்க வேண்டியதில்லை.

கார்க்குச் செய்திட்டுச் சீலைமண் செய்துலர்த்தி சற்றுவாயகன்ற குடத்தில் நான்கு விரற்கனம் மணலிட்டு அதன்மீது குப்பியை வைத்துக் குடத்தின் வாய்மட்டம் மணலிட்டு நிறைத்து தான் வழிபடும் கடவுளைப் பூசித்து, தீபாக்கினியாக ஒரு சாமமும், கமலாக்கினியாக இரண்டு சாமமும் காடாக்கினியாக இருபத்தொரு சாமமும் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு குப்பியை உடைத்துப் பார்க்க சித்தர் அருளால் செந்தூரமானது முருங்கப்பூப் போலே சிவந்திருக்கும். பிறகு, அன்னதானம் முதலியவைகளும் செய்து தான் வழிபடும் கடவுளைப் பூசிக்கவேண்டும்.

**அளவு :—** 1முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்தும், தீரும்நோய்களும் :** — மேற்ரேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இவற்றைத் தனித்தனியே இளவறுப்பாக வறுத்துத் தனித்தனியேத் தூள் செய்து வகைக்கு 4 குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி காலை, மாலை இரண்டு வேளையும் நாற்பது நாள் உட்கொள்ள ஈளை, இருமல், எலிக்க மந்தாரகாசம், காசசுவாசம், உளைமாந்தை, சுரமாந்தை, காசகாமாலை, இளைப்பு, துரப்பு, சிலேத்தும மூர்ச்சை ஆகிய நோய்கள் தீரும்.

கருவாழைப்பூச்சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து இரண்டு வேளை, பத்து நாள் உட்கொண்டுவர, இரத்தபித்த நோய், இரத்த நோய், மண்டைக் குத்து, பெரும்பாடு, பல்லீற்றில் இரத்தம் விழுதல், ரோமக்கால்களில் இரத்தம் கசிதல், நீர்த்தாரையில் இரத்தம் விழுதல், பிரசவித்தவர்களுக்கு நிற்காமல் தொடர்ச்சியாக இரத்தம் போதல், சூதகத்தில் கணக்கின்படி இரத்தம் நிற்காமல் தொடர்ச்சியாகப் போதல், கண்களில் இரத்தம் கசிதல், நாசியில் இரத்தம் விழுதல்: மருந்து வேகத்தினுல் இரத்தம் விழுதல், நச்சுபிருகங்கள் கடித்து இரத்தம் நிற்காமல் கசிந்து கொண்டே இருத்தல், நச்சுமுள் தைத்து அதனுல் இரத்தம் கசிந்து கொண்டு இருத்தல், பேய் பிசாசு பூதம் வகையராக்கள் அறைந்து விட்டதெனப் பயந்து உண்டாகும் இரத்தப்போக்கு, இவ்விதம் எந்தவிதத்திலுைலேனும் உடலிலிருந்து வெளிப்படும் இரத்தப் போக்குகள் எல்லாம் தீரும்.

**கல்நார்த்தூள், கல்மதத்தூள், சாத்திரபேதித்தூள், கூகைநீறு, இவை நான்கும் வகைக்கு $\frac{1}{4}$ வராகன் எடை ஆவரைக் கொழுந்து,**



அல்லிப்பூவிதழ், இலந்தைக்கொழுந்து இம்மூன்றும் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்). இவை எல்லாவற்றையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து அரை ஆழாக்குப் பசுவின் பாலில்கரைத்துக் கொஞ்சம் சீனிச் சக்கரையும் கலந்து அதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துக் காலை,மாலை இரண்டு வேளையும் பத்து நாள் உட்கொண்டுவர, இருபதுவகை மேகநோய்கள் உடம்பிளைப்பு, எலும்புருக்கி நோய், என்புசுரம் ஆகிய இவை எல்லாம் குணமாகும்.

முத்தெருக்கஞ்செவியிலைச் சாறு, கழற்சியிலைச்சாறு, இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) இவற்றைச்சேர்த்து மேற்கண்டசெந்தூரத்தை அளவுப்படி சேர்த்துக் காலைமாலை இரண்டு வேளையும் பத்து நாள் உட்கொண்டுவர, அண்டவாதம், அண்டபவுத்திரம், அண்டப்பிளவை, அண்டப்புற்று, அண்டசந்துவாதம், கழலெரிவாதம், கொடிவாதம், கொடிபவுத்திரம், நுரைவாதம், பக்கபவுத்திரம் ஆகியவை எல்லாம் தீரும்.

மதனகாமேசுர இளகம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்டுவர, பிறவியில்லாத மற்ற எல்லாவகை தாது நட்டங்களும் தீர்ந்து தாதுவிருத்தி, போக சக்தி, யோகசக்தி, உடல்வலிமை முதலியவைகளுண்டாகும். மலட்டுப் பெண்கள், உடல் வலிவில்லாத பெண்கள், கருப்பை வலிவற்ற பெண்கள் முதலியவர்களுக்கும் கருப்பமுண்டாகும்.

மேற்படி செந்தூரம் 2 குன்றிமணியெடை, தூய்மைசெய்த இரசம் 2 குன்றிமணியெடை, வெண்ணிறமான புனுகு 2 குன்றிமணியெடை, இவற்றைக் கல்வத்திலிட்டு மெழுகு பீர்க்கங்காய்ச்சாற்றை விட்டு ஒரு மணி நேரமரைத்து ஆண் லிங்கத்தில் பூசிவர, அது சிறுத்திருந்தாலும் அத்துர்க்குணம் நீங்கிப் பெருகும். அதிலுள்ள சுறுக்கு, தளர்ச்சி, சோர்வு முதலிய இழிகுணமெல்லாம் தீர்ந்து நரம்புகள் முருக்கேறிப் பெருத்து பலத்து ஆண் தன்மையும், ஆண்மையுமுண்டாகும்.

அவுரிச்சாறு தேவையான அளவு. இதில் ஒரு குன்றிமணி எடை, மேற்படி செந்தூரத்தை மத்தித்து மேற்பூச முகத்தில் உண்டாகியிருக்கும் வங்கு, முகத்திற் கறுப்பு, புள்ளி முதலியவைகள் தீரும்.

மேற்படி செந்தூரம் 2 குன்றிமணி எடை, இதனைப் பூவரசங் காய்ச்சாற்றில் மத்தித்து மேற்பூச, எச்சில்தழும்பு. படர்தாமரை முதலியவைகள் குணமாகும்.

விழுதி இலைச்சாறு, முடக்கொற்றான் இலைச்சாறு, இவை வகைக்கு 1½ வராகன் எடை, தேன், நெய் இவை வகைக்கு 1 வராகன் எடை, (3½ கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்பட்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, தாதுவிளைவுண்டாகும், நீர்த்துப்போன தாது நொங்குபோல் இறுகிப்போகும்.

அனிச்சம் வேர், நிலவாகைவேர், இவ்விரண்டும் சமனெடை. இவற்றைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு வெண்ணெய் போலரைத்து அதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து மத்தித்து மேற்பூச்சாகப் பூசிவர, கடுமையான படர் தாமரையும் தீரும்.

வேப்பம்பட்டைக் குழித்தைலம் 1 வராகன் எடை (3½ கிராம்), இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து இரண்டு வேளையுமாக நாற்பது நாள் உண்டுவர, பதினெட்டுவகைக் குட்ட நோய்கள், புரைநோய்கள் இவைகளெல்லாம் தீரும்.

பால் அல்வா, பால்கோவா முதலிய தாதுவிருத்தி அல்வாக்களில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்டுவர, இரத்தவிருத்தியுண்டாகி இந்திரிய விருத்தியதிகரிக்கும். இரத்தத்திலுள்ள தீக்குணங்களெல்லாம் நீங்கி இரத்த சுத்தியுண்டாகும். உடல்வலிவு, உடல்வன்மை, உடல் வசீகரம், முகவசீகரம் முதலிய ஆண் தத்துவங்களெல்லாம் உண்டாகும், எவ்வகை வயோதிகனும் இளமையடைவான். இது கற்பத்திற்குச் சமானமானது, புத்திமான்கள் சமயோசிதம் போலவும் உடல் நிலைமைக்குத் தகுந்த விதமாகவும் உபயோகித்து வெற்றியடைவார்களாக. இதனைச்சற்று சிரமப்பட்டு செய்து முடித்துக் கொண்டால், அனேகவித நன்மைகளையும் அடையலாம்.

**மருத்துணவு** :—இது மிக அருமையான மருந்தாகையால் நோய்வலிவிற்கும், உடல் வலிமைக்கும் தகுந்தது போலவும், சமயோசிதம் போலவும் ஏற்படுத்த வேண்டும்.

## 709. கௌரிசிந்தாமணி இரணமுகதீர ரசசெந்தூரம்

தூய்மை செய்த இரசம் 2 பலம் (70 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 3 பலம் (105 கிராம்), தூய்மை செய்த வெண்காரம் 1 பலம் (35 கிராம்)



**செய்முறை** :—இரசத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி கெந்தகத்தையும் வெண்காரத்தையும் மேலே போட்டு அரைக்காமல் நொருங்கத்தட்டவும். இரசம்மடிகிற வரையில் கெந்தகத்தையும் வெண்காரத்தையும் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுத் தட்டவும். இரசம் மாண்ட பின்பு இரட்டைச் சீலையில் சிறுகொட்டைப்பாக்களவு முடிப்புக்கட்டி வைத்துக் கொள்க. ஒரு பானையில் அரைவாசி மணலிட்டு மேற்படி முடிப்பை மணலுக்குள் பதித்துப் பானை நிறைய மணலைக் கொட்டி வாய்க்குச் சந்தில்லாமல் மண்தாலத்தால் மூடி சீலைமண் செய்து ஒரு சாண் ஆழமும், ஒருகெச சுற்றளவுமுள்ள குழிவெட்டிக் குழிக்கு நடுவே மேற்படி பானையைக் கவிழ்த்து அதன் பத்துப்பங்கெடை வறட்டியால் மூடி, தான் வழிபடும் கடவுளைப் பூசித்து எரிக்க வேண்டும். ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு தான் வழிபடும் கடவுளைப் பூசித்து, மருந்தைப் பிரித்தெடுத்தால் பூப்போலே மலர்ந்து கருப்பு வண்ணமுள்ளதாயிருக்கும். இதனைப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்தும் தீரும்நோய்களும்** :— மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இவற்றைத் தனித்தனியே வறுத்துத் தனித்தனியே இடித்த சூரணம் வகைக்கு 5 குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தையும் அளவுப்படி கலந்து இரண்டு வேளையுமாக நாற்பது நாள் உட்கொண்டுவர, பதினெட்டுவகை சூலைநோய்கள், இருபது வகை வாயுநோய்கள், எட்டுவகைக் குன்மநோய்கள், ஈளை, இருமல், எலிக்கடி, மந்தாரகாசம், சுவாசகாசம், உளமாந்தை, சுரமாந்தை, காமாலை, கண்டமாலை, கண்டவிப்புருதி, உருளைவிப்புருதி, குறுவிப்புருதி, ஓடுவிப்புருதி, பிளவை முதலானவைகளும், அண்டவாதம், மூலம் அரையாப்பு, தொடைவாழை ஆகியவை தீரும்.

சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம் இவற்றின் தூள் வகைக்கு 5 குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, ஆறுவகை விடாக்கழிச்சல் நோய்கள், பன்னிரண்டு வகை பெருங்கழிச்சல் ஆகியவைகள் தீரும்.

காட்டுக்கருணைக் கிழங்கு, மருட்கிழங்கு, இவ்விரண்டையும் தனித்தனியே மோரில் வேகவைத்து உலர்த்தி இடித்த தூள் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), மேற்றோல் சீவின சுக்குத் தூள், அரிசித்திப்பிலித்தூள், இவை வகைக்கு ¼ வராகன் எடை,

தேன் 2 வராகன் எடை (7 கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டுநேரமும் இருபதுநாள் உட்கொண்டுவர, அறுவகை மூலநோய், ஆறுவகைப் பவுத்திர நோய் ஆகியவை தீரும்.

ஆவாரம்விதைத் தைலம் 1 வராகன் எடை (3½ கிராம்), இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு வேளையும் இருபது நாள் உட்கொள்ள, பதினெட்டுவகைச் சதையடைப்பு இருபதுவகைச் சோமநோய், இருபதுவகை மூத்திரகிரிச்சர நோய், ஆறுவகை மூத்திரப்பாளை, பன்னிரெண்டு வகை எலும்புருக்கி நோய், எட்டுவகை உட்சுரம், எட்டுவகை உட்சூடு ஆகியவை, தீரும்.

அழிஞ்சில்விதைத் தைலம் (இதுகுழித்தைலம்), 1 வராகன் எடை (3½ கிராம்), இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு வேளையும் இருபது நாள் உட்கொள்ள வயிற்றி லுள்ள ஆறுவகைக் கட்டிகள், முப்பத்திரண்டு வகை வாயுத்திரட் சிகள், ஏழுவகை விப்புருதிகள் ஆகியவை தீரும்.

எருக்கம் பழுப்பை நெருப்பில் வாட்டிப்பிழிந்த சாறு ½ ஆழாக்கு இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துச் சாப்பிட கழிச்சலாகும். மோருஞ் சோறும் சாப்பிட வேண்டும். இவ்விதம் ஒன்றை விட்டொருநாள் பத்துத் தடவை செய்ய வேண்டும். இப்படிச் செய்துவந்தால், நச்சு பாகம், சோமநோய், பித்தபாண்டு சோகை, காமாலை, நீர்க்கோவை, சுரம் முதலிய நோய்கள் தீரும்.

**மருத்துணவு** :— நோயின்வலிவு, உடல்வலிவு, ஆகியவை களுக்குத் தகுந்தபடி சமயோசிதம்போல பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

**குறிப்பு** :—இது ஒருவகைப் பட்டுக்கறுப்பு; சிறு பட்டுகறுப்பு ஒருவகையுமுண்டு ; அவைகளுள் முக்கியமான இரண்டொரு முறைகள் பின்னெழுதப்படும். அம்முறைகளைப் போலவே மேற் கண்ட பாகத்தையும் செய்து கொள்ளலாம்.

## 710. காளகண்ட மேகநாராயண செந்தூரம்

இரசம் 6 பலம் (210 கிராம்), கெந்தகம் 6 பலம் (210 கிராம்), சாதிலிங்கம் 15பலம் (525 கிராம்), பொன்னரிதாரம் 8 பலம் (280 கிராம்), மனோசிலை 2 பலம் (70 கிராம்), இவைகளைப் பின்கண்டபடி தூய்மை செய்து கொள்ள வேண்டும்.



எருக்கம்பால், புரச இலைச்சாறு, தும்பையிலைச்சாறு, செருப்படிச் சாறு, செம்முள்ளிச்சாறு, மாதுளையிலைச்சாறு, மாதுளம்பூச்சாறு வகைக்கு செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :—மேற்கண்ட சரக்குகளைக் கீழ்க்காணும் முறைப் படித் தூய்மை செய்து எடைப்படி நிறுத்தெடுத்து இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்குகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்தரைத்து எருக்கம் பாலைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமமரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தையுலர்த்திக் கொள்ளவும். பிறகு புரசிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமமரைத்து வெய்யிலில் வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவும். இவ்விதமே தும்பையிலைச்சாறு, செருப் படிச்சாறு, செம்முள்ளிச்சாறு ஆகியவைகளில் தனித்தனியே ஒவ் வொரு சாமமரைத்துத் தனித்தனியே உலர்த்திக் கொள்ள வேண் டும். மாதுளையிலைச்சாற்றைக் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து ஈரமுலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு மாதளம் பூச்சாற்றில் இவ்விதமே இரண்டு சாமநேரமரைத்து வெய்யிலில் வைத்துச் செம்மையாக உலர்த்திப் பொடித்து ஏழு சீலைமண் செய் துலர்த்தின கெங்கை நீர்க்குப்பியில் அரைவாசி இருக்கும்படியாக அடைத்து வாய்க்குப் பலப்பக்கல் மூடியால் மூடி வாய்க்கும் சீலைமண் செய்து வட்டடுப்பில் அடிகனத்த பானையை வைத்து அதில் நாலு விரற்கிடை மணலைக் கொட்டி அதன்மேல் முன்சித்தப்படுத்தின புட்டியை வைத்து அந்தப்பானை நிறைய மணலைக் கொட்டி பானை வாயை மூடிச்சீலைமண் செய்து தான் வழிபடும் கடவுளைப் பூசித்து, ஒரு சாதி சிறுவிறகால் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி இரண்டு சாமம், காடாக்கினி இருபத்தொரு சாமமாக எரித்து ஒரு நாள் ஆற விட்டு, மறுநாள் தான் வழிபடும் கடவுளைப் பூசைசெய்து அன்ன தானம் முதலியவைகளும் செய்து குப்பியை உடைத்துப் பார்த் தால் கடவுளின் அருளால் முருக்கம்பூப்போல சிவந்து செந் தூரமாகியிருக்கும். இதனைப் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்தும் தீரும்நோயும்** :—மேற்றேல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இவற்றைத் தனித்தனியே இளவறுப்பாக வறுத்துத் தனித்தனியேப் பொடித்த தூள் வகைக்கு 5 குன்றிமணி எடை, கண்டங்கத்திரி, தூதுவளை, ஆடாதோடை, இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), இம்மூன்றையும் சிதைத்துப் பிட்டவித்துப் பிழிந்துக்கொள்ள வேண்டும். தேன் 2 வராகன் எடை (7 கிராம்)

இவையெல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு வேளையும் பத்து நாள் உட்கொள்ள, ஈளை, இருமல், எலிக்கடி, மந்தாரகாசம், சுவாசகாசம் வாதகாசம், சிலேத்தும மூர்ச்சை, மேலிளைப்பு, மேற்சுவாசம் ஆகியவை தீரும்.

அரிசிதிப்பிலியை வறுத்துப் பொடித்தத்தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்) தேன் 1¼ வராகன் எடை இவ் விரண்டையும், சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு வேளையும் நாற்பதுநாள் கொள்ள ஆறுவகைச் சூலைநோய்கள், பதினெட்டுவகை குட்டநோய்கள், புண்கள், குடோரவகைகள், பதினெட்டு வகைக் குறைநோய்கள், கடிநஞ்சு, வண்டுகடி, செவ்வட்டைக்கடி, கபாலகுட்டம், கபாலக்கடிநஞ்சு, சொறி சிரங்கு, அரையாப்பு, காற்கடிநஞ்சு, நெஞ்சுநோவு, பசியின்மை, மண்டைச்சூலை, சிலைக்காது, சீழ்க்காது, மடல்வீக்கம், அசுகணி நோய் ஆகியவை தீரும்.

வெள்ளைப்பூண்டுத் தைலம் ½ வராகன் எடை (1¾ கிராம்) இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு நேரமும் பத்துநாள் கொள்ள, பதின்மூன்றுவகை சன்னிநோய், வாதமூர்ச்சை, பித்தமூர்ச்சை, சிலேத்துமமூர்ச்சை, சன்னிநோய், உதறுவாதம், அற்புதவாதம், கன்னக்கரைவு, கன்னச்சிலந்தி ஆகியவை தீரும்.

பொரித்த வெண்காரம், குக்கில், ஓமத்தூள் இம்மூன்றும் வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவற்றைக் கல்வத்தில்பொடித்துத் தனியே கொள்க. இந்தத்தூள் 1 வராகனெடை (3½கிராம்), முருங்கைப்பட்டைச்சாறு ½ வராகனெடை (5¼ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி அனுபானித்து இரண்டுவேளையும் நாற்பதுநாள் உட்கொள்ள சன்னிவாதம், பக்கவாதம், குத்துவாதம், குதறுவாதம், உதறுவாதம், தனுர்வாதம், தோல்வாதம், நடுக்குவாதம், முகவாதம், தொண்டைவாதம், சர்வாங்கவாதம், உள்வலிப்பு, புறவலிப்பு, எண்வகைக்குன்மம், மூலவாயு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, இந்திரகண்டி ஆகிய இவை தீரும்.

நிலவாகைச்சாறு 2½ வராகன்எடை (8¾ கிராம்) தேன் 1½ வராகன் எடை (5¼ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டுவேளையும் நாற்பது நாள் கொள்ள கருப்பைவிப்புருதி, மடிவிப்புருதி, கால்விப்புருதி,



கோழைவிப்புருதி, உளமாந்தை, சுரமாந்தை, பக்கவாயு, அண்டவாயு, குடல்வாதம், நுரைவாதம், கால்வாதம், அல்குல்சூலை, நாடிசூலை, வாதசூலை, பக்கசூலை, கீரிப்புழு ஆகியவை தீரும்.

இதனை இன்னும் தகுந்த துணைமருந்துகளில் அநேகநோய்களுக்கு உபயோகிக்கலாம். புத்திசாலிகள் தாம் தாமே அனுபோக சித்தமாகத்தெரிந்து கொள்வார்கள்.

**குறிப்பு:**— இந்தச் செந்தூரமானது திராவகத்தினுலும் செய்யப்படுகிறது. அவ்வகை, முறைகள் அனேகம் ஆயினும் கரிசலில் சொல்லப்படுகிற முறை அதிக விசேடமானது. அதனுலும் அநேக நோய்கள் தீருகின்றன, இந்த விஷயத்தையும் அநுபவசாலிகள் தம் அனுபவத்தில் கண்டிருப்பார்கள். சந்தேகமுள்ளவர்கள் இரண்டு வகையும் செய்து அனுபவித்துத் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கண்ட முறைக்காக வேண்டிய சரக்குகளின் தூய்மைகள்.

**இரசத் தூய்மை :**— இரசம் தேவையான அளவு; இரசத்தைக் கல்வத்திலிட்டு இரசத்திற்கு நான்குபங்கெடை மஞ்சள்பொடியைச் சேர்த்து அரைத்து மஞ்சள் கறுத்தபின்பு அதை ஊதிப்போக்கிவிட வேண்டும். பிறகு மேற்கண்ட அளவே செங்கற்பொடியைச்சேர்த்து அரைத்து அது கறுத்தபின்பு முன்போலவே போக்கிவிடவேண்டும். பிறகு கொடிவேலிவேர்ச்சாற்றைவிட்டு இரண்டு சாமநேரமரைத்து வெய்யிலில் வைத்துலர்த்தி ஊதிப்போக்கிவிடவேண்டும். இவ்விதமே வெள்ளைச்சாரணை வேர்ச்சாறு, வெள்ளைச்சாரணை இலைச்சாறு, குப்பைமேனிச்சாறு, கூத்தன் குதம்பைச்சாறு, பொன்னுங்காணிச்சாறு, செம்முள்ளிச்சாறு ஆகியவைகளில் ஒவ்வொரு சாமம் அரைத்து உலர்த்தி ஊதிப்போக்கிவிடவேண்டும், பிறகு சாரணை வேர்ச்சாற்றையும் தண்ணீரையும் கலந்து மேற்படி இரசத்தில் விட்டு நன்குகலந்து துணியில்வைத்துப் பிழிந்துக்கொள்வதேயாம். விருப்பமானவர்கள் சிரமத்துக்குப் பால்மாருமல் இவ்விதம் செய்து கொள்ளலாம். இவ்விதம்செய்ய சக்தியில்லாதவர்கள் இந்நூலின் ஆரம்பத்தில் சொல்லியிருக்கிற முறைகளில் ஒருவகையாகவுஞ் செய்துகொள்ளலாம்.

**கெந்தகத் தூய்மை:**— கெந்தகத்தை இரும்புக்கரண்டியில்வைத்துக் கொஞ்சம் நெய்விட்டு உருக்கிப் பசுவின்பாலில் சாய்க்க வேண்டும். ஆறினபின்பு முன்போல் நெய்யைச்சேர்த்துருக்கி வேறு புதியபாலில் சாய்க்கவேண்டும், இவ்விதம் மடக்கி மடக்கிப் பசுவின் பாலில் ஏழுதடவையும், வாழைத்தண்டுநீரில் ஏழுதடவையும் உருக்கிச் சாய்க்கத் தூய்மையாகும்.

**இலிங்கத் தூய்மை:**—இலிங்கத்தைக் கல்வத்திற் பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சேர்த்து ஒருசாம நேரமரைத்து உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதமே மடக்கி மடக்கி மூன்று தடவை அரைத்தரைத்து உலர்த்திக்கொள்ளத் தூய்மையாகும். அல்லது, இலிங்கத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து வடிகட்டின எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்றுநாள் ஊறவைத்துக் கழுவி வெய்யிலில் உலர்த்திக்கொள்ளத் தூய்மையாகும்.

**அரிதாரத் தூய்மை :**— அரிதாரத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து பீங்கானிற்போட்டு புரசிலைச் சாற்றை விட்டு ஊறவைத்து மூன்றுநாள் சென்றபின்பு அதனைக்கழுவி வெய்யிலிலுலர்த்திக்கொள்வதே அதன் தூய்மையாகும். அல்லது, சுண்ணாம்பில் பனங்கள்ளை விட்டு வேகவைத்து தூய்மைசெய்து கொள்ளலாம். இந்த முறை அநேகருக்குத்தெரிந்ததே ஆயினும்,இதில் சில சிறப்புடைய மர்மங்களிருப்பதால் அடுத்த ஆரும்பாகத்தில் மால்தேவிச் செந்தூரமென்னும் தலைப்பில் எழுதக் கடவுள் அருள்செய்வாராக.

**மனோசிலைத் தூய்மை :**— இதனைச் சிறுதுண்டுகளாகச் செய்து கோவைத்தண்டுச்சாற்றில் மூன்று நாள் ஊறவிட்டுக் கழுவிக்கொள்வதே இதன் தூய்மையாகும்.

**மருத்துணவு :**— இதுமிகவும் அருமையான மருந்தாகையால் இளமையினருக்கு பத்தியமில்லாமலே உபயோகிக்கலாம். ஆனால், நோய்கடினமாக இருந்து முரட்டுஉடலாகவும் இருந்தால் சமயோசிதம்போல புளி, புகை முதலிய வைகளை நீக்கிப் பத்தியம் வைக்கலாம். பத்தியம் ஏற்படுத்துவதும் ஏற்படுத்தாததும் மருத்துவர்கள் புத்திக் கூர்மையைச்சார்ந்தது. அந்த கருத்துக்களையெல்லாம் இங்கெழுதுவது அசாத்தியம். அநுபவசாலிகள் தாமே தெரிந்துக்கொள்வார்கள்.

## 711. சரபஞ்ச இரசசெந்தூரம்

மேற்கண்டபடி தூய்மைசெய்த இரசம் 3 பலம் (105 கிராம்) கெந்தகம் 1½ பலம் (52½ கிராம்), குப்பைமேனிச்சாறு, கூத்தன் குதம்பைச்சாறு, பொன்னுங்காணிச்சாறு, செம்முள்ளிச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**— மேற்கண்ட இரண்டையும் கல்வத்திலிட்டுத் தொந்தித்தரைத்து நன்ருக கறுத்தபின்பு, குப்பைமேனிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து வெய்யிலில் வைத்து



ஈரமுலர்ந்தபின்பு, கூத்தன் குதம்பைச்சாற்றை முன்போல் விட்டு ஒருசாமநேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரமுலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு, பொன்னுங்காணிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டு சாமநேரமரைத்து உலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு, செம்முள்ளிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து எட்டுசாமமரைத்து வெய்யிலில் வைத்துச் செம்மையாகக் காயவைத்துப் பொடித்து ஏழுசீலைமண் செய்துலர்த்தின கெங்காசலக்குப்பியில் அரைவாசி போட்டு வாய்க்குப் பலப்பக்கல் மூடியிட்டு வலுவாகச்சீலைச்செய்து வட்டடுப்பில் ஒரு பானையை வைத்து அதில் நாலு விரற்கிடை மணலைக்கொட்டி அதில் குப்பியை வைத்துத்தாழி நிறைய மணலைக் கொட்டித் தாழி வாயை மூடிச் சீலைமண் செய்து, தான் வழிபடு கடவுளைத் தியானித்து, ஒருசாதி சிறுவிறகால் தீபாக்கினியாக இரண்டுசாமமும், கமலாக்கினியாக இரண்டு சாமமும் காடாக்கனியாக இருபது சாமமும் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு தான் வழிபடு கடவுளைவழுத்தி, எடுத்துப்பார்க்கக் கடவுளினது அருளால் முருக்கம்பூப்போலச் சிவந்த செந்தூரமாகியிருக்கும்.

**அளவு :**— 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்தும், தீரும்நோய்களும் :**—மேற்ருேல் சீவின சுக்கு மிளகு, அரிசித்திப்பிலி, இவற்றைத்தனித்தனியே இளவறுப்பாக வறுத்துத் தனித்தனியே பொடித்தத்தூள் வகைக்கு 5 குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை (3½ கிராம்) இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து.காலை, மாலை இரண்டு வேளையும் நாற்பதுநாள் உட்கொண்டுவர, வாயு, சூலை, குன்மம் ஆகியவை தீரும்.

அரிசித்திப்பிலியை இளவறுப்பாக வறுத்து இடித்தத்தூள் ½ வராகனெடை (1¾ கிராம்), தேன் 1 வராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு நேரமும் நாற்பதுநாள் உட்கொள்ள, ஈளை இருமல், எலிக்கடி, மந்தாரகாசம், சுவாசகாசம், வாதகாசம் ஆகியவை தீரும்.

பொன்முசுட்டைவேர், கடலழிஞ்சிப்பட்டை, கோரைக் கிழங்கு,விலாமிச்சம்வேர் இவற்றைத் தனித்தனியேத் தூள் செய்து வகைக்கு 8 குன்றிமணியெடை, தேன் 2 வராகன் எடை (7 கிராம் இவற்றைச்சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு வேளையும் நாற்பது நாள் உட்கொள்ள, இரத்தத்

தூய்மை உண்டாகும். இரத்தவிருத்தி உண்டாகும். அதிக இந்திரிய விர்த்தியும், அதிகபலம், தைரியம், ஊக்கம் முதலியவை களும், உடல் கட்டழகு, உடல்வனப்பு, முகவசீகரம் ஆகியவை களும் உண்டாகும் உடல்நாற்றம் வாய்நாற்றம் ஆகிய கெட்ட நாற்றம் நீங்கிச் செங்கழுநீர்ப் பூவின் சுகந்த வாசனையுண்டாகும்.

கோழியவரையிலைச்சாறு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற் கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு நேரமும் முப் பது நாள் உட்கொள்ள ஆறுவகைக் கழிச்சலும், கடுப்பும் தீரும்.

வெடியுப்பு, வெண்காரம், நவச்சாரம், சீனக்காரம், கறியுப்பு இவை வகைக்கு $\frac{1}{4}$ வராகன் எடை: இவற்றைத் தூள்செய்து கொள்க தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவற்றைச் சேர்த்து மேற்படி. செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டுவேளையும் இருபதுநாள் உட்கொள்ள, எட்டுவகைக் குன்மநோய்கள், கழிச்சல்கள், வயிற்றி ரைச்சல், மயக்கம், தியக்கம், வாயு, அக்கினிமந்தம் ஆகியவை தீரும்.

கறியுப்புப்பொடி 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டுநேரமும் உட் கொண்டுவர, தொடர்கழிச்சல், மூலக்கிராணி, அக்கினிமந்தம் நெஞ்செரிவு, புளித்த ஏப்பம், அரோசகம் ஆகியவை தீரும்.

நாரத்தம்பழச்சாறு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), வடித்த கஞ்சி, $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து கஞ்சி சூட்டுடன் குடிக்க வேண்டும், இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் குடித்து வந்தால், பிரமேகம், நீர்க்கடுப்பு ஆகியவைகள் வெகு சீக்கிரத்தில் குணப்படும்.

கஞ்சா இலைச்சாறு $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), தேன் 1 வரா கன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துக் கொடுத்துவர, சீழ்க்கடுப்பு, இரத்தக்கடுப்பு, சீதபேதி முதலியநோய்கள் தீரும்.

பெருங்காயத்தூள் 3 குன்றிமணிபெடை, தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந் தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டுநேரமும் இருபதுநாளுட் கொள்ள, வயிற்றிலுள்ள அறுபதுவகை வாயுக்கள், சத்திகுன்மம், வலிகுன்மம், எரிகுன்மம் முதலிய நோய்களெல்லாம் தீரும்.



அழிஞ்சிப்பட்டைச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்) தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்) இரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டுவேளையும் நாற்பது நாள் உட்கொண்டுவர, பதினெட்டுவகை குட்டநோய்கள், குறை நோய், வெடிசூலை, தீராப்புண், கடிநஞ்சு, சிரங்குகள், சொறிவகை கள் ஆகியவை தீரும்.

எலுமிச்சம்பழ மணப்பாகு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்) இதில் மேற்படி செந்தூரந்தை அளவுப்படி சேர்த்துண்ண பைத்தியம், பித்த நோய்கள் ஆகியவைகள் தீரும்.

தாய்ப்பால் 2 வராகன் எடை, தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந் துண்ண, பித்தகாசம், பதின்மூன்றுவகைச் சன்னிகள் கலந்துண்ண ஆகியவை தீரும்.

சீதேவிச்செங்கழுநீர்க் கிழங்குச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து இரண்டு வேளையும் இருபது நாளுட்கொள்ள, வாதபித்த சிலேத்துமதோடங் கள், சூலைநோய்கள், நீர்க்கழிச்சல் ஆகியவைகள் தீரும்.

இதற்குச் சரபஞ்சரச செந்தூரமென்றும், சர்வாக்கினிரச செந் தூரமென்றும் பெயர்.

**மருத்துணவு** :— உடல் வலிவு, நோய்வலிவு ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் இலகு பத்தியமாகவும், கடின பத்தியமாகவும், வைக்க வேண்டியது.

மேற்கண்ட செந்தூரத்தில் இரசம் கெந்தி ஆகிய இரண்டு சரக்குகளேயாயினும் இதன் செய்பாகத்தால் மேற்கண்ட சிறந்த குணங்கள் உண்டாகின்றன.

## 712. சர்வநோய் ஹரசண்டமாருத செந்தூரம்

மேற்கண்டபடி தூய்மைசெய்த இரசம் 3 பலம் (105 கிராம்( கெந்தகம் 3 பலம் (105 கிராம்), கற்றாழஞ்சாறு, கூத்தன் குதம்பைச் சாறு, அரசம்பட்டையையும் கடுக்காயையும் சமபாகமாகச் சேர்த் திடித்து ஊறவைத்தநீர், செம்முள்ளிச்சாறு ஆகியவை வகைகுச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— மேற்படி இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு கற்ருழைச்சாற்றைச்

சிறுகச் சிறுகவார்த்து ஒருநாளரைத்து மறுநாள் வெயிலிலுலர்த்திக் கொள்ளவும். 1 பலம் (35 கிராம்), கடுக்காயையும், 1 பலம் (35 கிராம்) அரசம்பட்டையும் நையச்சிதைத்து ஒன்றரைப்படிநீரை விட்டு 8 சாமம் ஊறவைத்து நன்ருகப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கின நீரை விட்டி முன்லோவே ஒருநாளரைத்து மறுநாள் உலர்த்திக்கொள்ளவும். பிறகு செம்முள்ளிச்சாற்றை விட்டு முன் மாதிரியே மூன்றுநாளரைத்து வெய்யிலிலுலர்திச் செம்மையாக உலர்ந்தபின்பு பொடித்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின புட்டியில் அரைவாசியிருக்கும் படியாகப் போட்டு, வாய்க்குப் பலபக்கல் மூடியிட்டு அதற்கும் சீலைமண் செய்துலர்த்தி ஒரு பெரியபானையை வட்டடுப்பின்மீது வைத்து, அதன்மீது முன்சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் குப்பிவாய்தெரியும்படியாக மணலைக்கொட்டி நிரப்பி, தான் வழிபடு கடவுளை வழுத்திச் சிறிய விறகினுல் தீபாக்கினியாக ஒருசாமமும், கமலாக்கினியாக இரண்டுசாமமும் பெரியவிறகினுல் இருபத்தொரு சாமமும் எரிக்க வேண்டும். பிறகு ஆறவிட்டு தான் வழிபடுகடவுளைத் தியானித்துக் குப்பியை திறந்துபார்க்கச், செந்தூரமானது முருக்கம்பூப்போலே சிவந்திருக்கும்: இதனைப்பொடித்து புட்டியில் பத்திரபடுத்தவும்.

**அளவு** :— 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்தும, தீரும்நோய்களும்** :— மேற்ரேல்சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இவற்றை இளவறுப்பாக வறுத்துத் தனித் தனி சூரணித்து வகைக்கு 5 குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவற்றைக்கலந்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துக் காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் கொள்ள, மகாவாதம், தீராவாதம், இருமல், குன்மம், சூலைவகைகள் வாயுக்கள் ஆகியவை தீரும்.

இளவறுப்பாக வறுத்திடித்த அரிசித்திப்பிலித்தூள் $\frac{1}{4}$ வராகன் எடை, பறங்கிபட்டைத்தூள் $\frac{3}{4}$ வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, ($3\frac{1}{2}$ கிராம்) இவற்றைச் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி இரண்டுவேளையும் நாற்பதுநாள் உட்கொள்ள, ஆருத புண்களெல்லாம் தீரும்.

சங்கிலைச்சாறு கால் ஆழாக்கு, இதில் மேற்படிசெந்தூரத்தைக் கலந்து காலையில் ஒருவேளைமாத்திரம் பருகச்செய்ய வேண்டும். இவ்விதம் நாற்பது நாள்செய்தால், உளமாந்தை, சுரமாந்தை, காசம், ஆரிகுரல், இளைப்பு, துரப்பு ஆகியவை தீரும்.

தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), பசுவின்னெய் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இரண்டையும் சேர்த்து செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து இரண்டுவேளையும் 5 நாள், அல்லது, 10 நாள் கொள்ள



வேண்டும். கூடுமானுல் தினந்தோறும் வெந்நீரில் குளித்து வரவும் வேண்டும். இப்படிச் செய்வதால், முறிந்தஎலும்பும் கூடும். அடி பட்டுநொந்த சதையின் நோவும் தீரும். உடல்கடுப்பு, குத்தல், மூட்டுக்களில் உண்டாகும் உளைச்சல், உட்புண், தொண்டைப் புற்று, அரிகுரல், நாத்தடிப்பு, வாய்ப்புண், வாய்க்கிரந்தி ஆகியவை தீரும்.

அண்டத்தைலம் தேவையான அளவு, இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி குழைத்து, முகத்தின் மேற்பூச்சாகப்பூச, முகவாதம் தீரும்.

வெள்ளைப்பூண்டுத்தைலம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண பதின்மூன்று வகை சன்னிகளும் தீரும்.

பேய்க்குமட்டிக்காய்ச் சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து 5 அல்லது 10 நாள்கொள்ள கருப்பைவிப்புருதி, மடிவிப்புருதி, கால்விப்புருதி, குடல்விப்புருதி ஆகியவை தீரும்.

எருக்கம்பால் தேவையான அளவு, இரண்டு குன்றிமணி எடை இந்தச் செந்தூரத்தைக் குழைத்துக் கொட்டுவாயில் தடவ, தேள் விடம் உடனே தீரும்.

காஞ்சுராப்பட்டைத்தூள் (காஞ்சுரம் = எட்டி) 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), வெந்நீர் 2 பலம் (70 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள எல்லாவகை நஞ்சும் தீரும்.

ஆவாரம்விதைத் தைலம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து இருவேளையும் இருபது நாள் உட்கொள்ள எல்லாவகை நீர்க்கழிச்சலும் தீரும்.

நற்சீரகத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), வெண்ணெய் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து இரண்டுவேளையும் இருபது நாள் உட்கொள்ள எண்பதுவகை வாதநோய்களும் தீரும்.

புரசிலைச்சாறு, அல்லது, வல்லாரைச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 2 வராகன் எடை. இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டு வர வயிற்றிலுள்ள சிறுகிருமிகள், பெரும்பூச்சிகள், தட்டைபூச்சிகள் ஆகிய எல்லாப் பூச்சிகளும் வகை வெளிப்பட்டுப்போம்.

கழுதைமூத்திரம், வெள்ளாட்டு மூத்திரம், பசுவின் மூத்திரம், இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), தேன் $7\frac{1}{2}$ வராகன் எடை ($26\frac{1}{4}$ கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்படி செந்தூரதை அளவுப்படி சேர்த்துப் பருகச் செய்துவர, பைத்தியம் பிரமை, அறிவில்லாமை, புத்திபேதலித்திருத்தல் ஆகியவை தீரும்.

இஞ்சிச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து பருகச்செய்துவர, பித்தம். மயக்கம் கிறுகிறுப்பு, தலைச்சுழலல் முதலியவை தீரும்.

கோரைக்கிழங்குச்சூரணம் 1 வராகன் எடை, ($3\frac{1}{2}$ கிராம்) தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்);இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர, தாதுவிருத்தி, இந்திரியவிருத்தி ஆகியவைகளுண்டாகி, உடல்அழகு, உடல் வசீகரம், முகவசீகரம் ஆகியவைகளுண்டாகும்.

எலுமிச்சம்பழச்சாறு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்); இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண உட்டிண சம்பந்தமான நோய்கள் தீரும்.

செருப்படிச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண பதினெட்டுவகைக் குட்ட நோயும் தீரும்.

புளியிலைச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, காமாலைநோய் தீரும்.

**மருத்துணவு** :— நோயின் வலிவு, உடல்வலிவு, ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோலவும், சமயோசிதம்போலவும் ஏற்படுத்த வேண்டும்.

## செந்தூரக் குப்பிக்குச் சீலைசெய்யும் விதம்

களிமண், இதனை வெய்யிலில் உலர்த்திப் பொடித்துக் கல் முதலியவைகளில்லாமல் வடிகட்டிக் கொள்ளவேண்டும்.



வெள்ளைக்கல், இதனையும் பொடித்துவடிகட்டிக் கொள்ள வேண்டும்.

உமிக்கருக்கு, இதனையும் பொடித்து வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

புதுஓடு, இதனையும் பொடித்து வடிகட்டிக்கொள்ள வேண்டும்.

கடுக்காய்த்தோல், இதனையுமிடித்துத் துணியில் வடிகட்டிக் கொள்ளல் வேண்டும்.

இவ்வைந்தையும் சமபாகமாக எடுத்து நீர் விட்டு அம்மியில் மைபோல அரைத்துச் சீலையில் தடவி கெங்காசலக் குப்பியின்மீது, அல்லது, சோடாபுட்டியின்மீது சுற்றி வெய்யிலில் உலர வைக்க வேண்டும். அது நன்குகஉலர்ந்தபின்பு முன்போல சீலைசித்தபடுத்தி அதன்மீது சுற்றவேண்டும். வெய்யிலில் காயவைத்து நன்கு உலர்ந்தபின்பு முன்போல் சித்தபடுத்தின சீலையை அதன்மீது சுற்ற வேண்டும். இவ்விதமே ஒவ்வொரு சீலையைச்சுற்றி ஒவ்வொன்றும் உலர்ந்தபின்பு மறுசீலை சுற்றவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு சீலைமண்செய்து உலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்வதே செந்தூரக்குப்பியாம். இவ்விதம் சித்தபடுத்தின குப்பியில் செந்தூரம் இருப்பதினால் எத்தனைநேரம் எரித்தபோதிலும் குப்பிவெடிக்காமல் அக்கினிக்குச் செயித்து நிற்கும்.

## செந்தூரக்குப்பி வாயடைமருந்து

கடுக்காய்த்தூள், களிப்பாக்குத்தூள், உப்புத்தூள், குளவிக் கூட்டுத்தூள், கிட்டத்தூள், கருவேலம்பிசின்தூள், பொன்மெழுகு, வெள்ளைக்கல் தூள், வெல்லம், சுண்ணாம்பு இவையெல்லாம் வகைக்குச் சமனெடை.

இவை எல்லாவற்றையும் அம்மியில் வைத்து மஞ்சட் கருவை விட்டு வெண்ணெய் போலரைத்துப் பிறகு எலுமிச்சம் பழச் சாற்றைவிட்டு அரைத்துப் பிசின்போலான பதத்தில் எடுத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவேண்டும். (செந்தூரக்குப்பிக்கு மாக்கல் மூடிட்டு சீலைமண்செய்து) என்றெழுதியிருக்கு மிடத்தில் குப்பிவாயிலிருக்கிற பலப்பக்கல் மீதும், வாயிலும் மேற்படி யோகத்தை வைத்து நன்கு அடைத்துத் தீற்றுக்கல்லால் தீற்றிச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும். செந்தூரக் குப்பிவாயை இவ்விதம் பந்தனஞ் செய்யவேண்டும். இப்படி செய்வது செந்தூரம் பொங்கி வெளியில் விழாமல் தடுக்கும். மேற்கண்ட யோகத்திற்கு குப்பிவாயடை மருந்தென்று பெயர்.

## செந்தூரக்குப்பி பொங்கினுல் பக்குவம்

செந்தூரம் எரிக்கும்போது மேற்கண்ட விதமாக வாயடை மருந்தினுல் வலுவாகக்கெட்டி செய்திருந்தால் பொங்காது. ஒரு வேளை அது கெட்டியாயிராவிட்டால் பொங்கும். சோற்றுக்கற்று ழைச்சோற்றை ஒரு மெல்லிய துணியில்தளர பொட்டலமாகக் கட்டிவைத்திருக்கவேண்டும். பொங்கும் சமயத்தில் மேற்படி பொட்டலத்தால் ஒற்றிடமிட்டால் பொங்குதல் தணிந்து போகும். ஆகையால் செந்தூரமெரிக்க ஆரம்பிக்கும்போதே இந்தப் பொட்டலத்தைச் சித்தப்படுத்தி முன்சாக்கிரதையாகவே வைத்திருக்க வேண்டும்.

## செந்தூரக்குப்பி வெடித்தால் பக்குவம்

எந்தவகைக் குப்பிவைப்பு செந்தூரமாலுைம் எப்போதும் இன்னொரு குப்பியைச்சித்தபடுத்திக் கையிருப்பாகவே வைத்திருக்க வேண்டும். ஏனெனில், சில சமயங்களில்;செந்தூரமெரிக்கும்போது உள்ளே மருந்து பொங்கிக் குப்பிவெடித்துப்போகும். அந்தசமயங்களில் மறுகுப்பியில் அந்த மருந்தை எடுத்துப்பாய்ச்சி மறுபடியும் எரித்துக்கொள்வதற்கேயாம்.

## வாலுகாயந்திரத்தின் விவரம்

செந்தூரத்தை எரிக்கும் பானையானது அடிகனத்ததாயும் அரைத்த மண்ணினுற் செய்யப்பட்டதாயும், நன்ருகச் சிவந்த பதமாக எரிந்ததாயும், ஓட்டை, உடைசல், நெளிதல் முதலியவை இல்லாததாயும் எட்டுப்படி மணல் கொள்ளத்தக்கதாயும் இருக்க வேண்டும். இதில் போடும் மணலானது நல்ல தண்ணீரிலுள்ள மணலாக இருக்கவேண்டும். அதிகப் பெருமணலாகவாவது அதிகப் பொடிமணலாகவாவது இல்லாமல் நடுத்தரமானதாய் இருக்கவேண்டும். உப்புநீர்மணல், கறுப்பு வண்ணமுள்ள மணல் ஆகியவைகளும் ஆகா. இவ்விதம் மணல் நிறைந்திருக்கும் பாத்திரத்திற்கு வாலு காயந்திரமென்று பெயர்.

## செந்தூரக்குப்பியில் மருந்திடும் அளவு

எந்தவகைச் செந்தூரத்தையும் செந்தூரக்குப்பியில் அரைவாசி மட்டம்தான் நிரப்பவேண்டும். செந்தூரச்சரக்கை அதிற்போட்டு அழுத்திவிடலாகாது. பூப்போலே போட்டு வைக்கவேண்டும். எந்த விதத்திலும் முக்கால்வாசிக்கு அதிகம் சரக்கிருக்கலாகாது அப்படி இருந்தால் அவசியம் குப்பிவெடிக்கும்.



**விண்ணப்பம்:**—குப்பிவைப்புச் செந்தூரத்தைச் செய்ய விருப்பம் உள்ளவர்கள் மேற்கண்ட விஷயங்களைக்கவனத்தில் வைத்துச் செய்வார்களாயின், கடவுளினது அருளால் மேற்கண்ட செந்தூரங்களைச்செய்து சித்திபெறுவார்களென்பதில் சந்தேகமில்லை.

## 713. இரசப்பிரளயச் செந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 3 பலம் (105 கிராம்), தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 2½ பலம் (87½ கிராம்), செம்முள்ளியிலைச் சாறு, செம்பரத்தம்பூச்சாறு, மிளகுதக்காளிச்சாறு, செருப்படிச் சாறு, மாதுளை இலைச்சாறு, மாதுளம் பூச்சாறு, இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :** — மேற்படி இரண்டு சரக்கையும் தொந்தித் தரைத்து நன்ருகக்கறுத்தபின்பு மேற்கண்டபடி ஆறுவகைச்சாறுகளினுலும் ஒவ்வொருநாள் அரைத்து ஒவ்வொருநாள் உலர்த்தி முடிவாகச்செம்மையாக உலர்த்திப் பொடித்து ஏழு சீலைமண் செய்த கெங்காசலக் குப்பியில் அரைவாசியிட்டுக் குப்பிவாய்க்கு மாக்கல் மூடியிட்டுச் சீலைசெய்துலர்த்திச் செந்தூரப் பானையில் நாலுவிரற்கிடை மணலிட்டு அதன்மேல் குப்பியை வைத்துப் பானை நிறைய மணலிட்டு வட்டடுப்பிலேற்றித் தான் வழிபடு கடவுளைத் துதித்து, ஒரு சாதிச்சிறுவிறகால் ஒருசாமம் தீபாக்கினியாகவும் இரண்டுசாமம் கமலாக்கினியாகவும், இருபத்தொருசாமம் காடாக்கினியாகவும் எரித்துக்குளிர ஆறவிட்டு, தான் வழிபடு கடவுளைப் பூசைசெய்து ஏழைகளுக்கு அன்னமிட்டு, குப்பியை உடைத்துப் பார்த்தால் முருக்கம்பூப்போன்ற வண்ணமுள்ள செந்தூரமாய் இருக்கும். இதனைப்பொடிசெய்து புட்டியில் பத்திரப்படுத்தவும்

**துணைமருந்தும், தீரும்நோயும் :** — திரிகடுகை, இளவறுப்பாக வறுத்து இடித்தத்தூள் வகைக்கு 5 குன்றிமணியெடை, (3½ கிராம்) தேன் 1 வராகன் எடை, மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து இரண்டு வேளையும் இருபது நாள் உட்கொள்ள, சூலைகள், வாயுக்கள். வாதநோய்கள் ஆகியவை தீரும்.

வெள்ளைப்பூண்டுத் தைலம் 1 வராகன் எடை (3½ கிராம்);இதில் அளவுப்படி எட்டுநாளுட் கொள்ளப் பதின்மூன்று வகை சன்னி தீரும்.

பூநாகம் 2 வராகன் எடை (7 கிராம்) முசுறுமுட்டை, மான் கொம்புத்தூள், ருத்திரட்சத்தூள், இவற்றை தாய்பால் விட்ட

கொம்புத்தூள், உருத்திராக்கத்தூள் இவைகளை தாய்ப்பால் விட்டரைத்துக் குழப்பி மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து மூன்று நாளுட்கொள்ள சுரம், சன்னி, பைத்தியம், பிதற்றுதல் முதலியவை தீரும்.

திரிகடுகுத்தூள் 5 குன்றிமணி எடை, இஞ்சிச்சாறு தேன் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), இவற்றைச் சேர்த்து அளவுப்படி எட்டுநாளுட்கொள்ள, பிரசவித்த வயிற்றில் சீழ்ப்பிடித்திருத்தல், அதனுல் உண்டாகும்சுரம், சன்னி ஆகியவை தீரும், அவ்விதப்பெண்களுக்கு நகுவை இலையை வைத்து வயிற்றில் கட்டி வந்தால் மிகவும் தன்மையாம்.

சீந்திற் சர்க்கரை 1 வராகன் எடை (3½ கிராம்), பசுவின் வெண்ணெய் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி மருந்தை அளவுப்படி கலந்துபத்துநாள் உண்ண மேகம், பிரமியம், கல்லடைப்பு ஆகியவை தீரும்.

முருங்கையின் வடக்கே போகிற வேர்ப்பட்டையைத் தண்ணீர் வார்த்தரைத்து இரண்டுக் குன்றிமணி எடை மேற்படி செந்தூரத்தை அதிற்குழைத்து மேலே பூசவேண்டும். இவ்விதம் பத்துநாள் பூசிவரத் திமிர்வாதம் தீரும்.

கால் ஆழாக்கு வெண்ணொச்சிச்சாற்றில் செந்தூரத்தைக் கலந்து மூன்றுநாள் கொள்ள, மகாவாதம் தீரும்.

கால் ஆழாக்கு வாதமடக்கிச் சாற்றில் செந்தூரத்தைப் பத்து நாளுட்கொள்ள சர்வாங்க வாதமுந் தீரும்.

கால் ஆழாக்கு இண்டிலைச் சாற்றில் நாற்பதுநாள் உட்கொள்ள, தோல்வாதம் தீரும்.

கால் ஆழாக்கு வாகை இலைச்சாற்றில் கலந்து இருபதுநாள் உட்கொள்ள மணிக்கட்டு வாதம், சன்னிவாதம் ஆகியவை தீரும்.

ஆவாரம்விதை, அல்லிவிதை, இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்) இவற்றை நீர்வார்த்து மைபோலரைத்துக் கொள்க. காந்தச்செந்தூரம் 2 குன்றிமணி எடை இவற்றைச் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துத் தேற்றான்விதை அளவு மாத்திரைகள்செய்து, வடிகட்டின எருமைத்தயிர்ச் சக்கையில் ஒரு மாத்திரையை வைத்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் இரண்டுவேளையும் பத்துநாளுட்கொள்ள, எல்லாவகை நீர்க்கழிச்சலும் தீரும்.

நீர் முள்ளிச்சாறு ¼ ஆழாக்கு, இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண எல்லாவகை சுரமும் தீரும்.



இதற்குத் திரிபுரதாண்டவரசசெந்தூரம் என்னும் மறுபெயருமுண்டு.

**மருத்துணவு :—** உடல்நிலை, நோயின்வலிவு, உடல்வலிவு, ஆகியவைகளுக்குத் தகுந்தநுபோலவும், சமயோசிதம்போலவும், ஏற்படுத்தவேண்டும்.

இதன் அருமை பெருமைகளெல்லாம் அனுபவசாலிகளுக்குத் தெரியுமே தவிர மற்றவர்களுக்கு அவ்வளவாய்த் தெரியாது. அனுபோகசாலிகள் இதனுண்மையைத் தத்தம் அனுபவத்தில் தெரிந்துகொள்வார்களாகையால் இங்கு அதிகமாயெழுதாதுவிடுத்தனம்.

## 714. காளகண்ட மேகநாராயண செந்தூரம்

**(கரிசல்முறை)**

தூய்மைசெய்த இரசம் 3 பலம் (105 கிராம்), தூய்மைசெய்த உலாந்தா லிங்கம் 1½ பலம் (52½ கிராம்), தூய்மைசெய்த பொனரிதாரம்பலம் 1 (35 கிராம்), தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 1¼ பலம் (48¾ கிராம்), தூய்மைசெய்த மனோசிலை ½ பலம் (70 கிராம்), கீழ்க்காணும் திராவகம் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—**இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்தரைத்து மேற்படி திராவகத்தைச் சிறுகச்சிறுக வார்த்து மூன்றுநாளரைத்து வெய்யிலிலுலர்த்திப் பொடித்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின குப்பியில் அரைவாசிமட்டும் நிறைத்துக் குப்பிவாயை மூடாமல் வாலுகாயந்திரத்தில் வைத்து ஆவாரம் விறகால் அல்லது ஒரு சாதி விறகால் தீபாக்கினியாக ஒருசாமமும், கமலாக்கினியாக இரண்டுசாமமும், காடாக்கினியாக நான்குசாமமும் ஆக ஏழுசாமம் எரித்துக் குளிர ஆறினபின்பு எடுத்துக்குப்பியை உடைத்துச் செந்தூரத்தைப் பொடித்து குப்பியில் பத்திரப்படுத்தவும், குப்பியை எரிக்கும்போது வாயில் மருந்து வந்தடைத்துக் கொள்ளுமாகையால் அடிக்கடி சிலாகையை விட்டுக் கிளறிவரவேண்டும். சிலாகைக்கு மருந்து இளகலாயில்லாமலும், கெட்டிப்பதமாக சிலாகையில் மருந்து ஒட்டாமலுமிருந்தால் அதுவே பதமென்றறிந்து தீயை நிறுத்திவிடவேண்டும்.

**அளவு :**—1 முதல் 1½ குன்றி எடை

**துணைமருந்தும் தீரும்நோயும் :**— 71-ஆம் எண்ணில் சொல்லியிருக்கிற காளமேக நாராயண செந்தூரத்தில் சொல்லியிருக்கிற துணைமருந்துகளில் கலந்துக்கொடுத்தால், அங்கு சொல்லியிருக்கிற நோய்களெல்லாம் தீரும். இன்னும் பிரதானமாக இருமல், காசம், சுவாசம், சுரம் முதலிய கபசம்பந்தமான தொண்ணூற்ருறு வகை நோய்களும், வாதசம்பந்தமான நோய்கள், வாயுசம்பந்தமான நோய்கள் எல்லாம் தீரும். ஆனால் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளில் உபயோகிக்கவேண்டுமென்பது மருத்துவர்களின் அபிப்பிராயமாகும்.

## மேற்கண்ட செந்தூரத்திற்குத் திராவகம்

கறியுப்பு, வெடியுப்பு, சீனக்காரம், காந்தம், நெல்லிக்காய் கெந்தகம், வெண்காரம், கடல்நுரை இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்).

**செய்முறை :**—இவை எல்லாவற்றையும் பொடித்து ஒருபுட்டி சாராயத்தைச் சிறுகச் சிறுகவிட்டு அரைத்துச் சாருயமெல்லாம் சென்றபின்பு வெய்யிலிலுலர்த்திப் பொடித்து திராவகப் பானையிற் போட்டு வாலைவைத்து, திராவகமிறக்கிக் கொள்ளவும்.

**குறிப்பு :**—இந்தச் சரக்குகளில் எவ்வளவு திராவகமிறங்குகிறதோ அவ்வளவு திராவகம் மேற்படி செந்தூரம் ஒருமுறைக்குப் போதுமானது. இதனைச் சிறுகச் சிறுகவிட்டு மேற்கண்டபடி மூன்று நாள் அரைத்தாலும்சரியே, அல்லது, செல்லுகிறவரையில் கைவிடாமலரைத்தாலும் சரியே. ஆவரவர்கள் புத்திக்கூர்மைக்குத் தகுந்தபடி செய்துகொள்ளவும்.

## 715. மகா பூரண சந்திரோதயம்

தூய்மைசெய்த இரசம் 6 பலம் (210 கிராம்), தூய்மைசெய்த கெந்தகம் 4½ பலம் (157½ கிராம்), தங்க அரப்பொடி 1 பலம் (35 கிராம்), பவளப்பொடி 1 பலம் (35 கிராம்), நன்முத்து 1 பலம் (35 கிராம்), மாணிக்கப்பொடி 1 பலம் (35 கிராம்), வெள்ளிப்பொடி ½ பலம் (17½ கிராம்), கையாந்தகரைச்சாறு, கொடிவேலி வேர்ப்பட்டையிற் கொஞ்சம் நீர்வார்த்திடித்துப் பிழிந்தசாறு, நீர்மேல்நெருப்புச்சாறு, கூத்தன் குதம்பைச்சாறு, முள்முருக்கம்பூச்சாறு, இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.



**செய்முறை :**— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு மற்றசரக்குகளையும் சேர்த்து ஒருமணி நேரமரைத்து முள்முருக்கம் பூச்சாற்றை விட்டு ஒருசாமமரைத்து வெய்யிலிலுலர்த்தி ஈரமுலர்ந்தபின்பு, கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு ஒருசாமமரைத்து வெய்யிலில் வைத்துலர்த்தி ஈரமுலர்ந்தபின்பு, கொடிவேலி வேர்ப்பட்டைச் சாற்றை சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்த பின்பு, நீர்மேல் நெருப்புச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமநேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்த பின்பு, கூத்தன் குதம்பைச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு ஒருசாமமரைத்து வெய்யிலில் வைத்துச் செம்மையாக உலர்ந்த பின்பு, ஏழு சீலைமண் செய்துலர்த்தின கெங்காசலக் குப்பியில் அரைவாசி அடைத்து வாய்க்குப்பலப்பக்கல் மூடியிட்டு அதன்மீது வலுவாகச் சீலைசெய்துலர்த்தி அடிகனத்த ஒருபானையில் நாலங்குலம் மணல்போட்டு அதன்மீது மேற்படி குப்பியை வைத்துப் பானைநிறைய மணல்கொட்டி, அடுப்பேற்றி, தான் வழிபடு கடவுளைத் தியானித்து, ஒருசாதி விறகால் தீபாக்கினி 2 சாமம், கமலாக்கினி 2 சாமம், காடாக்கினி 20 சாமமாக எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு, தான் வழிபடுகடவுளை பூசித்து, அன்னதான முதலியவைகள்செய்து, குப்பியை உடைத்துப்பார்க்கக் கடவுளின் அருளால் பூர்ணசந்திரோதயம் போல செந்தூரமாகிஇருக்கும். இதனை புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்தும் தீரும்நோய்களும் :**—அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளில் உபயோகித்தால், உடலிலுள்ள நாலாயிரத்தி நானூற்றி நாற்பத்தெட்டு நோய்களும் தீர்ந்து இரத்த விருத்தி, உடல்வலிவு, உடல்திடம், மனஉற்சாகம், ஊக்கம், தைரியம், திடச்சித்தம், வீரியம், அட்ட இலட்சுமிவிலாசம் முதலிய அநேக நன்மைகளுண்டாகும்.

இது ஒருவகைக் கற்பமாகையால் எல்லோருக்கும் கைவல்யமாகாது. ஆனால் உத்தமமானவர்களுக்கும், உதவியாகவும், சீவகாருண்யம் முதலியவைகளுள்ள சத்தியவான்களுக்கும், உதாரகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் கிடைக்கும். தன்வயிற்றை மாத்திரம் நிரப்பிக்கொள்ளும் லோபிகள் முதலியவர்களுக்கு இம்முறை கைவல்யமாகாது. ஒருவேளை மருந்து முடிந்தாலும் பெரியோர்கள் சாபமிருப்பதால் அதன் பூரணகுணத்தைத்தராது. ஆகையால் இந்த மருந்தை முடிக்கும்போது வைத்தியர்கள், பந்துவான ஏழைகள், முதலியவர்கள் மனதை சந்தோஷப்படுத்தி ஏழை

முதலானவர்களுக்கு அன்னதானம், ஆடைதானம் ஆகியவைகளும் செய்து ஆரம்பிக்கவும் உபயோகிக்கவும் வேண்டும்.

## 716. இலகுபூரண சந்திரோதயம்

தூய்மைசெய்த இரசம் 8 பலம் (280 கிராம்), தூய்மைசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் 16-பலம் (560 கிராம்) தங்க அரப்பொடி 1 பலம் (35 கிராம்) செம்பரத்தம்பூச்சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு தங்கப் பொடியையும் சேர்த்து ஒருமணி நேரமரைத்து செம்பரத்தம்பூச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுசாமநேரமரைத்து வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்தி, பிறகு குமரிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து எட்டுசாம மரைத்து வெய்யிலில் வைத்துச் செம்மையாக உலர்த்தி, ஏழு சீலைமண் செய்துலர்த்தினகாசிக்குப்பியில் அரைவாசி இட்டுக் குப்பிவாய்க்குப் பலப்பக்கல்லால் மூடியிட்டு வலுவாகச் சீலைசெய்து முன்சொல்லியிருக்கிறபடி வாலுகாயந்திரத்தில்வைத்து மூன்று நாள் இராப்பகல் விடாமல் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு குப்பியையெடுத்து உடைத்துப்பார்க்க சித்தரது அருளால் செந்தூரமாகியிருக்கும் இதனைப் பொடித்துக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :**—1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்தும் தீரும்நோயும் :**—அந்தந்த நோய்களுக்குத் தகுந்தபடி தக்க துணைமருந்துகளில் கொடுத்துவந்தால், உடலி லுள்ள எல்லா நோய்களும் தீரும். முதன்மையாகக் கபசம்பந்த மான நோய்கள், வாயு சம்பந்தமான நோய்கள் முதலிய அநேக நோய்கள் தீர்ந்து, உடல்வலிமை, உடல்வளமை முதலியவை யுண்டாகும். பத்தியம் முதலியவைகளெல்லாம் முன் சொன்ன வைகளே.

## 717. ஸ்ரீராம செந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 6 பலம் (210 கிராம்), தூய்மைசெய்த கெந்தகம் 6 பலம், தூய்மைசெய்த அரிதாரம் 5 பலம், தூய்மை செய்த சிறுகண்ணுகள் 4-பலம், மனோசிலை 2-பலம், இலிங்கம் 1½



பலம், எருக்கம்பால், மாதுளம்பூச்சாறு, தும்பைப்பூச்சாறு, செருப் படிச்சாறு, புரசம்பூச்சாறு, அல்லது, பட்டைச்சாறு, முள்முருக்கம் பூச்சாறு, செவ்வப்பு பட்டிப்பூச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—இரசத்தையும், நாகத்தையும், தொந்தித் தரைத்து மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து, எல்லா வற்றையும் ஒருங்குகச்சேர்த்து எருக்கம் பாலைச்சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துவெய்யிலில்வைத்து ஈரமுலர்ந்தபின்புமாதளம் பூச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமமரைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதமே மற்ற சாறுகளிலும் தனித்தனியே ஒவ்வொருசாமம் அரைத்து உலர்த்தி உலர்த்தி முடி வாகச் செம்மையாக உலர்த்திப் பொடித்து ஏழுசீலைமண் செய்து லர்த்தின காசிக்குப்பியில் அரைவாசி போட்டுக் காசிக்குப்பிக்கு மாக்கல்லிட்டு, வாய்க்குச் சீலைமண் செய்துலர்த்தி அடிகனத்த பானையில் நாலங்குலம் மணலிட்டு அதன்மேல்முன் குப்பியை வைத்துப் பானைநிறைய மணலிட்டு வாய்க்கு மண்தாலத்தால் மூடி வட்டடுப்பிலேற்றி, தான்வழிபடுகடவுளை வழிபாடுசெய்து தீபாக் கினியாக இரண்டுசாமமும் (6மணி) கமலாக்கினியாக இரண்டு சாமமும் (6மணி), காடாக்கினியாக இருபது சாமமும் (60மணி) ஒரு சாதி விறகால் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு, தான் வழி படுகடவுளை நினைத்துக், குப்பியையெடுத்து உடைத்துப்பார்க்க, கடவுளின் அருளால் சந்திர பிரகாசம்போன்ற செந்தூரமாகி இருக்கும். இதனைக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்தும் தீரும்நோயும் :**—இதனை நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துடன் கொடுக்க நீரிழிவுநோய்,குன்மநோய், ஊதுநோய், இருமல்நோய், இரத்தகாசம், கபக்கட்டு, கோழைக்கட்டு, சயம், சயகாசம், எலிக்கடி முதலிய தீராத நோய்களெல்லாம் தீரும், இன்னும், அநேகநோய்களுக்குக் தக்க துணைமருந்துகளில் கொடுத் துவர பலவகை நோய்கள் தீரும். அவரவர்கள் தங்கள் தங்கள் அனுபவத்தினுல் இதன் சிறந்த குணத்தைத் தெரிந்துகொள்வார் கள். இதைப்பற்றி இங்கு மேலும், எழுதுவது அவசியமில்லை.

**மருத்துணவு :**—சமயோசிதம்போலவும், உடல்வலிமை, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோலவும் ஏற்படுத்த வேண்டியது.

## 718. சுவர்ணஇரச செந்தூரம்

தூய்மைசெய்த இரசம் 1-பலம், தூய்மைசெய்தவீரம் ½-பலம் கெந்தகதிராவகம் (Sulphuric Acid) 1 அவுன்ஸ், நல்லெண்ணெய் 8-பலம், குவிந்திருக்கிறபீங்கான் கிண்ணம் 1.

**செய்முறை :**—மேற்படி பீங்கான் கிண்ணத்தில் இரசத்தை விட்டு வீரத்தைப் பொடித்து அதிற்போட்டு, கெந்தகதிராவகத்தை அதில்விட்டு மூன்றுசெங்கற்களை அடுப்புப்போலே அடுக்கிஅதன் மேல்மேற்படி பீங்கான் கிண்ணத்தை வைத்து, அதன்கீழ்அரை விரற்கனமுள்ள நூல்திரியை ஒரு விளக்கிற்போட்டு அது நிறைய மேற்படி எண்ணெயைவிட்டு விளக்கைக் கொளுத்திவைத்து எரித்துவரவேண்டும். எண்ணெய் செல்லச்செல்ல மறுஎண்ணெயை ஊற்றிவர வேண்டும். கிண்ணத்திலுள்ள மருந்தை அடிக்கடி கிளறிக் கொடுத்தும் வரவேண்டும். இவ்விதம், நான்குசாமம் எரித்து ஆறவிட்டுப் பார்த்தால் புட்டுப்போலிருக்கும். அதனை யெடுத்து வைத்துக்கொள்க. ஒருவராகனெடை (3½ கிராம்) வெண்காரத்தைப் பொரித்து ஒருகுகைக்குள் முழுவதும் பூசி அதில் முன்னெடுத்து வைத்திருக்கிறதைப் போட்டு தட்டான் உலையில் வைத்து ஊதி உருக்க தண்ணீர்போல உருகிநிற்கும். ஒருபுதுச்சட்டி யில் தண்ணீர்வைத்து அதில் மேற்படி குகையிலிருப்பதை சாய்த்துவிடவும். குளிர ஆறினபின்பு தண்ணீரை இறுத்து விட்டால் பவுனைராவின தூள்போலிருக்கும். இதனைக் கல்வத்திலிட்டு தண்ணீரைவிட்டு அலைந்துக் கழுவவேண்டும். இப்படிப் பத்துத் தடவை மடக்கி மடக்கி தீட்சைசெய்து (கழுவி) வெய்யிலிலுலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்,

**அளவு :**—1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :**—வெல்லம், தேன், பஞ்சதீபாக்கினி இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய் :**—மேகவாயு. சூலைநோய், குட்டம் முதலியவை தீரும்.

**மருத்துணவு :**—புளி, புகை, உப்பு ஆகியவைகளை நீக்கிவைக்க வேண்டியது.

**குறிப்பு:**—இந்த செந்தூரம் அதிகம் வேகமுடையது ஆகையால், இதனைத் தொடர்ச்சியாக உபயோகிக்கலாகாது. இளமை உடலினர், பெண்கள், பட்டணவாசிகள் ஆகியவர்களுக்கும் உபயோகிக்கலாகாது. முரட்டு இயல்புடைய



வர்கள், கடின உழைப்பாளிகள், முதலியவர்களுக்குச் சில மருந்துகள் பிடிக்காதாகையால், அத்தகையினர்களுக்கு இதனை உபயோகிக்கலாம்.

## 719. குரு இரச செந்தூரம்

ஒரு குகையில் ஒருவராகனெடை துத்தத்தைப் பொடிசெய்து வைத்து, அதன்மீது அரைவராகனெடை நெல்லிக்காய்க் கெந்தகத்தைப் பொடிசெய்து வைத்து, அதன்மீது ஒரு வராகன் எடை தூய்மை செய்த இரசத்தைவிட்டு, அதன்மேல் முன்போல்ன் அரை வராகனெடை கெந்தகத் தூளைப்போட்டு, அதன்மீது ஒரு வராகனெடை துத்தத் தூளையும் போட்டு மூசைவாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ளவும். இவ்விதம் பத்துக் குகைகளைச் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு அகலச் சட்டியில் நாலு விரற்கிடை மணலைப் பரப்பி அதன்மீது மேற்படிகுகைகளை ஒன்றின்மீது ஒன்றுபடாமல் சக்கரமாக நடுவில் வைத்து அவை மறையமணலைக் கொட்டி, வட்டடுப்பின் மீதேற்றித் தீபாக்கினியாக எட்டு சாமம் (24 மணி) எரிக்கவும், பிறகு குளிர ஆறினபின்பு மூசையை உடைத்துப் பார்க்க, கட்டியாக செந்தூரித்திருக்கும். இதனை எடுத்துப் பொடித்துக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :**—1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :**—தேன், வில்வாதி இளகம், தீபாக்கினி இளகம் நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய் :**— தொடர்க்கழிச்சல்வகைகள், மலப்போக்கு, பெருங்கழிச்சல், வாயுநோய்கள், செரியாமைநோய்கள், முதலிய நோய்கள் தீரும். இது பார்வைக்குச் சுலபமாக இருந்தாலும் அற்புதமான வேலைகளைச் செய்கிறது.

**மருத்துணவு :**— உடல்வலிமை, நோய்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தது போல் ஏற்படுத்தவேண்டியது.

**குறிப்பு :**— இது நமது குருபரம்பரையில் வழங்கிவந்த செந்தூரமாகையால் குருரச செந்தூரமென இதற்குப் பெயரிடப்பட்டிருக்கிறது.

## 720. திராவக இரச செந்தூரம்

வெடியுப்பு 10 பலம் (350கிராம்), சீனக்காரம் 8 பலம் (280 கிராம்) கல்லுப்பு 4 பலம், இவைகளைப் பொடித்துப் பாகப்படி

திராவகமிறக்கிக் கொள்ளவேண்டும். ஒருமணிநேரம் சரியாக எரிந்தாற் போதுமானது. அதிகம் எரிக்கவேண்டுவதில்லை.

மேற்படி திராவகத்தை ஒரு பீங்கானில்விட்டு, ஒரு பலம் வாலை இரசத்தை அதில்விட்டு வெய்யிலில்வைத்து வந்தால், வெள்ளையாய்ப் பூத்துப்போகும். பிறகு, எல்லாத் தூளையும் சேர்த்து ஒரு பீங்கானிற்போட்டு பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றை விட்டுப்பிசறி, மேற்பீங்கான் மூடி ஏழுசீலைமண் வலுவாகச் செய்து, ஒருசட்டியில் நாலுவிரற்கனம் மணலைக்கொட்டி நடுவில் வைத்துப் பீங்கான் வாய்மட்டம் மணலைக்கொட்டி மேற்சட்டிமூடிச் சீலைமண்செய்து அடுப்பேற்றி நான்கு சாமம் எரித்து ஆறவிட்டு எடுக்கச் செந்தூரமாகி இருக்கும்.

**அளவு :**—1 குன்றி எடை.

**துணைமருந்து :**— தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய் :**— வாயுநோய்கள், சூலைநோய்கள், வயிற்றுவலி, குன்மம் ஆகியவைகள் தீரும்.

**குறிப்பு :**— இதுவும் சற்றுவேகமானதாகையால் அதிக விழிப்புடன் உபயோகிக்க வேண்டியது: அனுபவசாலிகளுக்கு அதிகமாக நாம் எடுத்துரைப்பது அவசியமில்லாதது.

**மருத்துணவு :**— உடல்வலிமை, நோய்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது.

## 721. நீலகண்ட இரசசெந்தூரம்

நவச்சாரம் 2 பலம் (70கிராம்), துருசு 4 பலம் (140கிராம்), வெடியுப்பு 1 பலம், வெங்காரம் 1 பலம், கறியுப்பு 1 பலம், தூய்மை செய்த இரசம் 2 பலம், கோவையிலைச்சாறு ¾ படி,

**செய்முறை :**— உப்பு வகைகளையெல்லாம் தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துப் பிறகு துருசைச் சேர்த்தரைத்துக் கோவைச் சாற்றிற் கரைத்துத் தனியே வைத்துக் கொண்டு, அதில் கொஞ்சத்தை ஒரு இரும்புச் சட்டியில் விட்டு அதில் இரசத்தையும் விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து, அயக் கரண்டியின் பின்புறத்தால் தேய்த்து வரவேண்டும். சாறு சுண்டினவுடன் இரசத்தைத் துணியில் வைத்துப் பிழிந்து கெட்டியாயிருப்பதை எடுத்துக்கொண்டு திரவமாயிருக்கிற இரசத்தை மேற்படி சட்டியில் விட்டு மேற்படி கோவைச் சாற்றைக் கொஞ்சம் விடவேண்டும். முன்போல் எரித்து அயக்கரண்டியினுல் தேய்த்துச் சாறுசுண்டினவுடன் இரசத்தைத் துணியில்வைத்துப் பிழிந்து



கொள்ளவேண்டும். இவ்விதம் செய்துவந்தால், இரசமெல்லாம் கெட்டிப்பதமாகிவிடும். இதனைச் சுண்டைக்காய் அளவு, உருண்டைகளாகச் செய்துவைத்துக்கொள்க.

துராயிலையை அரைத்த விழுது ஒரு விளாங்காய் அளவு. இதற்குள் மேற்படி ஒரு உருண்டையை வைத்து, அதன்மீது, மூன்று சீலைமண்செய்து உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதமே மற்ற உருண்டைகளையும் துராயிலையை அரைத்த விழுதில் பொதிந்து சீலைமண்செய்து கொள்ளவேண்டு. இவ்விதம், எல்லா உருண்டைகளையும் தனித்தனியே சித்தப்படுத்தி ஒவ்வொன்றையும் தனித்தனியே அந்தந்தக் கவசத்தின் இரண்டு பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின்பு எடுத்து எல்லாவற்றையும் ஒன்ருகக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்து, வெய்யிலிலுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி நன்ருகச் சீலைமண் செய்துலர்த்தி சிறுபுடமிடவும். இவ்விதம் மடக்கிமடக்கி சிவக்கிறவரையில் புடமிட்டு நன்ருகச் சிவந்த பின்பு எடுத்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—1 முதல் ½ குன்றி எடை.

**துணைமருந்து :**—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகள். இன்னும், அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகள் ஆகியவைகளில் உபயோகிக்கலாம்.

**தீரும்நோய் :**—மேகநோய்கள், கிரந்திநோய்கள், சூலைகள் குட்டங்கள் முதலிய அநேகநோய்கள் தீரும்.

**மருத்துணவு :**—நோய்வலிமை உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தவிதமாக ஏற்படுத்தவேண்டியது.

**குறிப்பு :**—இது இரசவாத முறைக்கும் உபயோகமாகும். தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்துகொள்ளவும்.

## 722. யூகி இரச செந்தூரம்

உயர்ந்த உலாந்தாலிங்கம் 8 பலம் (280கிராம்), இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு அது மூழ்கும்படியாக தாய்ப்பாலை விட்டு ஒருநாள் ஊறவைத்து, மறுநாள் பாலையிறுத்துவிட்டு புதிய பாலை விடவேண்டும். ஒருநாள் ஊறினபின்பு முன்போலவே இறுத்துநீக்கிப் புதியபாலை விடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று அல்லது, ஐந்து, தடவைகள் செய்து, முடிவில்

தண்ணீரைவிட்டு சுத்தமாகக் கழுவி வெய்யிலில் வைத்து ஈரமில்லமல் உலர்ந்தபின்பு பொடித்துத் தனியே வைத்துக் கொள்க.

முற்றின வேப்பிலை, அதிலுள்ள ஈர்க்கை நீக்கிவிட்டு, இலையை மாத்திரம் எட்டுப்படி அளந்தெடுத்து மெல்லிதாக அரிந்து தூள் செய்து, அதில் பதினாறுபடி தண்ணீரைவிட்டுக் காய்ச்சி இரண்டு படியாகச் சுண்டவைத்து வடிகட்டித் திப்பிநீக்கிக் குடிநீரைத் தனியே வைத்துக்கொள்க. மேற்படி திப்பியை வெப்பிலுலர்த்தி, தனியே எடுத்து வைத்துக்கொள்க. மேற்படி குடிநீரை அடுப் பேற்றிக்காய்ச்சி முன்சித்தப்படுத்தின இலிங்கத்தூளைத் தூவிக் குழம்புபதத்தில் கீழேஇறக்கி ஆறினபின்பு கல்வத்திற்போட்டு மைபோல பதினாறு சாமம் அரைத்து வெப்பிலில் வைத்து உலர்த்திப் பொடித்து அடிகனத்த சட்டியிலிட்டுச் சந்தில்லாமல் மேற்சட்டிமூடி வலுவாக ஏழுசீலைமண் செய்து காய்ந்த பின்பு அடுப்பேற்றி நான்கு (12 மணி) சாமம் எரிக்க மேற்சட்டியில் இரசம் ஏறிநிற்கும். அதைத்தனியே எடுத்து வைத்துக்கொள்க.

கறியுப்பை வெய்யிலிற்போட்டு ஈரமில்லாமல் உலர்த்தி இரண்டுபடி அளந்தெடுத்துச் சட்டியில்வறுத்து அடிகனத்த ஒருசட்டியில் மேற்படி உப்பைப்போட்டு அதன்மீது அரைப்படி செங்கல்மாவைப் போட்டு அழுத்தி நடுவிற் பள்ளஞ்செய்து முன்னெடுத்து வைத்திருக்கிற இரசத்தைவிட்டு மேற்சட்டிமூடி வலுவாக ஏழு சீலைமண்செய்து அடுப்பின்மீதேறறிக் கமலாக்கினி யாக பன்னிரண்டு சாமம் (36 மணி) எரித்து, ஆறினபின்பு எடுக்க, மல்லிகைப் பூப்போலே பதங்கம் ஏறிநிற்கும் அதனைச் சுரண்டி வைத்துக்கொள்க.

முன் வேகவைத்த வேப்பிலையை உலர்த்தி வைத்திருப்பதைச் சுட்டுச்சாம்பலாக்கி நாலுபங்கு தண்ணீரில் போட்டுக்கரைத்து மூன்றுநாள்வைத்து நாலாம்நாள் பாகப்படி தெளிவிறுத்துக் காய்ச்சி உப்பெடுத்துக்கொள்க. இதற்கு வேப்பிலை உப்பென்று பெயர்.

மேற்படி வேப்பிலை உப்பு 4 பலம் (140 கிராம்), முன்சித்தப் படுத்தின ரசப்பதங்கம் 4 பலம் இவ்விரண்டையும் சேர்த்து அரைத்து* சீனக்காரத் திராவகத்தைச் சிறுகச்சிறுகவிட்டு இரண்டு சாமநேரமரைத்து வில்லைசெய்துலர்த்தின கெங்காசலகுப்பியில் அரைவாசிபடைத்து, வாய்க்குப்பலப்பக்கல்லிட்டு வலுவாகச் சீலை

---

* தேவையான தனிச் சீனக்காரத்தை வாலையிலிட்டுப் பாகப்படி திராவம் இறக்கிக் கொள்வதேயாம்: முன் சொல்லியிருக்கிற திராவகங்களில் எந்த வகையையும் சேர்த்துக் கொள்ளலாம்.



செய்துலர்த்தி அடிகனத்த ஒருபானையில் நாலுவிரற்கிடைமணலிட்டு அதன் மீது முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் குப்பிக்கழுத்து வரையில் மணலைச்சொரிந்து இரண்டுசாமம்(6 மணி) தீபாக்கினி, இரண்டுசாமம் (6 மணி) கமலாக்கினி, நான்குசாமம் (12 மணி), காடாக்கினியாக எரித்து ஆறவிட்டுக்குளிர ஆறினபின்பு எடுத்துப்பார்க்க, சிவந்த செந்தூரமாகி இருக்கும். வைத்த எடை குறையாது. நெருப்பிற்போட்டாற்புகையாது.

அளவு: 1 குன்றி எடை.

**துணைமருந்து**:—தேன், வெண்ணெய், நெய், பலவகை இளகங்கள் முதலியவைகளாம். இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணை மருந்துகளில் எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கலாம்.

**தீரும்நோய்**:—இது ஒருவகைக் கற்பமாகையால் தேகத்தி லுள்ள நோய்களெல்லாம் தீர்ந்து இரத்தத்தூய்மையுண்டாகி தாது விருத்தி, உடல்வலிமை, விருத்தி, துணிவு, ஊக்கம் முதலியவை களுண்டாகும். யோகசாதனைக்காரர்களுக்கு இது மிகவும் உப யோககரமானது.

**மருத்துணவு**: இதற்கு எவ்வகைப் பத்தியமுமில்லை. எனினும், உடல்வலிமை, நோய்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போலவும், சமயோசிதம்போலவும் ஏற்படுத்தவேண்டும்.

**குறிப்பு**:—மேற்படி செந்தூரமானது இரசவாதத்திற்கும் உபயோக மாகிறது. ஆனல், இதன் முறைகளைத் தெரிந்தவர்களிடம் கேட்டு அனுபவிக்கவும். புத்தியான்கள் தங்கள் புத்திகூர்மையினல் தாமே தெரிந்துகொள்வார்களாகையால், இதைப்பற்றி சிறப்பாக எழுதாது விடுத்தனம்.

## 723. சூட்சும பூர்ண சந்திரோதயம்

தூய்மைசெய்த இரசம் 6 வராகனெடை (21 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 6 வராகன் எடை, சரிகை வெள்ளிப்பொடி 3 வராகன் எடை, தங்கம் ¼ முதல் 1 வராகன் எடை முள்முருக்கம்பூச்சாறு தேவையான அளவு.

**செய்முறை**: — இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு மற்ற இரண்டையும் சேர்த்து மேற்படி முருக்கம் பூச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து பன்னிரண்டு சாமமரைத்து மைபோலான பின்பு சிறு பயறளவு மாத்திரைகள் செய்து வெய்யிலில் வைத்துக் கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்த்தி

ஒரு முட்டை ஓட்டில் கால்பாகத்தைப்போட்டு மறுமுட்டை ஓட்டால் மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக்கொள்ளவேண்டும்.

இவ்விதமே மற்ற மூன்று பாகத்தையும் மூன்றுமுட்டையிற் போட்டு முன்போல் மேலும் முட்டைபோட்டால் மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ளவேண்டும்.

பிறகு, அடிகனத்த ஒரு சட்டியில் நான்கு விரற்கிடை மணலைப் பரப்பி அதன் நடுவில் முன் சித்தப்படுத்தினவைகளை ஒன்றின்மீது ஒன்றுபடாமல் வைத்து மணலைக்கொட்டி அடுப்பேற்றி ஆரம்பத்தில் சிறு தீயாக எரித்துப் பிறகு காடாக்கினியாக நான்குசாமம் (12 மணி) எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு எடுத்துப்பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும். எரிப்பானது சரிவர திட்டமாயிருந்தால் கருஞ்சிவப்பான செந்தூரமாயிருக்கும். தீயின் விகற்பத்தால் கறுத்துப்போவதுமுண்டு. எந்த விதமாயிருந்தபோதிலும் குணம் செய்வதில் குறைவில்லை.

**அளவு :—** 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** தேன், வெண்ணெய், நெய், தாளிசபத்திரி இளகம், கூழ்ப்பாண்டநெய், முசல்நெய், கூழ்ப்பாண்ட இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய் :—** இருமல், சயம், காசம், முதலிய கபசம்பந்தமான நோய்களெல்லாம் தீரும். உடல்வலிமை, உடல்வளமை முதலியவைகளுண்டாகும்,

**மருத்துணவு :—** உடல்வலிமை. நோய்வலிமை, முதலியவைகளுக்குத் தகுந்தது போலவும், நிலைமைக்கேற்றவாறும் ஏற்படுத்த வேண்டியது.

## 724. கார இரச செந்தூரம்

தூய்மை செய்த இரசம் 8 பலம் (280 கிராம்) வெண்காரம் தூய்மை செய்த நெல்லிக்காய்க்கெந்தகம் இவை வகைக்கு 12 பலம்.

**செய்முறை :—** வெங்காரத்தைப் பொரித்துக் கொள்ளவும். கெந்தகத்தைப் பொடித்து வெங்காரப் பெரியையும் சேர்த்து நன்றாய் அரைத்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை வாய் குறுகின கலயத்திற் போட்டு அழுத்தி நடுவில் பள்ளஞ் செய்து அதில் இரசத்தை விட்டு அதன்மீது மறுபாகத் தூளையும் போட்டுச் செம்மையாக அழுத்திக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு உமிக் கருக்கையும், மண்ணையும் சேர்த்தரைத்து ஏழுசீலைமண் வலுவாகச் செய்து கொஞ்சமும் ஈரமில்லாமல் மூன்று நான்குநாள் காய வைத்துச் செம்மையாகக் காய்ந்த பின்பு கலயத்தின் மீதும் ஏழுசீலை மண் செய்து முன்போல் உலர்த்திக் கொள்ளவேண்டும்,



மேற்படி கலயம் கொள்ளும்படியானதும், ஆறுபடி உப்பு கொள்ளும்படியானதுமான பானையொன்று சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். பத்துப்படி உப்பை ஓட்டிற்போட்டு ஈரப்பசை போகும்படியாக இளவறுப்பாகவறுத்து அதில் இரண்டுபடி உப்பை எடுத்து இடித்துத் தூள்செய்து பானையிற்போட்டு அதன் மீது முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கலயத்தை வைத்துப் பானைநிறைய முன் வறுத்த உப்பை இடித்துப்போட்டுப் பானை வாயை மண்தாலத்தால் மூடி அதற்கு முன்போற் சீலைமண்செய்து உலர்த்தி அடுப்பேற்றி ஆரம்பத்தில் இரண்டு சாமம் (6 மணி) மெதுவாகத் தீயை எரித்துப் படிப்படியாக அதிகப்படுத்திப் பன்னிரண்டு சாமம் காடாக்கினியாக எரித்து; இரண்டுநாள் ஆறவிட்டு எடுக்க, செந்தூரமானது முருக்கம் பூப்போல சிவந்திருக்கும். அதனை எடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு நீர்விட்டு நன்றாக அலம்பிக்கழுவி வெய்யிலிலுலர்த்திப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய். வெண்ணெய், இளகவகைகள் இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகள் ஆகியவைகளாம்.

**தீரும்நோய் :—** எல்லாநோய்களிலும் உபயோகப்படுத்தலாம் முதன்மையாக வாயு சம்பந்தமான நோய்கள், சூலை நோய்கள், சுரம், சன்னி முதலியவைகள் கைகால் முடக்கு முதலிய நோய்கள் ஆகியவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

**மருத்துணவு :—** சமயோசிதம் போலவும், உடலியல்புக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்த வேண்டியது.

## 725. சீவ நாராயண செந்தூரம்

தூய்மை செய்த இரசம் 3 பலம் (105 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 1½ பலம், தூய்மை செய்த இலிங்கம் 1½ பலம், தூய்மை செய்த தாளகம் 1 பலம். தங்க அரப்பொடி 2 வராகன் எடை, தூய்மை செய்த மனோசிலை 2 வராகன் எடை * செந்தூரத் திராவகம் செல்லத்தக்க அளவு.

*இதன்முறை நமது அனுபோக வைத்திய நவநீதம் மூன்றும் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவசியமானவர்கள் அதனைப் பார்த்துக் கொள்ளவும்.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற மூன்று சரக்கையும் தனித் தனி பொடித்து முடிவாகத் தங்கப்பொடியையும் சேர்த்து மேற்படி திராவகத்தை சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து வெய்யிலிற் காயவைத்துப் பொடித்து ஒரு பீங்கானிற் போட்டு உமி நெருப்பின்மீதுவைத்து திராவகப் புகைநீங்குகிறவரையில் வறுத்து ஏழு சீலை மண் செய்துலர்த்தின குப்பியில் அரைவாசி போட்டு வாய்க்குப் பலபக்கல்லிட்டு வலுவாகச் சீலை செய்துலர்த்தி அடி கனத்த பானையில் நான்கு விரற்கிடை மணலிட்டு அதன்மீது முன் குப்பியை வைத்துப் பானை நிறைய மணலிட்டுப் பானைவாயை மூடாமல் அடுப்பேற்றி தீபாக்கினி இரண்டு சாமமும், (6 மணி) கமலாக்கினி இரண்டு சாமமும் காடாக்கினி இருபது சாமமுமாக (30 மணி) எரித்து, ஆற விட்டுக் குளிர ஆறின பின்பு உடைத்துப் பார்க்க செந்தூரமானது செம்பரத்தம் பூப்போன்ற வண்ணமுள்ள தாயிருக்கும். இதனைப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 குன்றி எடை,

**துணைமருந்து :—** தேன், நெய், வெண்ணெய், இளக வகைகள், குடிநீர் வகைகள் அந்தந்த நோய்களுக்குத் தகுந்தவைகளில் உபயோகிக்கலாம்.

**தீரும்நோய்கள் :—** சுரம், சன்னி, மேகநோய், சூலைநோய், வாயு நோய், இருமல், சயம், சுவாசகாசம் முதலிய அநேக நோய்கள் தீரும். இன்னும், அனுபோகசாலிகள் தத்தம் அனுபோகப்படி அந்தந்தநோய்களில் உபயோகித்து சீர்த்தி பெறுவார்களாக.

**மருத்துணவு :—** உடல்வலிமை, நோய்வலிமை முதலியவை களுக்குத் தகுந்தபடியும் சமயோசிதம் போலவும் பத்திய மேற் படுத்தவேண்டியது

## 726. திரிமூர்த்திச் செந்தூரம்

தூய்மைசெய்த. இரசம் 4 பலம் (140கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 2 பலம், அரிதாரம் 1 பலம்.

**செய்முறை :—** மேற்படி கெந்தகத்தைச் சிறுசட்டியிலிட்டுருக்கி மேற்படி இரசத்தை விட்டுக்குச்சியால் கிளறிவர, இரண்டுங்கலந்து கறுப்பு வண்ணத்தூளாகும், இதனை எடுத்துவைத்துக் கொள்க.

ஏழு சீலைமண் செய்துலர்த்தின சிறு காசிக்குப்பியில் முன் பொடியைப்போட்டு அது கொள்ளத்தக்க ஒரு சிறு பானையில் நான்கு விரற்கிடை மணலிட்டு, அதன்மேல் முன் குப்பியை வைத்து, அதன் கழுத்துவரையில் மணலைக்கொட்டி நிறைத்து வாய்க்கு



ஓடுமூடிச் சீலைமண் செய்யாமல் கொல்லுலையில் வைத்தூத இரண்டு, அல்லது, இரண்டரைமணிக்குமேல் குப்பியில் சிறு புகையுண்டாகும். முன் அரிதாரத்தைப் பொடித்துக் குப்பியில் போட்டு நல்ருபூதிவரவும். அடிக்கடி இரும்பு சலாகையால் கிளறிக் கொடுத்துவரவும் வேண்டும். ஒருசாமம் சென்றபின்பு குப்பியிலுள்ளதை சிலாகையால் கொஞ்சம் வெளியிலெடுத்து வைத்து ஆறினவுடன் பொடித்துப் பார்க்க சிவந்த செந்தூரமாகி விட்டால் பதம். அப்படியாகாவிட்டால், அந்தப் பதமவருகிறவரை யில் ஊதவேண்டியது. பிறகு பதமானவுடன் ஊத்தை நிறுத்திக் குளிர ஆறினபின்பு குப்பியை உடைத்துப்பார்த்தால் வில்லையாக இருக்கும் அதைத் தூள்செய்து குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் குன்றி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய், வெண்ணெய், பஞ்சதீபாக்கினி இளகம், தாளிசபத்திரி இளகம், கூழ்ப்பாண்ட நெய் முதலியவை களாம்.

**தீரும்நோய் :—** கழிச்சல்வகைகள், கபசம்பந்தமான நோய்கள், மூலநோய், சுரம், வயிற்றுவலி முதலிய அநேகநோய்கள் தீரும். அனுபோகசாலிகள் தத்தம் அனுபவத்திற்கிசைந்தபடி தகுந்த நோய்களில் உபயோகித்துக் கொள்வார்களாக.

**மருத்துணவு :—** உடல்வலிமை நோய்வலிமை ஆகியவற்றிற்குத் தகுந்தபடி ஏற்படுத்தவும்.

## 727. சூத சண்டமாருத செந்தூரம்

கடையில் விற்கிற இரசசெந்தூரம் 2 வராகனெடை, இரசகற் பூரம் 2 வராகனெடை.

**செய்முறை :—** இரண்டையும் தனித்தனியே தாய்ப்பாலில் மூன்று சாமநேரம் சுருக்குக்கொடுத்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு அதன்மீதுள்ள அழுக்கு முதலியவைகளைத் துணியால் துடைத்துத் தூய்மைசெய்து கல்வத்திலிட்டுப் பொடித்துக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** சுக்குக் குடிநீர், சுக்கையரைத்த விழுது, நெய், வெல்லம், இன்னும் சிறப்புள்ள துணைமருந்துகளுமாகும்.

**தீரும்நோய் :**—வாயுகள், சூலைகள், சூலைக்கட்டு, சுரம், சன்னி, கிராணி, நச்சுக்கழிச்சலின் மீதுகாணும் தாகம், வாந்தி, சைத்தியம் முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு :**—நோய்க்குத் தகுந்தபடி ஏற்படுத்தவும்.

## 728. சர்வநோய் ஹரதன செந்தூரம்

(அ) துய்மைசெய்த இரசம் 4 பலம் (140கிராம்), தூய்மை செய்த கெந்தகம் ½ பலம், கெந்தகத்தை ஓட்டிலிட்டு உருகினவுடன் இரசத்தைவிட்டுக் கிளறிவெந்தால், கருப்பு வண்ண முள்ள தூளாம். இதனைத் தனியே எடுத்துக்கொள்க.

செங்கல்லைப் பாக்குப்போலுடைத்து ஒருபானையில் அரைவாசி நிறைத்து அதில் முன் எடுத்து வைத்திருக்கிற தூளையும், நாலுபலம் கறியுப்பையும் சேர்த்தரைத்து மேற்படிபானைக்குள்தூவி, மேற்பானை கவிழ்த்து மூடி ஏழு சீலைமண்செய்து உலர்த்தி அடுப்பேற்றிக் கமலாக்கினியாக ஒருசாமமும், (3மணி) காடாக்கினியாக நான்கு சாமமும், (12மணி) எரித்து ஆறவிட்டுக்குளிர ஆறினபின்பு எடுத்தால், மேலே இரசமானது பதங்கித்து நிற்கும். இதனைச் சுறண்டித் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு இரசப்பதங்கமென்று பேர்.

இது இன்னும், இம்முறையில் அதிகம் வேண்டிய திருப்பதால் முன்போல முன்னளவே இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்து வறுத்து அதனுடன் முன்னளவு உப்பைச் சேர்த் தரைத்து செங்கல்துளின்மீது முன்போலத் தூவிப் பதங்கித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் நான்கு, அல்லது, ஐந்துதடவை செய்தால் சுமார் இருபது பலம் பதங்கத்தைச் சேகரிக்கலாம். இவ்விதம் முன்னதாகச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

(ஆ) விலுள்ள இரசப்பதங்கம் 4 பலம், தூய்மை செய்த கெந்தகம் ½ பலம், தூய்மை செய்த அரிதாரம் ¼ பலம்.

இவை எல்லாவற்றையும் தனித்தனியே பொடித்து ஒன்றுகச் சேர்த்தரைத்து, ஏழுசீலைமண்செய்துலர்த்தின குப்பியில் அரைவாசி போட்டுக்குப்பி வாய்க்குக் காரக்கிட்டுச் சீலைசெய்து வாலுகாயந் திரத்தில் வைத்துக் குப்பிக் கழுத்தளவு மணலைக்கொட்டித் தீபாக்கினி ஒருசாமம் (3மணி) கமலாக்கினி ஒருசாமம், காடாக்கினி இரண்டு சாமம் ஆக நாலுசாமமெரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு உடைத்துப்பார்த்தால், உருண்டையாக செந்தூர மாகியிருக்கும். இதற்கு, இரசப்பதங்க செந்தூரமென்றுபெயர்.



இதனைத் தனியே பொடித்து வைத்துக்கொண்டு தகுந்த துணை மருந்துகளுடன் உபயோகிக்க அநேக வகை நோய்கள் தீரும்.

(இ) அ-விலுள்ள இரசப்பதங்கம் 4 பலம், ஆ-விலுள்ள இரசப் பதங்கச்செந்தூரம் 1 பலம், தூய்மைசெய்த கெந்தகம் ½ பலம் தூய்மைசெய்த அரிதாரம் ¼ பலம்.

இவையெல்லாவற்றையும் ஒன்றுகச் சேர்த்தரைத்து மை போலான பின்பு முன்போல் ஏழு சீலைமண் செய்துலர்த்தின குப்பி யில் போட்டு வாய்க்குச் செங்கல்மூடியிட்டு அதற்கும் சீலைசெய்து, வாலுகாயந்திரத்திற்குள் வைத்து தீபாக்கினி ஒருசாமம் (3 மணி), கமலாக்கினி ஒரு சாமமும் காடாக்கினி இரண்டு சாமமும் ஆக நான்கு சாமமும் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு எடுத்துப் பார்த்தால், அருணன்போல செந்தூரமாகியிருக்கும் இதற்கு, **அருணேதய செந்தூரம்** என்று பெயர்.

இந்த அருணேதய செந்தூரத்தைக் கல்வத்திற் பொடித்து, தூய்மைசெய்த கெந்தகம் ½ பலம், தூய்மைசெய்த அரிதாரம் ¼ பலம் இவ்விரண்டையும் பொடித்துச் சேர்த்து, முன்போற் குப்பியி லடைத்து, முன்போல வாலுகாயந்திரத்தில் எரித்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம், தடவைக்குத் தடவை அரைப் பலம் கெந்தகமும், காற்பலம் அரிதாரமும் சேர்த்துச் சேர்த்து அரைத்தரைத்துக் குப்பியில் எரித்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் பத்துத்தடவை மடக்கி மடக்கி எரித்தெடுத்துக் கொண்டால் உயர்தரமான செந்தூரமாகியிருக்கும். இதற்கு, அருணேதய மடக்கு செந்தூரம், அல்லது, **அருணேதய தீட்சைச் செந்தூரம்** என்று பெயர்.

(அ) இந்த அருணேதய தீட்சைச் செந்தூரம் 4 பலம், அல்லது (அ) விற் சொல்லியிருக்கிற இரசப்பதங்கம் 4 பலம், தூய்மை செய்த கெந்தகம் 2 பலம், தூய்மைசெய்த அரிதாரம் ½ பலம், தூய்மைசெய்த மனேசிலை ¼ பலம், தூய்மைசெய்த இலிங்கம் ¼ பலம், தங்கம் ¼ பலம், செம்பருத்திப் பூச்சாறு, புரசம்பூச் சாறு, தக் காளிப் பழச்சாறு, பொற்றலைக் கையாந்தகரைச்சாறு, இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—தங்கத்தைத் தவிர மற்றவைகளை எல்லாம் தனித்தனியேப் பொடித்துச்சேர்த்துச் செம்பருத்திப் பூச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு நாலு சாமம் அரைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்விதமே, புரசம் பூச்சாற்றல் நாலுசாமம் (12 மணி

அரைத்து உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதமே, தக்காளிப் பழச்சாற்றால் இரண்டுசாமம் அரைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு, பொற்றலைக் கையாந்தகரைச்சாற்றால் இரண்டுசாமம் அரைத்து அதில் தங்கரேக்கைச் சேர்த்து நாலுசாமநேரமரைத்து உலர்த்திப் பொடி செய்துகொள்க.

பிறகு, ஏழு சீலைமண் செய்துலர்த்தின குப்பியில் அரைவாசி அடைத்து, வாய்க்குச் செங்கல் மூடியிட்டு அதற்கும் ஏழுசீலை செய்துலர்த்திச் செந்தூரப் பானையில் நான்கு விரற்கிடை மணலைக் கொட்டி அதன்மீது குப்பியை வைத்துப் பானை நிறைய மணலைக் கொட்டி, மேல்மூடிச் சீலைசெய்து அடுப்பேற்றி ஒரு சாதிவிறகால் தீபாக்கினி 4 சாமம், கமலாக்கினி 4 சாமம், காடாக்கினி 8 சாமம் ஆக எரித்து, குளிர ஆறின பின்பு தான் வழிபடுகடவுளை வருத்தி அன்னதானம் செய்து, குப்பியை உடைத்துப் பார்க்க, இளஞ் சூரியனைப் போன்ற செந்தூரமாகியிருக்கும். இதற்குத்தான் சர்வ நோய் ஹரதன செந்தூரமென்று பெயர். இதனைப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :—½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து**:—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாகும் முன்சொல்லியிருக்கிற துணைமருந்துகளிலும் உபயோகிக்க அந்தந்த நோய்களும் தீரும்.

**தீரும்நோய்கள்**:— :— இது ஒருவகை அரிய கற்பம்; இதனை ஒரு ஆண்டு தேனில் கலந்து உட்கொண்டு வந்தால், நரைதிரை மாறி காயசித்தியுண்டாகும். உடல் சிவந்து பொன்னைப்போல் மினுமினுக்கும். உடல் இறுகி வயிரம் போலாகும். எந்த நோயும் வந்தணுகாமல் வாழ்வுநீட்சி, பிள்ளைபேறு, எண்மாசித்திகள் முதலியவைகளுண்டாகும்.

**மருத்துணவு** ,— அவரவர்கள் விருப்பம் போல் ஏற்படுத்திக் கொள்க.

**குறிப்பு** :— இது வகாரத்திற்குச் சிறந்த மருந்து. அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டியது. புத்திமான்களும் தங்கள் புத்திக் கூர்மையினால் தெரிந்து செய்வார்கள்.

## 729. கார ரசச்செந்தூரம்

கடையில் விற்கிற இரச செந்தூரம் 1 வராகன் எடை (3½ கிராம்), வெள்ளிக் காடிக்காரம் ½ வராகன் எடை.

**செய்முறை** — இவ்விரண்டையும் சேர்த்துப் பொடித்து நாலுசாமநேரமரைத்துக் கல்காரக்குள்ள குப்பியில் போட்டு வைத்துக் கொள்க.



**அளவு** :— 1 குன்றி எடை.

**துணைமருந்து** :— தேன், காட்டாத்திப் பூத்தூள் இலவங்கத் தூள், சுண்டைவற்றல் தூள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— நச்சுக்கழிச்சல், பெருங்கழிச்சல், தொடர்க் கழிச்சல், மூலவாயு முதலிய நோய்கள் தீரும்.

**மருத்துணவு** :— சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

## 730. உருக்கு இரசச் செந்தூரம்

தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்) கெந்தக புளிப்பு, செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— ஒரு சட்டியின் நடுவில் பொத்து அதற்குள் பீங்கான் கோப்பையைச் சொருகி சட்டியின் கீழ் ஒரு அங்குலமிருக்கும்படியாகச் சரிப்படுத்தி, அதில் மேற்படி இரசத்தைவிட்டு மூன்று செங்கல்லால் அடுப்புக் கூட்டி அதில் முன் சட்டியை வைத்து அடியில் விளக்கெண்ணெய் விளக்கேற்றி அரைச்சுண்டு விரற்கனம் திரி போட்டு எரிக்கவேண்டும். இரசத்தின் மீது மேற்படி கெந்தகப்புளிப்பைச் சிறுகச் சிறுக வார்த்துச் சுருக்கிட்டு இரும்புக்குச்சியால் கிளறிக் கொடுத்து வரவும் வேண்டும். இவ்விதம் ஒருசாமம் சுருக்குக் கொடுத்தால் இரசம் கெட்டியாகி இறுகிப் போகும். உடனே அதையெடுத்து மண்குகையில் விட்டுக் கரி நெருப்பில் வைத்து துருத்தியால் ஊத, அது உருகிக் கண் விட்டாடும், நன்றாய்க் கண்விட்டாடும் பக்குவத்தில் எடுத்துச் சமமான ஒரு பலகையில் மீது தட்டையாகும்படி ஊற்றி விட வேண்டும். குளிர ஆறினபின்பு எடுத்துக்கல்வத்திற் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும். இது மஞ்சள் வண்ணமாக இருக்கும்.

**அளவு** :— 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து** :— தேன், பனைவெல்லம், சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர் முதலியவைகளாம். இதனை, எத்தனைநாள் உபயோகித்தபோதிலும் வாய்பிடிக்காது. ஆயினும், பத்துநாள் உபயோகித்தால் போதுமானது.

**தீரும்நோய்கள்** :— சுரம், சன்னி, வாயுகள், சூலைகள் கைகால் பிடிப்பு முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு :— சமயோசிதம்போல் பத்தியம் ஏற்படுத்தவும்

## 731. சத்தி சிவ பந்து

தூய்மை செய்த வாலை இரசம், தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் வகைக்கு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— அகலமான ஒரு இருப்புக் கரண்டியில் மேற்படி கெந்தகத்தைப்போட்டுக் கரிநெருப்பின் மீது வைத்துக் கெந்தகம் உருகினவுடன் மேற்படி இரசத்தை அதில் விட்டு இரும்புக் குச்சியால் அடிக்கடிகிளறி வரவேண்டும். அதிகப் புகைஅடங்கின வுடனேயெடுத்துப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1முதல் 1½ குன்றி எடை.

துணைமருந்து :—தேன், நெய், சுக்குக் குடிநீர் சோம்புக் குடிநீர் முதலியவைகளாகும்.

தீரும்நோய்கள் :— சூலை,மேகங்கள், சுரம், வாயுமுதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

## 732. சொரசிந்தம்

தூய்மைசெய்த இரசம் 1 பலம் (35 கிராம்), தூய்மைசெய் நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 1 வராகன் எடை, வெண்காரம் 1 வராகன் எடை.

செய்முறை :— இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித்த் தரைத்து நன்குருகக்கருத்தபின்பு ஒரு அகலமான இரும்புக்கரண்டியில் போட்டு கரிநெருப்பின் மீது வைத்து உருக்கி, இரும்புக் கம்பியால் கிண்டி தண்ணீர்போல உருகின பதத்தில் பின்சொன்ன இரண்டு சரக்கையும் பொடித்து அதில்போட்டு தீப்பிடிக்காமல் குச்சியால் கிண்டி கெந்திநிறை அரைவாசிகுறைந்த பக்குவத்தில் சமமான பலகையின் மீது கொட்டி ஆறினபின்பு பொடித்து வைத்துக் கொள்ளவேண்டும் இதன் வருணம் கறுப்பாயிருக்கும்

அளவு :— 2 முதல்றி3 குன்றி எடை.

துணைமருந்து :— தேன், நெய், குடிநீர்கள், இலவங்கத்தூள் காட்டாத்திப்பூத்தூள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— நச்சுக்கழிச்சல், தொடர்கழிச்சல் குழந்தைகளுக்குக் காணும் மாந்தம் முதலியபலவகை கழிச்சல்கள், வயிற்றுப்



பிசம், பொருமல், அசீரணம் முதலிய வைகளும் தீரும்.

மருத்துணவு :— சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

## 733. பால சொரசிந்தம்

முன்செய்த சொரசிந்தத்திற்குச் சமனெடை கீழ்க்காணும் சரக்குகளின் தூள்களைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவேண்டும்.

அவையாவன :— கருஞ்சீரகம், மேற்றோல் சீவினசுக்கு, தூய்மை செய்த வெண்ணுபி, சாதிக்காய், அதிவிடயம், இவவைந்தையும் தனித்தனியே இளவறுப்பாக வறுத்துச் சமனெடையாக எடுத்துச் சேர்த்திடித்துத் துணியில் வடிகட்டியத்தூளை மேற்கண்ட சொரசிந்தத்திற்குச் சமனெடையாக எடுத்து இரண்டு வகையும் ஒன்றுகக்கலந்து அரைத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு :— 1 முதல் 3 குன்றி எடை.

துணைமருந்து :— தேன், பொடுதலைக்குடிநீர், இலவங்கப் பட்டைக் குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— மாந்தவகைகள், உப்பிசம், அழலை, நீர்க்கட்டு, வீக்கம், கழிச்சல், சீதபேதி, விஷபேதி, சுழிமாந்தம், கண் சொருகல், ஊதுகணம், அழல்மாந்தம், வாந்தி, முதலிய பலநோய்களெல்லாம் தீரும்.

மருத்துணவு :— சமயோசிதம்போல, தாய்க்கு, அல்லது பாலூட்டும் தாதிக்கு பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

## 734. கண்டமாலை உசிதம்

தூய்மை செய்த இரசம் 1 பங்கு, நாவற்கொழுந்து 2 பங்கு.

செய்முறை :—இரண்டையும் சேர்த்து நான்கு சாமநேர மரைத்து மிளகளவு மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்க.

அளவு :—½ முதல் 1 மாத்திரை. இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையும் ஆறுநாள் சாப்பிடவேண்டும்.

தீரும்நோய் :—கண்டமாலை நோய் தீரும்.

மருத்துணவு :—இச்சாபத்தியம் மருந்தை ஆறுநாள் சாப்பிட்டு ஏழாம் நாள் ஓமம் தேய்த்துத் தலைமுழுகச் செய்யவேண்டும். எட்டாம் நாள் நல்லெண்ணெய்தேய்த்துத் தலைமுழுகச் செய்யவும்.

**குறிப்பு :**—மேற்கண்ட நோய் பலமாயிருந்தாலும், நாட்பட்டதாயிருந்தாலும், மேற்கண்டபடி ஒருமுறை உபயோகித்து இடையில் ஒருவாரம், அல்லது பத்துநாள்விட்டு, மறுமுறை முன்போற் சாப்பிடவேண்டும். இவ்விதம் நோய்வலிவிற்குத் தகுந்தபடி மூன்றுநாலகு தடவைகள் செய்ய, எல்லாவித கண்டமாலையும் தீரும்.

## 735. பக்கவாத உசிதம்

தூய்மை செய்த இரசம் 3 வராகன் எடை (10½ கிராம்), இதனை ஒரு கறுத்த புருவின் வாயில் விட்டு அது உள்ளே சென்றபின்பு அதன்மீது மூன்று வராகன் எடை செந்தேனை விட்டு அதுவும் சென்றபின்பு ஒருமணிநேரம் வேறுதீனி, தண்ணீர் முதலியவைகள் கொடுக்காமல் வைத்திருந்து, அதனை அறுத்து அதுகொள்ளும்படியான ஒரு சட்டியில் வைத்து மேற்சட்டிமூடிச் சீலைமண் செய்து பெரும்புடமாகப் போட்டு ஆறினபின்பு எடுத்தால் எல்லாம் பற்பமாகியிருக்கும். இதனைப் பொடித்து பளிங்குக்குப்பியில் வைத்துக்கொள்க.

**அளவு :**—¼ முதல் 1 வராகன் எடை.

**துணைமருந்து :**—தேன், உத்தாமணிச்சாறு, உத்தாமணிப் பூச்சாறு, வேப்பெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :**—தகுந்த அனுபானத்தில் காலை, மாலை இரண்டுவேளையும் உபயோகித்துவர, பக்கவாதம் முதலிய வாதநோய்கள் தீரும். இது இளமை உடலினர்க்கு மிகவும் ஏற்றது.

**மருத்துணவு :**— சமயோசிதம் போலவும் உடல்வலுவிற்கு ஏற்றதுபோலவும் ஏற்படுத்தவேண்டியது.

## 736. இரச மாத்திரை

தூய்மை செய்த இரசம் 1 பலம் (35கிராம்), தேன் 1 பலம் (35கிராம்), கோதுமை ரொட்டிச்சதை 2 பலம் (70கிராம்),

**செய்முறை :**—இரசத்தைக் கல்வத்திற்போட்டு தேனைவார்த்து அரைக்கவேண்டும். இரசம் மசிந்த பின்பு ரொட்டிச் சதையைப் போட்டு அரைக்கவேண்டும். அவசியமானால் கொஞ்சம் தண்ணீரையும் சேர்த்து அரைத்துக் கொள்ளலாம். பிறகு மெழுகு பதத்தில் நானூற்றியெண்பது மாத்திரைகள் செய்துவைத்துக் கொள்க.



**அளவு :**— ½ முதல் 1 மாத்திரை காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

**தீரும்நோய் :**—மேகவகைகளெல்லாம் தீரும்.

**மருத்துணவு :**—புளி, உப்பு ஆகியவைகளை நீக்கிவைக்கவும். கூடாவிட்டால் புளியை மட்டுமாவது நீக்கிவைக்கவேண்டியது; நல்லெண்ணெய், கடுகு ஆகியவைகளையும், கரப்பான் பண்டங்களையும் தள்ளவேண்டியது.

## 737. பால இரச உருண்டை

வாலைரசம் 1 வராகன் எடை (3½கிராம்), சவ்வு நீக்கின சிற்றண்டஓடு 4 வராகன் எடை (14கிராம்), அண்ட வெண்கருவும் எலுமிச்சம் பழச்சாறும் சமனுகச்சேர்த்தது செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—மேற்படி இரண்டு சரக்கையும் சேர்த்து அரைத்து மேற்படி திரவத்தைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரைகள் செய்து வைத்துக்கொள்க.

**அளவு :**—½ முதல் 1 மாத்திரை.

**தீரும்நோய் :**—மேற்கண்ட மாத்திரையைக் காலை மாலை இரண்டுவேளையும் மூன்றுநாள் ஆறுவேளை உபயோகிக்க எல்லா வகைச் சூலைக்கட்டும் தீரும்.

**மருத்துணவு :**—உப்பு, புளி ஆகியவைகளை நீக்கிக் கடும் பத்தியமாக வைக்கவேண்டியது.

## 738. இரச மெழுகு

தூய்மை இரசம் 4 வராகன் எடை (14 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 4 வராகன் எடை (14 கிராம்), சிறுபிள்ளைகள் மூத்திரத்தைக் காய்ச்சி எடுத்த உப்பு 4 வராகன் எடை (14கிராம்), கொடிக்கள்ளியை வாட்டி இடித்துப் பிழிந்தசாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்குகக் கறுத்தபின்பு மேற்படி உப்பையும் சேர்த்தரைத்து அதுவும் கலந்தபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரம் கைவிடாமலரைத்துப் பீங்கான் சிமிழிற் பத்திரப்படுத்தவும்.

அளவு :—¼ முதல் ½ குன்றி எடை,

**துணைமருந்து** :—சுக்கரைத்தத்தூள், பறங்கிப்பட்டைத் தூள் பறங்கிப்பட்டை இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— சூலைக்கட்டு, அண்டவாயு, மேகவாயு கிரந்தி, சொறி, மேகஊறல், கிராணி, எலும்புக்குள் அல்லது, மூளைக்குள் உண்டாகும் குடைச்சல், நோவு, அக்கினிமந்தம் ஆகியவை தீரும். தீபனம் அதிகமகுராம். தாது வலிமை, உடல் வலிமைமுதலியவைகளுண்டாகும். நோயின் வலுவிற்குத் தகுந்தபடி ஒருமண்டலம், அரைமண்டலம், கால்மண்டலம் வரையில் உபயோகிக்காலம்.

**மருத்துணவு** :— புளி, புகை, கடுகு, பாவற்காய், வாயு உணவு பண்டங்கள் ஆகியவைகள் ஆகா.

## 739. இரச பூர மெழுகு

தூய்மை செய்த இரசம் 2½ வராகன் எடை (8¾ கிராம்) தூய்மை செய்த இரசகற்பூரம் 2½ வராகன் எடை, சேங் கொட்டைக் குழித்தைலம் செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டு அரைத்து மேற்படி தைலத்தைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்தால் வெண்ணெய்போலாகிவிடும். அந்த வெண்ணெயை நிறுத்து அதற்கு இரண்டுபங்கு சர்க்கரையைச் சேர்த்து கல்வத்திலிட்டு நெய்யைச் சிறுகச் சிறுகவார்த்து அரைக்கவேண்டும். ஒருசாம நேரம் அரைத்தால் பின்பு வழித்துப் பீங்கான்சிமிழில் வைத்துக் கொள்க,

**அளவு** :—½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து** :—பனைவெல்லம், வெண்ணெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்** :—நாட்பட்ட வெட்டை நோய்கள் தீரும்.

**மருத்துணவு** :—வெந்நீர் தவிர மற்றவைகளாம். எருமைத்தயிர் அதிகமாகச் சேர்க்கவும்.

## 740. வித்துரச மெழுகு

தூய்மை செய்த இரசம் 5 வராகன் எடை (17½ கிராம்), சேரான் கொட்டைப்பருப்பு 1 பலம் (35 கிராம்).



**செய்முறை** :—இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு இரண்டு சாமநேரமரைத்து மெழுகுபோலான பின்பு பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவேண்டும்.

**அளவு** :—¼ முதல் ½ குன்றி எடை.

**துணைமருந்து** :— பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :—இதனை இரண்டுவேளையும் ஏழுநாள், அல்லது ஒன்பதுநாள், உபயோகித்துவந்தால் வாயு, சூலைநோய், வாதநோய், இரணங்கள், சொறிகள், வீக்கம், கட்டிகள், அரையாப்பு, தோள்வாதம், குதிக்கால்வாதம், அஸ்திக்குடைச்சல், அண்டவாதம், கரளைகட்டிச்சூலை, கிரந்திவகைகள், லிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய பலவகைக் கடினநோய்கள் தீரும்.

**மருத்துணவு** :—இச்சாபத்தியம்.

## 741. கண்டஇரச மெழுகு

தூய்மை செய்த வாலைரசம் 1¼ வராகனெடை, கண்டங்கத்திரிப் பழச்சாறு ½ படி.

**செய்முறை**:— இரசத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து சாறெல்லாவற்றையும் செலுத்தி அரைத்து மெழுகானபதத்தில் எடுத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்க.

**அளவு**:— ½ முதல் 1 குன்றிஎடை.

**துணைமருந்து** :— பனைவெல்லம், வெண்ணெய், சர்க்கரை முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— சுரம், சன்னி, வாயுகள், மேகம், குட்டம், சூலை, வயிற்றுவலி, மார்புவலி முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு** :— இச்சாபத்தியம், நெய், பால் ஆகியவைகளை அதிகமாகச் சேர்க்கவும், எத்தனைநாள் சாப்பிடுகிறீர்களோ அத்தனைநாள் மாபத்தியமுமிருந்து நெய்தேய்த்து தலைமுழுகச் செய்து பத்தியம் முறிக்கவும்.

## 742. சித்த இரச மெழுகு

தூய்மைசெய்த இரசம் 2 வராகன் எடை (7 கிராம்), சிற்ருமுட்டியில செல்லத்தக்க அளவு. (அதாவது சுமார் ஒரு பலம் செல்லும்)

**செய்முறை :—** இரசத்தைக் கல்வத்தில்போட்டு, மேற்படி இலையை ஒவ்வொன்ருகப் போட்டு அரைக்கவேண்டும், மெழுகு பதமான சமயத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றிஎடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** வாயு நோய்கள், மேக நோய்கள், சூலைநோய்கள், குட்டம், வயிற்றுவலி, மார்புவலி முதலிய பலநோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம், நல்லெண்ணெய், கடுகு, ஆகியவைகளை நீக்கவேண்டியது இதனை நாற்பதுநாள் சாப்பிட்ட போதிலும் வாய்பிடிக்காது. இளமை உடலினர்களுக்கும், உபயோகிக்கலாம்.

## 743. வேம்புரச மெழுகு

முற்றின வேப்பிலை 2 படி, தூய்மைசெய்த இரசம் 1 பலம் (35 கிராம்).

**செய்முறை :—** வேப்பிலையைச் சன்னத் தூளாகக் குறுக அரிந்து ஒரு பெரியபானையில் போட்டு அதில் எட்டு படி நீரை விட்டு, எட்டிலொரு பாகமாகச் சுண்டின பின்பு குடிநீரை நன்ருகப் பிசைந்து இறுத்துப் பழையபடியும் அடுப்பேற்றிச் சுண்டக்காய்ச்சிக் குழம்பு பதமாக வரும் சமயத்தில் மேற்படி இரசத்தை அதிற் போட்டுக் காய்ச்சி லேகியபதமானவுடன் எடுத்துக் கல்வத்தி விட்டுக் கைவிடாமலரைத்தால் மெழுகு பதமாகிவிடும். இதனைப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் ½ குன்றிஎடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய், சர்க்கரை முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** இதனை ஒரு மண்டலம், அரைமண்டலம் நோய் வலுவிற்குத் தகுந்தபடி உபயோகித்து வந்தால் வாயுநோய்கள், கைகால் குடைச்சல், கழுத்திசிவு, காசம், சுவாசம், இருமல், பிரமியம், பெண்களுக்குண்டாகும் சீம்ப்பிரமியம், இரணங்கள், சொறிகள், பெரும்பாடு, பித்தசோகை, கிரந்தி, குன்மம் ஆகியவைகள் தீரும்.



**மருத்துணவு :—** இச்சாபத்தியம், நோய்களுக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்தலாம்.

**குறிப்பு :—** முன் வேகவைத்த வேப்பிலையை வெய்யிலில் உலர்த்தி எரித்துச் சாம்பலாக்கி நீரில் கரைத்துத் தெளிவைக் காய்ச்சி உப்பெடுத்து மேற்படி முறையிற் சேர்த்து உபயோகித்தால் சிறப்புடைய குணத்தைத் தரும்.

## 744. இரத்திநாகர இரசமெழுகு

இதற்காக வேண்டிய இரத்திநாகர மெழுகு ை டீ ஈ ந சிற்றுமணக்கெண்ணெய் ¼ படி, தூய்மைசெய்த கெந்தகம் 1 பலம் (35 கிராம்), சாணிப்பாலில் வேகவைத்து மூக்குவெட்டி தூய்மைசெய்த சேராங்கொட்டை 30.

**செய்முறை :—** எண்ணெயை அடுப்பேற்றி அதில் கெந்தகத்தைப் பொடித்துப் போட்டு உருகினவுடன் சேராங்கொட்டையை இரண்டிரண்டாக வெட்டிப் போட்டுக் கொட்டை மிதந்து சிவந்தபதத்தில் கீழிறக்கி எண்ணெயையிறுத்துத் தனியே வைத்துக் கொள்க இதுவே இரத்நாகர தைலமாம்.

வாலைரசம் 1 பலம் (35 கிராம்), மேற்படி இரத்திநாகர தைலம் 1 பலம் (35 கிராம்), பசுவின்நெய் 1 பலம் (35 கிராம்), பனைவெல்லம் 2 பலம் (70 கிராம்).

**செய்முறை :—** மேற்படி இரசத்தையும் தைலத்தையும் சேர்த்தரைத்து இரசமடிந்தபின்பு மற்றிரண்டையும் சேர்த்தரைக்க மெழுகாகும் அதனை பீங்கானிற் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 3 முதல் 4 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** இதனை மூன்றுநாள் ஆறுவேளை உபயோகித்தால், கால்கைமுடக்கு, குலைகள், கிரந்திகள், வெட்டைகள், வெடிரணங்கள், மேகஊறல், சொறிசிரங்கு, கருங்குட்டம், செங்குட்டம், மேகரணம், கண்டமாலை, விங்கப்புற்று, அல்குல்புற்று, அரையாப்பு, தொடைவாளை, புண். பிளவை, புரையோடின புண்கள், ஆகியவை தீரும்.

**மருத்துணவு :**— இச்சாபத்தியம் நல்லெண்ணெய் கடுகு தள்ளவும். புளி, கரப்பான் பொருள் ஆகியவைகளையும் தள்ளவும். பால்,நெய், தயிர், இறைச்சி ஆகியவைகளை அதிகமாக சேர்க்கவும்.

மேற்படி தைலத்தையும் இரசத்தையும் தொந்தித்து மேற்படி இரணங்களிற் பூசிவருவதினால் அதிக சீக்கிரம் அவை ஆறும்,

## 745. திரிநேத்திர மெழுகு

தூய்மைசெய்த இரசம் 2 வராகன் எடை (7 கிராம்), தேங்காய் கொட்டங்கச்சியைச் சுட்ட கரி 2 வராகன் எடை (7 கிராம்) தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு 1 வராகன் எடை (3½ கிராம்) தேங்காய் தனிப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—முன் இரண்டு சரக்கையும் கல்வத்தில்போட்டு அரைத்து, இரசம்மடிந்தபின்பு வாளத்தைச் சேர்த்து அரைத்து நன்றாய் மசிந்தபின்பு மேற்படி தேங்காய்ப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்துப் பீங்கான் சிமிழிற் பத்திரப் படுத்தவும்.

**அளவு :**—½ முதல் 3 குன்றி எடை.

**துணைமருந்து :**— பனைவெல்லம், சர்க்கரை, வாழைப்பழம், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :**— கழிச்சலாகும்; வாயுநோய்கள், சுரம், சன்னி ஆகியவைகள் தீரும்.

**மருத்துணவு :**— நல்லெண்ணெய், கடுகு, கரப்பான் பொருள்கள், ஆகியவைகளை நீக்கவேண்டியது. சிலசமயங்களிற் சில நோய்களுக்குப் புளியை நீக்கிவைப்பதும் உத்தமமாயிருக்கும்.

### இரசக் குளிகைகள்

இரசக் குளிகைகள் அநேக வகைகள் உள அவைகளால் அரிய காரியங்களெல்லாம் செய்து முடிக்கக்கூடும். ஆனால், அவ்வித குளிகைகளுக்கு அதிக கடினமுமிருக்கிறது. அவ்வகைக் குளிகைகளை விடாமுயற்சியுடனும், ஊக்கத்துடனும் பாடுபடுபவர் கள்தான் செய்து முடிப்பார்களே தவிர கடினத்திற்குப் பால்மாறு கிறவர்களும், செலவிற்குப் பின்செல்லுகிறவர்களும் அவ்வகைக் குளிகைகளை செய்து சித்திபெறுர்கள் நமது கிரந்தத்தை அபி



மானிக்கும் அநேக நண்பர்களுள் பலர் அதிக உற்சாகத்தோடும் விடாமுயற்சியுடனும் செய்பவர்களாயிருக்கின்றமையால், அவர் களுக்காக இக்கிரந்தத்திலும் சிலமுறைகளை எழுதியிருக்கிறேம். மற்றும் மகா அருமையான முறைகளைக் கடவுள் கிருபையால் இனி நாம் வெளிப்படுத்த உத்தேசித்திருக்கும் இரசவாத போதினியில் வகை விபரமாக எழுதுவோம்.

### குளிகை இரசத் தூய்மை

குளிகைகளுக்காக வேண்டிய இரசத்தில் புகையும்தன்மை அசையும் தன்மை, ஓடும்தன்மை, பறக்கும்தன்மை, ஆகிய நான்கு வகைச் சட்டைகளை நீக்கி, அசையாதிருத்தல் இகத்தல், சினத்தல், ஆகிய மூன்று சட்டைகளையும் நிறுத்திக்கொள்ளவேண்டியது அவசியமென முன்சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காகப்பின் வருகிற படி செய்யவேண்டியது அவசியமாகும்.

பழைய செங்கல்பொடி தேவையான அளவு ; * காடித்திராவகம் தேவையான அளவு, ஆரம் தேவையான அளவு.

**செய்முறை :**— இரசத்தைக் குழிஅம்மியிலிட்டு அதற்கு நாலு பங்கெடை செங்கற்பொடியையும் போட்டு மேற்படி திராவத்தைச் சிறுகசிறுகச் விட்டு வேப்பங்கட்டை மத்தினுற் கடைய வேண்டும் : காலை முதல் இரண்டு சாமம் வரையிற் கடைந்து பிற்பகல் இரண்டு சாமம் வெய்யிலில் வைத்துப்பொடித்து செங்கற் பொடியை நீக்கிவிடவேண்டும் இவ்விதமே மடக்கிமடக்கி மூன்று தடவைகள் செய்தால் மேற்கண்ட தோடங்கள் நீங்கிப்போகும். இவ்வித இரசத்தைத் தான் குளிகை செய்யவேண்டியது.

## 746. இரசக் குளிகை

இரசக்குளிகைகள் முன்சொல்லியிருக்கிறது போல் பலவகையாம். அவற்றுள் ஆசுகளைச் சேர்த்து செய்வதுமுண்டு. ஆசில்லாமல் மூலிகை சம்பந்தமாக செய்வதுமுண்டு. ஆனால் இந்த இரு வகைகளிலும் உயர்வானவைகளும், தாழ்ந்தவைகளு முள்ளன. இவற்றுள் வங்கம், தாம்பிரம் முதலிய ஆசுகளைச் சேர்த்தும் செய்வதுண்டு. அவ்வகைகளில் அநேகம் கெடுதிகளிருக்கின்றன. ஆகையால், இரசக்குளிகையை உபயோகிப்பவர்

* இது இல்லாத சமயத்தில் வெற்றிலைச் சாறுமை உபயோகித்துக் கொள்ளலாம்.

கள் செம்மையாக ஆராய்ந்து வாங்கி உபயோகிக்கவேண்டியது வீணாக வெளிவரும் விளம்பரங்களை நம்பிச் சகாயத்தைப்பார்த்து நன்மைக்குப் பதிலாக தீமையை அடைவது புத்திமான்களுக்கு அழகல்ல. ஆகையால், அனுபோகமானவைகளும், உபயோகமானவைகளுமான மேற்கண்ட ஆசுசேர்ந்த குளிகை, மூலிகைசம்பந்தக் குளிகை ஆகிய இருவகைகளையும் நமது நண்பர்களின் பொருட்டு இங்கெழுதுகின்றேம். விருப்பமானவர்கள் செய்து அனுபவித்துக் கொள்வார்களாக.

மேற்கண்டபடி தூய்மைசெய்த இரசம் 4 வராகன் எடை (14 கிராம்), வெண்புனுகு 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் குழிக்கல்லிலிட்டு ஒருசாமநேரம் கடைந்து ஒருநாள் விட்டு, மறுநாள் மூன்று வராகன் எடை வெண்புனுகைச்சேர்த்து முன்போல் ஒருசாமநேரம் கடைந்து ஒருநாள் விட்டு வைக்க வேண்டும். மூன்றுந்தடவையும் மூன்று வராகன் எடை வெண்புனுகைச் சேர்த்து முன்போற் கடைந்து ஒருநாள் விட்டு மறுநாள் உருண்டையாக உருட்டிக் கருஊமத்தங்காயானுல் உத்தமம் அதிலுள்ள விதைகளை நீக்கி அதற்குள் உருண்டையைவைத்துச் சாணியிற்பொதிந்து இலகுபுடமிடவும். இலகுபுடமிடுவது கொஞ்சம் அனுபவசாலிகளல்லாதவர்களுக்கு கடினமாகையால் பின்காணுகிறபடி மணலில் தீட்சைசெய்து கொள்வது மிகவும் சுலபமான மார்க்கம். அது பின்வருகிற விதமாம்.

மேற்கண்டபடி சித்தப்படுத்தின ஊமத்தங்காய்க்குமேல், அரைவிரல்கனம் சாணியைப் பொதிந்து வைத்துக் கொள்ளவேண்டும். ஒருபடி மணலை ஒரு சட்டியிற்போட்டு அடுப்பேற்றி மணல் சிவந்த பக்குவத்தில் முன் சித்தப்படுத்தின கவசத்தை வைத்துக் கவசத்தின் சாணி உலர்ந்து உள்ளிருக்கிற ஊமத்தங்காய் வெந்த பக்குவத்திலெடுத்து ஆறவைத்துக் குளிர ஆறினபின்பு முன்போல் ஊமத்தங்காய்க்குள் வைத்து சாணிக்கவசஞ்செய்து முன்போல் மணலில் வைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி குளிகையானது கெட்டிப்பதமாகிற வரையில் மேற்கண்டபடி தீட்சை செய்துகொள்ளவேண்டும். பிறகு அதனையெடுத்து முன்போற் கவசஞ்செய்து இலகுவாக இரண்டொரு புடமிட்டு எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு கற்சாஇலையை அரைத்து அதற்குக் கவசித்து அதன்மேல் சாணியைக் கவசித்து முன்போல் மணலுக்குள் மடக்கி மடக்கி ஐந்து தீட்சை செய்து முன்போல் வெளிப்புடம் ஒருபுடம் போட்டுக் கொள்ளவும். பிறகு அந்தக்குளிகையைப் பிராந்தி சாராயத்திற்போட்டு அறுபது நாழிகை ஊறவைத்துப் பிறகு அறுபது நாழிகை பசுவின் பாலில் ஊறவைத்துக்கொள்ளவும்.



**பயன்படுத்தல் :** பாலைக்காய்ச்சி அதில் இந்தக் குளிகையைப் போட்டு ஐந்துநிமிட நேரம் வைத்திருந்து அந்தப்பாலைப் பருகச் செய்வதால், இரத்தத் தூய்மை, இரத்தவிருத்தி புணர்ச்சிநீடிப்புச்சக்தி, முதலியவைகளுண்டாகும். இன்னும், இதனால் அநேக பயன்களுமுண்டாகும். அனுபவத்தில் இதன் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

## 747. இரசக் குளிகை (வேறு)

மேற்கூறிய முறைப்படி தூய்மைசெய்த இரசம் 4 வராகன் எடை (14கிராம்), கொண்டைக் கடலைப்பூ 4 வராகன் எடை.

**செய்முறை :—** இரசத்தைக்கல்வத்திலிட்டு மேற்படிபூவைச் சிறுகச் சிறுகப்போட்டு இரசம் வெண்ணெயாகிறவரையிலரைத்து உருண்டையாக உருட்டி முன் சொல்லியிருக்கிறபடி ஊமத்தங், காய்க்குள் தீட்சை செய்து, முன்சொல்லியிருக்கிறபடியே சாராயத்திலும் பாலிலும் ஊறவைத்து முன்சொல்லி இருக்கிறபடி உபயோகிக்க மேற்சொல்லிய குணங்களுண்டாகும்.

## 748. இரசக் குளிகை (வேறு)

மேற்கூறியபடி தூய்மைசெய்த இரசம் 4 வராகன் எடை (14 கிராம்), கருந்துளசிச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** மேற்படி இரசத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்துக் கைவிடாமல் அரைத்துவரவேண்டும். வெண்ணெய்போலான பின்பு அரைப்பை நிறுத்தி வைத்து ஒருநாள் விட்டு வைத்தால் அது சனிக்கும். பிறகும் முன்போல்சாற்றைவார்த்து முன்போலரைக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி இரண்டு மூன்றுதரம் அரைத்தால் சனிக்காமல் இரசம் நின்றுவிடும். பிறகு முன்போல் ஊமத்தங்காய்க்குள் தீட்சை செய்து சாராயம் முதலியவைகளில் ஊறவைத்து முன்போல் உபயோகிக்கவும் முன் கண்ட குணங்களுண்டாகும்.

## 749. இரசமணி

மேற்கூறியபடி தூய்மைசெய்த இரசம் 4 வராகன் எடை நீர்மேல் நெருப்புச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** மேற்படி இரசத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்தரைத்து இரசம் கெட்டியான பின்பு

மேற்படியிலையை அரைத்துக்குகையும் மூடியும்செய்து அதற்குள் வைத்துமூன்று சீலைமண்செய்து அவிபுடமாகப் புடமிட்டெடுக்க வேண்டும். கெட்டிப்பதமாகிவிடும். அதனைக்குகையில் வைத்துருக்கினுல் உருகும் அதைக்குகையில் வைத்துருக்கிக் கல்வத்தில் வைத்துப் பொடித்துஎலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு அரைத்து ஒருசாமநேரம் சென்றபின்பு களிமண்ணுக்குள் பொதிந்து அவிபுடமிட்டெடுத்துத் தமரிட்டு இடுப்பில் கட்டிக்கொள்க. இதனுல் புணர்ச்சிநீடிப்புசத்து, இரத்தவிருத்தி, துணிவு, ஊக்கம் முதலியவைகளுண்டாகும்.

குறிப்பு :— இதுவரையில் நாம் ஆசு சம்பந்தமில்லாமல் மூலிகை சம்பந்தமான முறைகளைச் சொல்லிவந்தோம். ஆசுகளில் பொன், அல்லது, வெள்ளி சம்பந்தமானது தான்சிரேஷ்டமானது; அவையல்லாதவங்கம், செம்பு முதலியவைகள் சம்பந்தமாகச் செய்யப்படும் முறைகள் அதிக விசேடமானவைகளல்ல. ஆகையால், அவ்வகை முறைகளை நீக்கி வெள்ளி ஆசுமுறைகளை மாத்திரம் இங்கு எழுதுகின்றோம்.

## 750. இரசத்தைக்கட்ட வெள்ளி பற்பம்

சுத்தமான சொக்கவெள்ளி 6 வராகன் எடை இதனை இரண்டணு கனமுள்ள தகடாக அடித்துக் கொள்ளவேண்டும். * சிறு அம்மான் பச்சரிசியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்படி தகட்டை நெருப்பில் சிவக்கக்காய்ச்சி மேற்படிசாற்றில் தோய்க்கவேண்டும். குளிர ஆறினபின்பு எடுத்து நெருப்பில்காய்ச்சி முன்போல் முன்சாற்றில் தோய்க்கவேண்டும். இவ்விதம், மடக்கி மடக்கி நூற்றுநாற்பது தடவைதோய்த்தால் வெள்ளியானது வெட்டையாகியிருக்கும். மேற்படி புதிய இலையை எடுத்து அரைத்தவிழுது 10 பலம் (350கிராம்), அதற்குள் முன் தகட்டைச் செலுத்திக் கரையான்புற்று மண்சீலை செய்து காயவைத்துக்கெசபுடமிட்டு ஆறினபின்பு எடுத்தால் பற்பமாகியிருக்கும் அதனைக் கல்வத்திற் பொடித்துக்குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

பிறகு, இதனைக் கல்வத்திலிட்டு மேற்கண்டபடி தூய்மை செய்த பன்னிரெண்டு வராகன் எடை இரசத்தைச் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு இரண்டொரு மணிநேரமரைத்துத் துணியில்வைத்துப் பிழிந்துகொள்ளவேண்டும். பிழிந்து கெட்டியாயிருப்பதைத் தனியே எடுத்து வைத்துக்கொண்டு திரவமாயிருப்பதுடன் முன்னளவு இரசத்தைச்சேர்த்து எலுமிச்சம்பழச்

*சித்திரப்பாலாடை.



சாற்றைவிட்டு முன்போலரைத்து முன்போற் பிழிந்து கொள்ள வேண்டும். ஆறுவராகனெடை பற்பத்தால் முப்பத்தாறு வராகன் எடை இரசவெண்ணையாகும். இதனை, நான்கு வராகன் எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து முன்கண்டபடி தீட்சைசெய்து உபயோகித்தால அநேக குணங்களுண்டாகும்.

## 751. இரசக் கிண்ணி

மேற்படி வெண்ணெயைச் சிறுகிண்ணமாகச் செய்து சிறிது நாள் வைத்திருந்தால் தானே இறுகிப்போகும். அதில்காய்ச்சின பாலைவிட்டு வைத்திருந்து குடித்து வருவதினுல் அநேகவித நன்மைகளுண்டாகும்.

## 752. இரசக் கிண்ணி (வேறு)

ஊத்துக்கட்டி வெள்ளி 6 வராகன் எடை (21 கிராம்), கெந்தகம் 12 வராகன் எடை (42 கிராம்), ஆலம்விழுதுச்சாறு, அல்லது, ஆடுதீண்டாப்பாளைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— கெந்தகத்தைக் கல்வத்திற் பொடித்து மேற்படி ஒருவகைச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு ஒருசாமநேர அரைத்துக் கடலை அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

வெள்ளியை உருக்கி உருக்குமுகத்தில் மேற்படி மாத்திரையை ஒவ்வொன்றாகச் சுருக்குக் கொடுக்கவேண்டியது. மாத்திரைகளை எல்லாம். சுருக்குக்கொடுத்த பின்பு எடுத்து ஆறவைத்து அந்தக்கட்டியை நாலு துண்டாகவெட்டி மறுபடியும் மூசையில் போட்டு உருக்கி ஒரு உருண்டையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேற்கண்டபடி தூய்மை செய்த இரசம் 2 பலம் (70 கிராம்), இதனை ஒருசிறு கலயத்தில் விட்டு, அதில் முன் வெள்ளிக் கட்டியையும் போட்டுக் கலயத்தின் வாய்க்கு ஈரத்துணியை சுருட்டி வைத்தடைத்துக் கரிநெருப்பின் மீது வைத்து மெதுவாக விசிறவேண்டும். கலயத்தின் வாயிற் புகையுண்டானுல் உடனே யெடுத்து ஒரு துணியில் கலயத்திலுள்ளதைச்சாய்த்து ஒரு பிங்கான் பாத்திரத்திற் பிழிந்து துணியில் தங்கிநிற்கும் வெண்ணெயைத் தனியே எடுத்துவைத்துக் கொண்டு திரவமாயிருக்கும் இரசத்தை

மேற்படி கலயத்தில் விட்டு முன்போல் செய்து முன்போலெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் இருபது பலம் இரசத்தை வெண்ணெயாக்கிக் கொள்ளலாம்.

குளிகையாக்க வேண்டுமானால், மேற்படி வெண்ணெயில் நவ்வாலு, அல்லது, ஐய்வைந்து வராகனெடையுள்ள குளிகைகளாகச் செய்து முன்சொல்லியிருக்கிறபடி ஊமத்தங்காயில் தீட்சை செய்து சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கிண்ணமாகச் செய்துகொண்டால் எலுமிச்சம்பழச் சாற்றில், அல்லது ஆடுதீண்டாப்பாளைசாற்றில், மேற்படி இரச கிண்ணத்தைப் போட்டு மெதுவாயெரித்துக் காய்ச்சிப் பக்குவப் படுத்திக்கொண்டு பிறகு சாராயத்திலும் பாலிலும் இரண்டிரண்டு நாள் ஊறவைத்துப் பக்குவப்படுத்திச் சித்தப்படுத்திக் கொள்ளலாம்.

மேற்கண்டபடி உபயோகிக்க மேற்கண்ட குணங்களுண்டாகும்.

குறிப்பு :—இரசக் குளிகைகள் மூன்று வராகனெடைக்குக் குறைந்திருந்தால் அதற்குண்டான சுபாவகுணத்தைத்தராதென நூல்கள் கூறுகிறது. இந்தக் குளிகைகளையும், கிண்ணங்களையும், எத்தனைக் கெத்தனை தீட்சை செய்கின்றோமோ அத்தனைக் கத்தனை சிறப்புடைய குணத்தைத் தருமென்பது நிச்சயம்.

இரசக்குளிகைகள், இரசக்கிண்ணங்கள் ஆகியவைகளில் அரிய பெரிய முறைகள் இன்னும் அநேகமிருக்கின்றன. கடவுள் கிருபையால் இனிவெளிப்படும் இரசவாத போதினியில் எழுதுவோம்.

## இரசவீறு நஞ்சு குறிகுணங்கள்

இரசத்தைக் கிரமமாய் உபயோகிக்காவிட்டாலும், அளவிற்கதிகமாய் உபயோகித்தாலும் சிற்சில தேகிகளில் சொற்ப அளவினாலும், இரச சம்பந்தமான மருந்துகள் விடமித்து தீயக் குணத்தை யுண்டாக்கும் அவையாவன :-

வாயில் அட்சரத்தைப்போல் புண்ணுண்டாகிச் சிவந்து எரிந்து கொண்டிருத்தல், பல்லின் சந்துகளில் சீழ்கட்டிக்கொள்ளுதல், வயிற்றின்மேல் தேமலைப்போல் பட்டைபட்டையாய்ப் படர்ந்திருத்தல், பாதம்வெடித்துப் புண்ணாகி வீங்கி சிலை நீரொழுகிக் கொண்டிருத்தல், விக்கலெடுத்தல், வாய்நீர் பெருகுதல், அக்னி மந்தப்பட்டுப் பொய்ப்பசியெடுத்தல், பக்கசூலையைப் போல அடிக்கடி பக்கத்தை இழுத்துக்கொண்டு உபத்திரம் செய்தல், இக்குணங்களில் பலவாயினும் சிலவாயினும் கண்டால் இவை யுண்டாவதற்கு முன் உபயோகித்த மருந்திலுள்ள இரசம் விடமித்துண்டானதென நிதானித்து அதற்குக் கீழ்காணும் மருந்துவம் செய்யவேண்டும்.



## இரசவீறு முறிவு மருந்துவம்

துளசி வேர்ப்பட்டை ¼ பலம் அவுரிவேர்ப்பட்டை ¼ பலம், மேற்றோல் நீக்கின சுக்கு ¼ பலம், வெடியுப்பு ¾ பலம், முன் மூன்றையும் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கிப் பிசைந்து வடிகட்டி மேற்படி உப்பைப்போட்டுக் கரைத்துப் பருகச்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையும் கால், அரை, முக்கால், ஒரு மண்டலம் செய்துவந்தால் மேற்கண்ட தீக்குணங்கள் நீங்கி நற்குணங்களுண்டாகும்.

## மேற்படி மருத்துவம் (வேறு)

செம்பருத்தியிலைச்சாறு, கழுதை லத்தியை இடித்துப் பிழிந்த சாறு, இவையிரண்டும் சமனெடை இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்து வேளைக்கு கால், அல்லது அரை ஆழாக்கு வீதம் பருகச் செய்விக்கவேண்டும். இதனுடன் மேற்கண்ட கலவையை மேலுக்கும் பூசி வெங்கலப் பாத்திரத்தில் காலை வைத்துக்கொண்டு வெந்நீர்விட்டுக் குளித்துவரவும் சிலருக்கு இரசம் வெளிப்படும். இப்படி செய்துவந்தால் மேற்கண்ட துர்க்குணங்களெல்லாம் நீங்கி நலமுண்டாகும்.

## மேற்படி மருத்துவம் (வேறு)

ஆங்கில மருந்து கடைகளில் விற்கிற கெந்தகப்புளிப்பை 20 பங்கு தண்ணீரில் விட்டு கலந்து வாய் கொப்பளித்து வருவதுடன் வீக்கம், பிடிப்பு, வெடிப்புள்ள விடங்களில் பூசி வருவதினாலும் மேற்படி தீக்குணங்கள் நீங்கும்.

இன்னும் இதற்கு முன் பாகங்களிற் சொல்லியிருக்கிற பூரம், வீரம், இலிங்கம், முதலியவைகள் விடமித்தால் அங்குச் செய்யவேண்டியதாக எழுதியிருக்கும் பரிகாரங்களும் இதற்காகும்.

**அனுபோக வைத்திய நவநீதம் ஐந்தாம் பாகம்**
**முற்றுப் பெற்றது**

## அனுபோக வைத்திய நவநீதம் ஐந்தாம் பாகம்

### பிழைதிருத்தப் பட்டியல்

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 25 | கொடிநஞ்சிற்கு | கொடியநஞ்சிற்கு |
| 9 | 10 | போவே | போலவே |
| 11 | 11 | சுரங்களில் | சுரங்கங்களில் |
| 18 | 10 | வறெந்த | வேறெந்த |
| 22 | 23 | 12-மணி | 12-சாமம் |
| 26 | 6 | இனியக்கிடப்படும் | இனியச்சிடப்படும் |
| 29 | 31 | இரசத்தின்குணங்கள் | இரசத்தின்தீய குணங்கள் |
| 33 | 36 | கட்டுவதை | கட்டுவகை |
| 37 | 22 | காய்ச்சிமுன்போல் | காய்ச்சிக்கோமுத்திரத்தில் முன்போல் |
| 42 | 8 | சிவந்த | சிவந்தபத்த |
| 48 | 9 | இரசந்தை | இரசத்தை |
| 50 | 35 | சாறு | சாம் |
| 54 | 18 | உணர்விற்திருந்தால் | உணர்வற்றிருந்தால் |
| ,, | 27 | மினகு | மிளகு |
| 62 | 6 | சூரியபரதரசம் | சூரியபாதரசம் |
| ,, | 21 | வாயுசுஜாங்குசரசம் | வாயுகஜாங்குசரசம் |
| 81 | 23 | சண்னத்தூளாக | சன்னத்தூளாக |
| 85 | 10 | ஆகையாய் | ஆகையால் |
| 86 | 17 | பொரலதைத்து | போலரைத்து |
| 90 | 11 | வேண்யது | வேண்டியது. |
| 92 | 27 | இரசும் | இரசம் |
| 93 | 1 | கெசிக்குப்பி | காசிக்குப்பி |
| 96 | 21 | வெள்ளட் | வெள்ளெள் |
| 97 | 8 | காலங்குலம் | நாலங்குலம் |
| 99 | 17 | பசிவின்ணெய் | பசுவின்ணெ |
| 107 | 17 | கைக்குப்பி | காசிக்குப்பி |
| 112 | 6 | மேற்பட்ட | மேற்படி |

## அனுபோக வைத்திய நவநீதம் ஐந்தாம் பாகம்

### பிழைதிருத்தப் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 122 | 5 | நீரைவிட்டி | நீரைவிட்டு |
| 123 | 36 | பூச்சிகளும் வகை | பூச்சிவகைகளும் |
| 130 | 2 | 71 ஆம் | 71 ஆம் |
| ,, | 3 | காளமேக | காளகண்டமேக |
| 140 | 4 | முட்டைபோட்டால் | முட்டையோட்டால் |
| 143 | 12 | $\frac{1}{2}$ முதல் குன்றி | $\frac{1}{2}$ முதல் 1 குன்றி |
| 146 | 12 | வகுத்தி | வழுத்தி |
| 163 | 3 | உபத்திரவம் | உபத்திரவம் |

### முக்கியக் குறிப்புகள்

மருந்து செய்

முறை எண் 660 : மெல்லியத்தாம்பிரத் தகடு வராகன் எடை 5, (17$\frac{1}{2}$ கிராம்) உள்ளதை உபயோகிக்க வேண்டும்.

ஷை முறை எண் 669 : மருதம் பட்டைச்சாற்றையும் சேர்த்துக் கொள்க.